# இந்து தருமம்



## இந்து மாணவர் சங்கம் 2018/2019

பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இந்து தருமம்

## இந்து மாணவர் சங்கம் 2018/2019
## பேராதனைப்பல்கலைக்கழகம்



# HINDU DHARMAM - 2019

## Hindu Student's Union - 2018/2019
## University Of Peradeniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன் முகம்


| | | |
|---|---|---|
| நூல் | : | இந்து தருமம்: 2018 |
| இதழாசிரியர்கள் | : | செல்வன்.சி.சாரங்கன்<br>செல்வி.லோ.சதுர்சி<br>செல்வி.ம.பேச்சிமா செய்துங்க |
| வெளியீடு | : | இந்து மாணவர்சங்கம் 2018/2019<br>பேராதனைப்பல்கலைக்கழகம்<br>பேராதனை. |
| பிரதிகள் | : | 150 |
| பக்கங்கள் | : | xxii + 192 |
| தாள் | : | 70g/m2 |
| அளவு | : | B5 (JIS) |

| | | |
|---|---|---|
| *Title* | : | *Hindu Darma 2018* |
| *Editors* | : | *Mr.S.Sarangan*<br>*Mrs.L.Sathursi*<br>*mrs.M.pechchima seithunga* |
| *Published By* | : | *Hindu Students Union*<br>*University Of Peradeniya*<br>*Peradeniya.* |
| *Copies* | : | *150* |
| *Pages* | : | xxi + 192 |
| *Size* | : | *B5 (JIS)* |
| *Paper* | : | 70g/m2 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பேராதனை உறைந்து பேணி
நம்மைக் காப்பதற்கு
கூரான வேல் தாங்கும்
குறிஞ்சிக் குமரனுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய கண்டி மாநகரின் மலைச்சாரலில் கலியுக வரதனாகிய குறிஞ்சிக்குமரனின் ஆலயம் அமைந்திருப்பது பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் இந்து மாணவர்களின் மா பெரும் பேறாகும்.

தற்கால சூழலில் மாறிவரும் சமூக கலாசார விழுமியங்கள் காரணமாக ஆலயத்திற்கு செல்லும் மரபு அருகி வரும் காலத்தில் ஒழுக்கமும் ஆன்மீக நாட்டமும் உள்ள கல்விமான்களையே சமூகம் வேண்டி நிற்கின்றது. பலத்த கல்வி சுமைகளின் மத்தியிலும் வெள்ளிக்கிழமைகளிலும் விஷேட பூஜைகளிலும் குமரனுக்கு பல பணிகளை இந்து மாணவர்கள் செய்து வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

இந்து மாணவர் சங்கத்தினாரால் வருடாவருடம் பலரும் பாராட்டும் வகையில் இந்துதருமம் எனும் இந்நூல் வெளியிடப்படுகிறது. இவ்வருடம் அறுபத்தியிரண்டாவது மலராக இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூல் வாழ்த்தியல், படைப்பியல், ஆய்வியல், செவ்வியியல், மீள்பதிவியல், விளம்பரவியல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் துறைசார் மாணவர்களின் கூட்டு உழைப்பும் ஈடுபாடும் இவ்விதழ் தொடர்ந்து வெளிவர காரணமாக அமைந்துள்ளது.

ஒரு மலரை உருவாக்குவது என்பது இலகுவான காரியமல்ல. பரீட்சை எழுத உட்காரும் மாணவர்கள் தங்கள் கற்கை நெறியுடன் இணைபாடவிதான செயற்பாடாக இதழ் வெளியீட்டிலும் பல்வேறு ரகமான பல்வேறு ரசமான ஆம்சங்கள் உங்களுக்காக இங்கே படைக்கப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட கைவண்ணங்களை திரட்டித்தந்த இந்த மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்விற்கு இங்கேயே வேரூன்றிவிட்டார்கள். அவர்கள் தட்டிக்கொடுத்து பாரட்டப்பட வேண்டியவர்கள். இவ்விதழ் சிறப்புற வெளிவருவதற்கு தனிப்பட்ட முறையிலுதவிய பேருள்ளங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறி இதழுக்கு ஆக்கங்களை அழித்தோருக்கும் இதழ் அழகுற வெளிவர பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவ்விதழில் ஏதேனும் குறைகள் தவறுகள் இருப்பின் மன்னிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். இம்மலர் தொடர்ச்சியாக வெிவந்து தசாப்தம் படைக்க எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனின் பாதார விந்தங்களை வேண்டிநிற்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**இதழாசிரியர்கள்**

**சி.சாரங்கன்**

**லோ.சதுர்ஷி**

**ம.பேச்சுமாசேய்துங்கா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## வாழ்த்தியல்


| | | |
|---|---|---|
| 1. | ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி | xiii |
| 2. | சின்மயா மிஷன் வழங்கிய ஆசிச்செய்தி | xiv |
| 3. | பெருந்தலைவரின் வாழ்த்துச்செய்தி | xv |
| 4. | குறிஞ்சிக் குமரன் பொருப்பாண்மைக் குழுத்தலைவரின் வாழ்த்துச்செய்தி | xvi |
| 5. | பொறுப்பாண்மைக் குழு செயலாளர் இந்து பட்டதாரிகள் சங்க தலைவர் வாழ்த்துச்செய்தி | xvii |
| 6. | இந்து மாணவர் சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து | xviii |
| 7. | இந்து மாணவர் சங்கம் 62ஆவது செயற்குழு 2019/2020 | xix |
| 8. | இந்து மாணவர் சங்கம் 63ஆவது செயற்குழு 2019/2020 | xx |
| 9. | குறிஞ்சிக் குமரன் ஆலய பொருப்பாண்மைக் குழு 2019/2020 | xxi |
| 10. | குறிஞ்சிக்குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழு 2018/2019 | xxii |


## படைப்பியல்


| | | |
|---|---|---|
| 11. | புராணக் கதைகளும் புதைந்துள்ள உண்மைகளும் | 03 |
| 12. | இணுவில் கந்தசுவாமி கோவில் | 08 |
| 13. | நம்பிக்கையில் நிம்மதி | 11 |
| 14. | மானுட மேம்பாட்டிற்கு சுவாமி விவேகானந்தர் | 13 |
| 15. | சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள் | 15 |
| 16. | விநாயகர் வழிபாடு | 18 |
| 17. | சிதம்பர ரகசியம் | 20 |
| 18. | இந்து சமயமும் மருத்துவ விஞ்ஞானமும் | 22 |
| 19. | விநாயகர் அவதாரம் | 24 |
| 20. | அகமும் புறமும் | 26 |
| 21. | சத்திய ஆன்மா ஈகம் | 28 |
| 22. | இலிங்கோத்பவர் | 30 |
| 23. | மதமொரு மருத்துவ பேரொளி | 32 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. வேதங்கள் 36
25. சிவலிங்க வழிபாடு 39
26. வாழ்வை நெறிப்படுத்தும் இந்துசமயம் 41
27. மகாசிவராத்திரியின் வரலாறு 45
28. தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் 47
29. விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளும் மெஞ்ஞானம் 48
30. செம்மொழியாம் உயர்ந்த தமிழ் 50
31. வாழி என்றும் நீ 51
32. கோவில் வழிபாடு 52
33. பெரிய புராணம் எனும் சவத்தமிழ் இலக்கியம் 53
34. தமிழ் மொழியின் எதிர் காலம் 57
35. தமிழும் சமயமும் 61
36. பல்லவர் கால பக்தி இலக்கியம் 65
37. தமிழ் மொழி 69
38. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் சொல்லும் பொருளும் 72
39. தன்னோ இல்லாத் தமிழ்மொழி 76
40. சைவம் காத்த சமய குரவர்கள் 79
41. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் 83
42. இசையும் இறையும் 87
43. பஞ்ச தந்திரம் 89
44. சம்ஹாரம் 97
45. விளக்கு வகைகள் 99
46. வாழ்வோம் - தமிழராய் வாழ வைப்போம் -
தமிழ் கலாச்சாரத்தை 101
47. இந்து மதம் 104
48. ஸ்ரீ நடராஜ தாண்டவம் 113
49. பதினாறு செல்வங்கள் 117
50. மனித தர்மம் 118
51. யோகாசனமும் யோகமும் 119
52. பூஜாகால தேவாதி பத்ர அர்ச்சனை 121
53. வாழ்வின் உண்மையான மகிழ்ச்சிக்கான வழி 125
54. நாட்டாரியல் வழிபாடு 128
55. குமரனின் சிறப்புக்கள் 133
56. விவேகானந்தரின் நல்வழிக் கோட்பாடுகள் 134
57. உருத்திராக்கம் 136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. விநாயகர் வழிபாடு 138

## ஆய்வியல்

59. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சிற்பங்கள் ஓர் ஆய்வு 143

## மிழ்பதிப்பியல்

60. கால வோட்டமும் இந்து தருமமும் 149

## செவ்வியியல்

61. கலாநிதி. ஆறு.திருமுருகனுடனான நேர்காணல் 159

## பதவியல்

62. 2018/2019 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்கம் 62வது செயற்குழுவின் ஆண்டறிக்கை 177
63. 1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள் மற்றும் தலைவர்கள் 180
64. நன்றியுரை 182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

**"வேலும் மயிலும் துணை"**

"காக்கக் கடவியநீ காவாது ஒழிந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி"

(திருமுருகாற்றுப்படை)

குன்றங்களிலே கோயில் கொள்பவன் முருகன். திருப்பரங்குன்றம், திருச் செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, கதிர்காமம்-கதிர்மலை , சென்னிமலை, விராலிமலை, மருதமலை, வள்ளிமலை, பத்துமலை என்ற வரிசையிலே நமது பேராதனைக் குறிஞ்சிக்குமரன் திருக்கோட்டமும் இன்று இடம்பெற்றுள்ளது. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே கண்டியிலிருந்த முருகன் ஆலயம் ஒன்றை அருணகிரிநாதர் பாடியுள்ளார். "சந்ததம் பந்தத் தொடராலே" எனத் தொடங்கும் திருப்புகழில் "செந்திலங் கண்டிக் கதிர்வேலா தென்பரங் குன்றிற் பெருமாளே" என்று வருகிறது. இன்று அருணகிரிநாதர் கூறிய கோயிலே "கண்டிக் கதிர்காமம்" என கூறப்படுகிறது. இது ஒருபுறமிருக்க அருணகிரியார் தம் ஞானக்காட்சியாலே எதிர்காலத்திலே கண்டியிலே பேராதனைக் குன்றிலிருந்து யாவரையும் ஆளப்போகிறான் குமரன் என அறிந்து இப்படி பாடியிருப்பார் என கருதவும் இடமுண்டு. இங்கு முறையான பூசைவழிபாடுகளாலும் நைமித்திய விழாக்களாலும் மணங்கமழ் தெய்வத்து இளநலம் பெருகிக்கொண்டே இருக்கிறது.

பேராதனை குறிஞ்சிக்குமர முத்துக்குமார சுவாமிக்கு மீளா அடிமைத் திறம் பூண்ட இந்து மாணவர் சங்கத்தினரால் ஆண்டு தொறும் வெளியிடப்படும் "இந்து தருமம்" எனும் வாடா மலர் இவ்வாண்டும் சிறப்பார்ந்த சமய கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி மணம் பரப்பிவரவுள்ளது. இம்மலர் மாறாத தெய்வ மணம் வீசி உலாவுவதற்கு முத்துக்குமரனை வேண்டி ஆசீர்வதிக்கிறேன்.

**"சுபமஸ்து நித்யம்"**

**க. வரதராஜசர்மா**
ஆலய பிரதம குரு,
குறிச்சிக்குமரன் ஆலயம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்மயா மிஷன் வழங்கிய ஆசிச்செய்தி

பிரபஞ்சம் என்று தோன்றியதோ அன்றே வேதங்களும் இறைவனால் அருளச் செய்யப் பட்டன. மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களை உள்ளடக்கிய "சனாதன தருமம்" என்பது வேதங்களில் கூறப்பட்ட உண்மைகளே இறைவனால் அருளிச்செய்யப்பட்ட சனாதன தருமமே "இந்து தருமம்" ஆகும்.

பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் இந்துதருமம் எனும் பெயரில் வருடாந்த சஞ்சிகையை வெளியிட்டு வருவது பாராட்டுதற்குரியது. இன்றய இளம் சமூகத்தினர் இந்து தரும நெறியை சிறப்பாக கடைப்பிடித்து வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக திகழ வேண்டும் என்பதே எமது விருப்பம்.

இன்றய காலகட்டத்தில் இந்து இளைஞர்களிடையே ஒரு கட்டமைப்பு அல்லது வலைப்பின்னல் தேவைப்படுகிறது. அதன் மூலமாக அனைத்து இந்து இளைஞர்களையும் ஒன்றிணைத்து ஒரு சக்தியாக சமுதாயத்திலே பல பணிகளை ஆற்றவேண்டிய தேவையிருக்கிறது. அதை நாங்கள் செயற்படுத்துவதற்கு பாடசாலைகளுக்கிடையே இந்து மன்றங்களினூடு செயற்பட்டிருக்கக்கூடிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு வரும் போது பல்கலைக்கழகங்களில் இத்தகய இந்து மாணவர் சங்கங்களில் இணைய வேண்டும்.

அனைத்து பீடங்களை சேர்ந்த இந்து மாணவர்களை குறிப்பாக பாடசாலைகளில் இந்து மன்றங்களில் பணியாற்றி இருக்கக் கூடிய மாணவர்களை உள்வாங்கி அவர்களுக்கு நல்ல பயிற்சிகளையும் இந்து சமய அறிவினையும் கொடுப்பதற்கு இந்த பல்கலைக்கழக காலப்பகுதியையும் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது பல்கலைவக்கழகங்களை விட்டு வெளியேறும் போது அவர்கள் இந்து இளைஞர் மன்றங்கள், இந்து மகளீர்மன்றங்கள் போன்றவற்றில் இணைந்து தொடர்ந்து அந்த பணிகளை ஆற்றமுடியும். இந்த எமது விருப்பத்தை நீங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தினூடாக நிறைவீற்றுவீர்கள் என நம்புகிறோம்.

மாணவர்களின் இவ் முயற்சி தொடரவும் எதிர்வரும் சிவராத்திரி தினத்தில் வெளிவரவுள்ள "இந்துதருமம்" 2018ஃ2019 இதழ் சிறப்பாக வெளிவரவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல குறிஞ்சி குமார பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிராரத்திக்கின்றோம்.

**இறைபணியில்,**

**சுவாமி. சிதாகாசானந்தா**

சின்மயா மிஷன்,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்து மதம் அனைத்து மதங்களினதும் தாய் கீழைத்தேய மதங்கள் அனைத்தும் இந்து மதத்தின் இனிய குழந்தைகளே. அன்பால் அனைவரையும் அரவணைத்து, அருள் நிறைத்து, ஆன்மீகம் பரப்பி உய்வுக்கு உதவும் உயர் சமயம். இந்து மதத்தின் உயர் தனிச்சிறப்பு அதன் தருமக்கொள்கையே ஆகும். இறைவன் தரும வடிவினன். என்பதை அழகாகவும் ஆழமாகவும் அகலமாகவும் சொல்லி வைத்த மதம் இந்து மதம். ஒவ்வொரு இந்துவினதும் வாழ்வில் நாதமும் ஆதார சுருதியும் தருமமே என்று வரையறுத்த தலையாய சமயம் இந்து மதம். இத்தகைய மதத்தின் அடிப்படைச் சிறப்பான "இந்துதருமம்" எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வருடம் தோறும் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு இறையருள் கைகூடியுள்ளது.

கல்விச்சூழல் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புபட்டதாக இருக்கவேண்டும். "கற்றதால் ஆய பயன் என் கொல் வால் அறிவன் நற்றாள் தொழார் எனின்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. கற்றலின் ஆரம்பமும் அந்தமும் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புபட்டது. இன்றைய கல்விச்சூழலில் இதனை மறந்து வரும் நிலை காணப்படுகிறது.

கல்விச்சூழலில் அமைந்த ஆலயத்தில் மாணவர்கள் சரியைத்தொண்டில் ஈடுபடுவது குறைவு. அறிவியல் உலகில் ஆன்மீகத்தை நாடுவது குறைவு. கற்றவர்களும் கற்பிப்பவர்களும் ஆலய முன்னேற்றத்தில் சிறிதளவு நேரத்தை செலவு செய்து இறையருளை வரவு வைத்தால் இந்த வையகத்தில் உயரலாம். இதை உணர்ந்து அனைவரும் செயற்படுவார்கள் என நம்புவோம்.

"இந்துதருமம்" இதழ் சிறப்புற வெளிவந்து ஆன்மீக ஒளியையும் அறிவொளியையும் பரப்ப வேண்டும் என வேண்டுவதோடு இறைவனை இறைஞ்சி இதழாசிரியர்களுக்கும் இந்து மாணவர்சங்க உறுப்பினர்களுக்கும் நல்லருள்கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

**வடிவேல்முருகன் தருமதாசன்**
பெருந்தலைவர்
இந்துமாணவர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

குறிஞ்சி மண்ணிலே கோவில் கொண்டு அடியார்களுக்கு அருள் புரியும் கந்தப்பெருமானின் பாதங்களை பணிந்து இவ் வாழ்த்துரையை தொடங்குகிறேன்.

பேராதனை இந்து மாணவர் சங்கத்தினால் ஆண்டு தோறும் இந்து சமயத்தின் மேன்மையை விஸ்தரிக்கும் வகையில் பல கட்டுரைகளை தாங்கிய வண்ணம் வெளிவரும் "இந்து தருமம்" இதழ் இவ்வருடமும் அதே சிறப்புக்களை கொண்டு மலர்ந்திருப்பதை கண்டு உவகையடைகிறேன்.

தமது கற்றல் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் குறிஞ்சி குமரன் ஆலயத்தின் நாளாந்த கருமங்களில் பக்தியுடனும் பணிவுடனும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் இந்து மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

"இந்துதருமம்" எல்லையற்ற வளர்ச்சியுடன் உலகமெங்கும் மணம் பரப்ப எல்லாம் வல்ல குமரனின் அருள் கிடைக்க வேண்டி பிரார்த்தனை செய்து விடைபெறுகிறேன்.

**பேராசிரியர்.த.சிவானந்தவேள்**
பெரும்பொருளாளர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழுத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் பலதரப்பட்ட கற்கை நெறிகளுக்கு மத்தியிலும், ஆன்மீக வழிபாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவது சிறப்புக்குரிய தொன்றாகும். இவர்கள் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்து தர்மம் சஞ்சிகையை வருடாவருடம் வெளியிடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றைய காலகட்டத்தில் இந்து மதத்தை மேலும் வலுவடையச்செய்து, பாதுகாப்பது இளந்தலைமுறையினரான மாணவர்களின் தலையாய கடமையாகும். இக்கடமையை இம்மாணவர்கள் திறம்படச் செய்து வருகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது நான் பெரிதும் மனம் மகிழ்வதுடன், இச்சேவையை சமூகத்தின் மத்தியில் எடுத்துச்செல்வதற்கு இந்து மக்கள் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாணவர்களின் பணி மேலும் மேலும் தொடர்ந்து, அவர்கள் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் முன்னேறக் குறிஞ்சிக்குமரனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**பேராசிரியர் வை.தந்தகுமார்.**
தலைவர்
பொறுப்பாண்மைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழு செயலாளர் இந்து பட்டதாரிகள் சங்க தலைவர் வாழ்த்து செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்து மாணவர் சமுதாயத்தின் ஆற்றல் மிக்க முயற்சியின் பயனே "இந்து தர்மம்" சஞ்சிகை. இது மாணவர்களின் இந்து சமய வளர்ச்சிக்கு தங்களால் இயன்ற வரை பங்களிக்கும் முயற்சியினை எடுத்தியம்புகின்றது. மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஆய்வுகளையும், சிந்தனைகளையும், கருத்துக்களையும் நோக்குகளையும் கட்டுரை, கவிதை வடிவங்களில் தாங்கிவரும் "இந்து தர்மம்" வெளிவருவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்து மாணவர் சங்கத்தினர், கடந்த காலங்களிற் போல், தொடர்ந்தும் குறிஞ்சிக் குமரன் ஆலய விடயங்களின் பக்தி சிரத்தையோடு ஈடுபட்டுத் தொண்டாற்றி வருவது பாராட்டற்குரியது. இவ் ஆலயத்தோடு தொடர்பு கொண்ட பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் இந்து சமூகத்தினர் அனைவருக்கும் இத் தொண்டு பெருமையையும் மகிழ்வையும் அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் நித்திய, நைமித்திய கடமைகளை தாமே முழுமையாகச் செய்வதும், குமரவேளின் எல்லாத் திருவிழாக்களையும் சிறப்பாக நடத்துவதும், ஆலய நிர்வாகத்தில் பொறுப்பாண்மைக் குழுவிற்கு முதுகெலும்பாக விளங்குவதும், நிதி நெருக்கடியான இந்து மாணவர்களுக்கு நிதியுதவி செய்வதும், சமய பணிகளை மாணவர்கள் பொதுச் சிந்தனையுடன் ஆற்றுவதையும் நாம் மதிப்பிட முடியாது.

இம் மலரானது இந்து மாணவர் சங்கத்தினரின் அயராத உழைப்பிற்கும் சமய ஈடுபாட்டிற்கும் ஒரு சான்றாக அமைவதோடு, இளைய சந்ததியினரிடம் சீரிய சமய சிந்தனைகளை வளர்ப்பதற்கு ஓர் தூண்டுகோலாகவும் விளங்கும் என நம்புகின்றேன்.

இந்து மாணவர் சங்கத்தினரின் சீரிய பணிகள் சிறப்புற நாம் யாவரும் முன்னின்று உதவிட வேண்டும். எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரன் யாவருக்கும் சுபீட்சமான எதிர்காலத்தை தர பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

நன்றி

**இரா. மகேஸ்வரன்**
செயலாளர்,
பொறுப்பாண்மைக்குழு,
தலைவர்,
இந்து பட்டதாரிகள் சங்கம்
நூலகர் பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் உள்ளத்திலிருந்து

குறிஞ்சி வளமிகு கண்டி மாநகரின் ஹந்தானை மலைச்சாரலில் குன்றினிலமர்ந்து அடியார்களின் குறைதீர்த்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் குறிஞ்சிகுமரனை மனதார நினைந்து கொண்டு, பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்களின் வழிபாட்டு தலமாக விளங்கும் இவ்வாலயத்தை பேராதனைக் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கம் ஆண்டாண்டு காலமாக சிறப்பாக வழிநடாத்தி வருகிறது. இச் சங்கமானது ஆலயத்தின் பெரும்பாலான தொண்டுகளை ஆற்றிவருவது யாமறிந்ததே. எமது 62 ஆவது இந்து மாணவர் சங்கத்தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டமையானது குறிஞ்சிகுமரனின் பேரருளாகவே கருதுகிறேன். நான் எனது வாழ்வில் இந்து மாணவர் சங்கதலைவராக இருந்து ஆலயத்திற்கு சேவை செய்தமை பெரும் பேறாகும். வழமை போல இம்முறையும் ஆலய வளர்ச்சிக்காக முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்காலச் சூழலில் மாறிவரும் சமூக கலாசார விழுமியங்கள் காரணமாக ஆலயத்திற்கு செல்லும் பண்பு அருகிவருகிறது. இது எமது பல்கலைக்கழக மாணவர்களிடையே காணப்படுவதும் மிக கவலைக்குரிய விடயமாகும். பல்கலைக்கழக மாணவராகிய நாம் வெள்ளிக் கிழமைகள் மற்றும் விஷேட நாட்களிலாவது குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு வருகைதந்து கூட்டுப் பிரார்த்தனை மற்றும் ஆலய செயற்பாடுகளில் கலந்து கொள்வது முக்கியத்துவமான ஒன்றாகும்.

எமது 62 ஆவது செயற்குழு செயற்பாடுகளை சிறப்பாக செய்வதற்கு எமக்கு பெரிதும் உதவிய ஆலய பிரதமகுரு, பொறுப்பாண்மை குழு, இந்து பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள், மற்றும் பழைய மாணவர்களுக்கும் மனமாரந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இதனை விட ஆலய செயற்பாடுகள் சிறப்பாக நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்த எனது செயற்குழு உறுப்பினர்கள், மாணவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதில் எனதுள்ளம் பெரு மகிழ்ச்சியடைகிறது.

இனி வரும் காலங்களிலும் இந்து மாணவர் சங்கமானது மென்மேலும் சிறப்பாக செயற்பட எனது வாழ்த்துகளை தெரிவிப்பதோடு. இச்சங்கத்தினால் செய்யப்படும் பணிகளில் முக்கியமான ஒன்றாக வருடாந்தம் இந்து மாணவர்களின் ஆக்கங்களை தாங்கிவரும் இந்துதருமம் நூல்வெளியீடு குறிப்பிடத்தக்கது. இம்முறையும் இந்நூல் வெளியிடுவதற்கு குமரனருள் கைகூடியுள்ளது. எனவே இந்து மாணவர் சங்கத்தலைவராக இந்நூல் சிறப்பாக வெளிவர வாழ்த்துகளை தெரிவிப்பதோடு. ஆண்டுதோறும் இடைவிடாது மலர குறிஞ்சிக் குமரனின் திருவருளை வேண்டி நிற்கிறேன்.

"சரணம் சரணம் சண்முகா சரணம்"

**வீ.ராஜ்குமார்**
தலைவர், இந்துமாணவர் சங்கம்
பொறியியற்பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம் 62 ஆவது செயற்குழு 2019/2020

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | திரு.வ.தருமதாசன் |
| பெரும் பொருளாளர் | : | பேராசிரியர்.த.சிவானந்தவேள் |
| கௌரவக்கணக்காய்வாளர் | : | திரு.ந.அகிலன் |
| தலைவர் | : | செல்வன்.வீ.ராஜ்குமார் |
| உபதலைவர் | : | செல்வன்.கை.கம்சன் |
| இணைசெயலாளர்கள் | : | செல்வன்.சு.அனோயன்<br>செல்வன்.வி.கஜகரன் |
| இளம் பொருளாளர் | : | செல்வன்.ச.தினேஷ் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன்.சி.சாரங்கன்<br>செல்வி.லோ.சதுர்ஷி<br>செல்வி.ம.பேச்சுமா சேய் துங்க |
| நூலகர் | : | செல்வன்.அ.இளங்கீரன் |
| பண்டக முகாமையாளர்கள் | : | செல்வன்.ந.இசைப்பிரியன்<br>செல்வன்.க.வசீகரன் |
| நிர்வாக அலுவலர்கள் | : | செல்வன்.கி.சதுர்சன்<br>: செல்வன்.நா.பிரசாந் |
| இணைப்பாளர் | : | செல்வன்.சு.ஹரிவர்த்தன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன்.S.நிரோசன்<br>செல்வன்.S.கவிதாஸ்<br>செல்வன்.T.நிகேஸ்<br>செல்வன்.K.வைகுந்தன்<br>செல்வன்.R.மயூரதன்<br>செல்வன்.R.சுமாலிராஜ்<br>செல்வன்.V.சுதர்சன்<br>செல்வி.A.சகானா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்63 ஆவது செயற்குழு 2019/2020

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | திரு.வ.தருமதாசன் |
| பெரும் பொருளாளர் | : | பேராசிரியர்.த.சிவானந்தவேள் |
| கௌரவக்கணக்காய்வாளர் | : | திரு.ந.அகிலன் |
| தலைவர் | : | செல்வன்.ஜெ.கபிலானந் |
| உபதலைவர் | : | செல்வன்.கா.கௌசிகன் |
| இணைசெயலாளர்கள் | : | செல்வன்.லெ.கோபிநாத்<br>செல்வன்.சி.சிவசங்கர் |
| இளம் பொருளாளர் | : | செல்வன்.செ.கிருஷிகன் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன்.பி.பிரசாந்<br>செல்வி.சூ.தர்ச்சனி<br>செல்வி.செ.சாகித்தியா |
| நூலகர் | : | செல்வன்.பா.பிருந்தாவன் |
| பண்டக முகாமையாளர்கள் | : | செல்வன்.பு.பிரசாந்தன்<br>செல்வன்.க.பானுகோபிகன் |
| நிர்வாக அலுவலர்கள் | : | செல்வன்.ச.கஜன்<br>செல்வன்.த.நிசாந்தன்<br>செல்வன்.நா.கேசவராஜ் |
| இணைப்பாளர் | : | செல்வன்.ம.பானுசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன்.சி.தேவதர்சன்<br>செல்வன்.தா.வித்தியாசாகரன்<br>செல்வன்.இ.டிலக்ஷியன்<br>செல்வன்.பூ.சிவரூபன்<br>செல்வன்.சி.தாரங்கன்<br>செல்வன்.பி.ஹேம்குமார்<br>செல்வன்.கா.பிரசாந்<br>செல்வன்.செ.பிரகாஸ்<br>செல்வன்.யோ.ரவிதர்சன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழு
# 2018/2019

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பேராசிரியர் வை. நந்தகுமார் |
| பொதுச் செயலாளர் | : | இரா. மகேஸ்வரன் |
| நிர்வாகச் செயலாளர் | : | பேராசிரியர் த. சிவானந்தவேள் |
| பொருளாளர் | : | திரு. வ. தருமதாசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | பேராசிரியர். செ. சிவயோகநாதன் |
| | : | பேராசிரியர். வ. மகேஸ்வரன் |
| | | திரு.ச. விஜயச்சந்திரன் |
| | | திரு. து. சிவசுப்பிரமணியம் |
| | | திரு. அ. அரியரத்தினம் |
| | | திரு. வ. கதிர்காமநாதன் |
| | | செல்வன். வீ. ராஜ்குமார் |
| | | செல்வன். சு. அனோஜன் |
| | | செல்வன். ச. தினேஷ் |
| | | செல்வன். ஜெ. கபிலானந் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படைப்பியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















ஆலய தோற்றத்தின்
தற்போதய சில பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணக்கதைகளும் புதைந்துள்ள உண்மைகளும்

**சா.சக்திதாசன்**
பெருந்தலைவர்
இந்துமாணவர் சங்கம் பேராதனைப்பல்கலைக்கழகம்.

புராண காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் முழுக்க முழுக்கக் கற்பனையானவை அல்ல.

புராணங்களை எழுதியவர்கள் அது சம்பந்தப்பட்டு ஏதோ நடந்தவற்றை மிகைப் படுத்தியே கதைகளைச் சிருக்ஷ்டித்துள்ளனர்.

தேவருலகம், அசுரர் உலகம், யம உலகம் என்றெல்லாம் கூறப்படும் உலகங்கள் ஒரு போது இருந்தது. காலத்தால் அவை உரு மாறியுள்ளன.

தேவருலகம் வியாழன் கிரகத்திலும் அசுரர் உலகம் சுக்கிரன் கிரகத்திலும் யம உலகம் சனிக்கிரகத்திலும் இருந்திருக்கலாம்.

தேவருலகத்தின் அதிபதியாக பிரம்ம தேவரின் தலைமையில் குரு பகவானும், அசுர உலகத்தின் அதிபதியாக் சுக்கிராச்சாரியாரும் யம லோகத்தின் அதிபதியாக சனீஸ்வரனும் இருந்து அங்கிருந்தவர்களை ஆட்சி செய் திருக்கின்றனர். தேவர்கள் முப்பத்து முக் கோடி என்னும் எண்ணிக்கையில் இருந் தார்கள் என்றும் நாற்பத்தெட்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ரிக்ஷி புங்க வர்களும் அவர்களுடன் இருந்தார்கள் என்றும் புராணங்கள் கூறுகின்றன. சாதாரண மனிதர்களை விட பெரும் ஆற்றல் பெற்றி ருந்த அவர்கள் அட்டமா சித்திகளிலும் வல்ல வர்கள். இப்போது இல்லாமற் போனாலும் அவர்களது அதிர்வலைகள் இல்லாமற் போக வில்லை. சரியான படி மந்திரங்களையும் பிரார்த்தனையும் செய்தால் அவர்கள் பிரத்தி யட்சமாய்த் தோன்றுவார்கள்.

செவ்வாயின் ஆட்சியாளராக தமிழ்க் கடவுள் முருகன் இருந்திருக்கிறார்.

புதனின் அதிபதியாக விஷ்ணு இருந் திருக்கிறார்.

சந்திரனின் ஆட்சியாளராக பெண்ணான அம்பிகை இருந்துள்ளார்.

சூரியனின் ஆட்சியாளராக சிவ பெருமான் இருந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாகவே இன்றும் கூட சோதிட நூல்களில் சூரியன் முதலான நவக்கிரகங்களுக்கும் தெய்வங்களாக இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

கிரகங்களில் ஒன்றான சந்திரனுக்கு மனிதன் பயணம் மேற்கொண்டு ஆராய்ந்ததில் அதில் எவரும் சீவித்திருந்த அடையாளங்கள் இப்போது காணப்படவில்லை. வெறும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் கற்பாறைகளுமே காணப்பட்டன.

செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்கள் அனுப்பிய படங்களில் யாரோ அங்கு வாழ்ந்ததற்கான அறிகுறிகளும் ஆறு ஓடியதற்கான தடயங்களும், கடல்கள் இருந்ததற்கான பள்ளங்களும் மலைமேடு பள்ளங்களும் கண்டறியப் பட்டுள்ளன. செவ்வாயின் துருவப்பகுதிகளில் பனிக்கட்டி உறைந்த நிலையில் காணப்படுவதாகவும் அங்குள்ள நீரில் இதுவரை கண்டறியப் படாத ஐந்துக்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஏனைய கிரகங்களைத் துருவி ஆராய இன்னும் தொழில்நுட்பத்திறன் வளரவில்லை. ஆனால் சக்திவாய்ந்த படப்பிடிப்புகளை வைத்து ஆராய்ச்சி நடைபெறுகிறது.

எனவே தற்போதைக்கு செவ்வாய்க் கிரகமே எமது கவனத்தை ஈர்த்துள்ளது. ஆதாவது தமிழ்க்கடவுள் முருகன் ஆட்சி செய்த அந்தக்கிரகம் காலத்தின் கோலத்தினால் இப்போது சிதைந்து வருகிறது என்பதேயாகும்.

ஏனைய கிரகங்களை விடப் பிந்திய காலத்திலேயே செவ்வாயில் முருகன் ஆட்சி நடத்தியுள்ளார் என நாம் ஊகிக்கலாம்.

செவ்வாய் கிரவல் நிற மண் மேற்பரப்பை உடையதாகக் காணப்படுவதாலே அதனைச் செங்கோள் என்கிறோம்.

செவ்வாயில் இருந்து முருகன் ஆட்சி நடத்திய காலம் பல மில்லியன் வருடங்களுக்கு முந்தியதாகும். பூமியில் அவதரித்த அந்த ஒப்பற்ற தமிழ் வீரன் செவ்வாய்க்குப் போய் ஆட்சி நடத்தியிருக்கிறார் என்றால் அவர்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் எத்தகைய தொழில் நுட்ப வசதிகளுடனும் வாழ்ந்திருந்தனர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பூமியிலிருந்து செவ்வாய்க்குச் சென்றுவர முருகப்பெருமான் மயில் வடிவ இயந்திரப்பொறி கொண்ட விமானத்தை வைத்திருந்திருக்கவேண்டும். எனவே அக் காலத்திலும் தமிழ் விமானப் பொறியியலாளர்கள், கட்டிடக்கலை வல்லுனர்கள், ஆயுத உற்பத்தியாளர்கள் மற்றும் பலதுறை அறிஞர்களும் இருந்திருக்க வேண்டும்.

ஐன்ஸ்டைனின் சார்பியற்தத்துவத்தின் படியும் ஹபிள் தொலைநோக்கி அனுப்பி வைத்த படங்களை ஆராய்ந்ததன் படியும் வான் வெளியில் உள்ள கோள்களும் நட்சத்திரங்களும் ஏனைய அண்டவெளிப் பொருட்களும் மிகவேகமாக ஒன்றையொன்று விட்டுப்பிரிந்து செல்கின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது. சூரியனைச் சுற்றி வரும் கோள்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கும். இப்போது செவ்வாய்க்கும் பூமிக்கும் உள்ள தூரத்தைவிட பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தூரம் குறைவாகவே இருந்திருக்கும். ஏனைய கோள்களுக்கும் அவ்வாறேயாம். எனவே அக் காலத்தில் முருகப்பெருமானும் ஏனைய கடவுளர்களும் இலகுவாகவே பூமிக்கு வந்து போயிருப்பர் எனலாம். இதற்கு அவர்கள் தங்கள் வசமிருந்த ஆகாயப் பொறிகளைப் பயன்படுத்தியிருக்கலாம்.

ஒளியின் வேகத்தில் ஒரு பொருள் இயங்கினால் அது ஒளியாகவே மாறிவிடும் என்று ஐன்ஸ்டின் கூறியுள்ளார். கடவுளர்கள் நினைத்த உடனேயே தோன்றுவதும் மறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் ஏன் என்றால் அவர்களின் வரும் மற்றும் போகும் வேகங்கள் ஒளியின் வேகத்தில் இருப்பதுதான். முற்றும் தற்காலத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் விவேகானந்தர் என்போர் ஒளி வடிவத்திலேயே அம்பிகையைத் தரிசித்த தாகக் கூறியுள்ளனர்.

கிரகங்களில் இருந்த காலநிலையானது மனிதர்களோ அல்லது வேறுவகையான/ ஜீவன்களோ இருப்பதற்கு வாய்ப்பாக இருந்திருக்கலாம். காலம் கடந்தநிலையில் கிரகங்களின் சூழல் மாறுபட்டு இன்றைய நிலையை அடைந்திருக்கலாம்.

மனிதர்களுக்கு **100** ஆண்டுகளும் தேவர்களுக்கு **36000** வருடங்களும் பொதுவான ஆயுள் காலங்களாகும். படைப்புக்கடவுள் எனக்கூறப்படும் பிரமதேவரின் ஒரு நாள் **2000** மகாயுகமாகும்.

இதன் அளவீடு மானிட வருடத்தின் **8640000** மடங்கு ஆகும். பிரமாவின் ஆயுள் காலம் எவ்வளவு தெரியுமா? அது 8640000 x 360x100 மானிட வருடங்கள். இதிலிருந்து மனிதரின் ஆயுள் காலம் எவ்வளவு அற்பமானது எனத் தெரிந்து கொள்ளலாம்.

ஒட்டு மொத்த பிரபஞ்சமும் பிரமாவின் உறக்க காலமான ஒரு மகாயுகம் வரையில் அழிந்து சக்திச் சொட்டாக மாறிவிடும். மீண்டும் பிரமா விழித்தெழுந்தே படைப்பை நிகழ்த்துவார் என்று இந்து சோதிட நூல்கள் கூறுகின்றன.

மற்றும் பிரம்மாவின் பகல் காலத்தில் **14** மனுக்கள் ஆட்சி நடத்துவர் எனக்கூறப்படுகிறது. ஒரு மனுவின் ஆட்சிக்காலம் **71** சதுர்யுகம் அல்லது மகாயுகமாகும். இவ்வாறான **14** மனுக்களின் காலத்தை ஒரு கல்பம் என்பர். மனுக்களே மனித குலத்தைத் தோற்றுவிப்பவர்களாவர்.

தற்போதைய காலம் சுவேதவராக கல்பத்தில் வைவஸ்வத மனுவின் ஆட்சிக்காலம் ஆகும். இவர் ஆட்சிக்காலத்தில் **28**ஆவது மகாயுகத்தில் கிருத, திரேதா, துவாபர யுகங்கள் கழிந்து இப்போது கலியுகம் நடைபெறுகிறது. ஒரு மனுவின் ஆட்சி நடைபெற்று முடிவுறும் வேளையில் ஒரு கிரு தயுக காலம் மகாப்பிரளயம் (அழிவுக்காலம்) ஏற்படும். இது **17,28,000** வருடங்கள் நீடிக்கும். அதன் பின்னர் மற்றைய மனுவின் ஆட்சி ஏற்படும். இந்தக் காலத்திலே பிர பஞ்சம் முற்றாக ஒடுங்காது. ஆனால் பிரபஞ்சத்திலுள்ள பூமி உட்பட்ட கோள்கள், நட்சத்திரங்கள் போன்றவற்றில் அழிவுகள் ஏற்படும். இப்போதைய வைவஸ்வத மனு 27x 4320000 மானிட வருடங்கள் ஆட்சி நடத்தியுள்ளார். நாமும் இப்போது கலியுகத்திலே வாழுகிறோம்.கலியுகத்தின் **4,32,000** வருடங்களில் சென்ற **2017**ஆம் ஆண்டுவரை **5118** ஆண்டுகள் மட்டுமே சென்றுள்ளன. எனவே உலகத்திலும் கோள்கள் மற்றும் நட்சத்திரங்களிலும் கலியுகம் முடியும் வரை பெரியமாற்றங்கள் எதுவும் நடைபெறாது. பேரளவு அழிவு நிகழ்வதற்கு வைவஸ்வத மனுவின் ஆட்சி முடிவுறவேண்டும். அதற்கு இன்னும் **44** சதுர்யுகங்கள் மட்டில் போகவேண்டும். எனவே உலகம் அழியும் என்று கூறும் பித்தலாட்டக் கூற்றுக்களை நம்பவேண்டாம்.

மகாவிஷ்ணுவானவர் பாதாள லோகத்தில் தள்ளப்பட்டிருந்த பூமியை பன்றி (வராகம்) உருவெடுத்துச் சென்று மீட்டுவந்த காலத்தையே "சுவேத வராக கல்பம்" என்னும் பெயரால் அழைக்கிறோம். பூலோகத்தை விட சுவர்க்கலோகம், பாதாளலோகம் என இரண்டு லோகங்கள் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. சுவர்க்கலோகத்தின் ஆட்சியாளரே விஷ்ணு பகவான் ஆவர். சுவர்க்கவாயில் ஏகாதசியன்று இயற்கையாக மரணமடைபவர்கள் நேராக சுவர்க்கலோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதாக ஐதீகம். பாதாள உலகம் நரக லோகமாகும். பூமியில் மனுதர்மத்தை அனுஷ்டிக்காது மீறி நடப்பவர்கள் பாதாள உலகம் கொண்டு செல்லப்பட்டுத் தண்டிக் கப்படுவதாக புராணங்கள் கூறுகின்றன.

படைப்புக்கடவுளின் ஆயுள் பற்றி மட்டுமே இவ்வாறு கூறப்பட்டுள்ளதே தவிர ஏனைய தெய்வங்களின் (முருகன் உட்பட) ஆயுள் காலம் பற்றி எதுவும் கூறப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே முருகன் மனிதனாகப்பிறப்பெடுத்து தெய்வ நிலைக்குச் சென்றவர் எனலாம்.

படைப்புக்கடவுள் ஆனவர் விஷ்ணுவின் நாபியிலிருந்து தோன்றுவதாக இந்து மதம் கூறுகிறது. எனவே விஷ்ணு பகவான் அழிவில்லாத ஒருவர் என்றே எண்ணத் தோன்றுகிறது. அவரே முழுமுதற் கடவுளாவார். அவருக்கு சீதேவி, பூதேவி என இரு சக்திகள் உள்ளனர். பூதேவியே உலகினருக்கு அனைத்தையும் வழங்கும் ஆற்றல் பெற்றவர். எனவே விஷ்ணுவின் நேரடியான பாதுகாப்பு பூமிக்கு உள்ளது. விஷ்ணு உறக்கத்தில் இருப்பது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. அது எமது உறக்கம் போன்றதல்ல. அது விழிப்புணர்வு உறக்கம் (Awareness sleep) ஆகும். அனைத்தையும் தனது அற்புத ஆற்றலால் உணரும் வகையிலான உறக்கம் அதுவாகும்.

## உகந்தை ஆலய மகத்துவங்கள்

அ) பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமைமிக்கது இந்த ஆலயம்.

ஆ) பாத யாத்திரையில் செல்லும் கதிர்காம யாத்திரீகள் இங்கு செல்லாமல் கதிர்காமம் செல்வதில்லை.

இ) யாழ் தேசிய பாதுகாப்பு வனப்பிரதேசத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

ஈ) கடல் வளமும் மலை வளமும் நீர்ச்சுனைகளும் நிறைந்த வனப்பிரதேசம் இது.

உ) தமிழ்த்தெய்வமான முருகப்பெருமானின் ஏழாவது படைவீடாகக் கருதப்படும் கதிரை மலையிலிருந்து அவர் உகந்தைப்பகுதியில் தற்போது கிரி விகாரையாக மாறியுள்ள சூரன் கோட்டையில் இருந்த சூரபத்மனின் சகோதரனின் படைவீரர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்தார்.

ஊ) முருகப்பெருமான் தனது வேலின் சக்தியை தன் படைவீரர்களுக்கு வெளிப்படுத்த எறிந்த வேலாயுதமானது உகந்தை செல்லும் வழியிலிருந்த வாகூரக்கல் மலையைப்பிளந்து சென்ற வரலாற்றுச் செய்திக்கு ஆதாரமாக அந்தப்பிளந்த மலையை இப்போதும் காணலாம்.

எ) மான்மகள் வள்ளி மஞ்சள் குளித்தாடிய மலைக்குகையை இன்றும் காணலாம்

ஏ) வள்ளிநாச்சியாரும் முருகனும் கடலில் கல்லோடத்தில் சென்று தேன் நிலவு கழித்த இடம் இது. அந்தக் கல்லோடம் இன்றும் கடற்கரையில் உள்ளது.

ஐ) வள்ளியம்மையார் முருகன் மீது மையல் கொண்டு அவரைக் காதலித்தது இங்கு தான்.

ஒ) வள்ளியம்மையார் ஒரு இலங்கைப்பெண் என்பது காலக்கிரமத்தில் நிரூபிக்கப்படும். அவர் பிறந்த குறவர்குடியானது அக்கரைப்பற்றின் அணித்தாக உள்ள அளிக்கம்பைப்பிரதேசமாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

ஓ) இக்கோயிலில் வள்ளியம்மையாருக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஔ) இராவணன் இலங்கையை ஆண்ட பிற்பாடே இலங்கையில் சிவ வழிபாடு தொடங்கியது. அதற்கு முன்பு இலங்கையில் முருக வழிபாடே இருந்தது. அதாவது திரேதா யுகத்தின் ஆரம்ப மற்றும் மத்திய காலத்தில் இங்கு முருக வழிபாடே இருந்தது. அந்த யுகத்தின் இறுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்றான் இராமபிரான் அவதரித்து இலங்கைக்குப்படையெடுத்து இராவணனை வதம் செய்தார். இராமபிரான் காலத்திலும் சிவ வழிபாடே இருந்தது.

ஃ) ஆம்பாறை மாவட்ட இந்துசமயப் பேரவையும் ஏனைய இந்துமத நிறுவனங்களும் மேற்கண்ட கூற்றுகள் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொண்டு எமது பிரதேசத்தின் புராதன மகிமையை உலகிற்கு எடுத்துக்கூறவேண்டும். கந்தபுராணத்தில் மூடி மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணரவேண்டியது இம் மாவட்ட சமய அறிஞர்களதும் ஆராய்ச்சியாளர்களினதும் முக்கிய கடமையாகும்.

## பத்மாசூரன் இலங்கையில் கோட்டை கட்டியிருந்தானா?

முருகப்பெருமான் பத்மாசூரனை வதைத்து அவனைச் சேவலும் மயிலுமாக மாற்றி ஆட்கொண்டார் என்று கந்தபுராணம் முதலிய நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரனோடு முருகன் போர்புரிந்த இடம் தென்னிந்தியாவின் திருச்செந்துூர் எனவும் நம்பப்படுகிறது.

இலங்கையின் தென்கிழக்குக் கடற்கரையை அண்டியுள்ள உகந்தை மலை ஆலயம் யால வனவிலங்குப்பிரதேச வளாகத்தில் உள்ளது. ஒரு முறை உகந்தை மலைக்குச் சென்ற சமயம் யால வனவிலங்குப் பிரதேசத்தின் உட்பகுதிக்குச் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அவ்வேளை "சூரன் கோட்டை" என மக்களால் காலங்காலமாக அழைக்கப்பட்டு வரும் இடத்தைப் பார்த்தேன். அது இப்போது "கிரிவிஹாரை" யாக மாற்றப்பட்டிருந்தது. இது ஏன் சூரன் கோட்டை என மக்களால் அழைக்கப்பட்டு வந்தது எனச்சிந்தித்த போதுதான் மேற்கண்ட சந்தேகம் எழுந்தது. கதிர்காமம் உகந்தைக்கு அண்மையில் உள்ள பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம். முருகப் பெருமானின் போர்ப் பயிற்சி முகாமாகவும் கதிர்காமம் விளங்கியது. இவைகளைத் தொடர்புபடுத்திப் பார்க்கையில் பத்மாசூரன் கட்டிய கோட்டையே உகந்தைமலைக் கண்மையிலுள்ள "சூரன் கோட்டை" யாக இருக்கலாமோ என எண்ணத்தோன்றுகிறது. இலங்கையில் ஏற்பட்ட பௌத்த சமய எழுச்சியின் காரணமாக இந்தச்சூரன் கோட்டை கிரிவிஹாரையாகிவிட்டது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் உகந்தைப்பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொண்டால் மேற்கண்ட ஊகங்களை மெய்ப்பிக்கும் சான்றுகளைக் கண்டுபிடிக்கலாம். இந்து சமயிகள் வெறுமனே புராணக்கதைகளில் மூழ்கிக் கிடந்தார்களே தவிர அவைகளிலுள்ள அறிவியல் உண்மைகளை ஆராய முற்படவில்லை. ஆராய்வதற்கான மனநிலை ஏற்படாத வகையில் ஆக்கிரமிப்பாளர் களிடம் அகப்பட்டுக்கிடந்தனர். மேலும் பிற சமயங்களின் செல்வாக்கும் அவர்களைச் சிந்திக்க விடவில்லை. இப்போது இந்துக்களுக்குத் தங்கள் சமயம் பற்றியும் பூர்வீகம் பற்றியும் சிந்திக்கவும் அவைபற்றி ஆராய்ச் சிகள் மேற்கொள்ளவும் சிறிது அவகாசம் கிடைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத் தினால் இலங்கை ஏன் சிவபூமி என்று அழைக்கப்படுகிறது என்ற கேள்விக்கு அறிவியல் பூர்வமான சான்றுகள் பல கிடைக்கலாம். அனைத்தும் இந்தி யாவில் தான் நடைபெற்றன என்று காலங்காலமாகக் கூறிவந்தவைகளில் பல பொய்யானவை என உறுதிப்படுத்த முடியும். இலங்கையின் இந்து கலாசார நிறுவனம், இந்து மாமன்றம் போன்ற நிறுவனங்களுக்கு இதுவே முக்கிய பணியாக இருக்கவேண்டும். வெறும் பக்தியுடன் நிற்காது, ஆலயங்களை நிர்வகிப் பதுடன் நிற்காது ஒரு ஆராய்ச்சிக்குழுவை நியமித்து செயலில் இறங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோவில்

**ரவிச்சந்திரன் சோபன்**
பொறியியற்பீடம்

இணுவில் கிராமத்தின் மத்தியில் அருள் சுரக்கும் கந்தசுவாமி கோயில் காலத்தால் முந்தியது. இச்சூழலில் இன்று ஆலயங்களின் தெய்வீக அலையும் கல்விச்சாலைகள், இரு பாரிய நூலகங்கள், கலைகள் வளர்க்கும் சிவப் பொலிவுடன் அறப்பணியாற்றும் மன்றங்கள் அணிசெய்ய மையமாக அமைந் திருக்கும் கந்தப்பெருமானின் அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. முருகப் பெருமான் தனக் கொரு ஆலயம் அமைக்கு மாறு தமது பக்தனை கனவின் மூலம் அறிவுறுத் தினார். மேலும் ஆலய முன்னேற்றத்துக்காக மீண்டும் பல அடியார்களுக்கு கனவு மூலம் தெரிவித்தார். இதன் பேறாக இவ்வாலயத்திற் பல சிறப்புக்கள் அமைந்து உலகப்புகல் ஓங்கவும் வித்தி ட்டார். முருகப் பெருமானின் திருவிளை யாடல் இவ்வாலயம் சிறக்கவும் சமயநெறி வளரவும் இக்கிராமத்தின் சமய தமிழ் கலைகள் அற்புதங்கள் உலகளவில் பரந்து பெருமையை நிலைநாட்டியது.

பண்டைய தமிழ் மன்னர் கால ஆட் சியில் யாழ்ப்பாணத்தில் இணுவில் பெரும் பிரிவில் அரச பிரதானியாக நிர்வகித்த பேராயிரவனின் மரபைச் சேர்ந்த கனகராச முதலி என்பவன் பதின்நான்காம் நூற்றாண் டின் பிற்பகுதியில் 1365இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இவ்வாலய சூழலில் வசித்து வந்தான். இவன் இவ்வூர் மக்கள் சிறப்புடன் வாழ வேண்டிய சகல உதவிகளையும் செய்து தனது அரச பணிக்கு மெருகூட்டினான். இவன் சிறந்த சைவசமய பக்தன். இவனின் ராஜ தந்திரங்களும் நீதியான நெறிமுறையும் குடிமக்கள் மீது மிகுந்த அன்பும் பாராட் டியதால் ஊர் மக்களும் இவனுடன் நல்லுறவு பேணி அன்புடன் வாழ்ந்தனர். ஒருநாள் இரவு கனகராச முதலியின் இல்லிடச்சூழலில் பெரிய தீப்பிழம்பு தோன்றியது. இதனை அவதானித்த மக்கள் முதலியின் நெற்போர் தீப்பற்றி எரிவதாக எண்ணி அவ்விடத்தை நாடி ஓடினர். அங்கு குழுமிய மக்கள் எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாததைக்கண்டு வியந்தனர். கனகராச முதலியிடம் சென்று தாம் கண்ட விபரத்தை தெரிவித்தனர். அப் போது முதலி தான் ஓய்வெடுத்திருந்த வேளை இரு அந்தண சிறுவர்கள் தாம் காஞ்சியி லிருந்து வந்ததாகவும் தம்மை ஆதரிக்குமாறு கூறியதும் மறைந்துவிட்டனர் என கூறி னார்கள். தமது குல தெய்வமான காஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம்பதி குமரக் கடவுளே தனக்கும் குடிமக்களுக்கும் நல்லருள் புரிவதன் பேரில் காட்சிதந்தாகவும் உள்ளம் உருக இறையருளை வியந்தான். இறையருள் கைகூட கனகராச முதலி இரு குடிசைகளை அமைத்து முருகனா கவும் வைரவராகவும் வழிபட்டான். அவ்வூர் மக்களும் பயபக்தியுடன் வழிபட்டு வந்தனர். இதனைக் கர்ண பரம்பரை கதை ஒன்று செப்புகிறது. முருகப்பெருமானை ஆதரித்து ஊர்மக்களும் சமய நெறியை உணர வைத்து நல்லாட்சி புரிந்த முதலியை அவ்வூர் மக்கள் என்றும் மறவாது நினைவு கூறும் வண்ணம் இவ்வாலய வாசலில் நூற்றியம்பது யார் தொலைவில் "முதலியாரடி" எனும் பெயரில் சிறுகுடிசை அமைத்து இன்றுவரை வணங்கி வருகின்றனர்.

ஆண்டுகள் பல சென்றன போர்த்துக்கேயர் வரவால் ஆலயங்களின் அழிவும் சமய வழிபாட்டின் தடையும் ஏற்பட்டன. மக்கள் தமது சமய நெறியை அகத்தளவில் போற்றி வழிபட்டு வந்தனர்.

## தமிழ்ச்சங்கம்

பரராஜசேகர மன்னன் நல்லூரை இராசதானியாக்கி இருந்த வேளை அவனின் உறவினரான அரசகேசரி என்பவன் நல்லூரில் தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழை வளர்த்தான். இதேவேளை இணுவில் கிராமத்தின் சிறப்பை அறிந்து தமிழ்க்கடவுளான இணுவில் கந்தசுவாமி கோயில் சூழலிலும் தமிழ்ச்சங்கம் அமைந்து முருகப்பெருமானின் உறுதுணையை நாடினான். இத்தமிழ்ச்சங்கத்தின் காவலனாக அமைந்த இணுவில் கந்தசுவாமி கோயிலின் பெயரில் தரும சாசனம் எழுதப்பட்டது.

## ஆலயத்தோற்றம்

நீண்ட காலத்தின் பின் தற்போது இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தில் வெற்றிலைத்தோட்டம் அமைத்த இணுவில் குடிமகனான பக்திமான் குழந்தையர் வேலாயுதர் நற்பேறு பெற்றார். இவரின் கனவில் தோன்றிய முருகப்பெருமான் தான் காஞ்சியிலிருந்து வந்ததாகவும் வெற்றிலைத் தோட்டத்தில் தான் குறிப்பிட்ட இடத்தில் தன்னை ஆதரிக்குமாறும் கூறினார். மேலும் அத்தோட்டத்தில் ஒரு நொச்சிமர கிளை நாட்டப்பட்டும் அருகே தனது காலால் மிதித்திருப்பதாகவும் தெரிவித்து மறைந்தருளினார். மறுநாட் காலை வேலாயுதர் தனது தோட்டத்தை அடைந்த போது புதியதொரு நொச்சிமரம் நிற்பதையும் அருகில் கால் மிதித்த அடையாளத்தையும் கண்டார். ஆனந்த மேலீட்டினால் முருகப்பெருமானை வியந்து அவ்விடத்தில் ஒரு குடிசையை அமைத்து விளக்கேற்றி வழிபட்டார். இதனால் இக்காணிக்கு "நொச்சி ஒல்லை விரயன்" என்னும் தோம்பு பெயர் ஏற்பட்டது. இவ்வாலயத்தின் தலவிருட்சமான நொச்சிமரம் கருவறையின் அருகே காணப்படுகிறது. இன்றும் இவ்வாலயம் நொச்சி ஒல்லை முருகன் என முதியோர்களால் அழைக்கப்படுகிறது. இவ்வாலயம் தொடர்ந்து குழந்தையர் வேலாயுதரின் பின் உரிமையாளனாலேயே பராமரிக்கப்பட்டு வந்தது. குடிசையிருந்த இடம் செங்கற்களாலும் பின்னர் வெள்ளை வைரக்கற்களாலும் மாற்றம் செய்யப்பட்டு வந்தது. ஒரு சமயம் கட்டுமானப்பணிக்கான நிதிவளம் குன்றியது. முருகப்பெருமான் கனவில் அறிவுறுத்தியபடி தாவடியை சேர்ந்த கோமேசு முதலியார் பேருதவி புரிந்தார். கட்டுமாணப் பணிகள் **1840**இல் நிறைவு கண்டது. கோமேசு முதலியின் திருப் பணிச்சிறப்பினால் முருகப்பெருமானின் அர்த்த மண்டப வாசலில் மேற்புறத்தில் அமைந்த கல்லில் **1905**ம் ஆண்டளவில் திருப்பணிகள் செய்தமைக்கான கல்வெட்டு இருப்பதாகவும் இக்கல்வெட்டு பேராசிரியர் சி.பத்மநாதனின் ஆய்விலிருப்பதாகவும் ஆய்வறிக்கையின் பின்பே இவ்விபரம் தெரிய வருமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசற்கோபுரம்

சுதுமலையைச் சேர்ந்த முத்து நாக லிங்கம் என்பவர் முருகன் மீது இருந்த பக்தி யின் பேறாக வாசற் கோபுரம் அமைக்க முன் வந்து 1905இல் ஆரம்பித்தார். மூன்று தாளத்தில் அரிய தோற்றமுடைய திருக் கோபுரம் 1909 இல் நிறைவு கண்டது. இதே அன்பரின் பக்தியால் முருகப்பெருமான் தேரி லிருந்து இளைப்பாறும் ஊஞ்சல் மண்ட பமும் நிறுவப்பட்டது.

## உலகப்பெருமஞ்சம்

ஆலய உரிமையாளரின் உறவினரும் மஞ்சத்தடியில் வாழ்ந்த சித்தருமான பெரிய சந்நியாசியார் இணுவில் கந்தப் பெருமானின் ஆலயப்பணியில் இணைந்தார். உரிய காலம் வந்ததுதம் பெரிய சந்நியாசியரின் கனவில் தோன்றிய முருகப் பெருமான் ஒரு பெரிய மஞ்சத்தின் திரு உருவைக்காண்பித்து தாம் வீதியுலா வருவதற்காக திருமஞ்சமொன்றை உருவாக்குமாறு கேட்டிருந்தார். பெரியார் 1902ம் ஆண்டில் திருமஞ்ச வேலையை தமது வீட்டருகே ஆரம்பித்தார். குறை வேலை யுடன் கந்தசுவாமி கோவிலுக்கண்மையில் திருமஞ்ச மிகுதி வேலையையும் பூர்த்தி செய்தார் 1906ம் ஆண்டில் இப்பெருமஞ்சம் வெள்ளோட்டம் கண்டது. முதன் முதல 1906ம் ஆண்டு தைப்பூசத்திருநாள் அன்று ஆறுமுகப்பெருமான் பெரிய சந்நியாசி யாரின் மகிமையையும் உலகறிய செய்யும் திருவிளையாடலின் ஒரு அங்கமாக தமது ஆலய பெருவீதியில் பெருமஞ்சப்பவனி வந்தார். அறுபது ஆண்டுகளுக்கு மேல் திருப் பவனி வந்த இப்பெருமஞ்சம் பழுதடைந் ததால் ஒரு சில வருடங்கள் ஓடாது முடங்கி கிடந்தது. இதை உணர்ந்த முருகன் அடியார் கள் சிலரின் வேண்டுதலுக்கிணங்க பிரபல இணுவில் வர்த்தகரான கல்கி நிறுவன அதிபர் சின்னத்துரையும் அவர்தம் உறவினர் இராச நாயகமும் எடுத்த பெருமுயற்சியால் பல லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப் பட்டது. இக்கலைக்களஞ்சியம் ஆரம்பகால அழகையும் விஞ்சும் வண்ணம் மெருகூட்டப் பட்டது. பாதுகாப்பின் பேரில் புதிதாக அமைக்கப்பட்ட மஞ்ச வீட்டில் 1983 நிறுத் தப்பட்டுள்ளது.

## ஏழுதேர் பவனி

இணுவில் கந்தப்பெருமானின் வேண்டு தலையடுத்து இணுவில் கந்தசுவாமி கோயிலில் இருந்து பெருவிழாக்கால ஏழு தேரப்பவனி காரைக்கால் சிவாலயம் வரை சென்று வரும் ஏற்பாட்டினை பெரிய சந்நியா சியார் நிறைவேற்றினார். தேரோடும் வீதி வழியே ஆலயச்சூரன் போரும் காரைக்கால் வரை சென்று இவ்வாலயத்தின் தென் திசையில் நூறு யார் தொலைவில் சிறப்பாக நடைபெற்றது. காலப்போக்கில் யாவும் அருகிவிட்டன. தேருலா மற்றும் சூரன் போர் விழாக்கள் நிறுத்தப்பட்டதும் வீதியின் இரு மருங்கின் எல்லைகளும் வீதியின் அகலத்தை குறைக்கச் செய்தன.

## விழாக்கள்

மூர்த்தி தலம் தீர்த்தம் யாவும் ஒருங்க மைந்த இவ்வாலயம் ஆனிமாத அமாவாசை யன்று தீர்த்த விழா அமையும் வண்ணம் முந்தைய வளர்பிறை சஷ்டி திதியில் கொடி யேற்ற விழா ஆரம்பமாகி 25 தினங்கள் பெரு விழாக்கள் நடைபெறும். இவ்வால யத்தின் வடபால் அமைந்த விளாத்தியடி வைரவப் பெருமான் மிக அற்புதமானவர் இவ்வாலய வாசலில் அமைந்துள்ள திருக் கிணற்றிலேயே முருகப்பெருமானின் தீர்த்த விழா நடை பெறுகிறது. இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்கள் இக்கிணற்று நீரை மருந்தாக பயன்படுத்துகின்றனர். தீராத நோய்களையும் தீர்க்கவல்ல இப்புனித நீரில் நீராடுபவர்கள் நற்சுகம் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில் நிம்மதி

**நித்தியானந்தன் நிகேதன்**
பொறியியற்பீடம்

எதன் மீது எமக்கு சந்தேகம் வந்தாலும் நிம்மதி கெடுகிறது. இது மனைவியாயினும் சரி மகேஷ்வரனாயினும் சரி எது பிடிக்கவில்லையோ அதிலிருந்து ஒதுங்கி நிற்பது நன்று ஆனால் தினமும் சந்தேகப்பட்டு உடலையும் மனதையும் கெடுத்துக் கொள்ள கூடாது.

நாம் ஓர் உணவை சாப்பிட்டு முடித்த பின் எதைச்சாப்பிட்டோம் என நினைத்தால் அடி வயிற்றை கலக்கும் சாப்பிடுவதற்கு முன் நன்றாக பார் எப்பிரச்சினையும் எழாது. திருமணம் முடிந்து எல்லா நிகழ்வும் முடிந்த பின் இவரையா திருமணம் செய்தோம் என நினைத்தால் நிம்மதி இருந்த இடம் தெரியாது போய்விடும். எனவே எதைச் செய்யினும் முன்னாலே யோசிப்பது சாலச் சிறந்ததாகும். யோசித்து செய்த முடிவுகளில் நம்பிக்கை வைத்தால் எந்தசக்தியாலும் அம் முடிவுகளை அசைக்க முடியாது.

செல்வச்சந்நிதி முருகனிடம் செல்வது என முடிவு எடுத்தால் திரும்பி வரும் போது பலனிருக்கும் என நம்பு, நம்பிக்கையும் சந்தேகமும் மாறிமாறி மனதில் தோன்றினால் அப்போதும் நிம்மதி என்பது இருக்கவே இருக்காது.

நண்பன் தீயவனென்றால் விலகிவிடுவது நல்லது. நல்லவனென்றால் நம்பியிருப்பது நல்லது. விலகியவனை நம்பத் தொடங்காதே நம்பியவனை விலக தொடங்காதே. இன்றைய பொழுது நன்றாக இருக்கும் என நம்பு அது நன்றாகவே இருக்கும். இப் பரீட்சையில் சித்தியடைவேன் என நம்பினால் சித்தி கிடைத்தே தீரும். என் மனைவி உத்தமி என நம்பு அவள் தவறாகவே நடந்தாலும் உனக்கு நிம்மதி இருக்கும். ஆனால் அவள் தனது தவறுகளுக்காக இந்த உலகில் வெந்து வெந்து சாவாள் நீ தொடங்கும் தொழில் நம்பியிறங்கு தொழிலில் திறமையே நமக்கு வந்து விடும். தண்ணீரில் விழுந்து விட்டால் "நீந்த தெரியும்" என்று நம்பு நீந்தத் தெரிந்து விடும். கடன் வந்து விட்டால் கட்டமுடியும் என நம்பு கட்டி விட முடியும் முடியாது என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனும், அது இல்லை இது இல்லை என்று வாதிடும் நாத்திகனும் மரக்கட்டைக்கு சமன்.

உண்டு என்பவனுக்கே உள்ளம் வேலை செய்கிறது. எந்த ஒன்றையும் கண்டால் தான் நம்புவேன் என்பவன் முகத்தில் மட்டும் கண்களை பெற்றவன். அகத்திலே கண்ணில்லாதவன் ஆகின்றான். ஊனக்கண் ஒரு கட்டத்தில் ஒளியிழந்து போகும். ஆனால் ஞானக்கண் எப்போதும் பிரகாசிக்கும் எந்தக் காரியத்திலும் நம்பிக்கையோடு இறங்கினால் எந்த இடர் வந்தாலும் வெற்றி கிடைக்கும்.

நம்பிக்கையோடு முயன்றால் சாணத்தில் தங்கம் கிடைக்கும் என்பர். சந்தேகத்தோடு முயன்றால் தங்கமும் சாணமாக தான் தெரியும் என ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

மானிடவாழ்வில் நம்பிக்கை வைத்தால் நிம்மதி கிடைக்கும் இதில் எவ்வித ஐயமும் கிடையாது என்பது எனது கருத்தாகும். ஆண்டவன் மீது நம்பிக்கை வைத்தால் எக் கஷ்டம் வந்தாலும் நிம்மதி கிடைக்கும். தலைகுனிந்து கல்வி பயிலும் மாணவர்களாகிய நாம் கல்வியிலே நம்பிக்கை வைத்தால் தலை நிமிர்ந்து நிம்மதியாக வாழ்க்கையில் வெற்றிபெறலாம் என்பது உறுதி.

முடியும் என்றால் முடிகிறது தயங்கினால் சரிகிறது. எச்செயலையும் முடியுமென நினைத்து இறங்கினால் அது முடியும். முடியாது போல என நினைத்து ஒரு செயலில் இறங்கினால் அது முடியாது என்றே போகிறது. அது போலவே எச்செயலையும் நம்பிக்கை வைத்து செய்ய வேண்டும்.

## உறவுகள் மேம்பட

1. எந்த விஷயத்தையும் பிரச்சினைகளையும் நாசூக்காகக் கையாளுங்கள். (Diplomacy) விட்டுக்கொடுங்கள் (Compromise)
2. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள் (Tolerance)
3. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)
4. மற்றவர்களைவிட எப்போதும் உங்களையே எப்போதும் உயர்வாக நினைத்துக் கர்வப்படாதீர்கள் (Superiority Complex)

மற்றவர்கள் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள் (Misunderstanding)

- அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடமேம்பாட்டிற்கு சுவாமி விவேகானந்தர்.

இ. மதிநுஷன்
பொறியியற்பீடம்

மானுட மேம்பாட்டிற்கும், மனித நேய வியாபகத்திற்கும் சுவாமி விவேகானந் தரின் போதனைகளும், அறிவுரைகளும் வள மூட்டும் கருவூலமாகும். சுவாமி விவே கானந்தர் அவர்கள் சிக்காக்கோ சர்வமத மகா நாட்டையும் மேனாட்டுப் பயணங்களையும் முடித்த பின் கல்கத்தாவில் ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் அங்குரார்ப்பண வைப வத்தில் எடுத்தியம்பிய கருத்து மானுட மேம்பாட்டிற்கு கல்வியின் முக்கியத்து வத்தை எடுத்துக் காட்டுகிறது.

கல்வி பற்றிய சுவாமியின் கருத்துக்கள் எமது சிந்தனையை தூண்டுவன. கற்கும் கல்வி ஜீரணமாகி வாழ் நாள் முழுவதும் பயன்படவேண்டும். கல்வி மூளையுள் திணிக் கப்படுவதல்ல, மனித சிருஷ்டி மேலானது மனிதனுள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொண்டுவர உதவுவதே கல்வியாகும் கல்வி கற்க மன அமைதி, பொறுமை என்பன இருக்க வேண்டும். அறியாமை மிக்க வாழ்வைக்காட்டிலும் மரணமே மேலானது. வாழக்கையை உருவாக்க, மனிதனை மனித னாக்க, நல்லொழுக்கங்களை கருத்துக்களை கிரகித்து உணர்ந்து கொள்ள கூடியதாக கல்வி இருக்க வேண்டும். அது ஒருவரின் மனோசக்தியை கட்டுப்படுத்தி நடக்கச் செய்வதாகவும் இருக்க வேண்டும்.

மனித மேம்பாட்டை நிலைபெறச் செய்ய மனிதனிடம் இருக்க வேண்டிய வாழ் வியல் பண்புகள் பலவற்றை எடுத்துரைக் கிறார். ஆன்மீக உணர்வு, தன்னம்பிக்கை, ஞானம், தியானம், சேவை என்பவை மனித வாழ்வை மேம்படுத்தும் பண்புகளாகும். சுவாமி வாழ்ந்த காலத்தில் மக்கள் அந்நிய கலாசாரத்தில் மோகம் கொண்டிருந்தனர். இக்காலத்தில் ஆன்மீகத்தில் ஒரு மகத்தான மறு மலர்ச்சியை முன்னெடுத்துச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவினால் சாதிக்க முடியாதது இல்லை, அது தன்னம்பிக்கையை ஊட்டும் தன்னம்பிக்கை வலிமையைத்தரும். ஆன்மீக உணர்வு தலைப்படும் போது அச்சமின்மை மட்டுமல்லாமல் உலக மக்கள் எல்லோரி டமும் குடி கொள்ள வேண்டும். எவனொரு வனுக்கு தன்னம்பிக்கையில்லையோ அவனிடம் இறைவனிடத்தில் நம்பிக்கை யில்லை. இறைவனிடம் நம்பிக்கையிருந்தும் தன்மீது நம்பிக்கையில்லா விட்டால் மோட்ச சக்தி கிடையாது. தன்னம் பிக்கையே வலிமை யைத்தரும். வலிமைக்கு ஊட்டந்தருவது ஆன்மீகமே. ஞானம் ஊட்டப்படுவதில்லை. அது மனிதனுள்ளே மறைந்திருப்பதாகும். அதைக்கல்விக் கூடாகவே மிளிரச் செய்ய வேண்டும்.

சேவை என்பது புனிதமான பண்பு. மனி தனில் இறைவனைக் கண்டு சேவை செய்ய வேண்டும். உடல்ரீதியாக, உள ரீதியாக, ஆன் மீக ரீதியாக எது மக்களுக்கு உயர்வைத் தருமோ அந்த வகையில் மக்களுக்கு உதவி செய்தல் "மனிதன் உயிர்களுக்கு கருணை காட்டமுடியாது மாறாகத் தொண்டு தான் செய்யமுடியும்" என்கிறது பரஹம்சரின் வாக்கு. எல்லா மக்களும் இறை வனின் குழந்தைகள் என்ற உண்மையின் அடிப்படையில் தொண்டுபுரிய வேண்டும். கடவுளுக்கு தொண்டு செய்வதற்கு சிறந்த வழியிருக்கிறது. ஏழைகள், ஒதுக்கப்பட் டவர்கள், நோயாளிகள், பசித்தவர்கள், அனாதைகள் போன்றவர்களுக்கு தொண்டு செய்வது தான் அவ்வழி. எவனுடைய இதயம் ஏழைகளுக்கு குருதி கசிகிறதோ அவனே மகாத்மா என்கிறார்.

உதவி செய், சண்டையிடாதே, ஒன்று படுத்து, அழித்துவிடாதே, எழுமின் விழுமின் கருதிய கருமம், கைகூடும் வரை உழைமின் என்ற கூற்றுகள் மனித மேம்பாட்டிற்கு சுவாமி விவேகானந்தர் வழிகாட்டும் கைகாட் டிகளாகும்.

## எண்ணித் துணிய சில வரிகள்

நேரம் பார்க்காதே. உழைக்கும் நேரத்தைவிட மற்ற நேரமேல்லாம் ராகுகாலம் தான்.
முடியுமா என்று யோசிப்பதே முதல்ப் பலவீனம்தான்.
நேரமிருக்கிறதா? திட்டமிடு. பல செயல்கள் தோற்க திட்டமிடாததே காரணம்.

நெருப்பைவிடச் சூடானது பொறாமைக்காரனின் மனம்.
நிலவைவிடக் குளிர்ச்சியானது குழந்தையின் சிரிப்பு
வாளைவிடக் கூர்மையானது ஏழையின் கண்ணீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள்

**மா.அமலன்**
பொறியியற்பீடம்

கடந்த 2500 ஆண்டுகளில் தமிழில் தோற்றம் கொண்டு வளர்ந்தமைந்த இலக்கியங்களை தமிழ் இலக்கியங்கள் என கூறலாம். எழுந்த காலம், மற்றும் இலக்கியத்தின் யாப்பியல், கருப்பொருள் முதலியன தொடர்பாக தமிழ் இலக்கியங்களை வேறு பிரித்து ஆராயும் முறை நிலவி வருகிறது.

சங்க இலக்கியம், பல்லவர்கால இலக்கியம், இருண்டகால இலக்கியம், சோழர் கால இலக்கியம், தற்கால இலக்கியம் என பாகுபடுத்தல் ஒரு வகை. யாப்பியல், கட்டமைப்பு வகையில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என பாகுபடுத்தல் மற்றொரு வகை. தமிழ் மக்களால் வழிபடப்படும் கடவுளர்களை மையப்படுத்தி எழுந்த இலக்கியங்களை சமய இலக்கியங்கள் என்பர்.

திருமுருகாற்றுப்படை காலம் தொடங்கி தமிழ் கடவுளர்களிடையே உறவு முறை கற்பிக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவ்வகையில் தாய்த் தெய்வ வழிபாடாக சக்தி வழிபாடு, முருக வழிபாடு, பிற்காலத்தில் தோற்றம் பெற்று வளர்ந்த கணபதி வழிபாடு, சிவன் வழிபாடு மற்றும் சில சிறு தெய்வ வழிபாடுகள் எல்லாம் ஒருங்கிணைந்து சிவ வழிபாட்டின் அங்கங்களாயின எனவே சைவ சமய இலக்கியங்களில் இவ்வனைத்து வழிபாட்டு இலக்கியங்களும் இணைக்கப்பட்டன. வைணவம் மட்டும் தனித்தே நின்றது. இதனால் வைணவ இலக்கியங்களும் தனித்தே நின்றன.

உலக மொழிகளுள் எண்ணிக்கை, காலப் பழமை, யாப்பியல், இசை வடிவங்கள் கொண்ட தமிழ் இலக்கிய பரப்பே பரந்ததும் விரிந்ததும் ஆகும். சங்க காலம் தொட்டு 20ம் நூற்றாண்டின் இறுதிவரை தோற்றம் கொண்ட பல்வேறு வகை இலக்கியங்களுள் அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சைவ சமயம் குறித்தே எழுந்தன என்பது நன்கு நினைவு கூறப்பட வேண்டியது. கணிப்பு ஒன்றில் சைவசமய இலக்கியங்களின் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறாயிரத்தை நெருங்கி நிற்பது வியப்பையூட்டுகிறது. இவற்றுள் எண்பது சதவீத நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள் இடம்பெறும் பாடல்களின் தொகை பல லட்சமாகும்.

கால வரிசைப்படி இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் பழந்தமிழ் இலக்கிய நூலான தொல் காப்பியத்தில் வெற்றியை தருபவளாக "கொற்றவை" குறிப்பிடப்படுகிறாள். கொற்றவை என்பவள் பாலை நிலத்துக்குரிய தெய்வமாகவும் முருகனின் தாயாகவும் கருதப்பட்டு அக்காலத்தில் வழிபடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தனிப்பாடல்களாக எடுத்துக் கொண்டால் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிப்பாடலில் இசைவடிவமாக முருகன், காளி குறித்தெழுந்த சைவ- தனி இசைப்பாடல்களை காண முடிகிறது. சைவம் தந்த தனி நூலாக முதல் கொடையாக கிடைத்துள்ள நீண்ட வரிகளால் அமைந்தது நக்கீரனாரின் திருமுருகாற்றுப்படை. சிறிய இடைவேளைக்கு பின் கி.பி மூன்றாம் நூற்றாண்டில் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், சிவன்-சக்தியை போற்றிபாடும் தனிக்காதையாக வேட்டுவ வரியும் முருகனைப் புகழ்ந்து பாடும் "குன்றகுரவை" யையும் கொண்டுள்ளது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னதாக சங்க இலக்கிய அகப்பாட்டு நெறியில் சிவனை பாடுபொருளாக கொண்டு கல்லாடம் என்ற அரிய நூல் தோன்றியது. "கல்லாடம் கற்றவனிடம் சொல்லப்படாதே" என்பது பழமொழி தொடர்ந்து காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதி கங்களிரண்டும், அற்புத திருவந்தாதியும் திருவீரட்டை மணிமாலையும் தோற்றம் பெற்றன.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற தொடருக்கு அடுத்ததாக தமிழர் பெருமை பேசும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற சமய சமரசத்தை தந்த திருமூலரின் திருமந்திரம் சைவம் கூறும் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட வேண்டியதொன்று. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே" என கட்டியங்கூறி தொடங்கிய திருமூலர் சைவத்தை தோத்திர நெறியிலிருந்து சாஷ்திர நெறிக்கு எடுத்து சென்றார். கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் அறிவாராட்சிக்கு உட்படுத்தக்கூடிய அறிவியல் பூர்வமான "சைவ சித்தாந்தம்" எனும் பெரு நெறி தோன்ற வித திட்டவர் திருமூலர். தென்னாட்டு அறிஞர்களால் வட மொழியில் படைக்கப் பட்ட ஆகமங்களை மொழி பெயராது தமிழ் ஆகமமாக திருமந்திரம் தோன்றியது. உணர்வுகளை ஒடுக்கி வைத்து விட்டு இந்நூலை அறிவாராட்சிக்கு உட்படுத்தினால் கிடைக்கும் புதையல்கள் அன்னை தமிழுக்கு அளப்பெருஞ் செல்வங்களை வழங்கும்.

கி.பி 550-650 ஆண்டு காலப்பகுதிகளில் தமிழையே சைவசமயம் ஆட்சிசெய்தது எனலாம். கி.பி 7ம் நூற்றாண்டு முதல் 12 ம் நூற்றாண்டு வரை அளப்பெரிய சிறப்புடைய சைவ பனுவல் களும் சிற்றிலக்கியங்களும், பெருங்காப்பியங்களும் தோன்றின. பிற்கால சோழர்களின் எழுச்சியும் நால்வர் பெருமக்களின் வருகையும் சைவம் வழித்தமிழ் மொழிக்கு வலை மதிப்பற்ற ஆபரணங்களை அணிவிக்க காரணமாயின. பாலி மொழி கொண்டு தமிழை அழிக்க முயற்சித்த பௌத்தர்களும் வடமொழியை முன்வைத்து தமிழர் உயர் கலைகளை சீரழிக்க முயன்ற சமணர்களின் சூழ்ச்சிகளையும் எதிர்த்து பெரும் சமய போராட்டம் நிகழ்த்திய சைவர்கள் வெற்றி வாகை சூடி தமிழ் அன்னைக்கும் அரியணை தேடித்தந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க காலத்தில் நிலவி பின் அழிவுற்ற தமிழ் இசை வடிவங்களாகிய நூற்றி மூன்று பண்களில் 22 பண்களை மூவர் தேவாரம் மீட்டெடுத்தது. புத்திலக்கிய வடிவங்களைய ஞான சம்பந்தர் படைத்தழித்தார்.தாண்டகம் நாவுக் கரசர் கொடையா அமைந்தது. கருவறையில் நிகழ்த்தப்படும் அர்ச்சனை என்பது "தமிழ் இசையால் பாடுவதே" என சுந்தரர் வரலாறு கூறி நிற்கிறது. உலக சமய இலக்கியங்களுள் நெஞ்சத்தை உருக வைக்கும் அனுபவ வெளிப்பாடாக திருவாசகத்தை மாணிக்கவாசகர் தமிழிற்கு கொடையாக வழங்கினார். ஒன் பதாம் திருமுறை இசைபா மாலையாக அமைந்தது. பதினோராம் திருமுறையில் புத்திலக்கிய வடிவங்களில் நாற்பது சிற்றிலக்கியங்கள் இணைந்தன. வரலாற்று பெட்டகமாக பெரிய புராணம் எனும் காப்பியம் சேக்கிழார் கை வண்ணத்தில் உருவானது.

பிற்காலத்தில் சைவம் தந்த விலை மதிப்பற்ற கொடைகளில் ஒன்று சைவசித்தாந்தம். மூவர் தேவாரம் திருமந்திரம் கொடுத்த ஒளியில் மெய்கண்டார் படைத்த சிவஞான போதமும் அதற்கு சிவஞான யோகிகள் வரைந்த பேருரையும் தமிழின் பெருமை கூறி நின்றன. இந்நூலுக்கு அருள் நந்தி சிவாச்சாரியார் எழுதிய செய்யுள் வடிவிலான உரை நூலே சிவஞானசித்தியார். இதுவும் தமிழ் பெருமை பேசும் ஆறு முதன்மை நூல்களுள் ஒன்றாய் அமைந்தது. வள்ளுவத்தையும் பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஏனைய நூல்களையும் வழிமொழித்து சைவநெறி நின்ற ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் போன்றோர் அரிய எளிய அற நூல்களை சைவத்தின் பெயரால் வடிவமைத்தனர். மேலும் கந்த புராணம் திருவிளையாடற் புராணம் காஞ்சி புராணம் போன்றவை தமிழன்னைக்கு சூட்டப்பட்ட விலைமதிப்பற்ற ஆபரணங் கள் என கூறுவது மிகையற்றது.

இன்னும் சைவத்தமிழ் இலக்கியங்கள் படைத்த பல நூறு கவிஞர்களும் ஆயிரக் கணக்கான நூல்களும் சைவம் தடையற தழைக்க துணை நின்றன. சைவம் வளர்த்த தமிழை ஒதுக்கிவிட்டு தமிழ் மொழியின் சீர்மையை நிலைநாட்ட முயல்வது நிரம்பாது. விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவிட்டு தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும், பல்துறை அறிஞர்களும் சைவ இலக்கியங்களை ஆராய்ந்தால் அவை தரும் பெருமிதம் கடல் அளவுக்கும் மேல் என்பது புலனாகும். காலமாற்றங்களால் யாவும் சரியாக மதிப்பிடபடவே செய்யும் என நாம் நம்பலாம்.

**சைவத்தின் சமூக பெருமதிப்புகள் சில**

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"
"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி"
"என் கடன் பணிசெய்துகிடப்பதே"
"வான்முகில் வழாது பெய்க: மலி வளம் சுரக்க"
"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"
"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"
"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"
"சாத்திரம் பல பேசும் வழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்"
"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடு

ஆரபி சிவசிதம்பரம்
பொறியியற்பீடம்

சிவபெருமானுக்கு, விஷ்ணுவிற்கு இருக்குமளவிற்கு கோயில்கள் பெரிய பிர காரங்களுடன் இல்லை என்ற போதும் விநாயகர் இல்லாத கோயில்களே இல்லை எனலாம். சிவன் கோவில்களிலும் முருகன் கோவில் களிலும் தென் மேற்கு மூலையிலும் விஷ்ணு கோயிலில் இரண்டாவது பிர காரத்து வாயிலிலும் அவர் தவறாது வீற்றி ருப்பார். சமண சமயத்துடனும் பௌத்த சமயத்துடனும் ஒரு வகையில் தொடர்பு கொண்ட பிள்ளையார் இந்திய சமயங்கள் எல்லாவற்றிலும் நின்று அவற்றிற்குள் ஒரு பொதுமையினை ஏற்படுத்துகின்றார். கோயில்களிலன்றி அவர் குளக்கரையில், நதியோரங்களில், அரசமரத்தடியில், நாற் சந்திகளில், முற்சந்திகளில் அனபர்களுக்கு அருள் செய்யும் ஆவலினால் காற் றென்றும் மழையென்றும் வெயில் என்றும் பாராமல் வீற்றிருந்து அருள் செய்வார். செதுக்க சிற்பி யில்லாவிட்டால் கோயில்கட்ட ஸ்தபதி இல்லாவிட்டால் அன்பர்கள் நினைத்த மாத்திரத்தில் மஞ்சள், மாவிலை, பசுஞ் சாணத்திலே, மண்ணிலே உருப்பெற்று வந்து நின்று அருள் செய்து வந்து முறையே கரைந்து மறைந்து போகின்ற அற்புதமே தனி சிவலிங்கப் பெருமானுக்கு அடுத்தபடியான எளிமையான உருவம்.

அவர் மகிழ்ந்து உண்பது அப்பமும் அவலும் பொரியும் மோதகமும் எல்லாம் சாதாரண மக்கள் உவந்து உற்கொள்ளும் பட்சண வகைகள் தான் மக்கள் வாழ்வில் இடம்பெறும் சடங்குகளில் அவர் இடம் பெறாத சடங்குகளே இல்லை. இவரின் குழந் தையை போன்றதொரு தோற்றமே மேலதிக ஈர்ப்பை இவரிடத்தே ஏற்படுத்துகிறது.

ஞானகாரகனிடத்தில் உள்ள ஞானத்தை எடுத்து நோக்குமிடத்து, அபர ஞானம், பர ஞானம், ஆகிய திருவடிகள் எங்கள் அடைக் கலத்துக்குரிய இடம் என்பதை தெரிவிக் கின்றன. எல்லா வற்றுக்கும் மேலாக நல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணர்வை ஏற்படுத்துவது அவருடைய வாகனம். ஆன்மாக்கள் எல்லாம் எலியாக நின்று எம்பெருமானை தாங்க வேண்டு மென்ற கருத்தும் ஞான சொரூபியை தாங்கு வதால் எவ்விதமான பாரமும் நமக்கு ஏற் படாது என்பதும் முன்பிருந்த பாரமே நீங்கி விடுவதற்கு அதுவே வழி என்பதுவும் அறிவு றுத்தப்படுகின்றன.

விக்கினங்களை தீர்ப்பதுவும் அவரவர் வழிபாட்டை ஏற்று சித்தியையும் புத்தி யையும் வழங்குவதும் விநாயகப் பெரு மானின் திருவருட்சிறப்பாகும். எக்கரு மத்தை தொடங்கினாலும் விநாயகரை வழிபட்டு அக்கருமத்தை ஆற்றினால் அவை அனைத் தையும் நிறைவுறச் செய்பவன். ஆணவ மலத்தை நீக்கி அறிவை பிரகாசிக்க செய்ய வேண்டும் என்பதே தேங்காய் உடைப்பதன் கருத்தாகும். குடுமி கண்கள் ஆகியவற்றை தேங்காய் உடையதாக இருப்பதால் அறிவு ணர்ச்சிக்கு இருப்பிட மான உங்கள் தலையை அது குறிக்கிறது. தேங்காயை சுற்றியுள்ள ஒடு அறிவை சூழ்ந்துள்ள ஆணவமலத்தை காட்டு கிறது. வெற்றிலை எங்கள் உடலைக்குறிக்கும் பாக்கு செல்வத்தை குறிக்கும். வாழைப் பழங்கள் நல்வினை, தீவினை என்பவற்றை குறிக்கும் எனவே ஆரோக்கியம், பாவ புண்ணிய விடுதலை ஆகியவற்றை விரும்பி நிற்கின்றோம் என்பதையே தேங்காய் வெற்றிலை பாக்கு பழம் வைத்து அர்ச்சனை செய்தல் குறிக்கிறது.

கரும்பு, அவரை, கனிகள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், கொள், அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், வடை, பச்சை யரிசிபிட்டு, வெள்ளரிப்பழம், மா, கொளுக் கட்டை, கிழங்கு, கடலை, முதலியனவாக அமைந்த நிவேதனப் பொருட்களை சிற்றூண் டியாக கொண்டருளுபவன். விநாயகன் நல்லுணர்வு படைத்து நல்லாரை மகிழ் விப்பது கணபதி பூஜையாகும். முரண் பாட்டைய கற்றி உடன்பாட்டை உண்டாக் குகிறது. இது விக்கினங்களை அகற்றுவதற்கு முதற் படியாகும்.

விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்து வதன் நோக்கம் உள்ளத்தில் இடம்பெற்ற அகங்காரம் நீங்கி ஓங்காரத்தின் மூலம் ஞானோதயமாக வேண்டும் என்பதற்காக வேயாகும். சிவன் வேறு விநாயகன் வேறு அன்று சிவனின் பஞ்ச கிருத்தியங்களை விநாயகப்பெருமானின் ஐந்து கரங்களிலும் ஏந்தியிருக்கும் பொருட்கள் உணர்த்தும். மோதகம் - படைத்தல், தந்தம் - காத்தல், அங்குசம்-அழித்தல், பாசம்-மறைத்தல், கமண்டலம்-அருளல் இனை முறையே விளங் குகின்றன. அவரது திருமுகமே திரு வைந் தெழுத்தின் அடக்கம் ஓங்காரமாகிய பிரண வத்துள் அடங்காதது எதுவுமில்லை. இதனை விநாயக வடிவம் உணர்த்துகிறது.

இத்தகைய சிறப்புக்களையுடைய விநாய கனை வணங்கி உணர்ந்து எம்முள் இறை வனை வரவழைத்து "ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி பிறவனைத்தும்" இறைவனேயாகி பிறவிப்பயனை அடை வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பர ரகசியம்

**தி.திஜிதரன்**
பொறியியற்பீடம்

**ப**லகோடி டாலர்கள் செலவு செய்து எட்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து சிதம்பரம் நடராஜர் கால் பெருவிரலில்தான் மொத்த பூமியின் காந்தமையப்புள்ளி இருப்பதாக உலக நாடுகள் கண்டுபிடித்துள்ளன. Center Point Of World's Magnetic Equator எந்த செலவும் செய்யாமல் எந்த டெலஸ்கோப்புமில்லாமல் இதனை கண்டறிந்த நமது தமிழன்; ஆம் இது ஆச்சரியத்திற்குரிய விடயம் தான். அதை உணர்ந்து அணுக்கள் அசைந்து கொண்டேயிருக்கும் என்ற உண்மையை உணர்த்தும்படி சிலை அமைத்து பூமியின் மையப்புள்ளியில் மறைமுகமாக அமர்த்திய அவனின் சாதனை போற்றுதற்குரியது.

இதனை 5000வருடங்களுக்கு முதல் கண்டறிந்து திருமந்திரத்தில் குறிப்பிட்ட திருமூலரின் சக்தி எப்படிப்பட்டது? திருமூலரின் திருமந்திரம் உலகிற்கே வழிகாட்டும் அறிவியல் நூலாகும். முன்னோர்கள் செய்த எல்லா செயல்களும் ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளது. இன்றும் சிதம்பர நடராஜர் கோவில் இரகசியம் என பேசப்படுகின்றது. அவற்றின் அறிவியல், பொறியியல், புவியியல், கணிதவியல், மருத்துவவியல் குறித்த இரகசியங்கள் வருமாறு.

1. இக்கோயில் அமைந்திருக்குமிடமானது உலகின் பூமத்திய ரேகையின் சரியான மையப்பகுதி என்று கூறப்படுகிறது. (Center Point Of World's Magnetic Equator.)

2. பஞ்சபூதக் கோவில்களில் ஆகாயத்தை குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயம், காற்றை குறிக்கும் காலஹஸ்தி ஆலயம், நிலத்தை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயமும் சரியாக ஒரே நேர்கோட்டில் அதாவது சரியாக 79 degrees, 41 minutes East தீர்க்க ரேகை யில் (LONGITUDE) அமைந்துள்ளது. இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Google அயி உதவியுடன் நாம் வானத்தின் மேலிருந்து பார்ப்பது போன்று பார்ப்பதனூடு இந்த துல்லியம் அன்று கணிக்கப்பட்டது. பொறியியல், புவியியல், வானவியலில் அக்கால தமிழர் வளர்ச்சியை காணக்கூடியதாய் உள்ளது.

3. மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட சிதம்பரம் கோயில் 9 நுழைவாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களையும் குறிக்கிறது.

4. விமானத்தின் மேலிருக்கும் பொற்கூரை 21600 தங்க தகடுகளை கொண்டு வேயப்பட்டுள்ளது. இது மனிதனின் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கிறான் என்பதை குறிக்கிறது. (15*60*24*=21 600)

5. இந்த 21 600 தகடுகளை வேய 72 000 தங்க ஆணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்த 72000 எனும் எண்ணிக்கை மனித உடலில் உள்ள ஒட்டு மொத்த நாடிகளை குறிக்கிறது. இதில் கண்ணுக்கு தெரியாத பாகங்களுக்கு சக்தியை கொண்டு சேர்ப்பவையும் அடங்கும்.

6. திருமந்திரத்தில் திருமூலர்
மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே
என்று கூறுகிறார். அதாவது "மனிதன் வடிவில் சிவலிங்கம், அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே அவரின் நடனம் என்ற பொருளை கூறுகிறது.

7. "பொன்னம்பலம்" சற்று இடது புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இது நம் உடலின் இதயத்தை குறிப்பதாகும். இந்த இடத்தை அடைய ஐந்து படிகளை ஏற வேண்டும். இந்த படிகளை "பஞ்சாட்சர படி" என அழைப்பர். "சி, வா, ய, ந, ம," என்ற ஐந்தெழுத்தே அது. "கனக சபை" பிற கோயில்களில் இருப்பதை போன்று நேரான வழியாக இல்லாமல் பக்க வாட்டில் வருகிறது. இந்த கனக சபை தாங்க நான்கு தூண்களுண்டு. இது நால் வேதங்களை குறிக்கிறது.

8. பொன்னம்பலத்தில் 28 தூண்களுள்ளன. இவை 28 ஆகமங்களையும் சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன. இந்த 28 தூண்களும் 64 மேற்பலகைகளை கொண்டுள்ளன. இது 64 கலைகளை குறிக்கிறது. இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள் மனித உடலில் ஓடும் பல இரத்த நாளங்களை குறிக்கிறது.

9. பொற்கூரையின் மேலிருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை குறிக்கிறது. அர்த்த மண்டபத்திலுள்ள 6 தூண்களும், 6 சாஸ்திரங்களையும், அர்த்த மண்டபத்தின் பக்கத்திலுள்ள மண்டபத்திலுள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கிறது.

10. சிதம்பர நடராஜர் ஆடிக் கொண்டிருக்கும் ஆனந்த தாண்டவம் என்ற கோலம் "Cosmic Dance" என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகிறது.

விஞ்ஞானம் இன்று சொல்வதை இந்து மதம் அன்றே நிரூபித்து காட்டி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் மருத்துவ விஞ்ஞானமும்

**பாலசுந்தரம் நிரஞ்சன்**
பொறியியற்பீடம்

இந்து சமயமானது காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களுள் ஒன்றாக கருதப்படுகிறது. பிற சமயங்களை போலன்றி இந்து சமயத்தை தோற்றுவித்தவர் யாருமில்லை. இவ்வாறு தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்படுகின்ற சமயத்தின் இன்னொரு சிறப்பம்சம்தான் இந்து சமயத்தவர்களால் கடைப்பிடிக்கப்படும் பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும் ஆன்மீக சம்பந்தப்பட்டு இருந்தாலும், அவைகள் ஒளிந்திருக்கும் விஞ்ஞானம் வியக்கத்தகு அளவில் உள்ளது.

அகத்தியர், போகர், திருமூலர், ஔவையார் போன்றோர் இந்து சமயம் வளர்த்த பெரியார்கள். இவர்கள் சிறந்த விஞ்ஞானிகளும் கூட பல விடையங்களை அறிவியல் ரீதியாக கண்டறிந்தவர்கள். மனித னுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் நன்மை பயக்கக்கூடிய பலவிடையங்களை அறிவியல் ரீதியாக கண்டறிந்தவர்கள். மருத்துவத்திற்கு அத்திவாரமிட்டவர்கள். குறிப்பாக அகத்தியருக்கு "சித்த மருத்துவ அகத்தியர்" எனும் ஒரு பெயரும் உள்ளது. இன்று நாம் படிக்கும் மூலாமிடல் அவர் அன்றே செய்து காட்டியவர். இரசாயன பொருட்கள் பற்றிய அவரின் ஆற்றலை இது காட்டுகிறது.

இந்து சமயம் கடைப்பிடிக்கும் அறிவியல் சார்ந்த விடையங்கள்.

**1. விஷேட தினங்களிலும், சடங்கு நிகழ்விலும் வீட்டில் மாவிலை தொங்கவிடல்**

நம் வீடுகளில் விஷேட தினங்களில் அல்லது நம் உற்றார் உறவினர் எங்களுடைய வீட்டிற்கு வரும் அளவிற்கு ஒரு பெரிய நாளில் எங்கள் வீடுகளில் மாவிலை தொங்க விடுவது ஆண்டாண்டு காலமாக நாம் கடைப்பிடித்து வரும் பழக்க வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் ஒளிந்திருக்கும் விஞ்ஞானம் என்ன வென்றால், உற்றார் உறவினர் எம் வீடுகளில் கூடும் நாட்களில் வீட்டை சுற்றிய வளிமண் டலத்தில் கரியமில வாயுவின் (காபனீர் ஒக்சைட்) செறிவு அதிகமாக இருக்கும் மா விலையானது, இந்த கரியமில வாயுவை உறிஞ்சகூடிய வல்லமை படைத்தது. இதன் மூலம் வளிமண்டலத்தின் சுத்தம் காக்கப் படுகிறது. இதையறியாமல் பிளாஸ்டிக்கி னாலான மாவிலையை அழகிற்காக தொங்க விடுவது கவலைக்குரிய விடையமாகும்.

## 2. நெற்றியில் சந்தனம் வைத்தல்

சந்தனமானது மருத்துவ பயன் நிறைந்த ஒரு பொருள். நம் கோயில்களில் திருநீற் றுடன்' வழங்கப்படுகிறது. இதன் பின்னி ருக்கும் விஞ்ஞானம் அனைவரையும் வியக்க வைக்கும். நம் உடலின் அனைத்து நாடி நரம் புகளும் மூளையுடன் இணைக்கப்பட் டுள்ளன. உடலின் பெரும்பாலான நரம்புகள் நெற்றிப்பொட்டின் வழியாகவே செல் கின்றன. ஆகவே நெற்றிப் பகுதி அதிக உஷ்ண மாக இருக்கும். நெற்றியில் பூசப்படும் சந் தனம் நமது மூளையையும் அதை இணைக் கும் நரம்புகளையும் குளிரச் செய்கிறது. நெற்றிப்பகுதியிலுள்ள frontel cortex என்னும் இடத்தில் அணியப்படும் சந்தனமானது வெப்பமிகுதியால் ஏற்படும் மூளைச் சோர்வை நீக்குகிறது.

## 3. துளசிச்செடியை வீட்டின் முன் வைத்து கும்பிடுதல்

இந்து சமயத்தில் துளசிச் செடி புனித மானதொன்றாக கருதப்படுகிறது. அபிஷேக தீர்த்தங்களிலும், தெய்வீக மூர்த்திகளுக்கு மாலையாகவும் துளசியிலை முக்கியத்துவம் பெறுகிறது. மற்றும் துளசியானது எல்லா இடங்களிலும் எல்லா கால நிலையிலும் வளரகூடியது. துளசி அதிகமாக வளரும் பகுதிகளில் உள்ள சயனைட் போன்ற விஷ வாயுக்களை உள்ளெடுத்து ஒட்சிசன் நிறைந்த வாயுவை வெளியிடும். இது மனிதர்களின் சுவாசத்திற்கு சிறந்த புத்துணர்ச்சியை தரும். நுளம்புகளும் துளசி செடியுள்ள இடங்களை அண்டாது.

இவ்வாறு நாம் கடைப்பிடிக்கும், நமக்கு தெரியாமலிருக்கும் சம்பிரதாயங்கள் பல விஞ்ஞான நோக்குடையன. "கோயில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" எனும் கருத் தினூடு இந்து சமயம் போதிக்கும் விடயங் களை உணர்ந்து கொள்ள வேண்டும்.

குழந்தை பிறந்த வீட்டில் நாம்கடைப் பிடிக்கும் பழக்கவழக்கங்களிலிருந்து, மணப் பெண்ணிற்கு மெட்டி அணிவித்தல் இறந்த வீட்டிற்கு சென்றால் மஞ்சள் பாவித்து குளித் தல் என்பன விஞ்ஞான விளக்கத்துடனேயே செய்யப்படுகின்றன. ஆனால் அவை சமய மூட நம்பிக்கை என முடக்கிவிடப்பட்டு அருகிவருவது கவலைகுரிய விடையமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அவதாரம்

**இராசரத்தினம் ஹேமரூபன்**
பொறியியற்பீடம்

**வி**நாயகர் என்றால் "மேலான தலைவர்" என அர்த்தமாகும். "விக்னேஸ்வரர்" என்றால் இடையூறுகளை தீர்ப்பவர் என்றும் "ஐங்கரன்" என்றால் ஐந்து கரங்களை உடயவரெனவும் அர்த்தமாகும். "கணபதி" என்பது கணங்களுக்கு அதிபதி எனும் பொருளாகும். இவ்வாறே அவரது சகல நாமங்களுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் அந்தப் பெயர்களிலேயே பொதிந்துள்ளது.

உண்மையில் விநாயகர் அவதரித்த தினத்தையே "விநாயகர் சதுர்த்தி" என கொண்டாடுவதாக புராணங்கள் கூறுகின்றன. ஒரு முறை சிவபிரான் வெளியே சென்றிருந்த சமயம் பார்வதிதேவி நீராடச் சென்றிருந்தார். அப்போது தனக்கு காவல் காக்க எவரும் இல்லை என்பதனால், தனது நீராட்டுக்காக வைக்கப்பட்டிருந்த சந்தனக்குழம்பை எடுத்து ஒரு உருவம் உருவாக்கி அனுக்கிரகத்தால் அதற்கு உயிரூட்டினார். அவரால் உருட்டப்பட்டதால் அவ்வுருவம் அவருடைய பிள்ளையாகிவிட்டது. எவரையும் உள்ளே அனுமதிக்க கூடாது என பிள்ளையாருக்கு அறிவுறுத்திவிட்டு பார்வதி தேவியார் நீராடச் சென்றுவிட்டார். அச்சமயத்தில் வந்த சிவபிரானை பிள்ளையார் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் கோபம் கொண்ட சிவன் பிள்ளையாரின் தலையை வெட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டார். நீராடி முடிந்ததும் தேவியார் வெளியே வந்து பிள்ளையார் சிரச்சேதமுற்றுக் கிடந்த கோலத்தை கண்டு சீற்றம் கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையை சிவனே சிதைத்து விட்டதை அறிந்த அவர் ஆவேசம் கொண்டவராக காளியாக உருக்கொண்டு வெளியேறி மூவுலகிலும் தமது கண்ணில்பட்ட சகலவற்றையும் அழிக்க தொடங்கினார். காளியின் நர்த்தனத்தை கண்டு அஞ்சிய தேவர்கள் சிவபிரானிடம் சென்று முறையிட்டனர். காளியை சாந்தப்படுத்துவதற்கு சிவன் எண்ணி தமது கணங்களை அழைத்து வடதிசை சென்று முதலில் தென்படுகிற ஜீவராசியின் தலையை வெட்டி எடுத்து வருமாறு பணித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி கணங்கள் வடதிசை நோக்கி சென்ற போது அவர்களுக்கு ஓர் யானையே முதலில் தென்பட்டது.அவர்கள் தலையை கொய்து சென்று இறைவனிடம் கொடுக் கவும், அவர் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பார்வதியின் பிள்ளையாரின் முண் டத்தில் வைத்து உருட்டிவிட்டார். இதைக் கண்டு சாந்தமடைந்த தேவியார் அக மகிழ்ந்து பிள்ளையாரை அணைத்துக் கொண்டார்.

சிவபிரான் அந்த பிள்ளையாருக்கு "கணேசன்" என நாமம் சூட்டி தனது கணங் களுக்கு அதிபதியாகவும் நியமித்தார். என "நாரத புராணம்" தெரிவிக்கிறது. இதுவே பிள்ளை யாரின அவதார சரித்திரம் ஆகும்.

விநாயகருக்கு தும்பிக்கையுடன் சேர்த்து ஐந்து கரங்களிருக்கிறது. துதிக்கையில் புனித நீர்க்குடம் வைத்துள்ளார். பின்வலது கையில் அங்குஷம், இடது கையில் பாசக்கயிறு, முன் வலது கையில் ஒடித்த தந்தம் இடது கையில் அமிர்த கலசமாகிய மோதகம் ஆகியவை இருக்கும்.

புனித நீர்க்குடம் கொண்டு உலக வாழ்வில் உழன்று தத்தளித்து களைத்து தன்னை சேரும் மக்களின் தாகம் தணித்து களைப்பை போக்கி பிறப்பற்ற நிலையை அளிக்கிறார். அங்குஷம் யானையை அடக்க உதவும் கருவி. இவரது அங்குஷம் மனம் எனும் யானையை கட்டிப்போடவல்லது. பாசக்கயிறு கொண்டு தனது பக்தர்களின் எதிரிகளை அழிக்கிறார். ஒடித்த தந்தம் கொண்டு பாரதம் எழுதுகிறார். இது மனிதன் முழுமையான கல்வியை பெற வேண்டும் என உணர்த்துகிறது. இடது கையிலுள்ள மோதகம் உலகிலுள்ள சகல உயிர்களையும் தன்னுள் அடக்கம் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்திரனது சபையில், மகாஞானியான வாமதேவரை கிரொஞ்சகன் என்ற கந்தர்வன் அவமதித்து பேசிவிட்டான். அதனால் வெகுண்ட அவர் அவனை எலியாக மாற சாப மிட்டார். எலியாக மாறிய கந்தருவன் சீற்றம் கொண்டு முனிவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்தான். பராசர முனிவரின் ஆச்சிரமத்தை பாழ்படுத்தி விட்டான். பரா சரர் விநாயகரை வேண்ட, அவர் எலி உருவத்தில் இருந்த கந்தர்வனின் கொட் டத்தை அடக்கினார். கர்வம் நீங்கப் பெற்ற கந்தர்வன் விநாயகப்பெருமானுக்கு எலி வடிவில் வாகனமாகினார். அன்று முதல் விநாயகருக்கு "மூஷிக வாகனன்" என பெயர் வரலாயிற்று.

இந்துக்கள் எக்காரியத்தை தொடங்கும் போதும் விக்கினங்கள் ஏற்படாமல் இருப்ப தற்கு இத்தகைய சிறப்புமிக்க விநாயகரை வழிபட்டு தொடங்குவார்கள். இதற்கு புராண வரலாறு சான்றாகும்.

**சிந்தனைத் துளிகள்!**

❖ நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யா விட்டாலும் தீமை யாவது செய்யாமல் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமும் புறமும்

**இந்திரன் கிருஷ்ணலோஜன்**
பொறியியற்பீடம்

புலன்கள் வழி புலப்படும் அறிவு, அகத்தினுள் சேமிக்கப்பட்டு மீட்கப்படுதல் அகம் புறம் சார்ந்த நிகழ்வு. இது இறைவனின் படைப்பில் முக்கிய இயங்கியல் தவிர உயிரினங்களில் மனிதன் சுயமாக சிந்தித்து செயற்படவும் ஆறிவு ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளக் கூடியதாக அகமும் புறமும் அமைந்தது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விஷேட இயல்பாக இருந்தாலும் கூட மனித எண்ணங்களை தீர்மானிக்கும் காரணிகள் பலவுண்டு. இவற்றை ஆய்வு செய்தால்.

## இறையும் இயல்பும்

இறைவனின் படைப்பில் தன்னைத் தானே உணரும் பக்குவம் மனிதருக்கு கிடைத்த பெரும் கொடையாக இருந்தாலும், இறை வனை எப்படி நாம் தேடியறிய முடியாது சிர மப்படுகிறோமோ அப்படியே எமது மனத் தையும் நாமே தேடியறிவதற்கு ஒப்பாகும். காரணம் எமது கண்கள் புறக்காட்சிகளை மட்டுமே காண்கின்றன. எங்கள் அகத்தையே எங்கள் கண்ணால் காண முடியாது. ஆனால் இறைவனை கற்பனையில் காண்பதைப் போல கற்பனையில் தான் எங்கள் அகத்தையும் நாம் காண்கிறோம். அதற்காக இறை வனும் இல்லை, எங்கள் மனமும் இல்லை, வெறும் கற்பனை என்று சொல்லத்தான் முடியுமா? மேலும் எமது எண்ணங்களை எண்ணத்துக்குள்ளேயே மீட்டுப்பார்க்கிறோம். எண்ணிலடங்காத நினைவுகள் முடங்கி கிடக்கிறது. எம்மாலே அவற்றை கணக்கிட முடியாது. மேலும் எமது மனமே எமது கட்டுப்பாட்டிலில்லாமையினால் சிரமப்படுகிறோம். அவற்றைக் கட்டிவைக்க பெரும் மனப்போராட்டத்தில் ஈடுபடு கிறோம். மேலும் நாம் எமது அறிவினாலும் உடல் அசைவினாலும் பல்வேறு செயல் களை செய்கிறோம். ஆனால் நாங்கள் தூங்கும் போது எமது உள்ளுறுப்புக்கள் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அவ்வாறு இயங்குவதால்தான் உயிர் வாழ்கிறோம். இவ்வாறு எமது உடல் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமும் எமது பூரண கட்டுப்பாட்டி லில்லாத போதும் எம்மை நாம் என்றே நினைக்கின் றோம். ஆனாலும் சில சித்தர்கள் தமது சுகத்தையும் அதே போல உடலின் இயக்கங்கள் அனைத்தையுமே தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலை பெற்றிருந்தார்கள். என்பதும் அறியக்கிடக் கிறது. எவ்வாறாயினும் இறைவனே அனை வருக்கும் அகமும் புறமுமாக இருந்து அவரவர் விதிப் படி இயக்குகின்றான்.

## மெஞ்ஞானமும் விஞ்ஞானமும்

இறைவன் படைப் புக்கள் அனைத் தையும் பரணாமத்தின்வழி படைத்தாலும் அவற்றின் இயக்கியலைப் படைக்கும் போதே தன்னியக்க முறையில் இயங்க கூடியதாக படைத்தது மட்டுமல்ல மனிதன் அந்த இயக் கியலை அறிந்து மாற்றங் களை செய்யவும் இணையாக சேர்க்கைகளை உருவாக்கவும் இரண்டையும் இணைத்தும் செயல்பட வைக்கவும் பல்வேறு கண்டு பிடிப்புகளை ஆராய்ச்சிகளை செய்யும் வண்ணமே படைத்துள்ளான். இந்த வகையில் மனிதன் இயற்கையை வென்று வாழ எடுத்துக் கொண்ட இரு ஆயுதமே மெஞ்ஞானமும் விஞ்ஞானமும் ஆகும். இந்த வகையில் எமது அறிவுக்கப்பாற்பட்டு இன்று விஞ்ஞானம் பல்வேறு சாதனைகளை செய்கின்றது. உதாரணமாக நாம் ஒரு தொலைபேசியூடாக பல்வேறு வலையமைப்புகளில் ஏதாவது ஒன்றில் பல்வேறு செய்திகளை பதிவு செய்து விட்டு அந்த தொலைபேசியை அடித்து உடைத்து விட்டாலும் புதிய தொலைபேசி மூலம் எங்கிருந்தாலும் உட் சென்று எமது அவணங்களை பதிவிறக்கம் செய்யமுடியும். மேலும் கண்காணிப்பு ஒளி ஒலி பதிவுக் கருவிகள் மூலம் உலகில் நடக்கும் பல்வேறு சம்பவங்களின் உண்மைகளை கண்டறிவ தற்கும் இன்றைய நவீன விஞ்ஞானம் துணை புரிவது போல் அன்று மனிதன் மெஞ் ஞானத்தின் மூலம் மறை அருள் வலைப் பின்னல் ஊடாக பல்வேறு சாதனைகளை செய்தான் என்பது புராண இதிகாசங்கள் வாயிலாகவும் என்றும் இருக்கும் சிறுசிறு ஆதாரங்களினூடும் உறுதிப்படுத்தக்கூடிய தாக உள்ளது.

## இறையும் மறையும்

படைப்பின் மூலம் சக்தியாக இறை வனும் பஞ்ச பூதங்கள் உட்பட பல்வேறு பரிணாம சக்திகளும் மற்றும் மெஞ்ஞான மறையருள் வலைப்பின்னல்களும் பல்வேறு வகையில் மனித அகம்புறம் சார்ந்து மனி தனை இயக்குவதை காலக்கிரக விதியாக கொண்டு வழிபாடுகள் வாயிலாக நாம் நிவர்த்தி செய்ய முனைவது எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தாலும் சில சித்தர் களும் ஞானிகளும் நேரடியாக இவற்றின் அருளைப் பெற்றவராக இருப்பதும் அவர்கள் மூலம் பல்வேறு நன்மைகள் தீமைகள் மனித சமூகத்திற்கு கிடைத்திருப்பதும் புராண இதி காசங்கள் சான்றுபகிர்கின்றன. எனவே இறை யும் மறையும் எல்லோருக்கும் பொதுவான இயக்கமாகவும் எமக்கு அப்பாற்பட்ட செயலாகவும் இருக்கிறது.

இவ்வாறு அகமும் புறமும் இறை செயலே என உணர்ந்து கொள்ளவைக்க அசைவுகள் நடந்தேறுகின்றன. அவற்றை நாம் புரிய முற்படுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய ஆன்மா ஈகம்

**நவரத்தினம் சுமித்திரசாந்த்**
பொறியியற்பீடம்

**ஆ**ன்மாக்கள் அனைத்தும் மேலும் மெய்யன்பு காட்டுதலே எம்மார்க்கம். விஞ் ஞானத்தின் முக்கிய இயல்புகளில் ஒன்றான இயல்பியல் முன்னேற முன்னேற அதன் புதுப் புதுப் பகுதிகளாக வாண்டம் இயற்பியல் துணிக்கை, துணிக்கை இயற் பியல் போன் றவை உருவாகியுள்ளன.

கால்ஷகன் தனது காஷ்மாஷ் டிவி தொடருக்காக நடராஜரை தேடி சிதம்பர இரகசியத்தை அறிய தமிழ் நாடு வந்தார். ஒரு நாள் காலை ஆறரை மணிக்கு தனது படப்பிடிப்புக் குழுவினர் புடைசூழ நந்தியி ருக்கும் இரு கோயில்களுக்கு விஜயம் செய் தார். ஒரு கோயிலினருகே தாமரை தடாகம் ஒன்று இருந்தது. இவர் வருவதைப் பார்த்த பத்து வயதுச் சிறுவன் ஒருவன் உடனே தாமரை குளத்தில் பாய்ந்து ஒரு அழகிய தாமரை மலரைப்பறித்து வந்து கால்ஷகனின் மனைவியிடம் தந்து தனது பெயரை சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டான்.

எளிமையான ஆனால் உணர்ச்சி பூர்வ மான இந்த அன்பளிப்பால் அனைவரும் அசந்து போனார்கள். இதை நினைத்து நினைத்து நெகிழ்ந்து போன கால்ஷகன் பின்னால் "நியூ டைகஸட்" எனும் பத்திரிகை ஆசிரியரான "இப்லோசிடோ P.D ஸௌசா என்பவரிடம் இதை சொல்லி தமிழக விஜயம் தனக்கு பல அதிசய அனுபவங்களை தந்ததாக குறிப்பிட்டு உள்ளான்.

பிரபஞ்சத்தின் எல்லையற்ற காலத் தையும் ஆக்கலையும் அழித்தலையும் சுட்டிக் காட்டும் சிவநடராஜரைப்பற்றி தமிழகத்தில் அறிந்து கொண்டு நடராஜரை தன் காஷ்மாரஸ் தொடரின் பத்தாம் பகுதியான "தி எட்ஜ் ஃபார் எவரில்" இல் பயன்படுத்திக் கொண்டார். கலிபோர்னியாவில் "பாச டோனா" எனும் இடத்தில் உள்ள நடராஜரை அவர் படம் பிடித்தார்.

இதே காலகட்டத்தில் அணுத்துக்கள் விஞ்ஞானத்தை விளக்கவந்த உலகின் மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் இயற்பியல் விஞ்ஞானியான டாக்டர் பிரிட்ஜாட்ஃப் காப்ரா சிவ நடரா ஜாவின் நடனத்தைக் கண்டு அதிசயித்தி ருந்தார். ஆஸ் திரியாவில் பிறந்த அமெரிக்க விஞ்ஞானி "தி டாவோ ஆஃப் பிஸிக்ஸ்" என்ற இவரது நூல் உலகப்பிரசித்தி பெற்றது. 23 மொழிகளில் 43 பதிப்புக்களாக 1975 இல் வெளிவந்த நூலை இலட்சக்கணக்கானோர் படித்தனர். இன்றும் படித்து இன்புறு கின்றனர்.

அதில் சிவ நடராஜரின் நடனம் பற்றி கூறுகிறார் மேலை நாடுகளின் இயந்திர தரமான பார்வையை விட கீழை நாடுகளின் பார்வை உயிருள்ள முழுமையான ஒன்று அது சுற்றுப்புற சூழலை ஒட்டியது. கீழை நாட்டு ஞானிகளுக்கு பொருட்கள் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும் திரவவடிவம் போன்றதொன்றுதான் பிரபஞ்சம். எப் போதுமே இயங்கிக்கொண்டிருக்கும் பிரிக்க முடியாத ஒன்றாக அவர்களால் காணப் பட்டது. இந்தக்கருத்தே இன்றைய நவீன பௌதிகத்திலும் உருவாகி வருகிறது. நவீன பௌதிகம் அணுத்துக்களை தொடர்ந்து நடமாடும் ஒன்றாக அதிர்ந்து கொண்டே யிருக்கும் ஒன்றாக கூறுகிறது. கீழைநாட்டு ஞானிகள் உலகைப்பற்றி விபரிப்பது போலவே இது உள்ளது. ஆற்றல் நடனம் அல்லது உலகை உருவாக்கி பின்னர் அழிக்கும் நடனமானது சிவநடராஜரின் நடனம் போலவே உள்ளது.

அணுத்துக்கள் விஞ்ஞானம் கற்க விரும்புவோர் நடராஜரின் நடனத்தைப்பற்றி முதலில் கற்று அறிய வேண்டும் என்றார் காப்ரா. அணுவில் உள்ள அசைவை -நட னத்தை- சிவ நடராஜரின் ஆட்டத்தை கண்ட காப்ரா அதை அப்படியே லாஸ் ஏஞ்சல்ஸ் இல் 1977 அக்டோபர் 29 ஆம் திகதி "பிஷிக்ஸ் அண்ட் மெடா" எனும் கருத்தரங்கில் தான் ஆற்றிய முக்கிய உரையில் உலகிற்கு விளக் கினார்.

நவீன இயல்பியல் விஞ்ஞானிகள் பொருளை அசைவற்ற ஜடமாக கருத வில்லை. துடிப்புள்ள தொடர்ந்து நடன மிடும் ஒன்றாக கருதுகின்றனர். இந்தியக் கலைஞர்கள் சிவநடராஜரின் நடனத்தை சித்தரிக்கும் அருமையான ஓவியங்களையும் சிற்பங்களையும் படைத்துள்ளனர். இவை பிரபஞ்ச நடனத்தின் பார்வை சித்திரங்கள் ஆகும். மேற்கத்தேய நவீன உபகரணங்களை உபயோகித்து இப்போது நாம் கண்டறிந் துள்ளவை சிவ நடனத்தின் புதிய பிரதியே ஹிந்து சிற்பங்களில் உள்ள பிரமாண்டமும் அழகும் இதிலுள்ளன என்றே எனக்கு தோன் றுகின்றது. ஆகவே இவையிரண்டையும் இணைத்துள்ளேன்.

நவீன உபகரணங்கள் மூலமாக அணுவி லுள்ளே துகள்கள் நடனமிடும் அற்புத காட்சியை படம் பிடித்து அதை அப்படியே நடராஜரின் நடனத்துடன் ஒப்பிடும் காட் சியை பார்த்து உலக விஞ்ஞானிகள் வியந் தனர். விஞ்ஞானிகள் தங்களது நவீன உபகர ணங்கள் வாயிலாக கண்டதை நம் மெஞ் ஞானிகள் அந்தக்கரணங்கள் வழியே கண்டு அப்படியே உலகிற்கு எடுத்துரைப்பதன் உதாரணம் தான் அருணகிரிநாதர் தன் திருப் புகழில் பாடிய "பரமகுருவாய் அணுவில் அசைவாய்" எனும் வரிகளாகும். ஆகார் செர்ன் விஞ்ஞானிகள் அணுத்துக்கள் நடனத் தையும் நடராஜர் நடனத்தையும் ஒப்பிடு வதைப் போற்றி நன்றி தெரிவிப்பதாக அரசு தெரிவித்தது போன்று விஞ்ஞானம் வியக்கும் மெஞ்ஞான நடனம் நம் சிதம்பர நடராஜரின் நடனம் என்பதை அறியும் போது நம் மெய் சிலிர்க்கிறது அல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிங்கோத்பவர்

லே. பவோதயன்
பொறியியற்பீடம்

சிவபெருமானின் மஹேசுவரர் மூர்த்தங்களில் (உருவத் திருமேனிகளில்) இலிங்கோற்பவர் முக்கியமானவராவர். சிவன் கோவில்களிலே கருவறையில் அமைந்துள்ள மூல மூர்த்திக்கும் பின்பக்கத்தில் வெளி விமானத்திலே மேற்கு நோக்கி லிங்கோற்பவர் வடிவம் அமைக்கப்பட்டிருக்கும். கருவறையிலுள்ள மூர்த்திக்கும் லிங்கோற்பவருக்குமான நேரடி தொடர்பினை உணர்த்துவதாக இவ்வடிவமைப்பு காணப்படுகிறது.

இலிங்கோற்பவர் வடிவம் சிவலிங்கத்தின் நடுவே வளர்ந்து தோன்றி நிற்கும். இறைவனின் சிரசும் பாதங்களும் கண்களுக்கு புலப்படாத வகையில் வடிவமைந்திருக்கும். நான்கு கரத்திலே பின்கரம் இரண்டும் மான் மழுத்தாங்கிய வடிவிலும் முன்கையிரண்டும் அபயவரத முத்திரையிலும் காணப்படும். இலிங்கோற்பவரின் முடியிலே அன்ன வடிவில் பிரமனும் கீழே பன்றி உருவில் விஷ்ணுவும் இடம் பெறுவர்.

இலிங்கோற்பவரின் தோற்றத்தின் கதை கந்தபுராணம் தட்ச காண்டத்து அடிமுடி தேடிய படலத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் பரத்துவத்தை இக்கதை உணர்த்தியுள்ளது. பிரமனும் விஷ்ணுவும் "யாமே பிரமம் யாமே பிரப் பிரமம்" என்று வாதிட்டுப் போரிட்ட போது அக்கினி தோன்றி அகிலம் எல்லாம் பரவி அண்ட சராசரங்கள் அனைத்தையும் பாதித்தது. அப்போது சோதிமயமான மலையொன்று அவரிடையே தோன்றியது. அப்போது எழுந்த அசரீரி அச்சோதி வடிவின் அடிமுடியை காணவல்லவர் எவரோ அவரே பரப்பிரம்மம் என்று கூறியது. திருமால் வராக வடிவத்தில் அடியையும், பிரமா அன்ன வடிவத்தில் முடியையும் தேடிக் களைத்து அகந்தை நீக்கி உண்மையறிவு பெற்றனர். தம்மில் மேலான பரம் பொருள் பரமசிவனே என்ற உணர்வு பிறக்கவே இறைவனை துதித்து நின்றனர். சிவபிரான் சோதி வடிவத்திலே தோன்றிக்காட்சியளித்தார். இறைவனை வணங்கி தம்பிழை பொறுத்தருள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் அருள்புரிந்து சிவன் மறைந்தார். சோதிப் பிளம்பு தோன்றிய இடத்திலே ஒரு மலை உருப் பெற்றது அதுவே அருணாச்சலம். அரியும் அயனும் லிங்கோற்பவராக தோன்றிய சிவனை வழிபட்ட இரவே சிவராத்திரி என சிறப்பிக்கப்பட்டது.

காஞ்சி கைலாயநாதர் கோயிலில் இடம்பெறும் இலிங்கோற்பவர் வடிவம் சிற்பத்தில் காணப்படும் பழைய வடிவமாக கருதப்படுகின்றது. தஞ்சாவூரில் உள்ள முதலாம் இராஜஇராஜன் கல்வெட்டு ஒன்றிலே லிங்கோற்பவர் லிங்கபுராண தேவர் என குறிப்பிடப்படுகிறார்.

திருமூலரும் தேவார முதலிகளும் லிங் கோற்பவர் மூர்த்தத்தை பாடிப்பரவி யுள்ளனர். புஸ்பகந்தரின் சிவபதிபாஷ் தோத்திரத்தில் இரண்டாம் சங்கராச்சாரி யாரின் சிவானந்த லகரியிலும் இம்முகூர்த்தம் போற்றப்படுகிறது. இலிங்கோற்பவர் தோன்றிய சிவராத்திரி சிவபெருமானுக்குரிய விரதங்களுள் சிறப்பு வாய்ந்தது. இது நித்திய சிவராத்திரி பட்ஷ சிவராத்திரி, மாறு சிவ ராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐந்து வகைப்படும்.

ஆண்டின் இருபத்தினான்கு சதுர்த்த சிகளிலும் செய்யும் சிவபூசை நித்திய சிவ ராத்திரி, தை மாதம் கிருஷ்ணபட்ஷ பிரதமை முதல் பதின்மூன்று நாள் பூசை பட்ஷ சிவ ராத்திரி, மாசி கிருஸ்ண சதுர்த்தசி, பங்குனி முதல் திருதியை, சித்திரை கிருஷ்ண அட்டகம் முதலியன மாத சிவராத்திரி, திங்கட் கிழமை முழுவதும் அமாவாசையாக இருத்தல் யோக சிவராத்திரி, மாசி மாதம் கிருஷ்ண சதுர்த்தசியிலே நள்ளிரவில் லிங் கோற்பவர் தோன்றிய நாள் மகா சிவராத்திரி.

## சிந்தனை விருந்து

பூமியைக் காட்டிலும் பொறுமைமிக்கது - தாய்மை
காற்றைவிட வேகமானது - மனம்
வேகத்தால் வளர்ச்சி பெறுவது - நதி
வாழ்க்கையின் பெருஞ்செல்வம் - நோயின்மை
இன்சொலால் வளர்வது - அன்பு
இறுகும் இதயத்தில் இருப்பது - அகந்தை
ஒற்றுமை வருவது - இன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமொரு மருத்துவ பேரொளி

சிவநேசநாதன் நவநீதா
மருத்துவபீடம்
இரண்டாம் வருடம்

"வாழ்க்கை அழகானது" அதனை அழகாக்குங்கள் என்றார் மேலை நாட்டு தத்துவஞானி ஒருவர் வாழ்வை அழகாக்கும் உன்னதக்கருவிதான் மதம் பூமிப்பந்து கைக்குள் அடங்கும் விதத்தை கட்டுக்கதை அல்ல உண்மை என உறுதிப்படுத்தும் சகாப்தம் தனில் இன்றைய உலகம் நடை பயில்கிறது. அவ்வாறிருந்தும் பழம்பெரும் மக்கள் மருவி வரும் இந்நிலையில் மதங்களும் அதன் கோட்பாடுகளும் இற்றைவரை வலுப்பெற்று வாழ்கின்றன என்றால் காரணம் விஞ்ஞானம் தன் தொழில்நுட்ப யுத்தி கொண்டு ஆய்ந்தறியும் புதுமைகளை பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே நம்மதங்கள் மெஞ்ஞானம் கொண்டு விளக்கியிருந்தமையே ஆகும். ஆம் அவ்வகையில் அற்புத முது மொழியுண்டு. "விஞ்ஞானம் கலக்காத மதம் முடமானது" அவ்வகையிலேயே நம் இந்துசமயம் எண்ணற்றபல உண்மைகளை பல நூற்றாண்டுகளிற்கு முன்னரே உலகிற்கு அழித்து தமிழையும் அவைசார் பெருமைகளையும் இற்றைவரை தலை நிமிர்ந்து வாழச் செய்து கொண்டிருக்கிறது என்பது ஐயம்திரிபற்ற உண்மை. அவ்வகையில் மனித சமூகத்திற்கு சுகம் மற்றும் நலம் இவ்விரண்டையும் வழங்குதல் எனும் அடிப்படையில் இங்கு மதம் மற்றும் மருத்துவம் ஒருங்கே இணைகிறது. இவ்வடிப்படை பற்றி சற்று விரிவாய் நோக்குவோம்.

ஆரோக்கியம் என்பதற்கு நோயற்ற நிலை மாத்திரம் அல்ல அத்துடன் உள சமூக ஆன்மீக நன்னிலையும் சேர்ந்திருக்கும் போதே உண்மையான ஆரோக்கியம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் திட்டவட்டமான வரையறை ஒன்றை வலியுறுத்தியிருக்கிறது. விஞ்ஞானத்தின் வரையறைக்கு முன்னதாகவே மதங்கள் இக்கோட்பாட்டை மூலமாக கொண்டே நகர்வுற்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் மதம் மற்றும் மருத்துவத்தின் தோற்றம் பற்றி ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு 3500 ஆண்டுகளுக்கு முன்னரே சிந்துவெளிப்பிரதேசத்தில் இந்துசமயத்தின் அடிப்படைத்தத்துவங்கள் தோற்றம் பெற்ற தாகவும் அங்கு மருத்துவம் தொடர் பான உபகரணம் மற்றும் அறுவை மருத்து வத்திற்கான தடையங்கள் கிடைத்தாகவும் வரலாறுகள் சான்று பகிர்கின்றன. கி.மு 1500 வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலேயே இந்துமத கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப் பட்டு இந்து மதமாக தோற்றம் பெற்றது. இந்து மதத்தின் தோற்றம் இவ்வாறிருக்க மருத்துவத்துடனான மதத்தின் நெருக்கம் எப் பொழுது ஏற்பட்டது? இது பற்றி பண்டைய நூல்கள் தரும் தகவல்கள் யாது? என்பதை ஆராய்ந்தால் வியத்தகு உண்மைகள் பல புலனாகும்.

சித்தமருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்தில் இந்து மதத்தின் மூலக்கடவுள் சிவனிடம் இருந்து அண்ட சராசரங்கள் அனைத்தின் இயக்கத்திற்கு காரணம் என்று கூறப்படும். சிவனின் சரி பாதியான சக்தி "சக்தி"க்கு (உலகின் அத்தனை இயக்கத் திற்கும் அடிப்படை என விஞ்ஞானம் கருது வதும் சக்தி (energy) அளிக்கப்பட்டு பின் அது நந்தியிடம் சென்றடைந்து பின் அது சித்தர்களிடம் சேர்பித்ததாக நூல்கள் சான்று பகிர்கின்றன. இவ் அரிய கருத்துக்கள் 18 சித்தர்களால் கையாளப்பட்டதாகவும் அதில் முக்கியமானவர் அகத்தியர் என்றும் பழம் பெரும் நூல்கள் கூறுகின்றன. அத்தோடு ஆய கலைகள் அறுபத்தினான்கு அதில் மருத்துவத் திற்கான இடம் மிகவும் உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவம் என்பது பிரதானமாக இரு பகுதிகளை உள்ளடக்கியது. நோய் ஏற்படும் முன் அதை தடுப்பது (preventive medicine), நோய் ஏற்பட்ட பின் அதனை குணப்படுத் துவது (curative medicine) நவீன மருத்துவ உலகு. அதீத முக்கியத்துவமளிப்பது இவ் நோய்தடுப்பு மருத்துவம் பற்றியே ஆகும் இது பற்றியே இந்து சமயத்தின் வலியுறுத் தல்களும் அமைகிறது. அவ்வகையில் "காயமே இது பொய்யடா வெறும் காற்ற டைத்த பையடா?" என்று உடல் பற்றி சலித்து விடாமலும் பட்டினத்தடிகள் போல் உடல் என்பது சலமலப் பேழை என்று சிரித்து விடாமலும் சீரம் என்பது கோயில் என்று திருமந்திரம் திட்டமாக உரைக்கிறது. ஆம் ஆலயத்தை போலவே உடலிலும் புற அக சுத்தத்தை பேணி வருவதே மிகப்பெரும் போற்றுதலுக்குரியது. இதனாலேயே காலை எழுந்து குளித்து கோயில் சென்று காயத்தை மூன்று முறை வலம் வந்து ஆசனங்கள் மற்றும் நமஸ்காரம் செய் என்கின்றது சைவம். இவையாவும் தற்கால மருத்துவ உலகு பரிந் துரை செய்யும் அற்புத உடற்பயிற்சிகள் (யோகாசனம், தியானம) என்பவை இங்கு குறிப்பிடத்தக்கது. "பஞ்சமா பாதகங்கள் முற்றாக தவிர்" என்பதற்கு காரணம் வயது வேறுபாடின்றி தாக்கும் இருதய நோய்கள் மற்றும் (AIDS) போன்ற உயிர் கொல்லி நோய் களிலிருந்து தப்பி வாழவேயாகும். இவ்வாறு நம் மதம் கூறும் சிறுசிறு விடயங்களிலும் பல் வேறு நன்மைகள் கிட்டும் என்பது புல னாகிறது.

உடல்பற்றிய பௌதிகத்தை முதன் முதலில் உலகிற்கு உரைத்து உணர்த்தியது "திருமந்திரம்" முதன்முதலில் மூச்சறிவியல் பற்றி பேசிய பெருமையும் திருமூலரையே சாரும்.

"எலும்புகள் நிறுத்தி; நரம்புகள் பொருத்தி;
இறைச்சியை இருத்தி; உறுப்புக்கள் மலர்த்தி"

உயிர்த்திணிவு செலுத்தி உலவவிடப் பட்ட உடலிற்கு நாடிகள் மொத்தம் பத்து அதில் முக்கியம் மூன்று என்றார். அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வழிப்பட்ட சிலேத்துமம், தீவழிப்பட்ட பித்தம், வாயுவழிப்பட்ட வாதம் என்பன வாகும். தசை நார்களை இளக்கம் செய்வதும் எப்போது இயங்கும் இருதயத்தின் சூடு தணிப்பதும் நாவின் ஈரங்காப்பதும் மூட்டுக்கள் தேயாமல் காப்பதும் சிலேத்துமத்தின் பணி. உணவை எரித்தலும் அறிவும் நினைவும் அழியாமல் காப்பதும் தோலின் பளபளப்பு பேணலும் பித்தத்தின் பணி மூச்சினை சீர்செய்தலும் உயிருக்கு உயிரப்பூட்டலும் மலமொழி மெய்களை நேர் செய்து சீர செய்தலும் வாதத்தின் பணியென்று விஞ்ஞானம் ஆய்ந்தறிந்து வியக்கும் உடலியனியச் கத்தை பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே விளக்கிய பெருமை இந்துமதத்திற்கன்றி வேறெதற்கு கிடைத்திட முடியும்.

"அடைப்பணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக் கொடியாருடன் மந்தணம் உண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப்படுத்தார் கிடந் தொழிந்தாரே"

சுகதேகியான ஒரு மனிதன் நெஞ்சுவலியென்று இறந்து போனதை தெளிவாக உணர்த்தியிருக்கிறார் திருமூலர். இன்று குழந்தைகள் முதல் பெரியவர் வரை அதிகமாக உச்சரிக்கும் எனும் வார்த்தை பற்றி திருமூலர் எத்தனை ஆண்டுகளுக்கு முன் எடுத்தியம்பியிருக்கிறார். என்பதே இங்கு உற்று நோக்க வேண்டியது. ஒரு மருத்துவரானவர் முதலில் அறிகுறிகள் சோதனைகளில் இருந்து நோயை கண்டறிந்து அது ஏற்பட்டதற்கான மூல காரணங்களை கண்டறிந்து அதன் பிற்பாடே நோயாளிக்கு உகந்த சிகிச்சையை வழங்க வேண்டும் என்பதே நவீன மருத்துவத்தின் அடிப்படை தத்துவம் இதனை

"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று திருவள்ளுவர் அழகாக எடுத்தியம்பியுள்ளார். அதுமட்டுமல்லாது ஒருவர் தனது மனசாட்சிக்கு விரோதமான காரியங்கள் ஆற்றும் போது அக்குற்ற உணர்வே ஒருவருக்கு பாரிய மன அழுத்தத்தை கொடுத்து கடுமையான நோயாளியாக்கி விடும் எனும் அற்புத உண்மையை

"தன் நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற திருக்குறள் நமக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே விளக்கியிருக்கிறது. இவ்வாறால் எண்ணற்ற பல மருத்துவ உண்மைகளை அன்றே அவருக்கு உரைத்தது யார் எனும் வினாவிற்கான விடைகளே விஞ்ஞானம் கண்டறியா உண்மைகள்.

இது மட்டுமல்லாது சமயப்பெரியார்கள் மக்களுடைய நோய்களை குணப்படுத்தல் தொன்மை வரலாற்று சிறப்பும் நம் இந்து மதத்திற்கே உரியது, கி.பி 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் சுவாமியின் நோயை திலகவதியார் குணப்படுத்தியுள்ளார் எனும் கதைதனை யாவரும் அறிவோம். இது பற்றி நோக்கின் அன்று கூறப்பட்ட "சூலை நோய்" என்பது இன்று நாம் கூறும் "Gastritis" எனப்படும் இரைப்பை அழற்சியாகும். தனது மனசாட்சிக்கு எதிரான காரியங்களை ஆற்றியதால் அடைந்த மன அழுத்தத்தால் அவருக்கு அந்நோய் ஏற்பட்டிருக்கலாம். இதனை திலகவதியார் திருநீற்றை அணிவித்து குணப்படுத்தினார் என நாமறிவோம். இதிலுள்ள மருத்துவ அறிவை நோக்குவோமாயின் தூய்மையான திருநீறு காரத்தன்மையானது அது வயிற்றிலிருக்கும் அமிலத்தன்மையை குறைத்து வயிற்றுப் பிரச்சினையை நீக்க வல்லது. இவ்வகையான மருந்துகளை தான் நாம் "அன்ரசிட்ஸ" என பயன்படுத்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தவிர இசையின் பங்கு தற்கால மருத்துவத்தில் மிகப்பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கிறது. இளமை மிகு இசை உடல்வலி மற்றும் மன அழுத்தங்களை குறைத்து ஆரோக்கியத்தை வழங்கவல்லது. இதனாலேயே அககாலங்களில் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் ஒருவரிருக்குமிடத்து பண்ணிசை பாடும் மரபு ஏற்பட்டது. மேலும் மேலை நாடுகளில் அதிகளவில் பரிந்துரை செய்யப்பட்டு அதிகமாக கடைப்பிடிக்கப் படும் யோகா, தோப்புக்கரணம் போன்ற உடற்பயிற்சி முறைகளில் ஆரம்ப அஸ்திவாரம் என்பது தமிழனையே சாரும். மேலும் தற்காலத்தில் உளவளத்துறையின் பங்கு மருத்துவத்தில் அதிகரித்து காணப்படுகின்றது. நாகரீக உலகில் அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் மனித குலம் சந்திக்கும் மிகப்பெரிய சவால் மன அழுத்தம் மற்றும் உளசார் பிரச்சினைகளாகும் இவ்வாறான பிரச்சினைகளில் சிக்கித்தவிக்கும் மனிதன் ஒரு நம்பகரமான மனம்திறந்து கதைக்க இயலுமான நபரையே நாட முனைவர். அவன் பிரச்சினைகளை உள்வாங்கி ஆலோசனைகளையும் ஆறுதல் களையும் வளங்கவே உளவள ஆலோசகர்கள் (councellor) இருக்கின்றனர். இவ்வாலோசகர்களின் முக்கிய இயல்பு தனிமனித இரகசியங்களை பேணுதலேயாகும். இதுவே இந்து மதம் போதிக்கும் பிரதான கருத்துமாகும். இங்கே இறைவன் என்பவன் மனமுடைந்து வருபவன் குறைதனை கேட்டு இரகசியம் பேசி வினை தீர்ப்பவன் இறைவனே இவ்வுலகின் மிகப்பெரிய உளவளஆலோசகர் என்பது எனதெண்ணம். சிலசமயம் இவ்வாறான மதக் கோட்பாடுகள் மதமானது ஏற்கமறுக்கும் காரணம் மனிதன் பகுத்தறிவு படைத்தவன் அல்லவா எதையும் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கும் போதே அதனை மனமேற்கும். இது இயற்கை. விஞ்ஞான மருத்துவ கோட்பாடுகளும் மத கோட்பாடுகளும் இருவேறு துருவங்கள் என்ற கருத்து விலகி அவையிரண்டும் ஒருங்கிணைந்து செயற்படும் போது ஆரோக்கியமான சமூகம் ஒன்று மலர்வது திண்ணம்.

"உள்ளம் பெருங் கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்க்கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காலா மணிவிளக்கே"

ஒருவனுடைய மனம் மற்றும் உடல்தான் உண்மையான கோயில். அதனை பராமரித்து பேணிக்காப்பதே ஒவ்வொருவரதும் முதல் கடமையாகும். இந்து மதத்தின் வழியில் வாழும் நாம் அனைவரும் நோயில் வாழும் ஜீவன்களுக்கு உதவியும் நோயற்ற சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் பங்கெடுத்து மகிழ்ச்சிகரமான புதிய உலகை படைக்க கரம் கொடுக்கவேண்டும். இதுவே இறைவனுக்கு செய்யும் சரியைச் சமனான ஒன்றாகும்

பல ஆயிரமாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மதம் மற்றும் மருத்துவத்திற்கான பந்தத்ததை அதன் உன்னதங்களை உணர்ந்து சுகாதாரம் மிகு மகிழ்வான சமூகம் ஒன்று உருவாக வழி சமைப்போம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க."

❖ எனக்கு வேண்டும் என்பது ஆசை. எனக்கு மட்டும் வேண்டும் என்பது பேராசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்கள்

இ.கீர்த்தனா
பொறியியற்பீடம்

வேதங்கள் என்பவை பொதுவாக இந்து சமயத்திலுள்ள பொது நூலாகும். இதனை இந்து சமயத்தில் பொது நூல் என அழைப்பர். இது இந்து சமயிகளின் புனித நூலாகவும் உள்ளது. இவ்வேதம் நான்கு உள்ளது. அவையாவன இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் ஆகியனவாகும். இவ் வேதங்களை துர்வேதம், நால் வேதம், நான் மறை எனப் பல பெயர் கொண்டு அழைப்பர். இவ் வேதங்களை நான்காக வகுத்தவர் வியாசர் ஆவர். ஆதலால் இவ்வியாசருக்கு வேதவியாசர் எனும் பெயருண்டானது. இவ் வேதங்கள் கி.மு வாழ்ந்த முனிவர்கள் முக்கியமாக பயன்படுத்தியுள்ளனர். இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களிலும் சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், முதலாம் அரன்யகம், இரண் டாவது உபநிடதங்கள், என்னும் நான்கு உட்பிரிவுகள் உள்ளன.

சங்கிதைகள் செய்யுள் வடிவிலே அமைந்து வேதங்களின் முன்னைய பகுதி யாகவும், முக்கிய பகுதியாகவும் விளங்கு கின்றன. சங்கிதைகள் வேதகாலத்து தெய்வங் களுக்கு என அழைக்கப்பட்ட துதிப்பாடல் களையும் இன்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வு பெறுதற் பொருட்டு அத்தெய்வங் கட்கு செய்யும் பிரார்த்தனைகளையும் கொண்டமைந்தவையாகும். இவற்றை மந்திரங்கள் என்றும் அழைப்பர். பிராமண நூல்கள் யாகத்திற்கு செய்யவேண்டிய சடங் குகளை பற்றி கூறுபவையாகும். யாகங்களை செய்வதே தெய்வங்களை திருப்திப்படுத்தும் சிறந்த் வழிபாடு என இவை எடுத்துரைக் கின்றன. ஆரணியங்கள் எனப்படும் இவ்வின நூல்கள் சடங்குகள் பற்றிய தத்துவ உண்மை மற்றும் விளக்கங்களை எடுத்துரைக்கின்றன. வனத்திலே தனிமையிலிருந்து கற்கப்படு வதால் இவை ஆரண்யம் எனப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச் சேரக்கையான உபநிடதம் ஆனது மெய்யியல் தத்துவ ஆராய்ச்சியல் பற்றிய தாகும். இவை வேதாந்தம் வேத சிரசு முனை முடி என சிறப்பித்து கூறப்படுகின்றன. சங்கி தைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்பன பிரமச்சரியம், கரு கஷ்தம், வானபிரஸ்தம், சந்நியாசம் எனும் வாழ்க்கையில் நான்கு நிலைகளிலும் உள் நோக்கு உரியவையாகும். அதுமட்டுமின்றி சங்கிதை, பிராமணம் தர்மகாண்டத்திலும் ஆரணியம், உபநிடதம் ஞான காண்டத் திலும் உள்ளடங்கப்படுகின்றன.

## இருக்கு வேதம்.

வேத நூல்களுள் இவ்வேத நூலே பழமை வாய்ந்ததாகும். இவ்வேதம் வசிட்ட முனிவருக்கு இறைவனால் வெளிப்படுத்தப் பட்டதுவாகும். இவ்வேதம் 1028 பாசுரங் களை தன்னகத்தே கொண்டுள்ளது. இயற்கை சக்திகளை தெய்வமாக உருவகித்து அவற்றை அழைக்கும் மந்திரங்களாக அமைந்துள்ளன. இவை பத்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வோரு மண்டலத்திற்கு ஒவ்வோர் இருடி யின் பெயர் இடப்பட்டுள்ளது. இவ்வேதத் திலே இந்திரனுக்கு அதிகூடிய பாசுரங்கள் உள்ளன. இந்திரனை அடுத்து அக்கினி, சோமன் ஆகியோர் இடம்பெறுகின்றனர். வேதகாலத்து ஆரியர் பல தெய்வங்களை வழிபட்டேராயினும் தெய்வம் ஒன்றே யெனும் கருத்து அவர்களிடையே தோன்றி யுள்ளது. இருக்கு வேதத்திலே காயத்திரி மந்திரம் என்று புகழ்பெற்று விளங்கும் மந் திரம் இடம்பெறுகிறது. சவித்திரு என்னும் பழைய ஞாயிற்று கடவுளை விளித்துப் பாடப்பட்ட இவ்மந்திரம் காயத்திரி என்னும் யாப்பில் இடம் பெறுவதால் காயத் திரி மந்திரம் எனும் பெயர் பெற் றுள்ளது. இவ்மந்திரம் 3000 ஆண்டுகளுக்கு முன் பல கோடி இந்துக்களால் காலை வழிபாட்டில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுகிறது.

## யசூர்வேதம்

இவ் வேதத்தில் செய்யுள் நடையிலும், உரைநடையிலும் அமைந்த வேள்வி மந்தி ரங்கள் உள்ளன. யசூர் எனும் சொல் 'யஜ்' எனும் பதத்தின் அடியாக பிறந்தது. 'யஜ்' எனும் சொல்லின் பொருள் வேள்வியாகும். இவ்வேதம் யாக முனைகளை விரித்துக் கூறுகிறது. இவ்வேள்விகள் அதர்வாயு எனப் படும். புரோகிதரால் ஓதற்குரியவை. இவ் யசூர் வேதம் பல்வேறு சங்கிதைகளாக பயின்று வந்துள்ளது. இவ் சங்கிதைகளை கிருஷ்ணயசூர், சுக்கில யசூர் என இரு வகைப் படுத்தலாம். தெய்வங்களுக்கு பல பெயர் கூறி வழிபடும் வழிபாட்டு முறைமை இவ்வேதத் திலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு உருத்திரனுக்கு 100 பெயர்கள் கூறி உருக்கமாக வழிபடுதல் செய்யப்படுகிறது. இன்றும் ஆலயங்களில் இறைவனும் அஸ் டோத்திர நாம(108) சகஸ்டநாம (1008) பெயர் கூறியும் அர்ச்சனை செய்யும் வழக்க முள்ளது.

## சாமவேதம்

தெய்வங்களை வணங்குவதற்காக பெரும்பாலும் இருக்கு வேதத்திலிருந்து எடுத்து ஒழுங்கு செய்யப்பட்ட பாடல்களின் தொகுதியே சாமவேதம் ஆகும். சாமம் என்றால் இசையாகும். வேள்விகளில் இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு பாடப்படுவதற்காக தொகுக்கப் பட்டவை என்பதால் இப்பாடல்களுக்குத் தனிச்சிறப்பு இல்லை. தெய்வ வழிபாட்டில் இசை சிறப்பாக விளங்குவதை இவ்வேதம் எமக்குணர்த்தியுள்ளது.

## அதர்வ வேதம்

முதல் மூன்று வேதங்களை போல வேள்விகளை கொண்டிராத இவ்வேதம் மந்திரம், மாயம், மருந்து போன்றவற்றுக்கு முதன்மையளிக்கிறது. இவ் வேதத்தில் வசிய மந்திரங்களும் செபங்களும் உள்ளடங்கியுள்ளன. மந்திரம், கட்டளை, துதி ஆகியன இவ் வேதத்தில் உள்ளன. இவ்வேதம் மானுடவியல் ஆராய்ச்சிக்கு முக்கிய பங்கினை அளிக்கிறது. ஏன் எனில் ஆதிகாலத்து பொது மக்களிடையே காணப்பட்ட சமய ஆசாரங்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்பவை இவ்வேதத்தில் உள்ளன. இவ்வேதம் நோய்களை தீர்ப்பதற்கு வியத்தகு மூலிகைகளையும் அவற்றின் பயன்பாட்டு முறையையும் விபரித்து பேசுவதனால் பிற்காலத்து மருந்து கலைகளின் முறைகளை இவ்வேதம் தன்னுள்ளே கொண்டுள்ளது எனலாம் இது ஒரு காலத்தினிலே வேத வரிசையில் சேர்க்கப் படவில்லை. இவ்வேதம் அதர்வம், அங்கிரிசர், எனும் புரோகிதருக்கு உரியது எனும் பொருளிலே 'அதர்வாங்கிரஸ்' எனும் பெயரில் வழங்கப்பட்டது என்பர்.

❖ எவருடைய குறைகளை எண்ணி விட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்.

❖ மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க வழிபாடு

**கபாலினி ஆனந்தயோதி**
பொறியியற்பீடம்

சிவவழிபாட்டில் லிங்க வழிபாடுதான் முக்கியமானது. லிங்கமில்லாமல் மூர்த்தி பேதமுள்ள சிவன்கோவில்கள் கிடையாது. சிவம் என்றால் இறைவன் லிங்கம் என்பது அடையாளம். எனவே சிவலிங்கம் என்பது இறைவனை அடைவதற்கு அல்லது தெரிந்து கொள்வதற்கான ஒரு அடையாளச்சின்னம் லி-லயம் தம்-தோற்றம் உலகின் அனைத்து பொருட்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்குமான இடம். சிவலிங்கம் என்றால் சிவனின் அருவுருவ திருமேனி அதாவது உருவத்திற்கும் அருவத்திற்கும் இடைப்பட்ட ஓர் அடையாளமேயாகும்.

சிவபுராணத்தில் சிவலிங்கத்தின் மேற்பகுதி சிறிதிற்கும் சிறிதான- பெரிதிற்கும் பெரிதான சகலத்தையும் உள்ளடக்கிய ஒரு ஸ்தம்பம் என குறிப்பிடப்படுகிறது. இதனையே மாணிக்கவாசகர் அணுவிற்குள் அணு வாய், அப்பாலுக்கும் அப்பாலாய் என கூறு கிறார். லிங்கம் என்பதற்கு அடையாளம் எனும் பொருளுண்டு அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்வதாலும் லிங்கம் எனும் பெயர் ஏற்பட்டதாக அறியப்படுகிறது. சிருஷ்டி தொடங்கும் போது சிவலிங்கத்திலிருந்தே அனைத்தும் வெளிப்படுகின்றன. மேலும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் ஒரே பரமபொருளின் வெவ் வேறு வடிவங்கள் என்பதையும் சிவலிங்க உருவம் வெளிப்படுத்துகின்றன.

லிங்க உருவில் பிரம பாகமாக ஆதார பீடமும் விஷ்ணு பாகமாக ஆவுடையாரும் ருத்ர பாகமாக பாணமும் விளங்குகின்றன. இதன் மூலம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மனிதகுல நம்பிக்கைக்குரிய மூன்று செயல்களையும் மேற்கொள்ளக்கூடிய கடவுள்களின் உருவமும் அடங்கியிருப்பதை உணர்கிறோம். இவ்வாறாக மூவரின் ஆற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றலையும் உள்ளடக்கிய பிரமாண்டமே லிங்க வடிவமாக உள்ளது என்கிறது ஸ்ரீ ருத்ரம்.

சிவலிங்கவடிவம் சுயம்புவாக தோன்றியது. இது உலகம் தோன்றுவதற்கு முன்னரே தோன்றியவொன்றாகும். இயற்கையோடு சேர்ந்த தத்துவம் நாதமும் விந்துவும் அதாவது ஒலியும் ஒளியும் இணைந்த சிவ சக்தித்தத்துவம் லிங்கம் என்பது புலங்களுக்கு எட்டாத பரம்பொருளுக்கு சின்னமாக அமைந்து உண்மையான தியானத்தில் மனதில் எழும் வடிவத்துக்கு லிங்கம் என்று பெயர் என உபநிடதங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. சிவம் என்றால் மங்களம். லிங்கம் என்றால் அடையாளம். மங்களத்தின் அடையாளவடிவமே சிவலிங்கம்.

பளிங்கினால் செய்யப்பட்ட ஸ்படிகலங்க வழிபாடுதான் சிறந்த வழிபாட்டு வகையாக கருதப்படுகிறது. காரணம் அந்தப் பொருளுக்கு அதற்கென சொந்தமாக நிறம் கிடையாது. அது எதனோடு தொடர்பிலீடுபடுகிறதோ அதன் நிறத்தையே பெறுகிறது. இமய மலையில் பனிலிங்கமாகவும் இயற்கையில் விளைந்த வானலிங்கமாகவும் சிவலிங்கங்கள் உள்ளன. வேடுவனாக இருந்த ஒருவனை எல்லாவற்றுக்கும் உயர்ந்தது சிவலிங்கமே எனும் எண்ணத்துடன் ஆற்றிய அளப்பெரிய தொண்டினால் கண்ணப்பர்' எனும் உயர்ந்த நிலைக்கு உயர்த்தியதும் சிவலிங்க வழிபாடேயாகும். யானைக்கும், சிலந்திக்கும் உயர்ந்த மோட்ச நிலையை கொடுத்ததும் சிவலிங்கத்திற்கு செய்த தன்னலமற்ற சேவையாகும்.

முழு நம்பிக்கையுடன் ஆகம முறைப்படி பூசை செய்து மார்க்கண்டேயருக்கு இறவா நிலையை தந்தது சிவலிங்க வழிபாடேயாகும். இதன் மூலம் பரிபூரண நம்பிக்கையுடனான சிவலிங்க வழிபாடு எமக்கு நமக்கு உன்னத பெருவாழ்வினை தரவல்லது. விதிமுறை வழிமுறை முக்கியமானதல்ல பரிபூரண நம்பிக்கையே முக்கியமானதாகும்.

- குழந்தைகளைக் குறைசொல்வோரைவிட அவர்களுக்கு வழிகாட்டுவோரே அதிகம் தேவை
- மனிதனைப் புரிந்து கொண்டால் அவனே ஒரு புத்தகம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்
- மனிதனை பாவ காரியத்தில் இழுத்துவிடுவது ஆசையும் கோபமும்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை நெறிப்படுத்தும் இந்துசமயம்

P.சானுஜன்
பொறியியற்பீடம்

இந்து சமயத்திற்கு "சனாதன தர்மம்" என்ற பெயருமுண்டு. இதன் பொருள் "என்றுமுள்ள வாழ்க்கை நெறி" என்பதாகும். அதாவது எந்த வழியில் அணுகினாலும் இறைவனை அடையலாம் என்பது இதன் அடிப்படையாகும்.

தற்போது விஞ்ஞானம் பெற்றுள்ள அபரிமிதமான, பிரமிக்க வைக்கும் வளர்ச்சி, உலகம் முழுவதும் எல்லா இனத்திலும் கலாசார பண்பாடுகளில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் தமிழ்சமுதாயத்தின் பண்பாட்டை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் போற்றி வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

அதற்கு இந்து சமயத்திலுள்ள வாழ்வியல் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வைக்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும். இந்து சமய வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை, உட்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாக கொண்டது.

மேற்கண்ட அனைத்தும் ஒருங்கிணையும் போது அது ஒரு சிறந்த ஆளுமையை வளர்க்கும். இந்து சமயத்தின் இந்த ஒருங்கிணைந்த பயிற்சியை பெறும் போது மனிதன் வாழ்க்கையில் சலனம் இல்லாத மேம்பாட்டை எட்டமுடியும். பொதுவாக இறைவனை அடைவதற்கான இறை தரிசனத்தை கரமயோகம், பக்தியோகம், ஞான யோகம், ராஜயோகம் ஆகிய நான்கு வழிகள் மூலம் பெறலாம் என்று நம் முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

ஆனால் உண்மையில் இறைவனை நெருங்குவதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வேதங்கள் உபநிடதங்கள் கற்றவனுக்கு இறைவன் அருள் கிடைக்காமல் போகலாம். வேதபராயணம் பற்றி ஒன்றும் கூட தெரியாதவனுக்கு இறைவன் காட்சி கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இறை வழிபாட்டில் வெளி வேஷங்கள் தேவையில்லை. இயல்பான வழியே போதுமானது. இதற்கு மேலும் உதவும் வகையில் 8 வகை குணங்களை இந்து சமயம் வரையறுத்துள்ளது.

1. உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையை கைவிட கூடாது. இதை வலியுறுத்தவே "அன்பே சிவம், அதுவே நலம்" என்றனர்.

2. பொறுமை மற்றும் எதையும் சகித்துக் கொள்ளும் மன உறுதி வேண்டும்.

3. மற்றவர்களை நினைத்து பொறாமைப் படக்கூடாது.

4. உடல், மனம், செயலில் எப்போதும் தூய்மையுடன் இருத்தல் வேண்டும்.

5. தன் முனைப்பின் காரணமாகவும் பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலி மிகுந்த உழைப்பு வேண்டும்.

6. எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும். இறுக்கமற்று இருக்க வேண்டும்.

7. எப்போதும் நல்ல நடத்தையுடன் இருக்க வேண்டும். தாராள மனத்துடன் இருப்பது சிறந்தது.

8. எல்லாயோகங்களும் வலுவற்றவை நிலையற்றவை என்பதை உணர வேண்டும்.

இந்த எட்டுவகை குணங்கள் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெறமுடியும். இவை இறைவனை எளிதில் காண உதவும்.

இந்து சமயத்தின் முக்கிய அம்சமே வேதங்கள், உபநிடதங்கள், தத்துவங்கள், ஆகமங்கள், புராணங்கள், கர்மங்கள் போன்றவற்றை ஆதாரமாக கொண்டு ஆன்மீக அடிப்படையில் தங்கி இருப்பதுதான். அது மட்டுமன்றி எந்த நல்ல கருத்தையும் ஏற்றுக் கொள்வது இந்து சமயத்தின் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

இந்து சமயம் மனிதனுக்கு அவனது கொள்கை, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகளுக்கு முழுமையான சுதந்திரத்தை கொடுத்துள்ளது. அதனால் தான் எத்தனையோ சாஸ்திரங்கள் சம்பிரதாயங்களிருந்தாலும் இந்துக்கள் தம் இறை வழிபாட்டை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாக எளிமையானதாக வைத்துள்ளனர்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் ஒவ்வொன்றும் இந்து சமய இறைவழிபாட்டில் எதிரொலித்தபடியுள்ளது. அதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. ஆதி காலத்தில் காதல் புனிதமானதாக காணப்பட்டது. அப்புனிதம் தெய்வங்களின் லீலைகள் மூலம் உணர்த்தப்பட்டது.

கிருஷ்ண பரமாத்மா சத்யபாமாவை காதலித்து கரம்பிடித்தார். முருகப்பெருமான் தினைப்புலத்தில் காவலிருந்த வள்ளியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். கணவன், மனைவியிடையிலான ஊடலையும் சிவம் பெரிதா, சக்தி பெரிதா என்பதன் மூலம் காணலாம். இறுதியில் சிவம் இல்லாமல் சக்தியில்லை. சக்தியில்லாமல் சிவமில்லை எனும் தத்துவம் உணர்த்தப் படுகிறது.

ஆண் பெண் இருவரில் யார் பெரிதென்ற பேச்சுக்கே இடமில்லை இருவரும் சமம் என்பது ஆலய வழிபாட்டில் பல்வேறு வகைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. இந்து மத தெய்வ கோட்பாட்டில் சிவலிங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமே இது தான். அர்த்தநாரீஸ்வரர் வழிபாட்டுத்தத்துவமும் இதனை உள்ளடக்கியது. எந்த நிலையிலும் ஆண்பெண் சரிநிகர் சமன் என்பதை இந்துமதம் காலம் காலமாக உணரத்தியபடியுள்ளது. இந்த அடிப்படையில் தான் இந்து ஆலயங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் மையங்களாக உருவாக்கப்பட்டன.

ஆலயங்களில் நடாத்தப்படும் திருவிழாக்கள் அனைத்தும் நமது சமுதாயத்தை ஒருங்கிணைப்பதற்காக நம்முன் னோர்களால் உருவாக்கப்பட்டவையாகும். தேர் திருவிழா நடக்கும் போது தேரை ஏழை- பணக்காரர், தாழ்ந்தசாதி- உயர்ந்தசாதி, என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் வடம் பிடித்து இழுப்பார்கள். "இறைவன் முன்பு நாம் அனைவரும் சமன்" எனும் மிகப்பெரிய வாழ்வியல் நெறி அங்கு உணர்த்தப்படுகிறது. மேலும் வாழ்வில் எவ்வளவு துன்பம், துயரம், பிரச்சினைகள், வந்தாலும் அத்தனையும் அடிபணிய வைப்பது ஆலய வழிபாடுதான்.

"நான் கும்பிடும் கடவுள் என்னை வழிநடாத்தவார்" என்ற அசைக்கமுடியாத இரும்பு நம்பிக்கையில் தான் இன்று 99 வீதமான பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த தெய்வ நம்பிக்கையும் அசாத்திய துணிச்சலும் தான் மனதில் உள்ள பயத்தை தவிடு பொடியாக்குகிறது. நம்பினார் கெடுவதில்லை.

புராணங்கள், இதிகாசங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்களும் நம்மை நெறிப்படுத்தும் சக்தி படைத்தவை. இவை கடவுளிடம் நம்மை முழுமையாக ஒப்படைக்க எதிர்பார்க்காத தன்மையுண்டாகும். இப்படி நமது வாழ்வியலின் ஒவ்வொரு செயலிலும் இந்து சமய கோட்பாடுகள் இரண்டற கலந்துள்ளது. அந்த கோட்பாடுகளை சரியாக கடைப்பிடிப்பவர்களே பிறவி சூழலிலிருந்து விடுபட முடியும். இந்து தர்மத்தால் மட்டுமே பிறப்பு இறப்பு சூழலிலிருந்து நம்மை விடுவிக்க முடியும். அதற்கு ஒவ்வொருவரும் சில கடமைகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். உதாரணமாக.

1. சூரியன் உதிக்கமுன் துயில் எழ வேண்டும்.
2. காலையில் நீராடி துாய ஆடை அணிந்து, தவறாது இறைவழிபாடு செய்ய வேண்டும்.
3. காலை மாலை இரு நேரமும் நெய்விளக்கேற்றி நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது.
4. நேரம் இருப்பவர்கள் உரிய மந்திரம் சொல்லி வழிபடுங்கள்.
5. நெற்றியில் திருநீறு குங்குமம் அணியாமல் இருக்கக்கூடாது.
6. தினமும் புராண, இதிகாச, தேவார- திவ்ய பிரபந்தம் உள்ளிட்ட சமய நூல்களை படிக்க வேண்டும்.
7. வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தினமும் தியானம் பழக வேண்டும்.
8. ஆலயங்களில் நடாத்தப்படும் பஜனை, சமய சொற்பொழிவுகளை சென்று கேட்க வேண்டும்.
9. வீட்டில் நம் கண்களுக்கு அடிக்கடி படும் இடத்தில் "ஓம்" எனும் மந்திரத்தை எழுதியிருத்தல்.
10. விரத நாட்கள் பண்டிகை தினங்களை பொழுது போக்கு நாட்களாக கருதாமல் ஐதீகத்தை உணர்ந்து ஆத்மார்த்தமாக கடைப்பிடிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மாதத்தில் ஒரு தடவையாவது வீட்டில் நாம் சங்கீர்த்தனம் அல்லது சிறப்பு வழிபாடுகள் நடாத்தலாம்.

12. மடாதிபதிகள், துறவிகள், ஞானிகளை சந்தித்து ஆசி பெற வேண்டும். துறவிகள் பார்வை நம்மீது பட்டால் தோசங்கள் நீங்கும்.

13. தினமும் ஆலயம் செல்ல வேண்டும். முடியாதவர்கள் வாரமொருமுறையாவது ஆலயம் சென்று நிதானமாக மனதை ஒருமுகப்படுத்தி இறைவழிபாடு செய்ய வேண்டும்.

14. ஆலயத்திற்கு செல்லும் போது தனியாக செல்லாமல் மனைவி மற்றும் குழந்தைகளை அழைத்துச் சென்று உரிய முறைபடி வழிபாடு செய்ய வேண்டும்.

இவையெல்லாம் நம் வாழ்வை மேம்படுத்தும். இவை தவிர இன்னும் ஏராளமான இந்து தர்ம கோட்பாடுகள் உள்ளன. அவை மூலம் நாம் நிறைய விடையங்களை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஞானச் சுரங்கமான எமது இந்து சமய பண்பாட்டில் நிறைந்த விடயங்கள் பலஉள்ளன.

இந்து சமய கோட்பாடுகளை கடைப்பிடிப்பதனூடு வாழ்வை பூரணமாக்குவதனோடு மனிதருள் மாணிக்கமாக ஒளி வீசுவீர்கள். அவ்நிலையை பயன்படுத்தி பிறவிப்பெருங்கடலில் இருந்து தப்பிக் கொள்வது அவரவர் பொறுப்பாகும்.

## சிந்திக்க சில வரிகள்

- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்
- பேச்சிலும் நடத்தையிலும், பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்
- பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன்வாருங்கள்
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரியின் வரலாறு

**லாவன்யா லோகநாதன்**
பொறியியற்பீடம்

சிவபெருமான் பக்தர்களுக்கு மிக முக்கியமான திருவிழாவாக காணப்படுவது சிவராத்திரி. இவ் விரதத்தின் போது பக்தர்கள் உணவை தவிர்த்து, இரவு முழுவதும் விழித்திருந்து, கடவுளிடம் இருந்து அருள் பெறுவார்கள். இது சிவபெருமான் பார்வதி தேவியின் திருமணமாக கருதப்படுவதால் இதனை பக்தர்கள் மிகுந்த கோலாகலமாக கொண்டாடுவார்கள்.

துறவியாய் இருந்த சிவபெருமான், பார்வதி தேவியை மணந்த நாளே சிவராத்திரியாக கொண்டாடப்படுகிறது. இந்நன்னாளில் சிவபெருமானைப்போலவே நல்லதொரு கணவனைப்பெற, பெண்கள் அவரை நினைத்து விரதம் கடைப்பிடித்து அவரை வழிபடுவர். திருமணமான பெண்கள் தங்கள் கணவன் மற்றும் குடும்பத்தினர் நலனுக்காக இவ்விரதத்தினை அனுட்டிப்பர்.

'மகாதேவ்" அல்லது 'கடவுளின் கடவுள்' என்றே சிவபெருமான் பெரும்பாலான நேரத்தில் அழைக்கப்படுகிறார். அதற்கு அனைத்து கடவுள்களையும் விட வல்லமை மிக்கவர் என பொருள்படும். சிவராத்திரியுடன் தொடர்புபட்ட வேறொரு கதையை பார்ப்போம். ஒரு முறை பிரமனும் விஷ்ணுவும் இருவரில் யார் பெரியவர் என போராடிக் கொண்டனர். அவர்கள் சண்டை தீவிர மடைந்த போது அவர்கள் மத்தியில் ஓர் எரியும் தூண் அல்லது சிவலிங்கம் ஒன்று தோன்றியது. சிவலிங்கத்தின் மேல் அல்லது கீழ் பாகத்தை கண்டுபிடிப்பவரே வல்லமை மிக்கவர் என்று அந்த லிங்கத்திலிருந்து அசரீரி ஒன்று எழுந்தது. உடனே பிரமர் லிங்கத்தின் மேல்பாகத்தை தேடிச் சென்றார். விஷ்ணுவோ லிங்கத்தின் கீழ் பாகத்தை தேடிச் சென்றார். ஆனால் இருவருமே அச்சோதி எங்கே முடிகிறது என்பதை இருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறிது நேரத்தின் பின் லிங்கத்திற்கு முடிவேயில்லை என விஷ்ணு உணர்ந்து தன் தேடுதலை நிறுத்தினார். இருப்பினும் பிரமர் ஒரு விளையாட்டை விளையாட எண்ணினார். லிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் மேற்பாகத்தை கண்டு பிடித்து விட்டதாக பொய் சொல்ல முடிவுசெய்தார். அதற்கு அத்தாட்சியாக ஓர் தாளம் பூவையும் கொண்டுவந்தார். அனால் அப்பொய்யை கேட்ட சிவபெருமான் சீற்றம் கொண்டு அவரை இனி எவரும் பூலோகத்தில் வணங்க மாட்டார்கள் என அவரை சபித்துவிட்டார்.

சிவபெருமான் ஒரு மிகப்பெரிய சக்தி யாக திகழ்வதற்கு இப்புராணம் ஓர் உதா ரணம். அனைத்திற்கும் (ஆதி) ஆரம்பமாக விளங்கும் அவருக்கு (அந்தம்)முடிவே கிடையாது. மகாசிவராத்திரியின் போதே சிவபெருமான் லிங்க வடிவை பெற்றார் என நம்பப்படுகிறது.

## இரவு நேர விழிப்பு நிலை

சிவராத்திரியின் போது இரவு நேரங் களில் ஏன் விழித்திருக்கிறார்கள் என்பதற்கு வேறோர் புகழ்பெற்ற கதை ஒன்று உள்ளது. ஒரு முறை ஏழைக் காட்டுவாசி விறகு எடுக்க காட்டிற்கு சென்ற போது அங்கே தொலைந்து போனான். இருட்டிக் கொண்டி ருந்ததால் காட்டினுள் விலங்குகளின் சப்தம் கேட்கத் தொடங்கின.

அதனைக்கேட்டு பயந்த காட்டுவாசி ஒரு மரத்தின் மீது ஏறினான். கிளையில் அமர்ந்திருந்த அவனுக்கு கண் அயர்ந்தால் கீழே விழுந்து விடுவோமோ என்ற பயம் இருந்தது. அதனால் தூக்கம் வராமலிருக்க அந்த மரத்திலுள்ள இலைகளை பறித்து சிவபெருமானின் பெயரை உச்சரித்தபடியே கீழே போட ஆரம்பித்தான். இரவு முழுவதும் இதை செய்து தூங்காமல் விழித்திருந்தான். பொழுது விடிந்த பொழுதுதான தெரிந்தது தான் ஏறியது வில்வ மரம் என்றும். அவன் கீழே போட்ட வில்வ இலைகள் அனைத்தும் கீழே இலைகளுக்கு நடுவே அமைந்திருந்த லிங்கத்தின் மீது விழுந்ததென்றும். அதனை எதிர்பார்க்காது இவ்வாறு சிவபெருமானை இரவு முழுவதும் வழிபட்டது அவரை குளிரச் செய்தது. அதனால் சிவபெருமான் அவனுக்கு காட்சியளித்தருளினார். அதனால் இரவு முழுவதும் கண்விழித்து சிவபெருமானை வழிபடும் பழக்கமும் வந்தது.

சிவராத்திரியை பற்றி பல கதைகளிருந் தாலும் சிவராத்திரியின் மகத்துவம் மாறுபடு வதில்லை. அறியாமையை நீக்கி அறிவுச் சுடரை அனைத்து மனிதர்களுக்கும் ஏற்று வதே இவ்விழாவின் நோக்கமாகும்.

### சிந்தனைத் துளிகள்

- ❖ உழைப்பின் வேர்கள் கசப்பானவை ஆனால் அதன் கனி இனிப்பானது
- ❖ படித்தவன் போடும் கணக்கு தப்பாகலாம் ஆனால் படைத்தவன் போடும் கணக்கு தப்பாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்

**ச.மதுஷன்**
பொறியியற்பீடம்
அறிமுகமாணவன்

முன்னம் உதித்த மொழி
முன்னோர் வளர்த்த மொழி
விரிகடலாய் இப்புவியில்
உலவுகின்ற இன்பமொழி!

திருக்குறளில் உலகநெறி
பெருங்குரலில் பாடும் மொழி
பொது மறையாய் உலகினிலே
பவனிவரும் ராஜ மொழி!

பிறைநிலவு அணிந்தவனின்
நிறையருளைப்பெற்றோரும்
அருளிப்படைத்த தேவாரம்- திரு
வாசகத்தில் உருகும் மொழி!

இணையத்திலே கோலோச்சி
இதயமெல்லாம் வீற்றிருக்கும்
ஈன்னுமின்னும் வேண்டுமென - கை
ஏந்த வைக்கும் ஏற்றத்தமிழ்!

கம்பன் கை விளையாடி
காவியம் படைக்குந்தமிழ்
வள்ளுவன் இளங்கோமடியில்
பள்ளி கொண்ட தெள்ளு தமிழ்!

பத்துப்பாட்டு எட்டுத்தொகை
தமிழன்னையவள் எழில் தோகை
நடனமிடுமே இன்பம் விரித்து
காட்சி காணும் வழி விரிந்து

எம்மொழியுடன் எளிதெனவே
கைபிடிக்கும் பவனி வரும்
இனிய தமிழை மிஞ்சிடவே
இவ்வுலகில் மொழியில்லை!

இமயத்தின் உயரம் தோற்கும்
எம் தமிழோபுகழின் உச்சம்
வான் கிழிந்து மேல் செல்லும்
பொன்னொத்த ஒளி கொண்டு!

உயிருக்கு ஈடு சொல்ல
வேறேதும் புவியில் இல்லை
உயிருக்கும் மேல் தமிழாம்
உயர் வடிவாம் கடவுளைப்போல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளும் மெஞ்ஞானம்

குமாரரட்ணம் உமாசங்கர்
பொறியியற்பீடம்
அறிமுகமாணவன்

மெஞ்ஞானக் கருத்துக்களை விஞ் ஞானம் ஏற்றுக்கொள்வது உண்மைதான். அன்றைக்கு ஆன்மீகத்தில் கூறப்பட்ட கருத் துக்கள் தான் இன்றைக்கு விஞ்ஞான ரீதியாக கடைப்பிடிக்கப்படுகிறது. உச்சி முதல் உள்ளங்கால்வரை நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருட்களிலும் ஆன்மீகமும் விஞ் ஞானமும் கலந்து இருக்கிறது. அந்த விதத்தில் தான் நம் முன்னோர்கள் சடங்கு சம்பிரதாயங்களை அமைத்திருக்கிறார்கள். மெஞ்ஞானத்தில் பல்மேலான கருத்துக்கள் பொதிந்திருக்கின்றன. அவற்றை விஞ்ஞான வாயிலாகத்தான் மக்கள் பின்பற்றுகின்றனர். பொதுவாக அன்றைக்கு கோயில்களில் வந்த பிரகாரங்கள் இன்றைக்கு மருத்துவர்கள் கூறும் நடைப்பயிற்சியாக மாறியுள்ளது. அந்த காலத்தில் பிரகாரங்கள் 5,7,9 என் றெல்லாம் சுற்ற சொல்வார்கள். இவ்வாறு சுற்றிவருவதால் பஞ்ச இந்திரியங்களும் வேலை செய்யும் என்பதனால் விஞ்ஞான கருத்தை மறைமுகமாக வைத்து இப்படி சொல்லி வந்தனர்.

ஆனால் இன்று சர்க்கரை, நீர்வெறுப்பு, இரத்த அழுத்தம் என்றெல்லாம் வியாதிகள் இருந்து வருகின்றன. அவை அனைத்திற்கும் மொத்த வடிகாலாக நடைப்பயிற்சி அமைந் துள்ளது. இன்று நாம் சாலைகளில் நடப் பதை அன்று ஆலயங்களில் பிரகாரமாக சுற்றி வந்து புண்ணியத்தை எளிதாக பெறவழி அமைத்து கொடுத்திருந்தனர். மெஞ்ஞானம் சொல்லும் கருத்தை நாம் கடைப்பிடித்தால் நம் உடலும் உள்ளமும் நன்றாக இருக்கும். “பட்டினி கிடந்தால் பலன் கிடைக்கும்” என்று சொன்னால் எவரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆன்மீக ரீதியாக வியக்கும் பலன் கிடைக்கும் என்றால் ஏற்றுக் கொள்வார்கள் அல்லது மருத்துவம் மூலம் வாரம் ஒரு நேரமாவது உணவு உண்ணாமல் இருந்தால் உடலுக்கு நல்லது என்று சொன்னால் தான் ஏற்றுக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்நலத்திற்கு உறுதுணையாக அமையும் துளசியை சாப்பிடுங்கள் என்று சொன்னால் சாப்பிடுவார்களா? அது ஒரு தெய்வீக மூலிகை அதை உட்கொண்டால் கபம், சளி, போன்ற தொந்தரவுகள் எல்லாம் நீங்கும் என்று நம் முன்னோர்கள் பெருமாள் கோவிலுக்கு செல்லும் போது துளசியை தீர்த்தத்தில் கலந்து கொடுத்தால் வருபவர்கள் உட்கொள்வர் என கண்டறிந்துகொண்டனர்.

பொதுவாக கோலம் போடுவது முதல் அம்மி, ஆட்டுக்கல்லில் அரைப்பது வரை அத்தனையும் நாம் உடல் நலத்தோடு வாழ கண்டறிந்த உண்மைகள் தான். அந்த காலத்தில் பெரியவர்களுக்கு இருந்த தெம்பும் தைரியமும் இந்தக் காலத்து இளைஞர் களுக்கு கூட கிடையாது. அதுமட்டுமல் லாமல் கோயில் அன்னதானங்கள், சமய நிகழ்வுகளில் நம்முன்னோர்களும் நாமும் கால்களை மடக்கி ஒன்றின் மீது ஒன்று வைத்து உட்கார்ந்து உணவு உண்ண கட் டாயப்படுத்துவார்கள் அதற்கான கார ணத்தை விஞ்ஞான வாயிலாக நோக்கும் போது அவ்வாறு அமர்ந்து உணவு உண்ணும் போது சமிபாட்டு கோளாறுகள் ஏற்படாது விரைவாக உணவு ஜீரணமாகிவிடும் என்பதாலேயே அவ்வாறு எடுத்துரைக் கப்பட்டது.

ஆலயம் என்பதை முன்னோர்கள் கோயில் என கூறும் வழமை இன்றும் பயிலப்படுகிறது. "கோ" என்றால் அரசன், இறைவன், தலைவன் என்று பொருள்படும். "இல்" என்றால் தங்குமிடம் என்று பொருள் படும். அதாவது இறைவன் தங்கி இருந்து அருள் வளங்குமிடமாகும். மேலும் பல கருத் துக்கள் மெஞ்ஞானத்தில் கூறப்பட்டுள்ளது.

இறைவனுக்கு தேங்காய் உடைப்பது நம் ஆணவம் குறைத்து அன்பு பெருக வழி காட்டும் என்பதால். தீபம் காட்டுவதால் பாவம் போகும் என்று சொல்வார்கள். அஞ்ஞான இருள் அகன்று ஒளிமயமான வாழ்க்கை ஏற்படுத்திக் கொள்ள நாம் தீபத்தை பார்க்கிறோம். அதிலும் கூட ஓர் தத்துவத்தை ஆன்மீகம் போதிக்கிறது.

ஜோதியில் கற்பூரம் சேரும் போது சாம்பலாகாது கரைவது போல ஆன்மாவும் இறைஜோதியோடு ஒன்றுபட கலந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஜோதியின் மூலமாக எடுத்துரைத்தனர். மேலும் எத்த னையோ மலர்களிருந்தாலும் அர்ச்சனையில் கதம்பத்தை வைக்கிறோம். எதற்காக என்று சிந்தித்தால் கதம்பத்தில் எப்படி எல்லா மலர்களும் இணைகின்றனவோ அதேபோல எல்லா விதமான மனிதர்களும் இறைவன் முன் சமமானவர்கள் தான். ஏழை, பணக் காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்றெல் லாம் பாகுபாடு பார்க்காமல் சந்நதியில் இருந்து மனமுருகி வழிபடுபவர்களுக் கெல்லாம் சகல பாக்கியங்களும் இறைவன் கொடுப்பான் என்பதை உணர்த்தவே கதம்ப மாலையை இறைவனுக்கு அணிவிக்கிறோம்.

வீட்டுக்கு முன்போடும் கோலத்தில் கூட அன்னதான தத்துவத்தை சொல்லியிருக்கி றார்கள். எறும்பு முதலான ஜீவராசிகளிடமும் நாம் கருணை காட்ட வேண்டும் என்பதை சொல்லிக்காட்டுகிறது. இதைப்போல இன்னும் ஏராளமான அர்த்தங்கள் இந்த மெஞ்ஞானத்தில் பொதிந்திருப்பதால் தான் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்தி ருக்கும் விஞ்ஞானம் அதை ஏற்றுக்கொள் கிறது. எனவே மெஞ்ஞானம் விஞ்ஞானத் திற்கு உட்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியாம் உயர்ந்த தமிழ்

தர்சி சிவதாஸ்
பொறியியற்பீடம்
அறிமுகமாணவி

பொதிகையிலே பிறந்து வந்து
மதுரையிலே வைரஸ்ரீகை என்னும்
நதியினிலே தவழ்ந்த தென்று
நம்மவர்கள் போற்றும் மொழி
மதிமிகுந்த மற்ற நாட்டார்
மனங்களையும் ஈர்த்தமொழி
ஆதிநெடுங் காலம் முதல்
அவனியிலே வாழும் தமிழ்

மன்னவராம் விற் கொடியோர்
வீரர்மிக்க சேரர் களும்
பொன்னிவள நாட்டவராம்
புலிக் கொடியின் சோழர் களும்
தென்னவராம் மீன் கொடியை
ஏந்தி நின்ற பாண்டியரும்
அன்னையர் போல் அர வணைத்து
அகில மதில் வளர்த்த தமிழ்

மூவேந்தர் அவர் உமின்
மூதறிஞர் பலர் உடனே
பாவேந்தர் ஆகி நல்ல
பாட்டெழுதும் புலவர்களும்

நாவேந்தர் ஆனவரும்
முச்சங்கம் அதில் இருத்திப்
பூவேந்தி அதை தூவித்
துதித்த மொழி எங்கள் தமிழ்

இறைபுகழை பாட இன்பம்
கோடி தரும் பல நூலும்
மறைகளிலே பொது மறையாய்ப்
புகழடைந்த திருக் குறளும்
முறையுடனே வாழ வழி
காட்டுகின்ற நூல் பலவும்
நிறைந்த மொழி நில மதிலே
நிலைத்திருக்கும் நமது தமிழ்

பழமொழிகள் நிறைந்த தமிழ்
பாரதிலே சிறந்த தமிழ்
அழகொழிரப் பழமையுடன்
புதியதையும் ஏற்ற தமிழ்
வளமுடனே வாழும் தமிழ்
வரலாறு படைத்த தமிழ்
இளமையுடன் இவ்வுலகில்
செம்மொழியாய் உணர்ந்த தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி என்றும் நீ

**R.ஹரிகரன்**
பொறியியற்பீடம்

ஆதி சிவன் அன்றொருநாள்
பொதிகை வரை தன்னில்
அகத்தியனுக்கு அருளுரைத்த
செந்தமிழே, பைந்தமிழே
என் றென் றும் வாழி நீ

தென் குமரி ஆயிடை
வட வேங்கடம் வரை
கோலோச்சி அரசாண்ட
வண்டமிழே வளர்க மொழியே
என்றென் றும் வாழி நீ

முதற்சங்கம் கண்ட முத்தமிழே
இடைச்சங்கம் வளர்த்த இன் தமிழே
கடைச்சங்கம் போற்றிய கவின் தமிழே
பாவணர் மடி தவழ்ந்த கன்னித் தமிழே
என்றென் றும்' வாழி நீ

செம்மொழியாம் தமிழ் மொழியென
தேசம் புகழும் தேன் தமிழே
எந்தையர்கள் ஏற்றிநின்ற எழில் தமிழே
சிந்தை குளிர்விக்கும் சீர் தமிழே
என்றென் றும் வாழி நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் வழிபாடு

ஈ.மகிழ்யா
பொறியியற்பீடம்
புதுமுக மாணவர்

கோவில் முழுதுங் கண்டேன் - உயர்
கோபுரம் ஏறிக்கண்டேன்
தேவாதி தேவனை யான் - தோழி!
தேடியும் கண்டிலனே.

தெப்பக் குளங்கண்டேன் - சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்
எய்ப்பில்லைப் பாம் அவனைத் - தோழி!
ஏழையான் கண்டிலனே.

பொன்னும் மணியுங் கண்டேன் - நல்ல
சித்திர வேலை கண்டேன்
அற்புத மூர்த்தியினைத் - தோழி
எங்கெங்கும் கண்டிலனே.

தூபமதில் கண்டேன் தீபம்
சுற்றி எடுத்தல் கண்டேன்
ஆபத்தில் காப்பவனைத் - தோழி!
அங்கேயான் கண்டிலனே

தில்லைப் பதியுங்கண்டேன்
சிற்றம் பலமும் கண்டேன்
கல்லைக் கனிசெய்வோனைத் - தோழி!
கண்களாய் கண்டிலனே

கண்ணுக்கினிய கண்டு - மனதைக்
காட்டில் அலையவிட்டு
பண்ணிடும் பூசையாலே - தோழி!
பயனொன்றில்லை அடி!

உன்னதில் உள்ளான் அடி! அது நீ
உணர வேண்டும் அடி!
உள்ளத்தில் காப்பாய்எனில் - கோயில்
உள்ளேயும் கண்டாய் அடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணம் எனும் சைவத்தமிழ் இலக்கியம்

மு.தனோராஜ்
பொறியியற்பீடம்

கி.பி 9 ஆம் நூற்றாண்'டுக்கும் 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலம் தென்னிந்தியாவிலே சோழர் காலமாகும். இக்காலத்திலே நிலவிய அரசியல், பொருளாதார சமூக நிலை காரணமாக தமிழிலக்கியமானது காவியம் பேரிலக்கியம், சிற்றிலக்கியம், சாத்திரம் எனப் பலவகைகளில் வளர்ச்சியடைந்தது காணப்பட்டது. காவியங்கள் மானுடம் தழுவியதாக அமைய பேரிலக்கியங்கள் ஒரு வகையில் தெய்வீகம் தழுவியதாக அமைகிறது. இக்கால கட்டத்தில் தோன்றிய பேரிலக்கியங்களில் கம்பராமயணம், கந்தபுராணம், பெரியபுராணம் என்பது சோழர் காலத்தில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களுள் தலையாயது. புராணங்கள் பொதுவாக வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கபட்டவையாக உள்ள போதிலும் பெரியபுராணம் முதன் முதலில் எழுதப்பட்ட புராணமாகும்.

சோழ மன்னனாக இருந்த அநபாய சோழன் சமண நூலான சீவக சிந்தாமணியில் நாட்டமுற்று இருப்பதால் சமண சமயத்திற்கு மாறிவிடுவானோ என அஞ்சிய சோழனின் பிரதம மந்திரியாக இருந்த சேக்கிழார் சைவ சமயத்தின் பெருமைகளையும், சிவனடியார்களின் வரலாற்றையும் அநபாயச் சோழ மன்னனுக்கு எடுத்து கூறினார். இவற்றை கேட்ட அநபாய சோழன் நூலாகப் பாடுமாறு சேக்கிழாரை வேண்டிக் கொண்டார். அநபாய சோழனின் இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சேக்கிழார் சோழனிடம் இருந்து விடை பெற்று ஒவ்வொரு ஊர் ஊராகச்சென்று சிவனடியார்களின் வரலாற்றை தானே தேடியறிந்து இறுதியாக தில்லை நகரையடைந்து தில்லைநடராஜரை திருத்தொண்டர் புராணத்தைபாடுவதற்கு அருள் புரியுமாறு வேண்டி நின்றார்.

தில்லைநடராஜர் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க அவ்வடியை காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளின் முதல் அடியாகக் கொண்டு அத்துடன் 4252 பாடல்களை விருத்தப்பாக்களாக கொண்டு பெரிய புராணத்தை பாடி முடித் தார். சமய குரவர்களுள் ஒருவரான இறைவனுடன் தோழமை உறவு பூண்ட வரும் திருமணபந்தத்தில் இணையும் வேளையில் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரும் இறைவனை பித்தா என பேசி "பித்தா பிறை சூடி" என வாழ்த்திப் பாடிய சுத்தர மூர்த்தி நாயனாரைப்பாட்டுடைத் தலை வனாக கொண்டு பெரிய புராணத்தை பாடினார். இது ஏனைய 62 தனியடியார்களினதும் 9 தொகையடியார்களினதும் வரலாற்றை பேசுவதாக அமைந்துள்ளது. இந்நூல் சோழன் முன்னிலையில் தில்லையில் அரங்கேற்றப்பட்டு பெரிய புராணம் என பெயர் வழங்கப்பட்டது. இப் பெரியபுராணத்தை சுந்தர மூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டர் தொகையையும் நம்பியாண்டார் நம்பிபாடிய திருத் தொண்டர் திருவந்தாதியையும் மூல நூலாகக் கொண்டே எழுதினார்.

பெரியபுராணத்தின் காப்புச் செய்யுளே பெரியபுராணத்தின் மகிமையை எடுத்துக் கூறுகிறது.

> "உலகெலாம் உணர்ந்துஓதுதற்கு அரியவன்
> நிலவு லாவிய நீரமலி வேணியன்
> அழகில் சோதியன் அம்பலத்து ஆடவான்
> மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்."

இக்காப்புச் செய்யுளில் இறுதியில் அடி வாழ்த்தி வணங்குவோம் என முடிகிறது. இதில் இடம்பெறும் "வாழ்த்தி" என்பது வணக்கம் தெரிவிப்பதாகும். அடி என்பது அடியார் வரலாறு ஆகிய வரு பொருளை கூறுவதாகவும் அமைகிறது. ஒரு காப்புச் செய்யுள் ஒன்று வாழ்த்து, வணக்கம், வரு பொருள் இவற்றுள் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் பெரியபுராணம் இம் மூன்றையும் கொண்டதாக அமைகிறது. இறைவனால் எடுத்துக் கொடுக்கப்பட்ட அடியாகிய "உலகெலாம்" பாடல் முழுவதும் 14 இடங்களில் வருகிறது. இது உலகங்கள் ஈரேழு பதினான்கு என்பதை வெளிகாட்டு கின்ற சிறப்பைக்காணலாம்.

பெரியபுராணத்தின் அமைப்பு அந்தாதி தொடரில் அமைக்கப்பட்டது போல் உள்ளது. 27 பாடல்களை கொண்ட இளையான் குடி மாற நாயனார் புராணத்தின் இறுதிப் பாடலில் "இது வரை இளையான் குடி மாற நாயனர் வரலாறு கூறினார். இனி சேதி நாட்டை ஆண்ட மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றை கூறுவேன் எனக்குறிப் பிட்டுள்ளார். இவ்வாறே 69 பாடல்களை யுடைய காரைக்கால் அம்மையாரின் வர லாற்றை 69 பாடலில் காரைக்கால் அம்மை யாரின் வரலாறு கூறிய நான் இனி, திங் களூரில் வாழ்ந்த அப்பூதியடிகளின் வரலாறு கூறுவேன் எனப் பாடியுள்ளார்.

சிவனடியார் வரலாற்றைக் கூறும் பெரியபுராணத்தின் அடிப்படையில் சிறப்பான வாழ்வும், அவ் வாழ்வின் இன்றியமையாகக் கோட்பாடுகளையும், பலன் கருதாது உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வு, சகிப்புத்தன்மை, இன்னா செய்யாமை, வாய்மை, ஆகியவற்றைப்பின்பற்றி வாழும் வழிகளைப் பெற்று மனிதர்கள் இவ் வாழ்வில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அடியார்களின் வாழ்க்கை வரலாற்றை படைத்துள்ளார். அடியார்களின் வரலாற்றின் மூலம் உலக சமுதாயத்திற்கே அறவழி வாழ்வைப் போற்றிட வைத்தார். சேக்கிழார் படைத்த இவ்மகாகாவியம் சோழர் காலத்தை சார்ந்து இருந்தாலும் திருக்குறளை போல என் றைக்கும் எச்சமூகத்திற்கும் பொருந்தும் வகையில் மனித வாழ்வை வளப் படுத்துவதான கருத்துக்களை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் காப்பியம் பாடத் தொடங்கிய கருப்பொருள் புதுமையானது. மானிடராகப் பிறந்தவர்கள் இறைவனை வழிபடுவது தலையாய கடமை என்பதையும் உணர வேண்டும். அதனை உணரத் தொடங்கினால் இவ் வாழ்வு சிறப்புறும். இத்தகைய பண்புகளை உடையவர்களே மக்களை நல்வழியில் நடாத்துபவர்கள். இத்தகைய பெரியோரைத் தான் தொண்டர் என பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இவர்கள் எப்போதும் தங்கள் உள்ளம் முழுவதையும் இறைவனிடத்தே வைத்திருப்பவர்கள். அவர்கள் எதனையும் எதிர்பார்ப்பதில்லை. இவர்களின் சிறப்பை கூறும் பகுதிக்கு "திருக்கூட்டச் சிறப்பு" எனத் தலைப்பினை கொடுத்தார் சேக்கிழார். உலகில் உள்ள தொண்டுள்ளம் கொண்ட அனைவரையும் பாடுதல் இயலாது. எனவே ஒரு சிலரை மட்டும் சேக்கிழார் பாட எடுத்துக் கொண்டார். எனவே தொண்டு எனும் பண்பு காப்பியத்தலைமை ஏற்பது சிறந்தது. இத்தொண்டு எனும் பண்பு நம்பியாரூரர், சம்பந்தர், திருநீலகண்டர், திருநாவுக்கரசர், போன்றவர்களின் உட்புகுந்து எப்படி பணி செய்கிறது என்பதை அறிவிப்பனவே பெரியபுராணம் கூறும் வரலாறு ஆகும்.

சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்துள் மிகவும் சிறப்புடைய வரலாறு மனுநீதிச் சோழன் புராணமாகும். மனுநீதிச் சோழன் வாழ்வில் நடந்த நிகழ்வை வரலாறாக அளிக்கிறார். சோழ மன்னன் தவமிருந்து பெற்ற ஒரு மகனுக்கு தெய்வீகக் கலைகளை ஓதினான். ஒரு நாள் அத்தகைய அருமை மகன் தேரிலேறி ஊர் வலம் சென்றான். எதிர்பாராத விதமாக இளங்கன்று ஒன்று தேர்காலில் மாட்டி இறந்து விட்டது. இதனால் அவ்விளங்கன்றின் தாய் பசு அரசனின் மணியை ஒலிக்க நடந்ததை அறிந்த மனுநீதி கண்ட சோழன் பசுவுக்கு நீதி வழங்கும் முகமாக தேர்காலில் மகனை கிடத்தி தேரை ஏற்றிக் கொன்றான் என்று பெரிய புராணம் கூறுகிறது. இவ்வராலாற்றில் நாம் அனைத்து உயிர்கள் மீதும் அன்பு வைக்க வேண்டும் என்பதை முக்கிய கருத்தாக உள்ளது. நீதியென்பது அனைவருக்கும் பொதுவானது. சூழ்நிலை, செல்வாக்கு, சந்தர்ப்பம் என்பவற்றுக்கேற்ப அது மாற்றமடையக் கூடாது என்பதை உணர்த்தவே.

"தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம் என
அனகன் அரும்பொருள் துணிந்தான் அமைச்சரும்
அஞ்சினர் அகன்றார்"

எனப் பாடினார்.

பகைவனுக்கு உயிர்ப்பிச்சை அழிக்கும் பண்பாட்டைச் சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் கூறுகிறார். சிவபிரான் மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்ற அடியவர்க்கு காட்சி நல்கித் தம் திருவடிகளில் இணைத்துக் கொண்டார் என்பதை சேக்கிழார் காட்டும் வரலாற்றுச் செய்தி மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் நேரே இறைவன் பங்கு எதுவுமின்றி பகைவனுக்கு அருளும் பண்பாடும் காத்த ஒருவனுக்கு இறையருள் உண்டு என்பதே உண்மை. இதனோடு சேர்ந்து சேக்கிழார் கூறும் உண்மையும் உண்டு. மனிதப்பண்பாட்டின் வெற்றிக்கு இறைவன் ஆசி வழங்க எழுந்தருளி வருவதாகவும் காட்டியுள்ளார். இவ்வகையில் அடியவர்களுக்கு முதன்மை அளிப்பது சிறப்பானது.

திருமந்திரத்தில் திருமூலர் "அன்புடையார் எல்லோரும் சிவப்பரம் பொருளே" எனப் போற்றினார். சேக்கிழாரின் பெரிய புராணம் திருமூலரின் தீரமந்திரத்தின் வழி எழுதப் பட்டது. அன்பு என்பது ஆண்டவன் மேல் வைப்பது மட்டுமன்றி இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்கள் மீது வைக்க வேண்டியதும் ஆகும். தொண்டு என்பது இறைவனுக்கு செய்வது மட்டுமன்றி, தன்னை ஒத்த மனிதனுக்குச் செய்வதே அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு என்ற உறுதியும் பெரிய புராணத்தில் எங்கும் முரண் படாது ஒலித்துக் கொண்டுள்ளது.

தேவார மூவர் வரலாற்றை ஏராளமான சம்பவங்களோடும், அற்புதங்களோடும் விரிவாக விளக்கி பெரியபுராணம் விபரிக்கிறது. கண்ணப்பர் வரலாற்றில் அன்பின் ஆழ அகலங்களைப் பெரியபுராணம் விபரிக்கிறது. சிறுத்தொண்டர் வரலாற்றில் வாழ்வில் தமக்கு தாமே வரையறுத்துக் கொண்ட நியதிகளைக் காப்பாற்ற ஒரு மனிதன் எத்தகு சாதனைகளையும் நிகழ்த்த இயலும் என்பது ஒளியூட்டம் பெற்றுள்ளது. சமயம் சார்ந்த பெண்மையை காரைக்கால் அம்மையார் வாயிலாக எடுத்துரைக்கிறார். விருந்தோம்பற் பண்பாட்டை இளையான் குடி மாறநாயனார் வரலாறு பேசுகிறது. இத்தகைய வரலாறுகளை வடித்து வழங்கிப் பெரியபுராணம் சமய வாழ்வில் விழிப்புணர்வை தோற்றியது.

பிறர் குறிப்பினை அவர் கூறாமலே உணர்ந்து வழங்கி, இறைநெறி நின்று, மனிதப் பண்புகளுக்கு ஒளியூட்டி வாழ்வாங்கு வாழ்ந்த சைவச் சீரடியார்கள், தெய்வமாக போற்றி வணங்கத்தக்கவர்கள், வழிபடத்தக்கவர்கள். இவர்களுக்கும் திருமேனி வடித்து சிவாலயங்களில் எழுந்தருள் வித்து வணங்க வேண்டும் என்ற எண்ணம் தமிழ் மன்னர்கள் உள்ளங்களில் உருவாக உதவிய பெருமை பெரியபுராணத்தையே சாரும். குறிக்கத்தக்க சாதியினர் சிவாலயங்களில் நுழைய தடை நிலவியிருந்த காலத்தில் அத்தகு குலங்களில் பிறந்த அடியவர்கள் திருக்கோயிலுக்குள்ளே தெய்வத்திருமேனியோடு ஒப்ப வழிபடப் பெற்றமை பெரிய புராணத்தின் விளைவுகளில் முக்கியமானது.

சமயமும் சடங்குகளும் ஏதேனும் ஒரு வகையில் மனித ஈடேற்றத்திற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பது சேக்கிழாரின் திருவுள்ளம். சடங்குகள் மனித அன்பின் உயர்ச்சிக்கும் ஈடேற்றத்திற்கும் தடை பயக்குமாயின் அதைத் தகர்த்தெறிவதில் தவறேதும் இருக்க இயலாது. பெரியபுராண வரலாறுகளில் பல நேரடியாக அல்லது பயன்பாடு கருதி மறைமுகமாக சடங்குகளை தகர்த்தெறிந்து, அன்பின் முன்னே அவை அர்த்தமற்றவை என கூறும் பொருட்டு “வாய் விட்டுச் சுவைத்த பன்றியின் ஊன் எனக்கு சிறந்த படையல் என்று ஏற்ற இறைவன் அன்பு மிக கொண்ட பெண் ஒருத்தி எச்சில் பட என்மேனி ஊதிய இடமே எனக்குளிர்கிறது” என்று பேசிய சிவபெருமானைக் காட்டி ஆண்டவன் திருவுள்ளத்தை காட்டி சடங்கு எண்ணங்களுக்கு முடிவுகட்டும் நோக்கை காணமுடிகிறது.

இவை யெல்லாவற்றுக்கும் மேலாக நூலின் பெயர் பொருத்தத்தை நோக்கும் போது பாடல்களின் தொகையளவைக் கருதி பெயர் ஏற்படவில்லை. ஏனெனில் சம காலத்தில் தோன்றிய கந்தபுராணம் *10346* பாடல்களையும், கம்பராமாயணம் *10343* விருத்தப்பாக்களையும் கொண்டது. இவற்றுடன் ஒப்பிடும் போது *4252* செய்யுள்களை மிகக்குறைவாக உள்ளபோதும் உலகில் பெரியவற்றுள் பெரியதாகவும் சிறியன வற்றுள் சிறியதாகவும், அவற்றுள் அரிய தாகவும் விளங்கும். இறைவன் அடியார்களின் மனங்களில் உறைபவன். அத்தகைய அடியார்களின் புகழ்களை பாடுவதனாலேயே பெரிய புராணம் எனும் பெயரைப் பெற்றது. சேக்கிழாரின் தமிழ் புலமையை கண்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் “பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடப்பட்ட கவிவலவ” என போற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் எதிர் காலம்

**கமலநாதன் மாலவன்**
பொறியியற்பீடம்
அறிமுகமாணவன்

ஒரு சமுதாயத்தின் பலதரப்பட்ட வளர்ச்சிகளும் நாகரீகங்கமும் அந்த சமுதாயத்தின் முக்கிய அங்கமான மொழியின் ஆளுமையிலும் பாவனையிலும் தங்கியிருக்கிறது. ஒரு மொழியென்பது சமுதாயத்தின் உயிர் நாடியாக இருக்கும் போது, சில குறுகிய கால நலனுக்காக அந்த மொழியைக் குறிப்பிட்ட காரணத்திற்காக மட்டும் பாவனை யில் கொண்டுவருவதால் அம்மொழி மக் களின் தேவையிலிருந்து தானாகவே மறைந்து விடும் என்பதற்கு ஒரு காலத்தில் கொடி கட்டிப் பரந்த பலமொழிகள். இன்று மக்களுக்குத் தெரியாத சரித்திரமாகப் போனவை ஒரு சில சான்றுகளாகும். காலம் காலமாக பல அரசியற் சிந்தனையாளர்கள் சமுதாய மாற்றங்களுக்கான திட்டங்களைத் தங்கள் படைப்புக்கள் மூலம் மக்கள் மனதில் படைத்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடரும் பல வித அடக்குமுறைகளுக்கும் எதிரான ஆயுதமாகச் செயற்பட்டவை, சிந்தனையாளர்களின் பேனாக்களாகும். அவற்றின் தூய படைப்புக்கள் தமிழின் எதிர்காலம் பற்றி எழுதுவது இக்காலத்தின் மிகப்பெரிய தேவையாகும்.

இன்று வலிமை பெருகிய சக்திகளான தொழில் விஞ்ஞான வளர்ச்சிகளாலும் தமிழ் பற்றிய பெருமை தெரியாத அறியாமையினாலும் தமிழ் ஒரு தேக்க நிலையை அடைவது தவிர்க்க முடியாது. அதேமாதிரி, இலங்கை போன்ற நாடுகளில் தமிழ் ஓர் அரச கரும மொழியாக இருந்தாலும் அதன் பாவனையும் பராமரிப்பும் திருப்தி தரும் வகையில் இல்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பல்லாயிரக்கணக்கான வருடங்களாக தொடர்ந்து பாவனையிலிருக்கும் மொழிகளில் தமிழ் மொழி முன்னிடத்தை வகிக்கிறது. பழைய மொழிகளான இலத்தீன், சமஸ்கிருதம், பாலி போன்ற மொழிகள் காலக்கிராமத்தில் பழக்கத்தில்லாத மொழிகளாக மாறிப் போய்க் கொண்டிருக்கும் போது தமிழ்மொழி ஒரு தனித்துவமான ஆளுமையான மொழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து கொண்டிருக்கிறதோ, அல்லது தமிழ் மொழி என்பது ஒரு அரசியல் வலிமை யான ஆயுதமாகக் கணிக்கப்படுகிறதோ அல்லது இன்றைய கால கட்டத்தில் இணை யத்தளத்தின் மூலமும் அத்துடனான பல் வேறு சமூகத்தொடர்பு சாதனங்களாலும் தமிழின் பாவனையும் புதிய வடிவெடுத்துத் தன் வடிவைக் காலத்திற்கேற்றபடி மாற்றிக் கொள்கிறதோ போன்ற பல கேள்விகளுக்கு பதில் தேடுவது இலகுவான காரியமல்ல.

காலம் காலமாக மக்கள் இடம்பெயர் வதும் தங்கள் மொழியையும் கலாச்சாரத் தையும் தொடர்ந்து வளர்ப்பதும் ஒரு மொழி அதனுடைய பன்முகத்தன்மை வளர்ச்சியைக் காணும் ஒரு பரிமாண மாற்றமாக கருதப்படு கிறது. இலங்கை தமிழர்கள் மிகப்பெரி யளவில் புலம்பெயர்ந்து இருக்கிறார்கள். பலர் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் முன் னேற்றத்திலும் மிகவும் அக்கறையாக இருக்கிறார்கள். அவ்வப்போது ஆங்காங்கே சில மாநாடுகள் தமிழ் மொழிபற்றி நடக் கின்றன. ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் பின்புலமாக இருப்பது அந்த மொழியின் ஆளுமையை உணர்ந்த, அந்த மொழியுடன் தங்கள் ஆக்கங்களை இணைத்துக்கொண்ட, எதிர்காலத்திற்கு எங்கள் மொழியை எப்படி முன்னெடுத்து செல்லலாம் என்ற ஆத்மீக தாகமுள்ள சில புத்திஜீவிகளின் தொடர் முயற்சிகள் மட்டுமல்ல, முன்னேற்றத்து டனும் பிணைப்பதற்கு உதவும் பலகலை களும் ஆய்வுகளும் அரசியலோ அல்லது குழு மனப்பாங்கற்ற மாநாடுகளும் தொடர்ந்து நடைபெறுவது, தமிழ் மொழியின் வளர்ச்சி களை முன்னெடுக்கும் பணிகளாகவிருக்கும். தமிழர்கள் பல நாடுகளுக்கு புலம்பெயர்ந் தாலும் தமிழை வளர்க்கும் உரிய நோக்கு டனான உலகமளாவிய ஒரு ஸ்தாபனம் இன்னும் புலம் பெயர்ந்த மக்களால் உருவாக் கப்படவில்லை.

இன்று இந்தியாவில் அரசகரும மொழி யாகவிருக்கும் இருபத்திரண்டு மொழிகளில் தமிழும் ஒரு மொழியாகும். 2004 ஆண்டு, அன்று இந்திய ஜனாதிபதியாக இருந்த அப்துல்கலாம் என்ற அறிஞராலும், இன்றைய முதல்வராக இருந்த திராவிட முன்னேற்றக் கட்சித்தலைவர் மு.கருணாநிதி யினாலும் தமிழ் ஒரு செம்மொழி என பிரகட னப்படுத்தப்பட்டது. இந்தியாவிலும் இலங் கையிலும் பத்தொன்பது பல்கலைக்கழகங் களில் தமிழ் பீடங்கள் உள்ளன. அத்துடன் உலகின் பல முக்கியமான நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்தி ரேலியா போன்ற நாடுகளின் பல்கலைக் கழகங்களும் தமிழின் முதமைக் கலா சாரத்தை ஆராய்கின்றன. தமிழ் பேசும் மக்கள் இன்று உலகின் பல பகுதிகளிலும் வாழ்கிறார்கள். அத்துடன் தமிழ்நாடு பாண் டிச்சேரி, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அந்தமான் தீவுகளில் தமிழ் உத்தியோக பூர்வ மொழியாக பாவிக்ப்படுகிறது.

தமிழ் மொழி இந்தியாவின் ஆதிக்குடி களான திராவிட மக்கள் பேசிய முக்கிய மொழியாகும் தமிழ் நாடு என்று ஒன்றிருந் தாலும் தமிழர்களுக்கென்றொரு நாடு இல்லாதிருப்பதால், தமிழின் எதிர்காலம் பற்றிய பயம் பல தமிழர்களின் மனதில் ஆழமாக பதிந்து கொண்டு வருகிறது. இன்று உலகில் ஆயிரத்திற்கும் அதிகமான மொழி கள் பேசப்படுகின்றன. பெரும்பாலான மொழிகள் ஆபிரிக்காவின் பல்லின மக் களால் பேசப்பட்டுவருகிறது. மனித இனம் நாகரீகமடைந்து மொழி வளர்ச்சியடைந்த காலத்தில் புழக்கத்திலிருந்த உலகின் நாற் பதுக்கு மேலான ஆதி மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றென்று கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வொன்று குறிப்பிடு கிறது. ஆனால் திராவிட அறிஞர்கள் தமிழ் மொழி புழக்கத்திலிருந்த காலத்தை மிகமிகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையானதாக கருதுகிறார்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த சமஸ்கிருதம், கி.மு 2000ஆண்டு காலகட்டத்தில் இந்து- ஐரோப்பிய மொழிகள் என்ற தொடர்பில் பாரசீக நாடு வழியாக இந்தியாவுக்கு பரவியிருக்கலாம் என்று சொல்லப் படுகிறது.

தமிழ் மொழியின் வளர்ச்சியின் பல பரிணாமங்களை ஆராய்பவர்கள் கி.மு 300 தொடக்கம் கி.பி 700 வரைக்குமுள்ள காலத்தை இலக்கியத் தமிழ்க்காலம் என்றும், கி.பி 700 தொடக்கம் 1600 வரையான காலப் பகுதியை பக்தித் தமிழ் காலகட்டமெனவும், 1600 தொடக்கம் இன்றுவரை வளரும் தமிழ் தூயதமிழ் காலம் எனவும் வரையறுக்கிறார் கள். இக்காலகட்டத்தில் தமிழ், இலக்கிய, படைப்புக்களிலிருந்த சமஸ்கிரு தத்தைக் களையப்பல முயற்சிகள் எடுக்கப் பட்டன.

தமிழ் மொழியின் எதிர்காலம் பற்றிப் பேசும் போது, ஒவ்வொரு வினாடியும் அளவிட முடியாத விதத்தில் வளர்ந்துவரும் தொழில் விஞ்ஞானத்தில் ஆங்கிலம் சீனம், ஜப்பான் போன்ற மொழிகள் முன்னிடம் வகிக்கின்றன. அந்த நோக்கில் பார்க்கும் போது தமிழ் மொழியின் வளர்ச்சியும் முன் னேற்றமும் எப்படியிருக்கும் என்பது தமி ழார்வம் கொண்டவர்களின் கேள்வியாக இருக்கிறது. இன்று பாவனையிலிருக்கும் மொழிகள் பல தடுக்கமுடியாதளவு அழிந்து கொண்டிருக்கின்றன. 28 விகிதமான மொழிகள் கிட்டத்தட்ட நூறு மக்களால் மட்டுமே பேசப்படுகின்றது. சில நாடுகளில் உள்ள சிறுபான்மை மக்களின் மொழிகளை அந்நாட்டினாட்சியில் அமைந்திருக்கும் பெரும்பான்மை அரசுகள் அழிந்து கொண்டு வருகின்றன. ஒரு மொழி வளர அந்த மொழிக்கு உரிமை கொண்டாடும் மக்கள் அதை பேசவேண்டும் படிக்க வேண்டும் பல்கலைகள் மூலமும் பரப்ப வேண்டும்.

தமிழ் ஆதிகாலத்தில் அரசர்களினு தவியுடன் வளர்க்கப்பட்டது. புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடுவதன் மூலம் தமிழை வளர்த்தார்கள். அன்றைய ஆண் பெண் புலவர்களால் எழுதப்பட்ட அகநா னூறு புறநானூறு போன்றவற்றால் அன்றய சமுதாயத்தின் நிலையை இன்றைய மக்கள் அறியும் வழியை தந்திருக்கிறார்கள. திரு வள்ளுவரின் திருக்குறள் அறப்பால், பொருட் பால், காமத்துப்பால் எனும் முப்பகுதிகளை குறள் கலால் தமிழர் கடைப்பிடித்த வாழ்வு நியதியை உலகிற்கு காட்டியிருக்கிறார். தமிழ் நாட்டில் மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட மதங்களான சைவம் வைணவம், சௌத்தம், ஜனனம் என்ற பல மதத்தை சேர்ந்தவர்கள் பாகுபாடற்ற விதத்தில் தமிழை பல விதத் திலும் வளர்த்திருக்கிறார்கள். சித்த வைத்தி யமும் யோகாசனமும், பரதமும் தமிழர் கலை கள் இவற்றை எங்கள் மூதாதையர் அழகிய தமிழில் எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கி றார்கள். எழுத்து, இலக்கணம், இலக்கியம், பக்தி, பரதம், வைத்தியம், தத்துவம் எனும் பற்பல பிரிவுகளாகக்கொண்டது தமிழ் மொழி. ஆனால் இன்று தமிழ் பிறந்த தமிழ்நாட்டில் தமிழுக்கு ஒரு ஆளுமையான இடம் கிடையாது. ஆளம் மொழியாக தமிழ் நாட்டில் இருந்தாலும் பெரும்பாலான தமிழ் மக்களின் கல்வி தொழில் மொழியாக இருப்பது ஆங்கில மொழியாகும். தமிழ் மொழியை தமிழ் மக்களிடம் பரப்பும் முக்கிய பாத்திரம் வகிக்கும் தமிழ் சினிமா தமிழ் மொழியையோ அல்லது உண் மையான தமிழ் கலாசாரத்துவங்களை முன்னெடுக்கப்படுகின்றனவா? அல்லது தமிழ் சினிமா எனும் பெயரில் கிடைக்கும் ஆதாயத்தை முன்னெடுக்கிறதா என்பது ஆராயப்பட வேண்டிய விடையமாகும்.

அண்மைக்காலத்தில் இலங்கையி லிருந்து பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் பெரும்பாலானோர் தமிழை பாவனை மொழியாக பாவித்தாலும் காலக்கிரகத்தில் தமிழின் பாவனை அருகி விடுவது தவிர்க்க முடியாது. இலங்கையில் தமிழ் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தமிழிலேயே கல்வி தொடர்ந்து புகட்டப்பட்டாலும் தேவையான கல்வித் தராதரத்துக்கப்பால் தமிழின் தரம் உயர சமுதாயமும் ஒன்றினைய வேண்டும். பிரமாண்டமான விதத்தில் பரவிவரும் தமிழ் சினிமாவில் ஆதிக்கத்தால் வாய்மொழித்தமிழின் பாவிப்பும் வளர்ச்சியும் அதன் அடிப்படையில் ஆண்டாண்டு காலமாக மக்களால் உருவாக்கப்பட்ட கிராமியக்கவிதைகளும் அருகிக்கொண்டு வருகின்றன. கிராமங்களின் அடிமட்டத்தில் பழையபடி இப்படியான இயற்கையான படைப்புக்கள் வளர தமிழ் ஆர்வலர்கள் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் தமிழின் நிலை என்னவாக இருக்கும் என்ற கேள்விக்குப் பலர் பயப்படுவது போல் தமிழ் அழிந்துவிடப் போவதில்லை என்பது ஒவ்வொருவர் மனதிலும் ஆழமாக பதிந்திருக்க வேண்டும். கடந்த பத்தாயிரம் வருடங்களாக கடற்கோல் தொடக்கம் எத்தனையோ அந்நியரின் தாங்களுக்கு நின்றுபிடித்த தமிழ் இன்று வளரும் புதிய தொழில் விருத்திகளாலோ விஞ்ஞான மாற்றங்களாலோ அழிந்துவிடப் போவதில்லை. ஆனால் மற்ற மொழிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு வளரப் புதியபல முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். என்று தமிழ் பற்றிய புதிய உணர்வு உலகம் பரந்த தமிழர்களிடையே பரந்து காணப்படுகிறது. அந்த உணர்வை ஒரு குறுகிய தேவைகளுக்காக மட்டுமே பாவித்துதேன் மொழியாம் தமிழ் மொழியை தேய்வடையாது நல் நோக்கங்களுடைய பல தமிழ் ஆர்வலர்கள் தமிழ் பற்றிய பெரிய ஆய்வுகளையும் ஆக்கங்களையும் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும் எனும் இலட்சியத்திற்கு உதவுவது எமது ஒவொருவரதும் கடமையாகும்.

**சுவாமி விவேகானந்தர் சிந்தனைத் துளிகள்!**

- மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.
- மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் சமயமும்

**கருணாநிதி ராகுலன்**
பொறியியற்பீடம்

## முன்னுரை

சமயம் என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் தன்மையுடையதாகும். உலகமெல்லாம் ஒரே சமயம் எனும் நிலையில்லாமல் இந்துசமயம், பௌத்த சமயம், சமண சமயம் என பலவாறு உள்ளன. எல்லா சமயத்துக்கும் அடிப்படையானது இறை நம்பிக்கை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்..." எனும் திருமூலரின் கருத்தின் மூலம் "அன்பே சிவம்" (love is god) என்கின்ற தாரக மந்திரமே சைவசமயத்தின் ஆணிவேர். இந்த சமய கொள்கைகள் கோட்பாடுகள் சிந்தனைகள் போன்றவற்றை பரப்பும் மனிதனிடம் செல்லவும் மொழி எனும் கருவி தேவைப்படுகிறது.

ஒரு மொழியை வழப்படுத்தும் திறமை ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மொழிவளம் பெறும் போது சிந்தனையும் அறிவும் வளம் பெறும். பின்னர் அது வலுப்படும். பல்வேறு மொழிகளிருப்பினும் நம் மொழி எந்த வகையில் சைவசமயத்திற்கு தொண்டாற்றியுள்ளது என்பதை மட்டும் ஆய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

## சைவ சமயத்தின் தொண்மை

சமயம் ஒரு தத்துவம், ஒரு மதக் கோட்பாடு, ஒரு வாழ்வியல் நெறி. சமயம் பற்றி காந்தியடிகள் குறிப்பிடுகையில் "சமயமில்லாமல் மனிதன் உயிர்வாழ முடியாது" என உறுதியுடன் மொழிகிறார். அந்த அளவு சமயம் மானுட வாழ்வில் முக்கிய பண்பு வகிக்கிறது. சமயங்கள் இறை நம்பிக்கை அடிப்படையாக கொண்டவையாகும். சமயங்களிடையே சடங்குகள் வழிபாட்டு முறைகள் மாறுபட்டாலும் அடிப்படையில் சமயக்கொள்கை ஒன்றென கருதலாம். உலகில் இன்று கிறிஸ்தவ, இஸ்லாம் சமயத்திற்கு அடுத்ததாக இந்து சமயம் (சனாதன சமயம்) உலகம் முழுவதும் பரவியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம், வைணவம், என இரு பிரிவு களைக் கொண்ட இந்து சமயம் உலகில் தோன்றிய பழமையான சமயமாகும். அதில் குறிப்பாக சைவசமயம் தொன்மை வாய்ந்தது என கூறலாம். சங்க இலக்கியங்களான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு எனும் நூல்களின் கவனைப் பற்றி செய்திகள் பல உள்ளன. புறநானூறு

"பால் புரைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன்"

என சிவபெருமானைப் பற்றி ஔவை யார் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்களில் சிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தில் "பிறவாயாக்கை பெரியோன் கோயிலும்" என சிவபெருமானை பிறவாயாக்கை பெரி யோனாக இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

சைவசமயம் சிவனோடு தொடர்பு டையது. இச்சமயமே உலகில் தோன்றிய முதற் சமயமாகும்.

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளப் சடைமுடி தாமரையாளனே!"

என்ற திருமந்திரத்தின் படி சைவசமயத்தில் முதற் கடவுள் சிவபெருமான் ஆவார்.

"சைவ சமயமே சமயம்" என தொடங்கும் தாயுமானவரின் தமிழ் பாடல் சைவ சம யத்தின் மாண்பை உலகெங்கும் பறை சாற்று வதாக அமைகிறது. "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதில் சார் மொம் தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில்லை" என்று சைவ நாவலர் குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத் தக்கது.

சிந்துவெளி நாகரீக காலத்தின் போதே சிவலிங்க வழிபாடு இருந்தமையை நிரூபிக்க, சிந்துவெளி அகழ்வாராய்களின் போது கிடைத்த பொருட்களில் சிவலிங்கமும் ஒன்றாகும். மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச் சியின் போது பண்டைய கால தமிழ் எழுத் துக்கள் கிடைத்துள்ளன. சிவலிங்க வழிபாடு நம் பாரத நாட்டில் மட்டுமேயன்றி எகிப்து, பாரசீகம், ஆபிரிக்கா, திபெத்து, அமெரிக்கா, சுமாத்ரா, ஜாவா தீவுகள் போன்ற உலகின் பல பகுதிகளிலும் ஒரு கால கட்டத்தில் பரவி இருந்தது என்பதை மேலைநாட்டு வரலாற்று அறிஞர்கள் எச்.எம்வெஸ்ட்ராப், இ.டி. டெய்லர ஆகியோர் தங்கள் நூலில் விளக்கி யுள்ளனர். அதேபோன்று இலங்கைக்கும் சைவ சமயத்திற்கும் மிகநெருங்கிய வர லாற்றுத் தொடர்பு உண்டு. இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன் னேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற சிவால யங்கள் புராதனப் பெருமையையும் சிறப்பும் பெற்றவை. இவற்றுள் இராமேஸ்வரம் தவிர்த்து மற்றைய ஏனைய நான்கும் இலங் கையில் உள்ளன.

தமிழ்க்கடவுளான முருகன் தம் தெய்வம் என்பதற்குக் கீழ்க்கண்ட சங்க நூல்களே சான்றாகும்.

"மணமயில் உயிரின மாறா வென்றிப்
பிணாமுக வூர்தி ஒண்செய் யோனும்"
(புறநானூறு)

"முருகு ஒத்தியே முன்னியது முடிந்தலின்"
(புறநானூறு)

"முருகன் அன்ன சீற்றத்து உருகெழு குரிசுல்"
(பெருநாராற்றும்படை)

முருகப் பெருமானும் தமிழும் வேறில்லை முருகனே தமிழ், தமிழே முருகன்

சங்க காலத்திலே தமிழகத்தில் இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம் போன்ற மூன்று சமயங்கள் தோன்றின. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டம் சைவ சமயத்திற்கு ஓர் இருண்ட காலமென்றே கூறலாம். காரணம் சமண சமயத்தையே களம்பிரர்கள் ஆதரித்து வந்தனர். அதன் பின்னர், சமய குரவர்களின் வருகையால் சைவப்பயிர் செழுமையாக வளர்ந்து பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்கள் போன்ற மன்னர்களால் சைவநெறி சிறப்பாக வளர்க்கப்பட்டது.

ஏழாம் நூற்றாண்டில் சைவநெறிக்கு ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டதென கூறலாம். காரணம் இந்த காலத்தில் தான் இறைவனின் தூதர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நால்வர்கள் தோன்றிக் காலத்திற்கும் அழியாத அரிய செயல்களை செய்தனர். இவர்களால் சைவ சமயம் வளர்ந்தது. தமிழும் வளர்ந்தது. பின்னர் தென்னிந்தியாவில் (கேரளா) தோன்றிய ஆதி சங்கரரால் சைவசமயம் தழைத்தோங்கியது. இந்து மத வழிபாட்டை காணாபத்தியம்(கணபதி வழிபாடு) கேரளம் (சூரிய வழிபாடு), வைணவம் (திருமால் வழிபாடு) சைவம்(சிவன் வழிபாடு) என ஆறு வகையாக பிரித்து சிற்றின்பம் பெற வழி காட்டினர். "ஆறுவகை சமயத்தில் அருந்த வரும்...." என்கிற பெரியபுராணம், மற்றும் "ஆறுவகைச் சமயத்தோர்க்கும் அவ் அவ்வவர் பொருளாய்..." என்கிற சிவஞான சித்தியார் பாடல் மூலம் நாம் அறியலாம். ஆதி சங்கரன் தனது வேதாந்த கொள்கையான அத்வைதத்தை போதித்து அதைத் தொடர்ந்து நிலைநாட்டவும் இந்தியாவில் சிருங்கேரி பூரி, பத்ரி, துவாரகை போன்ற புண்ணிய தலங்களிலே நிருஷ்டங்களை நிறுவினர்.

பின்னர் சைவ சமயம் சற்று நிலை குன்றிய நிலையிலிருந்த போது அருளாளர்கள் தோன்றி ஆதீனங்கள் (சைவத் திருமடம்) மூலம் சமயத்தை காத்தனர். புராணங்கள் பதினெட்டு சித்தர்கள் பதினெண்மார் போன்று சைவ ஆதீனங்கள் பதினெட்டு ஆகும். இவற்றுள் முதலில் தோன்றியது திருவாவடுதுரை ஆதீனமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் இந்துசமயத்திற்கு சுவாமி விவேகானந்தர் மூலம் இளம் இரத்தம் செலுத்தப்பட்டது என கூறலாம்.

சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் திருமந்திரம் பதி, பசு, பாசம் எனும் மூன்றை வலியுறுத்துகிறது.

"பதி பசு எனபகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று ஆணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே"

ஆன்மாவை பசுவாகவும், இறைவனை (சிவன்) பதியாகவும் அவனை அடை வதற்கு பாசத்தை விடுவதும் இந்த தத்துவ விளக்கம் தமிழ் நாட்டில் சைவசமயம் அறு பத்து மூன்று நாயன்மார்களான திருத்தொண்டினால் புத்துயிர் பெற்று விளங்கியது.

## தமிழ் மொழியின் பங்களிப்பு

தகவல் பரிமாற்றத்துக்கு மொழி அவசியம். மனிதன் தோன்றிய காலம் முதலே மொழி எனும் கருவி நடைமுறையிலிருந்தது. மனித உறவுக்கு ஓர் பாலமாக அமைவது மொழியாகும். ஒரு சமூதாயத்தின் கலை கலாச்சாரம், வரலாறு, பண்பாடு, இலக்கியம் போன்ற அனைத்தும் மொழியை சார்ந்தே அமைந்திருக்கிறது. உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை அறிவதற்கு மொழி அவசியம் தேவைப்படுகிறது.

சைவசமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது தமிழ் மொழியும் சமஸ்கிருதமும் ஆகும். தமிழறிஞர் டாக்டர். வா.செ.குழந்தைசாமி இது பற்றி கூறுகையில் "தமிழும் சமஸ்கிருதமும் இந்திய பண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டின் இரு தூண்கள் என தனது ஆழ்ந்த அனுபவத்தின் முதிர்ச்சியால் தெரிவிக் கின்றனர். தமிழும் வடமொழியும் கி.மு 5000 நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை என தமிழ் ஆராய்ச்சி தமிழ் அறிஞர் க.வெள்ளைவார ணனர் தெரிவிக்கின்றார்.

"மன்னுமா மலை மகேந்திர மதனாற்
சொன்ன வாகமந் தோற்று வித்தருளியும்"

எனும் திருவாசக வரிகள் மூலம் தமிழ் மொழி இலக்கணத்தை சிவபெருமான் முதன் முதலில் அகத்திய முனிவருக்கு உபதேசித்தார் என அறியலாம்.

தமிழை போற்றி தமிழ் வழியே சைவ சமயத்தை பரப்பச் செய்த தவச் சான்றோர் களால் செந்தமிழும் வளர்ந்தது, சிவநெறியும் வளர்ந்தது.

திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாஇருபது, உண்மை விளக்கம், சிவப் பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பா, கொடைவெண்பா, கொடிக் கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக் கம், மற்றும் சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்கு சாத்திர நூல்கள் சைவநெறியை உணர்த்தும் நூல்களாகும்.

தமிழைப் போற்றி தமிழ் வழியே சைவ சமயத்தைப் பரப்பச் செய்த தவச் சான்றோர் களால் செந்தமிழும் வளர்ந்து சிவநெறியும் வளர்ந்தது.

## முடிவுரை

இவ்வாறு செம்மொழியாகிய தமிழும் சைவமும் சிறப்புடன் பொலிவு பெற சைவச் சான்றோர்கள் பலர் பாடுபட்டுள்ளனர். தமிழர்கள் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக போற்றிக்காத்து வருகிறார்கள். சனாதன தருமம் எனும் இந்து மதத்தின் உயிர் நாடியாக சைவசமயம் விளங்குவது போலச் சைவ சமயத்தின் உயிர் நாடியாகச் செந்தமிழ் விளங்குகிறது. கிறிஸ்தவர்களுக்கு வைபிள் புனித நூல் (holy book) போல, இஸ்லாமியர் களுக்கு திருக்குர் ஆன் புனித நூல் போல சைவ சமயிகளுக்கு சமய குரவர்கள் அருளிச் செய்த தேவாரம் புனித நூல் என்று கூறலாம்.

"தென் னாட்டுடைய சிவனே போற்றி
எந் நாட்டவருக்கும் இறைவா போற்றி"

- ❖ ஆயிரம் வீண் வார்த்தைகளைவிட பயனுள்ள இதமான ஒரு நல்ல வார்த்தை சிறந்தது.
- ❖ பண்புடனும் மரியாதையுடனும் இருப்பவன் உலகில் எதையும் சாதித்து விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவர் கால பக்தி இயக்கம்

**பு.றெனோஜன்**
பொறியியற்பீடம்
புதுமுகமாணவன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 6- கி.பி9 (875-890) வரையுள்ள காலமே பல்லவர் காலமென அழைக்கப்படுகிறது. இப்பல்லவ மன்னர்கள் காஞ்சியை தலை நகராக கொண்டு தொண்டை நாட்டுடன் தமிழ்நாட்டின் பல பிரதேசங்களை இணைத்து ஆட்சி செய்தவர்களாக விளங்குகின்றனர். கி.பி 575 இல் பல்லவ மன்னனாகிய சிம்ம விஸ்ணு, களப்பிரர், மழவன், சாளுக்கிய மன்னர் பம்பரையினரை எதிர்த்து போரிட்டு அவர்களை தோற்கடித்தமையினால் உருவாக்கப்பட்ட இப்பல்லவரசு இவனுடைய சகோதரனான பீமவர்மனின் வழித் தோன்றல்களான மகேந்திரவர்மன், நந்திவர்மன் முதலான பல அரசர்களால் முன்னெடுத்துச் சென்ற நிலையில் கிபி 800 இல் அபராஜித வர்மனை சோழ அரசனான ஆதித்தன் தோற்கடித்ததோடு பல்லவராட்சி தனது ஆதிக்கத்தினை இழந்து காணப் படுகிறது.

சங்கமருவிய காலத்தின் பிற்பகுதி யிலும் பல்லவர் காலத்தின் ஆரம்பத்திலும் அவைதீக மதங்களான சமண, பௌத்த மதங்களின் வளர்ச்சியினால் இந்து சமயத்தை வளர்க்கும் பொருட்டு கி.பி 5ஆம் நூற் றாண்டு சைவப்பரப்பில் அம்மையாரும் வைஷ்ணவப்பரப்பில் முதலாழ்வார்களான பொய்கையாள்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் ஆகியோர் சைவ வைணவ பக்தியாக்கத்திற்கு வித்திட்டதின் விளைவாக பல்லவர் காலப்பரப்பில் வாழ்ந்த நாயன் மார்கள், ஆழ்வார்கள் தம்முடைய வாழ் வாலும் வாக்காலும் தொண்டினாலும் அருட் திறனாலும் சைவ வைணவ பக்தி இயக்கத்தை உருவாக்கி மக்கள் மனதில் சைவ வைணவ சமயங்களின் சிறப்பினை உணரச் செய்தனர். அது மட்டுமன்றி முன்னைய காலங்களை விட அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியினால் பல்லவர் காலம் தனக்கொரு தனித்துவமான இடத்தை பெற்று விளங்குவதை காணமுடிகிறது. இக்காலத்தினை அறிந்து கொள்ள அக் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்கள், அழிந்தும் அழியாத கட்டடங்கள், மெய்கீர்த்திகள் போன்றன சான்றாக அமைகிறது. தமிழ் நாட்டின் இயக்கம் தோன்றி வளர்த்த வகை யினை விளக்க தென்னிந்திய தமிழிலக்கிய வரலாற்றில் முதல் பக்தி இயக்க காலமாக விளங்குவது பல்லவர் காலமாகும். கி.பி6ம் நூற்றாண்டில் ஆரம்பித்த இன்பக்தி இயக்கம் கி.பி 9ஆம் நூற்றாண்டு வரை நிலைத் திருந்தது. அறத்தின் ஒழுக்கத்தை முதல் நிலைப்படுத்தி உலகியல் வாழ்க்கையில் அவ நம்பிக்கையை ஏற்படுத்திய சமண, பௌத்த சமயங்கள் உலகியல் வாழ்க்கையின் அவநம் பிக்கையை ஏற்படுத்திய சமண பௌத்த சமயங்கள் அரசியல் ரீதியில் ஆதிக்கம் பெற் றிருந்த ஒரு சூழ்நிலையில் பக்தியையும் இறை யுணர்வையும் முன்வைத்து சமுதாயம் நல்ல நிலையில் வரமுடியும் எனும் நம்பிக்கையை ஏற்படுத்தி மக்களுடைய ஆதரவுடன் இயக்க ரீதியில் இந்துமதம் மக்களை ஒன்றி ணைத்து இந்து சமய வளர்ச்சிக்கு பல்வேறு தன்மை களில் பணியாற்றியது. இப்பக்தி இயக்கத்தின் விளைவாக சமுதாயம் புதிய தொரு மாற்றத் திற்குட்பட்டது.

இந்து மதத்தின் இரு கிளைகளான சைவமும் வைணவமும் சமண பௌத்த மதங்களின் ஆதிக்கத்தினை இழக்கச் செய்யும் நேர்கோடு உருவான இப்பக்தி இயக்கத்தில் உருவவழிபாடு இயற்கையில் இறைவனை காணுதல், வேதக்கருத்துகளை தமிழில் கூறுதல், உறவு முறைகளில் இறைவனை அணுகுதல், சமத்துவம் போன்ற பல்வேறு பட்ட முறைகளை கையாண்டு தமது பக்தி இயக்கத்தினை நடாத்தி சென்றனர். கலைகள் தெய்வீகத்துடன் இணைக்கப்பட்டிருந்து.

இப்பக்தி இயக்கத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஊர்கள் தோறும் சென்று கிடைத்த பக்தி அனுபவங்களை, பக்திப் பாசுரங்களை வெளிப்படுத்தினர். பொது வாக நாயன்மார்கள் ஆற்றிய பணி சிறப்புக் குரியதாகும். சம்பந்தர், அப்பர், இப்பக்தி இயக்கத்திற்கு தலைமை தாங்கி வழிநடாத் தினர் அத்துடன் பல சிவனடியார்களை இணைத்துக்கொண்டு தமிழ் நாட்டில் உள்ள பிரதேசங்கள் தோறும் சென்றமையால் பக்தி இயக்க வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.

பக்தி இயக்கத்தில் அடியார்கள் மத் தியிலே சமூகசமரசம் பேணப்பட்டது. "ஆவுரித்து திண்றுழலும் புலையரேனும்" கடவுள் நிலையை எய்தலாம் என்பது பக்தி யியக்கத்தில் அடிப்படை அம்சமாக காணப் பட்டது. கண்ணப்பர், திருநாளைப் போவார் போன்றோரின் வரலாறுகள் இச்சமூக சமத்து வத்தினை புலப்படுத்துகின்றன. சாதியேற் றத்தாழ்வினை கட்டி நின்ற வருண கோட் பாடு இல்லாது "தொண்டர் குலமே தொழு குலம்" எனும் கோட்பாடு நிலவியது.

இந்து சமயத்தின் பிரமாண நூலாக விளங்குகின்ற வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பவற்றின் கருத்துகளை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தூய செந் தமிழில் சாதாரண மக்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடியதாக இசை கலந்த பக்தி யினை எடுத்துக்கூறி பாடினார். இதன் கார ணமாக ஆழ்வார்கள் பாசுரங்களை வைணவத் தமிழ் வேதங்கள் என அழைத்ததுடன் சம்பந்தர் முதலானவர்களின் தேவாரங்களை தமிழ் வேதம் என அழைப்பர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திப் பாடலை பாடும் போது அவற்றை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட சூழ் நிலையிலிருந்து பாடாமற் பல்வேறு இடங்களிற் பல்வேறு சூழ்நிலைகளில் பாடி யுள்ளனர். சிறப்பாக நாயன்மார்களுள் சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தர், அப்பர், சுந்ததரர் போன்றோர் தமிழ் நாட்டிலுள்ள ஊர்கள் தோறும் சென்று அவர்கள் இறைவன் கோயில் கொண்டதாக புராணங்களில் கூறப்பட்ட இடத்தை இயற்கை சூழ்நிலையோடு பொருந்தி மூர்த்தி, தல, தீர்த்தம் முதலான பல விடையங் களை எடுத்துக்கூறி பாடல்களை பாடியுள்ளனர். இதன் மூலம் மக்கள் மத்தியில் பக்தியினை கொண்டு சென்றனர்.

நாயன்மார்களின் பதிகங்களிலும் ஆழ் வார்களின் திவ்ய பிரபந்தங்களிலும் சிறப்பாக காணப்படுவது இசையோடு கலந்துபாடுவ தாகும். பக்திப்பாடல்களுக்கு இவ்விசை இன் றியமையாததாக காணப்படுகிறது. மக்களை இறைவனிடம் திசை திருப்புவதற்கு இசை அவசியமாக விளங்கியது. இதனை பதிக பிபந்தங்களில் காணமுடிகிறது. இசை மட்டு மன்றி சிற்பம், நடனம், ஓவியம் முதலா னவை பக்தி இயக்கத்தின் ஒரு அம்சமாக காணப் பட்டிருந்தது. சமண பௌத்த சந்நியாசிகள் கலைகளை புறக்கணிக்காது அக் கலைகளை பக்தி இயக்கத்தோடு இணைத்து புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

பக்தி இயக்கத்தில் இறையடியார்களை வழிபடுகின்ற முறைமையும் காணப்பட்டது. சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் அப் பூதியடிகளின் தொண்டரடிப் பொடியாள் வாரின் பாடல்களும் அடியார் வழிபாட்டு சிறப்பினை உணர்த்துகிறது. இதன் விளை வாக அடியார் வரலாறு கூறும் நூல்கள் தோன்றிய காலமாகும். இறைவனை அடைய பல்வேறு உறவுமுறைகளை காட்டி அதன் வாயிலாக வாழ்ந்து பக்தி இயக்கத்தினை நாயன்மார்களும், ஆழ்வார்களும் வளப்ப டுத்தினர். சம்பந்தர் குழந்தை எனும் உணர் வோடும் அப்பர் அடிமை எனும் உணர் வோடும் பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார் வாத்ஸ்ய எனும் உணர்வோடும் மாணிக்க வாசகர் ஆண்டாள் காதல் எனும் உணர் வோடும் பக்தியை வெளிப்படுத்தினர்.

பக்தி இயக்கத்தில் மற்றொரு பண்பாக சமயக் கண்டனம் காணப்பட்டிருந்தது. சமண, பௌத்த சமயங்களில் செல்வாக்கை வலு விளக்கச் செய்வதற்கு இம்முறை அவசிய மாக காணப்பட்டது. சமண பௌத்த சம யங்கள் இந்து மதத்திற்கு எதிராக மேற் கொண்ட அடக்க முறைகளே இதற்கு கார ணமாக அமைந்தது. சமணர்களின் ஏவலின் படி மகேந்திரவர்மன் அப்பர் மீ கையாண்ட தண்டனை முறையும் பாண்டிய நாட்டில் சம் பந்தர் அழிவதற்கு சமணர்கள் செய்த தந்திரங் களும் அக்காலத்தில் பழிவாங்கும் உணர்வை ஏற்படுத்தியது எனலாம். சமண பௌத்தரை சம்பந்தர் கண்டனம் செய்ததையும் இழிவு படுத்த முயன்றமையையும் காணமுடிகிறது. ஆரம்ப காலத்தில் சமண சமயத்தை தழுவி யிருந்து அப்பர் சுவாமிகள் தாம் பெற்ற வாழ்க்கை பற்றிய விடயங்களை தாம் சைவ சமயத்தை சார்ந்த பின் இந்துமத வாழ்வின் நெறியுடன் இணைந்தவராக காணப்படு கின்றார்.

பக்தியியக்கத்தின் தொடக்கப் பகு தியில் பல சமயங்களுக்கு எதிராக ஒருங்கி ணைத்து போராடிய சைவமும் வைணவமும் தமக்குள் கருத்தொற்றுமை கொண்டிருந்த போதும் தமது சிறப்புக்களை பேணிக் கொள்வதிலும் மிகுந்த கவனம் செலுத்தினர். சிவனையும் விஷ்ணுவையும் ஒரே வடிவத்தில் சங்கரநாரா ஜணனாகக் காணும் மன அமைதி நிலவிய போதும் நாயன்மார்கள் சிவனை உயர்த்தி விஷ்ணுவை தாழ்ந்ததாகவும் ஆழ்வார்கள் விஷ்ணுவை உயரத்தி சிவனை தாழ்த்தவும் முயல் வதை பக்தி பாசுரங்கள் தெளிவாக உணர்த்து கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாள 3 நூற்றாண்டிற்கு மேலாக தமிழகத்தில் வரைந்த இப்பக்தி இயக்கத்தின் தொடக்கத்தில் இறை பெருமை உணர்த்தும் பிரச்சார நோக்கம் முதன்மை பெற்றிருந்தது. இதனால் பல சமய கண்டனங்களும் தவிர்க்க முடியாததாயிற்று. பக்தி இயக்கம் சிறப்பாக வளர்ந்த நிலையில் பல சமய எதிர்ப்பும் இறை பெருமையை பிரச்சாரம் செய்யும் தேவையும் குறைவதனை காணலாம். அக இருளை அகற்றும் வகையில் அனுபவ முதிர்ச்சியினை வெளிப்படுத்தும் வகையில் மாணிக்க வாசகர், நம்மாழ்வாரது பாசுரங்கள் அமை கின்றது. தமிழ் பக்தி இயக்கத்தின் பயனாக பழுத்த "மாணிக்கவாசகக் கனி" தமிழைப் "பக்தியின் மொழி" ஆக்கிய பெருமைக்குரிய தாகும்.

பக்தி இயக்கத்தின் மற்றொரு விளை வுகளில் குறிப்பிடத்தக்கது ஆலயத்தோடு இணைந்த வாழ்க்கை முறை காணப்பட்டது. பக்தி இயக்கத்தால் பரப்பப்பட்ட ஆலய வழிபாட்டு மரபு தமிழ் நாட்டு ஆலயங்களை சுருக்கி சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிறுவ னங்களாக மாற்றின. உணர்ச்சியின் மொழி யில் ஊற்றெடுத்து பக்தி அறிவு சார்ந்த தத்து வமாக உருவாகி வளர்வதற்கான அடிப்ப டையா அமைந்தது இப்பக்தி இலக்கியமே எனலாம். பின்னய காலத்தில் வட இந்தியா விலும் பக்தி இயக்கம் உருவாக தமிழ் நாட்டின் பக்தி இயக்கமே அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்து சமயத்தில் மற்றுமொரு அம் சமாக குணங்குறிகளை கடந்து பரம் பொருளுக்கு உருவம் கற்பித்து வழிபடும் முறையாகும். இவ்வாறு உருவம் கற்பிக்கும் முறை சாதாரண மனநிலையில் உள்ளவர் கட்கு இறைவனை பற்றி சிந்திப்பதற்கு ஓர் வாய்ப் பாக அமைந்துள்து. நாயன்மார்கள், ஆழ் வார்கள் பாடல்களில் வேத, புராண அடிப் படைகளைத் தழுவி சிவனதும் விஷ்ணு வினதும் தோற்ற பொலிவுகள் ஆலயங்க ளினூடாக மேற்கொண்டனர்.

**சுவாமி விவேகானந்தர் சிந்தனைத் துளிகள்!**

- மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.
- மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

**ரா.திக்ஷிகா**
புதுமுக மாணவி

தமிழ் மொழியானது தமிழர்களி னதும் தமிழ் பேசும் பலரதும் தாய் மொழி யாகும். செம்மொழியான தமிழ் மொழி யானது திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மை யான மொழிகளில் ஒன்றாகும். பல்வேறு நாடுகளில் தாய் மொழியாகவும் சிறிதள விலும் பேசப்பட்டு வருகிறது. ஒரு மொழியை தாய் மொழியாக கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்ப டையில் 18 ஆவது இடத்திலிருக்கும் தமிழ் மொழியானது உலகம் முழுவதும் என்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப் பட்டு வருகிறது.

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டு களுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபை கொண்டுள்ள தமிழ் மொழி தற்போது வழக்கிலிருக்கும் ஒரு சில செம் மொழிகளில் ஒன்றாகும். திராவிட மொழிக் குடும்பத்தின் பொதுக் குணத்தினால் ஒலி மற்றும் சொல்ல மைப்புக்களில் சிறிய மாற்றங்களே ஏற்பட் டுள்ளதாலும் மேலும் கவனமாகப் பழைய அமைப்புக்களை காக்கும் மரபினாலும் பழங் கால இலக்கிய நடை கூட மக்களால் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளது. எடுத்துக் காட்டாக பள்ளிக் குழந்தைகள் சிறு வயதில் கற்கும் அகர வரிசையான ஆத்திசூடி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. திருக்குறள் ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் இயற்றப் பட்டது.

தமிழ் இந்தியாவில் பேசப்படும் மொழி களில் மிக நீண்ட இலக்கிய இலக்கண மரபு களைக் கொண்டது. தமிழ் இலக்கியங்களில் சில 2500 ஆண்டுகளுக்கு மேல் பழமை யானவை. கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ் ஆக்கங்கள் கி.மு 400ஆம் ஆண்டை சேர்ந்த பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டவை யாகும். இந்தியாவில் கிடைத்துள்ள ஏறத் தாள 100, 000 கல்வெட்டுக்கள் 60,000இற்கும் அதிகமான தொல் எழுத்துப்பதிவுகள் தமிழ கத்தில் கண்டெடுக்கப்பட்டவையாகும். இவற்றுள் அதிகளவானவை தமிழ் மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலேயே எழுதப்பட்டுள்ளன. பனையோலைகளில் எழுதப்பட்டு திரும்ப திரும்பபடியெடுப்பதன் மூலம் அல்லது வாய் மொழி மூலம் வழிவழியாக பாதுகாக்கபட்டு வந்ததால் மிக பழைய ஆக்கங்களின் காலங்களை கணிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

எனினும் மொழியியல் உட்சான்றுகள், மிகப்பழைய ஆக்கங்கள் கி.மு 4 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டு இருக்கலாம் என காட்டுகிறது. இன்று கிடைக்கக்கூடிய மிகப்பழைய ஆக்கம் தொல்காப்பியம் ஆகும். இது பண்டைய காலத் தமிழின் இலக்கணத்தை விளக்கும் ஓர் நூலாகும் இதன் சில பகுதிகள் கி.மு 400 ஆம் ஆண்டு காலத்தில் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. 2005 ஆம் ஆண்டு அகழ்ந்தெடுக்கப்பட்ட சான்றுகள் தமிழ் எழுத்து மொழியே கி.மு 600 ஆம் ஆண்டிற்கு முன் தள்ளியுள்ளன. பண்டைத் தமிழில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க காப்பியம் கி.மு 200 முதல் கி.பி 200 காலப்பகுதியை சேர்ந்த சிலப்பதிகாரம் ஆகும்.

தமிழ் அறிஞர்களும் மொழியியலாளர்களும், தமிழ் இலக்கியத்தினதும் தமிழ் மொழியினதும் வரலாற்றை ஐந்து காலப் பகுதிகளாக வகைப்படுத்தியுள்ளனர்.

1. சங்ககாலம் (கி.மு400-கி.பி300)
2. சங்கம் மருவிய காலம் (கி.பி300-கி.பி700)
3. பக்தி இலக்கிய காலம் (கி.பி700-கி.பி1200)
4. மையக்காலம் (கி.பி1200-கி.பி1800)
5. தற்காலம்(கி.பி1800-இன்றுவரை)

பக்தி இலக்கிய காலத்திலும் மையக் காலத்திலும் பெருமளவு வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. பிற்காலத்தில் பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகளார் முதலான தூய்மைவாதிகள் இவற்றை தமிழில் இருந்து நீக்க உழைத்தனர். இவ்வியக்கம் "தனித்தமிழ்" இயக்கம் என அழைக்கப்பட்டது. இதன் விளைவாக முறையான ஆவணங்களிலும், மேடைப்பேச்சுகளிலும், அறிவியல் எழுத்துக்களிலும் வட மொழி கலப்பில்லாத தமிழ் பயன்பட வழியேற்பட்டது. கி.பி 800 க்கும் 1000த்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மலையாளம் ஒரு தனி மொழியாக உருவானதாக நம்பப்படுகிறது.

## தமிழ் எனும் சொற்பிறப்பு

சௌவரத்து என்பவர் தமிழ் என்பதன் ஆறு தம்-மில் என்று பிரித்து காட்டி "தமது மொழி" என்று பொருள்படும் என்று தெரிவிக்கிறார். காமெல் சுவெலிப் என்ற செக்கு மொழியியலாளர் தம்-இல் என்பது "தன்னிலிருந்து மலர்ந்துவரும் ஒலி" என்று பொருள் தரவல்லது என்றார். மேலும் இவர் தகுந்த கிளவியாக்கம் நடைபெற்றிருக்கலாம் என்றும் அதனால் இது "சரியான (தகுந்த) பேச்சு முறை" எனும் பொருளில் இருந்து தொடங்கி இருக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.

தமிழ், தென்னிந்தியா மானிலமான தமிழ் நாட்டின் பெரும் பான்மையினரதும் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் வாழும் மக்களதும் முதன் மொழியாகும். தமிழ் மேற்படி நாடுகளின் பிற பகுதிகளிலும் குறிப்பாக இந்திய மாநிலங்களான கேரளம், கர்நாடகம் மற்றும் மகாராட்டினத்திலும் இலங்கையில் வட பகுதி மற்றும் முஸ்லீம்கள் வாழும் பகுதியிலும் வழங்கி வருகிறது.

தமிழ் மக்கள் 19 நூற்றாண்டிலும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒப்பந்த கூலிகளாகவும், கீழ் நிலை அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்களாகவும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து பிரித்தானிய பேரரசின் பல பகுதிகட்கும் அனுப்பப்பட்டனர். அவ்வாறு அவர்கள் சென்ற இடங்களில் தமிழ் பேசும் சமுதாயங்கள் உருவாகின. இவர்களின் வழிவந்தவர்கள் இன்று சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ் பொன்ற நாடுகளில் குறிப்பிடத்தக்க குடித் தொகை கொண்டவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். தென்னாபிரிக்கா, கஜானா, பிஜி, சுரீனா மற்றும் ட்ரினுடாட், டொபாகோ போன்ற நாடுகளிலும் பலர் பூர்வீக தமிழர்களாக இருந்தும் அந்நாடுகளில் அவர்கள் தமிழ் மொழியை பேசுவதில்லை.

மிக அண்மைக்காலங்களில் பெரும்பாலும் இலங்கையின் இன முரண்பாடுகள் காரனமாக இங்கிருந்து இடம் பெயர்ந்தவர்களும் ஓரளவு பொருளாதார காரணங்களுக்காக இடம் பெயர்ந்தவர்களுமாக பல தமிழர்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

## பேச்சுத்தமிழ்– உரைநடை தமிழ் வேறுபாடுகள்.

தமிழ் அதன் பல்வேறுபட்ட வட்டார வழக்குகளுக்கு மேலதிகமாக இலக்கியங்களில் பயன்படும் முறையான செந்தமிழ்ற்கும், கொடுந்தமிழ் என வழங்கப்படும் பேச்சுத்தமிழுக்கும் இடையே தெளிவான இரு வடிவத்தன்மை காணப்படுகிறது. இங்கே கொடுந்தமிழ் என்பது அனைத்து வட்டார பேச்சு தமிழ் வழக்குகளையும் பொதுவாக குறிக்கும் ஒரு சொற் பயன்பாடு ஆகும். இந்த இருவடிவதன்மை பண்டைக் காலம் முதலே தமிழில் இருந்து வருவதை கோவில் கல் வெட்டுக்களில் காணப்படும் தமிழ் சமண இலக்கிய தமிழினின்றும் குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்டு காணப் படுவதனின்றும் அறிந்து கொள்ள முடியும் இவ்வாறு செந்தமிழ் எந்த வட்டார மொழி வழக்கையும் சாராது இருப்பதனால் எழுத்து தமிழ், தமிழ் வழங்கும் பல்வேறு பகுதி களிலும் ஒன்றாக இருப்பதனை காணலாம். தற்காலத்தில் எழுதுவதற்கும் மேடைப் பேச்சுக்களிலும் செந்தமிழே பொதுவாகப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக செந் தமிழ் பாடநூல்களுக்குரிய மொழியாகவும் பெருமளவு இலக்கிய மொழியாகவும் மேடைப் பேச்சுக்களுக்கும் விவாதங்களுக்கும் உரிய மொழியாகவும் விளங்கி வருகிறது. அண்மை காலங்களில் மரபு வழியில் செந்தமிழுக்குரிய துறைகளாக இருந்து வந்த பகுதிகளிலும் கொடுந்தமிழ் பயன்பாடு அதிகரித்து வருவதை காண முடிகிறது. பெரும்பாலான தற்கால திரைப் படங்கள், மேடை நாடகம் மற்றும் தொலை காட்சி நாடகம் முதலியவற்றில் இடம் பெறும் மக்களுக்கான பொழுது போக்கு அம்சங்கள் பலவற்றிலும் கொடுந்தமிழ் பயன் படுவதைக் காணலாம். பல அரசியல் வாதிகளும் மக்களும் தமது உரையாடல்களில் கொடுந்தமிழையே பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் சொல்லும் பொருளும்

நித்தியானந்தன் நிகேதன்
பொறியியற்பீடம்

பேச்சு மொழி ஊருக்கு ஊர் ஈரியல் புகளில் சிறப்பாக வேறுபடுகிறது எனலாம். முதலாவதாக ஒரு குறிப்பிட்ட பொருளினை பயன்படுத்த ஒரிடத்தில் வாழ்வோர் வழங்கும் சொல்லினை வேறிடத்தில் வாழ் வோர் பெரும்பாலும வழங்குவதில்லை. எடுத்துக்காட்டாக "கேழ்வரகு" என தென்னார் நாட்டில் வழங்கும் பொருளைச் சேலத்தில் (ஆரியம்) என்றும், பாண்டி நாட்டில் (கேப்பை) என்றும், திருச்சிராப் பள்ளியில் (ராகி) என்றும், சிந்தூரில் (கேவுரு) என்றும், யாழ்ப்பாணத்தில் (குரக்கன்) என வழங்குகின்றனர் என திரு இலக்குமணன் செட்டியார் "வளரும் தமிழ்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே இடத்திற்கு இடம் சொல், வழக்கு வேறுபடுத்துவதற்கு பிற மொழிகளின் செல்வாக்கு காரணம் எனலாம். யாழ்ப்பாணத்தில் கேழ் வரகு எனும் தமிழ் சொல்லை புறக்கணித்து குரக்கன் எனும் சிங்கள சொல்லை வளங் குவது இவ்வுண்மையை விளக்கும். இரண்டா வதாக இவ்விடத்தில் வாழ்வோர் பெரும் பாலும் வளங்குவதில்லை. இரு திறத்தாரும் அச்சொல்லை வெவ்வேறு பொருளில் வளங்குவர். தென்னிந்தியாவில் "தவறி விட்டார்" என்றால் இறந்துவிட்டார் என பொருள் வளங்குவர். யாழ்ப்பாணத்தில் பிழை செய்துவிட்டார் என பொருள் கொள் வார்கள். "வழுவ விடுதல்" எனும் பொரு ளிலும் இச்சொல்லை வழங்குவர்.

## பொருள் மாற்றம்

சொற்களின் பொருள் காலத்திற்கு காலம் மாறுகின்றது. ஒரு சொல் குறிப்பிட்ட ஒரு காலத்தில் உணர்த்திய பொருளினை காலப் போக்கில் இழந்து புதுப்பொருளினை உணர்த்துவதும் உண்டு. இலக்கிய வளத் தினை விட பேச்சு வழக்கிலே சொற்கள் அதிக பொருள் மாற்றத்தினை அடைகின்றன. ஒவ்வொரு காலப் பொழுதிலும் வாழும் மக் களின் வாழ்க்கை முறைக்கும் தேவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றவாறு சொற்களின் பொருள்கள் குன்றியும், திரிந்தும், விரிந்தும் விளங்கும். சொற்களில் பல அவற்றிற்குரிய பழைய பொருள்களுடன் புதிய பொருட்களையும் உணர்த்துகின்றன. சில சொற்கள் முற்றாகவே வளக்கறுகின்றன. சொற்பொருள் வேறுபாட்டினை ஆராயும் கலை ஆங்கிலத்தில் (semosiology) என வழங்குகிறது. ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளில் சொற்களின் வரலாற்றினையும் இலக்கியம், சாசனம் முதலிய சான்றுகளாலும் பிறவாற்றாலும் நிறுவும் அகராதிகள் உள்ளன. ஆனால் தமிழிலே பிழைகள் பல நிறைந்து காணப்படும் சென்னை பல்கலைக்கழக அகராதியை தவிர வேறு அறிவியற் கண் கொண்டு எழுதிய வரலாற்று அதிகாரிகள் (Historical Dictionary) இல்லை. யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் சொற்கள் உணர்த்தும் புதுப் பொருளினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

"உடைமை" எனும் தமிழ் சொல் பேச்சு வழக்கில் உடமை என ஒலிக்கப்படுகிறது அதற்கு உடமைத் தன்மை, உடமைப் பொருள், செல்வம் என்பன பொருள்கள். யாழ்ப்பாணத்தவரின் செல்வத்தில் சிறந்தது நகை ஆகையால் அதனை உடமை என்பர். செல்வத்தை அல்லது உடமைப் பொருளை பொதுப்படக் குறிககும் தன்மையை இழந்து குறுகுவதை மொழிவல்லுநர் (Restriction) என்பர்.

விடுதலை எனும் சொல் ஓய்வு சுதந்திரம் பந்த நீக்கம் எனும் பொருள்களை வளங்கும். யாழ்ப்பாணத் தமிழில் அது ஓய்வுக்கு உகந்த விடுமுறை நாட்களை குறிக்கும் ஒரு பொருளின் மதிப்பு அல்லது கிரயத் தொகையினை நாம் "விலை" என்கிறோம். ஆனால் "இப்ப எல்லா சாமானும் விலை" என்ற வழக்கில் எனும் சொல் அதிக விலை எனும் பொருளை உணர்த்துகிறது. "ஒறுப்பு" எனும் சொல் "தண்டனை, கடிந்து பேசுகை, வெறுப்பு, அடக்குகை, குறைவு" எனும் பொருட்களை உணர்த்தும். "இப்ப எல்லா சாமானும் ஒறுப்பு" எனும் போது இச் சொல்லை "அதிக விலை" எனும் பொருளில் வழங்குகின்றோம். அருமைப்பாடுள்ள பொருட்கள் அவ் அருமைப்பாடு காரணமாக அதிக விலை கொடுத்து மக்களால் வாங்கபடுகின்றன். இதனால் அருமைப்பாட்டினை உணர்த்திய "ஒறுப்பு" எனும் சொல் நாளடைவில் அதிக விலை எனும் பொருளில் வழங்கலாயிற்று.

## வழக்கிழந்த சொல்

வேண்டுதல் எனும் தொழிற்பெயர் விரும்புதல், வழிபடுதல், இன்றியமையாத தாதல் முதலியவற்றை புலப்படுத்தும். இன்று யாழ்ப்பாண வழக்கில் இச் சொல் "விலைக்கு வாங்குதல் எனும் பொருளிலேயே" வழங்கப்படுகிறது.

தென்னிந்திய தமிழ் பேச்சில் வழக்கிழந்து விட்ட சொற்களில் பல யாழ்ப்பாண தமிழில் வழங்குவது குறிப்பிடத்தக்கது. வடிவு எனும் சொல் அழகு எனும் பொருளை உணர்ததியதை "வடிவுடைய மலைமகள்" போன்ற தேவார வழக்குகளால் அறியலாம். தென்கை வழக்கில் வடிவு எனும் சொல் இப்பொருளை இன்று உணர்த்த வழங்கப்படுவதில்லை யாழ்ப்பாணத்தில் இன்னும் இச்சொல் அழகு எனும் பொருளில் வழங்கப்படுகிறது. விடுதல் எனும் சொல் நீங்குதல், பிரிதல், அனுமதி தருதல், கட்டு அவிழ்தல் முதலிய பொருள்களில் வழங்கும். அவற்றுடன் "செலுத்துதல்" எனும் பொருளில் வழங்குவதை "எம்மரபு கடி விடுதும்" (புறம் ஒன்பது) போன்ற இலக்கிய வழக்குகளால் அறிகிறோம். தென்னகத்தார் இச்சொல்லைச் "செலுத்துதல்" எனும் பொருளில் வழங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதில்லை. யாழ்ப்பாணத்தவர் கார்விடுதல், வண்டி விடுதல் எனும் வழக்குகளில் "செலுத்துதல்" எனும் பொருளில் இச் சொல்லை இற்றை வரையும் வழங்குகின்றனர்.

"ஒடிய" எனும் தொழிற் பெயர் "முறிகை" என பொருள்படும் யாழ்ப்பாணத்தில் இது எடுத்துக்காயவைத்த பனங்கிழங்கினை குறிக்கும். "ஒடியல் பிட்டு, ஒடியல் மா" முதலிய வழக்குகளை நோக்குக.

வெற்றிலை, புகையிலை போன்ற பொருட்களின் பயனற்ற பகுதியினை நீக்கி விடுகிறோம். பயனற்ற பகுதி "உதவாக்கரை" என வழங்கியது காலப்போக்கில் உதவாக் கரை எனும் வழக்கு பயனற்ற மனிதரை குறிக்க நேர்ந்தது. "முத்து" என்பது நாதஸ் வரத்துக்குச் சுருதியூட்டும் ஊதுகுழலாகும் இக்கருவியை வாசித்தலே "ஒத்தூதுதல்" என்பர். நாதஸ்வரக்காரனின் இசைக்கமைய ஒத்தூதுதல் வேண்டும். இன்று ஒருவரின் மனம் போன போக்குக்கெல்லாம் இன் னோருவர் நடப்பதை ஒத்து ஊதுதல் என்கி றோம். "தாழம் போடுதல்" எனும் தமிழ் மரபுத்தொடரும் (blow in harnany) எனும் ஆங்கில மரபுத்தொடரும் இப்பொருளில் வழங்கும்.

தொட்டாச்சிணுங்கி எனும் பெயர் ஒரு வகை செடியினை குறிக்கும். அது மக்களால் தொடப்படின் வாடி சுருங்கும் எதனையும் துன்புறுத்த முன்னே அழுது வருந்தி பிறருள் ளத்தை இரங்க வைப்பதை "தொட்டாற் சிணுங்கி" என்கிறோம் சிணுங்கற்பேர்வழி என்றும் இவரை குறிப்பதுண்டு. தனித்தவில் என்பது தனியே ஒருவர் தவில் எனும் இசைக் கருவியை வாசிப்பதை குறிக்கும் காலப் போக்கில் தொடர் பிறருதவி இன்று வாழும் ஒருவரை குறித்து வழங்க நேர்ந்தது. மரக்கணு போன்று பயனற்ற ஒருவனையும் "மொக்கு அல்லது மொக்கன்" என்கிறோம். இவ்வாறு சொற்கள் பொருளில் விரிவடைவதைச் சொற் பொருளியல் ஆராய்ச்சியாளர். (Expansion) என்பர்.

வடமொழி போர்த்துக்கேய மொழி, அரபு மொழி போன்ற சொற்களில் பல தமிழில் பல புதுப் பொருட்களை வளங்குகின்றன. "மச்சம்" எனும் சொல் வட மொழியில் மீனைக் குறிக்கும். யாழ்ப்பா ணத்தமிழில் இச்சொல் மீன், இறச்சி, இறால், நண்டு முதலியவற்றை பொதுப்பட குறிக்கும். நாங்கள் மச்சம் சாப்பிடுவதில்லை எனும் கூற்றுகளை நோக்குக. "கறிக்காரி" (கரிக்காறி) என்று உச்ச ிக்கப்படுகிறது. எனும் சொல் "கறி" எனும் தமிழ் சொல்லையும் "கார" எனும் வடமொழி ஈற்றினையும் இகரத் தையும் கொண்டுள்ளது. அச் சொல்பல்வகை கறிக்கும் உரிய பொருள்களை விற்கும் பெண்ணைக் குறிக்கும். யாழ்ப்பாணத்திலோ மீன், இறால் அசைவ உணவிற்கு உரிய பொருட்களை விற்பவளே இச்சொல் குறிக்கிறது. மரக்கறி வகைகளை விற்பனை நாம் காய்பிஞ்சுக்காரி என்கிறோம்.

## பிற மொழிச் சொல்

'மோசம்' எனும் சொல் வடமொழியில் வஞ்சனை, அபாயம், களவு, பிசகு என்றே பொருள்படும். நான் மோசம் போனேன் எனும் யாழ்ப்பாண வழக்கில் இப்பொருள் களில் சில வழங்குவதை காணலாம். ஆனால் ஒருவர் மோசம் போட்டார், என்றால் 'இறந்துவிட்டார்' என்று புதுப்பொருள் கொள்கிறோம். 'கலாதி' எனும் சொல் வட மொழியில் 'கலகம்' என பொருள் உணர் த்தும். யாழ்ப்பாணத்தில் இப்பொருளில் இச் சொல்லை வழங்குவதுடன் சிறப்பு, கவர்ச்சி, எனும் பொருள்களிலும் இதனை வழங்கு கிறார்கள். அது என்ன கலாதியாய் உடுத்துக் கொண்டு போனான் போன்ற வாரத்தைகளை நாம் நாள்தோறும் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டை" எனும் சொல் பிராகிருத மொழியி லிருந்து தமிழுக்கு வந்த சொல்லாகும். அது விறகு, குற்றி, உடல், பிரேதம், குறைவு முதலிய பொருள்களை குறிக்கும். சில நூற் றாண்டுகளுக்கு முன் தெருக்களை அளந்து கற்களையும் கட்டைகளையும் குறிப்பிட்ட நீளத்தினைக் குறிக்கும்எல்லைகளில் இட்டார்கள். ஒரு மைல் தூரத்தினை அளந்து கட்டை (குற்றி) நட்டமையால் இச்சொல் யாழ்ப்பாணத் தமிழில் 1760 யார் நீளத்தினை குறிக்கும் 'மைல்' எனும் ஆங்கிலச் சொல்லின் பொரு ளில் வளங்குகிறது.

'பரிகாரம்' எனும் வட சொல் நீக்குகை, பிராயச்சித்தம், வைத்தியம் போன்ற கருத்துக் களைப் புலப்படுத்தும். பண்டைக்காலத்தில் மயிர் வினையன் தனது கத்தியால் சிறு புண்களுக்கு பரிகாரம்(வைத்தியம்) செய்வ தனைப் 'பரிகாரி' என அழைத்தனர். பரிகாரி எனும் சொல் பரியாரி என மருவி இன்று வழங்குகிறது. அது இன்றும் யாழ்ப்பாண வழக்கில் மயிர் வினைஞனையும், நாட்டு வைத்தியத்தையும் குறிக்கும்.

பரதேசி எனும் வடசொல் பிறநாட்டி லிருந்து தேசயாத்திரை செய்வோனைப் பண்டு குறித்தது. ஒரு காலத்தில் உள்ளூர் களில் வாழ்வோர் தத்தம் ஊர்களில் பிச்சை ஏற்பதில்லை. அயல் நாடுகளிலிருந்து வரும் யாத்திரிகரே பிச்சையேற்றனர். இதனால் பிற தேசத்தவன் எனும் பொருளை உணர்த்திய பரதேசி எனும் சொல் இன்று பிச்சைக்காரன், கதியற்றவன் எனும் பொருளை உணர்த்து கிறது. இவ்வாறு சொற்கள் உயர் பொருளைக் குறிப்பதை ஒழித்துத் தாழ்ந்த பொருளைக் குறிப்பதை 'degradation' என்பர்.

'பராக்கு' எனும் வட சொல் கவன மின்மை, மறதி, சாக்கிரதை எனும் பொருளில் வழங்கும் குறிப்புச்சொல் முதலிய கருத்துக் களைத் தமிழில் புலப்படுத்தும். யாழ்ப் பாணத் தமிழரால் இச்சொல் 'பிராக்கு' என ஒலிக்கப்படுகிறது. அவர்கள் இச் சொல்லை வேறு விடயததில் மனதை திருப்புதல் எனும் பொருளில் வழங்குவர். 'பராக்கு' எனும் சொல் வட மொழியில் திரும்புதல், திரும்பி நோக்குதல் எனும் பொருள்களை உணர்த்தும். சிங்களத்தில் இச்சொல் 'சுணக்கம்' எனும் பொருளை உணர்த்துகிறது.

அரபு மொழியில் ராஜினாமா எனும் சொல் உடன்படிக்கையை குறிக்கும். இச் சொல் தமிழில் வேலையினின்றும் விலகு வதை குறிக்கும்.

❖ நேற்று என்பது அனுபவம்,
இன்று என்பது நிகழ்வு ,
நாளை என்பது நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னோ இல்லாத் தமிழ் மொழி

**அபிவர்ணா தவயோகராஜா**
பொறியியற்பீடம்
அறிமுகமாணவி

தமிழ் மொழி இயல்பாகவே இனிமையுடையது. தமிழ் மொழியின் தொன்மையை காலத்தால் அறுதியிட்டு காட்ட இயலாது. அது நாவலந்தீவு, தமிழ் நிலமாய் திகழ்ந்ததை கண்டது: இந்து மகா கடல் நிலப்பரப்பாய் நின்றதை கண்டது: இமயம் நீரிடை மூழ்கி சிரமத்தைக்கண்டது: தமழின் தொண்மை என்னே! என்னே!

"மண்ணுலகில் மொழிகள் பல
மாண்டிட நாம் காண்போம்
வழமலி நூல் பல படைத்தும்
வாழ்ந்தில – அம்மொழிகள்
எண்ணரிய வயது முதுக்
குறைவறத்தால் முதியள்
எழிலிளமை வளமிறவாக்
கன்னி தமிழ் கடவுள்"

என்னும் பாரதியார் பாடல் தமிழ் மொழியின் பழமையையும் என்றும் மாறாத இளமையையும் பறை சாற்றுகின்றது. பல மொழிகள் வரமுடியாமல் மாண்டு போன வரலாற்றை மொழி வரலாற்று நூல்களில் அறிகின்றோம். மக்கள் நாவிலே தவழ்ந்து அவர்களின் மனக்கருத்தை எளிதில் வெளிப்படுத்த முடியாத மொழிகள் பேச்சு வழக்கில் நின்று விடைபெற்றுவிட்டன.

உரத்தும் களைத்தும் கறாமல் இயல்பாகவே எழுகின்ற அழுத்த உச்சரிப்பு செம்மையும், இனிமையும் உடையதாய் நிலவுகின்ற தமிழ் மொழி பலபல நூற்றாண்டுகளாயும் தன் இளமையை மாறாமல் வாழ்கின்றது. காலம் கடந்து வாழக்கூடிய அமைப்புகள் எல்லாம் தமிழ் மொழியில் இருக்கின்றது.

ஆறுமுகநாவலரின் காலத்திலேயே இலக்கியங்களுக்கு நிறுத்தற்குறி, வியப்புக்குறி போன்ற காலக் கெடுக்குறிகள் அறிமுகமானது ஆனால் அதற்கு முன்னரே இன்றும் போற்றப்படும் பல காவியங்கள் எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக மகாபாரதம், சிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகாரம், சீவகசிந்தாமணி என கூறிக் கொண்டே போகலாம். இக்காவியங்கள் இன்றும் நிலைத்து நிற்கக்காரணம் வியப்புக் குறிப்பதில் தமிழில் அந்த உச்சரிப்பே ஒரு வருக்கு அதை எடுத்து சொல்லும் இதுவே தமிழின் சிறப்பாகும்.

சிறந்த கலை நூல்கள் நிரம்பி இருப் பாதால் மட்டும் ஒரு மொழி பேச்சுவழக்கில் நின்று வாழமுடியாது. அந்தக் கலை நூல்களை மிக எளிதாக மக்கள் படித்தும், படித்தவற்றை முட்டின்றிப் பிறருக்கு எடுத்து கூறியும் பயிலக்கூடிய மொழிச் செல்வம் வாய்ந்தனவாய் இருக்க வேண்டும்.

"மண்ணுலகில் மொழிகள் பல
மாண்டிட நாம் காண்போம்
வழமலி நூல் பல படைத்தும்
வாழ்ந்தில – அம்மொழிகள்

எனக்கூறுகிறார்.

இனி இங்ஙனம் அரசியல் ஆதரவும் கலை நூல்களும் பெற்ற நூல்கள் பல இயற்கை நெறி கடந்து செயற்கை வழிபட்ட தன்மை யால் செத்துப்போயின. தமிழ் மொழி ஆட்சி பீடம் ஏறாமல் பிற நாட்டாரின் ஆட்சியின் கீழ் இருந்தபோதும் தம் மொழியாகச் செம் மையாலும் கலைச் செல்வத்தாலும் இளமை மாறாது வாழ்கிறது என்பதைப் எண்ண எண்ணப் பாரதியார் உள்ளத்தில் உவகை பொங்கின்றது.

"எண்ணரிய வயது முதுக்
குறைவறத்தால் முதியள்
எழிலிளமை வளமிறவாக்
கன்னி தமிழ் கடவுள்"

என்ற அடிகளிலே தமிழின் தெய்வப் பண்பு கலந்து செழித்த பாரதியாரன் செம் மாப்பைக் காண்கின்றோம். தமிழ் அன் னையின் வயது அளவிட முடியாத எல் லையை கடந்தது அவளின் அறிவு மிகச் சிறந்தது. அறப்பண்பை விட்டுவிலகாத அறி வினை உடையவள். காலத்தால் மிகவும் முதியவள். இங்ஙனம் காலம் பல கண்ட தமிழ் அன்னை, சாலவும் இளமை நலம் உடைய வளாய் எழில் கனிந்து நிற்கின்றாள் எனவே ஆண்டிலும் அறிவிலும் மூத்தவளாய், புதிய புதிய எழிலும் இளமையூடு பூத்து பொழி தலால் கன்னியாய் தமிழ்க்கடவுள் காட்சிய ளிக்கின்றாள்.

"கன்னித் தமிழ் கடவுள்"

எனும் தொடரை படித்துப் பாருங்கள் இள மையும் எழிலும் கனிந்து உலாவுவதால் கன்னியாகவும் காலம் கடந்து நிலை பெறு தலால் கடவுளாகவும் தமிழ் மொழி விளங்கு கிறது.

"முன்னைப்பழம் பொருள் போல்
முன்தோன்றி நின்றுலவும்
அன்னையே செந்தமிழே
அடியோம் வணங்குகின்றோம்
பண்டை மொழிகள்
பல சாவ நீ வாழக்
கண்டோம் தமிழே
களித்தோம் வணங்குகின்றோம்"

எனவரும் கோவிந்த மூப்பனாரின் குரலுடன் பாரதியாரின் குரலை ஒப்பிட்டு நோக்கலாம்.

ஒரு சிறந்த தமிழ் புலவர் தமிழை கதிரவ னோடு ஒப்பிடுகிறார்.

"ஓங்க விடைவந் துயர்த்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள் கடியும் –
ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ரேனையது
தன்னேரிலாத் தமிழ்"

கதிரோனும் மலையிலே எழுகின்றான். அறிஞர்களாலும் அந்தணர்களாலும் அக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவன் தொழப்படுகிறான் உலகத்தில் நிறைந் துள்ள புற இருளைக் கதிரவன் போக்கு கின்றான். இத்துடன் உலகம் தோன்றிய பழமை கதிரவனுக்குரியதாகும். கதிரவன் ஒளியினாலே இயற்கை ஒளி இல்லாத திங்களும் ஒளி பெற்று விளங்குவது போல் தமிழ் மொழியின் உதவியால் இறந்து பட்ட வடமொழியும் உயிருடன் உலவுகின்றது. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளவம் எனும் மொழிகளில் எல்லாம் தமிழ் மொழியின் அமைப்பு காணப்படுகிறது. கதிரவன் உவமானம் தமிழ்மொழி உவ மேயம்! மலையிலே தோன்றுதல், உயர்ந் தோரால் தொழப்படல், இருளைப் போக் குதல் என்பன இரண்டிற்குமுள்ள பொதுத் தன்மைகள்.

இனிக் கதிரோனாலும் தமிழ் உயர்ந்த தென்பதையும் குறிப்பால் உணர்கிறோம். கதிரவன் புற இருளை மாத்திரம் நீக்குவான். தமிழ் அக இருளை- அறியாமையை போக்கி உள்ளொளியை பெருக்குகின்றது. கதிரவன் எவளவு நன்மைகளை செய்யினும் வெம்மை யுடையவன் தமிழ் மொழி தன்னை நிரம் பியது "தன்னார் தமிழ் அளிக்கும் தெண் பாண்டி நாட்டானைப்" என்றார் மாணிக்க பெருமானும் கதிரவன் மறைந்து தோன்றும் தன்மையுடையவன். தமிழ் தான்தோன்றிய காலந் தொட்டு வீழாமல் என்றும் இளமைப் பண்புடன் வாழ்கின்றது.

இதனால் "தமிழ் மொழி அந்நிய மொழிக்கு அடிமைப்பட்டதிலும் அழிய வில்லை" எனவும் "அதற்கு விழுமிய மொழி தமிழ்மக்கள் விழிப்புற்ற காலத்தில் அழியுமா! எவராலும் அழிக்கவும் முடியுமா?" எனவும் ஆன்றோர் கூறுகின்ற பொருள் மொழிகளை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

வாழ்க தமிழ்

1. கல்லாது நீண்ட ஒருவன் கற்றிந்தாரிடைப் புகுந்து மெல்ல இருப்பினும் நாயிருந்தற்றே

- நாலடியார்

2. கேத்திரகணிதம் அறியாதான் இங்கு நுழையாதிருப்பாராக - பிளேட்டோ

3. தேடு கல்வி இலாதோர் ஊரைத் தீயினுக்கு இரையாக்க வேண்டும். - பாரதி

4. விவேகமும் வீரமும்கொண்ட மனிதன்தான் தன் தவறைப் பொறுத்துக்கொள்ளத் துணிவான்.

- பெஞ்சமின் பிராங்கிளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் காத்த சமய குரவர்கள்

**நித்தியானந்தன் நிகேதன்**
பொறியியற்பீடம்

சைவ சமயிகளால் பின்பற்றப்பட்டு, போற்றப்பட்டு, வழிபடப்பட்டு வரும் சைவ சமயமானது உலகமெங்கும் புகழ்பாடப் படுகிறது. சமயத்தின் புகழ் ஈடு இணை யற்றது. சைவ சமயம் மேலோங்கவும், உலகத் தவர் அறியவும் அரும்பாடு பட்டு உழைத்த வர்கள் நாயன்மார்களாவர்.

ஆதிகாலத்தில் மக்கள் சமயத்தில் நம்பிக் கையிழந்து பிற சமயங்களை நாடும் போதும் எல்லா சமயங்களிலும் மேலானது மற்றும் உண்மையானது என நிரூபித்தவர்கள் நாயன்மார்களே. மக்களை நல்வழிப்படுத் தவும், ஒரு ஒழுங்குமுறையான வாழ்க்கையை வாழவும், சைவ சமயத்தினை நிலைநாட் டவும் பல சாதனைகள் புரிந்தவர்கள் நாயன் மார்களாவர்.

இவ் உலகத்து மக்கள் புகழ் பாடும் நாயன்மார்களாக திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் என்போரை குறிப்பிடலாம். இவர்கள் செய்த அற் புதங்கள், சாதனைகள், சொல்லுதற்கரியது. இவர்கள் வாழ்க்கை புனிதமானது.

திருஞானசம்பந்தர் சோழநாட்டின் சீர் காழி எனும் ஊரில் தாய் திலகவதியாருக்கும் தந்தை சிவபாதவிருதயருக்கும் மகனாக பிறந்தார். இவரது பிறப்பிட பெயர் காழி வேந்தன் ஆகும். இவர் தனது மூன்றாவது வயதினிலே உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டவர். இவர் ஞானப்பால் உண்ட மையால் ஞானசம்பந்தர் என அழைக்கப் பட்டார். இவர் ஞானப்பாலுண்ட போது "தோடுடைய செவியன்..." எனும் பதிகத்தை பாடினார். மூன்று வயதிலிருந்தே சைவ சம யத்தை வளர்க்க அரும்பாடு பட்டுள்ளார்.

அவற்றில் சிவனிடம் பொற்றாளம் பெற் றமை, முத்துக்குடை, பந்தல், சின்னம் பெற் றமை, முயலகன் நோய் நீக்கியமை, திரு மறைக்காட்டு திருக்கதவு மூட பாடியமை, படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்பை பெண்ணாக்கியமை, பாம்பு கடித்த வணிகனை உயிர்ப்பித்தமை, பாண்டியனுடைய வெப்பு நோயை நீக்கியமை, தேவார ஏட்டை எதிரேறும்படி செய்தமை, குளிர்ச் சுரம் நீக்கியமை, உலவாக்கிளி பெறல், ஆண் பனையை பெண்பனையாக்கியமை இவர் செய்த அற்புதங்களாகும்.

இவர் செய்த பல அற்பதங்களினால் ஆளுடையபிள்ளை, சிவக்கன்று, முத்தமிழ் விரகர், பாலறவாயர், வைதீகமாமணி, புகலி யர்கோண், சைவசிகாமணி, விழுந்தபத்து மேலோன், ஞானபோதகர், காவலன், சன் பையர், சிறிய பெருந்தகையார் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டார்.

சம்பந்தரது மார்க்கம் சற்புத்திர மார்க்க மாகும். இவர் நின்ற நெறி கிரியை நெறி யாகும். இவர் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளை பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் முன்னூற்று எண் பத்து நான்கு ஆகும். சம்பந்தர் இறைவனுடன் கொண்ட உறவு தந்தை - மகனுறவாகும். இவர் இறைவனடி சேரும் போது "காதலாகி கசிந்து....." எனும் பதிகத்தை பாடினார். பதினாறு வயதினிலேயே முத்தியடைந்தார். இவர் சாமீப முத்தியடைந்தார். இவரது குரு பூஜை தினம் வைகாசி மூலமாகும்.

சம்பந்தருடன் சமகாலத்தில் வாழ்ந்து பல அற்புதங்கள் புரிந்தவர் திருநாவுக்கர சராவர். நாவுக்கரசர் பல சோதனைகளை தாண்டி சைவசமயத்தை போற்றி, வழிபட்டு சரித்திரத்தில் இடம்பிடித்தவர் ஆவார்.

நாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் தாய் மாதினியாருக்கும் தந்தை புகழனாருக்கும் மகனாக பிறந்தார். இவர் திருவாமூரிலே பிறந்தமையால் தீருவாமூரளி எனப் பெயர் பெற்றார். இவரது தமக்கையார் திலகவதியார். தாய் தந்தையை சிறுவயதி னிலேயே நாவுக்கரசர் தமக்கையாருடனே வளர்ந்து வந்தார். சிறு வயதிலேயே பல துன்பங்களை அனுபவித்த நாவுக்கரசர் சைவ சமயத்தைவிட்டு சமண சமயத்தை தழு வினார். இச்செயலை விரும்பாத திலகவ தியார் சிவனிடம் முறையிட்டார். சிவபெரு மான் நாவுக்கரசருக்கு சூளை நோயை அருளினார்.

நாவுக்கரசர் பல வைத்தியம் செய்தும் சூளை நோயை குணமாக்க முடியவில்லை. கடைசியில் திலகவதியாரை அடைந்தார். திலகவதியார் வீரட்டான துறையரிடம் முறையிட்டார். பின் திருநீறு அணிவித்தார். இதன் போது நாவுக்கரசர் "கூற்றாயின வாறு..." எனும் பதிகத்தை பாடினார். நாவுக்கரசரின் சூளை நோயை குணமாக் கியது. இதன் பின் சைவ சமயத்தை தழு வினார் இதனை அறிந்த சமண சமய மன்னன் நாவுக்கரசரை சுண்ணாம்பு அறையில் அடைத்தான். சுண்ணாம்பு அறையின் வெப் பத்திலிருந்து தப்பிக்கொள்ள "மாசில் வீணையும்...." எனும் பதிகத்தை பாடினார். சுண்ணாம்பு அறை குளிர்ச்சியடைந்து நாவுக்கரசர் உயிர் பிழைத்தார். இதனை அறிந்த மன்னன் நஞ்சு கலந்த பாற் சோறை உண்ண கொடுத்தான். நாவுக்கரசர் தனது ஞானத்தால் பாற்சோறு நஞ்சுள்ளது என அறிந்தார். ஆயினும் இறைவனை வேண்டி "நஞ்சும் அமுதாம்..." எனும் பதிகத்தை பாடியவாறே பாற் சோறை உண்டார். இறை யருயால் உயிர் பிழைத்தார். மேலும் கோப மடைந்த சமண சமய மன்னர் கொடிய யானையினை நாவுக்கரசரை கொல்ல ஏவி விட்டார். இதன் போது "சுன்னவன் சந்தன..." எனும் பதிகத்தை பாடினார். யானை நாவுக்கரசரை வணங்கி விலகிச் சென்றது. இதனை அறித்த மன்னன் நாவுக்கரசரை கொல்ல வேண்டும் என கல்லோடு கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் வீசினான். நாவுக்கரசர் "சொற்றுணை வேதியன் ...." எனும் பதிகம் படிக்க கல் தெப்பமாக மிதந்தது. நாவுக்கரசரின் தெய்வ பக்தி கண்டு மன்னன் பயந்து அவரை விடுதலை செய்தான். இவ்வாறு பல அற்புதங்களை நாவுக்கரசர் செய்துள்ளார். அவற்றுள் திருமறைக்காட்டு திருக்கதவு திறக்க பாடியமை, கைலைக்காட்சி கண்டமை, மூத்த திருநாவுக்கரசரை உயிப்பித்தமை, சூல இடப இலட்சினை பெற்றமை, படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியன என்பனவும் அடங்கும்.

நாவுக்கரசர் 81 வயதினிலேயே முத்திய டைந்தார். இவர் சலோப முத்தியை பெற்றார். தாச மார்க்கத்தை பின்பற்றினார். நாவுக்கரசர் தனது வாழ்வு அனைத்தும் சரியை தொண்டு புரிந்தார். இவர் நின்ற நெறி சரியை நெறியாகும். இவரது அற்புத செயல்களால் இவருக்கு மருள்நீக்கியார், தருமசேனர், சொற்கோ, தாண்டகவேந்தர், ஆளுடைய அரசு, உழவாரப்படையாளி, நாவுடைப் பெருமான், தமிழ் மொழித்தலைவர், அப்பர், வாக்கில்வேந்தர், வாகீசர், தேவர்அரையர்', முதலியார் எனப் பல பெயர்கள் கிடைக்கப் பெற்து. இவர் இறுதியாக பாடிய பதிகம் "எண்ணுகேன்..." எனும் பதிகமாகும். சித்திரை சதயம் இவரது குருபூசை தினதாகும். இவர் முத்தியடைவதற்குள் 313 பாடல்களை பாடியுள்ளார். நாவுக்கரசர் இறைவனுடன் ஆண்டான்- அடிமை என்ற உறவினை கொண்டிருந்தார். இவர் நான்காம் ஐந்தாம், ஆறாம் திருமுறைகளை பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றே சுந்தரரும் சைவசமயத்தை வளர்த்தெடுத்தார்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே தாய் இசைஞானியார் தந்தை சடையனாருக்கும் மகனாக பிறந்தார் இவரை திருநாவலுரான் என பிறப்பிட பெயர் சூட்டியழைத்தனர்.

இவர் இறைவனுடன் கொண்ட உணர்வு தோழமையாகும். இவர் சிவனை இழித்து "பித்தா" என அழைத்தமையால் சிவனே "பித்தா" என அடியெடுத்து கொடுக்க பித்தா பிறைசூடி எனும் பதிகத்தை முதன் முதலில் பாடினார். இவரது அற்புதங்களும் சொல்லு தற்கரியனவாகும்.

அவ்வகையில் செங்கட்டிகளை பொன் கட்டிகளாக்கியமை, ஆற்றிலிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமை, முதலை யுண்ட பாலகனை மீட்டமை, களவு போன பொருட்களை மீள பெற்றமை. குன்றையூரில் நெல்லு பெற்றமை, ஊன்றுகோல் பெற்றமை, இடக்கண் பார்வை பெற்றமை, வலக்கண் பார்வை பெற்றமை, வெள்ளை யானையில் கயிலை சென்றமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

சுந்தரர் ஆளுடையநம்பி, நம்பியாரூரர், திருநாவலூரர், தமபிரான் தோழர், சிங்கடியப்பன் வனப்பகையப்பன், சைவ ஆண்டகையர், ஆலாலசுந்தரர், திருத்தொண்டர் தொகையாளி என்ற பல பெயர் சூட்டி அழைக்கப்பட்டார். இவர் ஏழாம் திருமுறையை பாடினார். இவர் நூறு திருப்பதிகங்களை பாடியுள்ளார். இவர் நின்ற நெறி யோகமாகும். மார்க்கம் சக மார்க்கம்.

சுந்தரர் தனது பதினெட்டாவது வயதினிலே முத்தியடைந்தார். இவர் சாரூப முத்தியடைந்தார். இவர் இறுதியாக பாடிய பதிகம் "தலைக்குத் தலைமாலை.." எனும் பதிகமாகும். இவரது குருபூசை தினம் ஆடிச் சோதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவார முதலிகளாவர். ஆனால் மாணிக்க வாசகர் திருவாசகமே பாடினார். இவரது புகழ் மிகவும் அற்புதமானது. இவர் பாண்டி நாட்டிலே திருவாதவூரிலே தாய் சிவஞான வதிக்கும் தந்தை சம்புபாதாசிரியருக்கும் மகனாக பிறந்தார். இவரை திருவாதவூரிலே பிறந்தமையால் திருவாதவூரர் என பெயர் கொண்டு அழைத்தனர்.

இவரது அற்புதங்களாக சிவனை நரியை பரியாக்கி கொண்டு வரும்படியும், மண் சுமந்து பாண்டியனால் அடிபடும் படியும் செய்தது. பிற சமயத்தினை வாதத்தில் வென் றமை, ஊமை பெண்ணை பேச வைத்தமை, திருவாசகம், திருக்கோவையார் சிவன் எழு தும்படி பெற்றுக் கொண்டது. எல்லோரும் காண தில்லை நடராஜர் திருவடி சேர்ந்தது போன்றவற்றை குறிப்பிடலாம். இவர் செய்த அற்புதங்களால் இவருக்கு பல பெயர்கள் ஏற்பட்டது. அவற்றுள் திருவாதவூரர், தென் னவன்பிரமராஜர், கோவைவேந்தன், பெருந் துறைப்பிள்ளை, மணிவாசகர், ஆளுடைய அடிகள் என்பன அடங்கும்.

மணிவாசகர் நின்ற நெறி ஞான நெறியாகும். இவரது மார்க்கம் சன் மார்க்கம். இவர் பாடிய திருமுறை எட்டாந் திருமுறை ஆகும். இவர் இறைவனுடன் கொண்ட தொடர்பு நாயகன்- நாயகி. இவர் 1056 பாடல்களை பாடியுள்ளார். இவர் முத்தி யடைந்த வயது முப்பத்திரெண்டு ஆகும். சாயுச்சியமுத்தியை அடைந்துள்ளார். இவரது குருபூசை தினம் ஆனி மகம்.

இவர்களை போன்ற சைவ சமயிக ளாலேயே சைவ சமயம் இன்று வரை மேலோங்கி வருகிறது.

"சைவசமயமே என்றும் மெய்யான சமயம்"

- கல்லாது நீண்ட ஒருவன் கற்றிந்தாரிடைப் புகுந்து மெல்ல இருப்பினும் நாயிருந்தற்றே – நாலடியார்
- கேத்திரகணிதம் அறியாதான் இங்கு நுழையாதிருப்பாராக – பிளேட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்

**குமரேசன் அனுசன்**
பொறியியற்பீடம்
அறிமுகமாணவன்

இப்பிரபஞ்சத்தில் நிலையானதும் இறுதியானதும், உறுதியான விடயம் மாற்றம் ஒன்றுதான். ஏதோ ஒரு கட்டத்தில் பறவைகளாய் இருந்தாலும் சரி, மிருகங்களாக இருந்தாலும் சரி ஏன் பகுத்தறிவு படைத்த மானுடனாக இருந்தாலும் சரி மாற்றங்களை ஒப்புக் கொண்டு அவற்றை அனுசரித்து ஏற்றுக் கொள்வதுதான் யதார்த்தம். அனால் துரதிஸ்டமாக மிகப் பெரும் மாற்றங்கள் ஒரே இரவில் ஏற்றுக் கொள்ளப் பட்டவையல்ல. மாற்றங்கள் விமர்சனங்களுக்கு உள்ளாகி, எதிர்ப்புகளை சம்பாதித்தது இழப்புக்களை ஏற்றுக் கொண்டு அனுசரிப்புக்களுடன் உருவானவை. உதாரணமாக இன்றிலிருந்து 2019 ஆண்டுகளுக்கு முன்பாக யேசு பெருமான் மனிதர்களிடத்தே மாற்றத்தை ஏற்படுத்த வேண்டினார். எனது நோக்கம் மதம் சார்ந்த கருத்துகளை வெளியிடுவது அன்று. ஆனால் அன்று மாற்றத்திற்கா முதல் விதையாக இருந்த வித்தினை கண்டறிவது தான். அந்தக் குணமே அன்பு ஆகும். நம்மை வெறுப்ப வரையும் அன்பு செலுத்துவதுதான் அற வாழ்க்கையின் முதல் தத்துவம்.

உலகிலுள்ள எல்லா மதங்களின் அடிப் படை அன்புதான். அன்பையும் அகிம்சை யையும் போதிக்காத எச் சமயமும் நின்று நிலைக்காத சரித்திரமே இல்லை. எம் சமய மான சைவசமயமானது ஒழுங்குபடுத் தப்பட்ட கலாச்சார மரபுகளை பேணக்கூடிய ஒழுகலாறுகளை சமயஞ்சார்ந்த அற வாழ்க் கையாக போதிக்கின்றது. இதனை சுருங்க கூறுவதாயின், அறிவியல் சார்ந்த முறைகளை, ஆழ்கடல் போன்ற விஞ்ஞானத்தை, அன் றாடம் கடைப்பிடிக்கும் நடைமுறைகளாக கைக்கொள்ள மெஞ்ஞானம் வழி சமைக் கின்றது. அதாவது மனிதனின் சிந்தனை இருவகைப்படும் ஒன்று அறிவியல் சிந்தனை, மற்றயது ஆன்மீக சிந்தனை இரண்டும் நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைப் போன்றது. வலக்கண் இடக் கண்ணை பார்க்கமுடியாது. இடக்கண் வலக் கண்ணை பார்க்க முடியாது ஆனால் இரு கண் களும் அன்பினை விழித்திரையாக கொண்டு நோக்கும் போது நம் நெற்றிக்கண்ணாகிய முக்தி வாழ்வு கிடைக்கப்பெறுகிறது. ஆகவே அன்பின்றி, இரக்கமின்றி, மற்றவர்களி டையே பொது நலமின்றி செய்யும் காரியங்கள் நமது கருமங்களாகவே முடியும். இக்கருமங்கள் ஒரு "பூமராங்" போன்று எவ்வளவு தூரம் தூக்கி வீசினாலும் இறுதி யில் நம்மையே வந்தடையும்.

சைவசமயத்திகன் நோக்கம் ஆன்மாக் கள் கடவுளை அடைவதாகும், நாம் செய்யும் தீவினைகள் நம்மை பலபிறவிகள் எடுக்கச் செய்து மாயை எனும் சுவரை நம் கண் முன்னே எழுப்பி இறைவனை காணவிடாமல் செய்துவிடும். ஆகவே நாம் நம்வாழ்வில் மகிழ்ச்சியினை அறுவடை செய்வதற்காக மற்ற உயிர்களிடத்தே அன்பு செலுத்துவது அவசியமாகும். "நான், நான், நான்" எனும் எண்ணத்துடன் வாழ்ந்த யாரும் பரம் பொருள் எனும் மகாசக்திக்கு முன்னே சிறு துரும்பு தான். நம்மிடம் உள்ள செல்வத் தினாலோ , அதிகாரத்தினாலோ, கல்விப் புலமையினாலோ இறைவன் நம்மிடத்தே வருவதில்லை. தூய பால் போன்ற வெள்ளை உள்ளத்தோடு அன்பின் துணைகொண்டு செய்யும் காரியங்களால் இறைவனே நம்மை தேடி வருவர் அவருக்கு (இறைவருக்கு) வேண்டியது மாடமாளி கையோ, தங்கம், வெள்ளி, இரத்தின மாணிக்கங்களோ அல்ல. அன்பு கொண்டு அவரை பூசிக்கும் சிறு குடிலே அவர் வாழும் ஆலய மாகும்.

அன்புடமை பற்றி ஆன்றோர்களும் சான் றோர்களும் கூறியுள்ளனர். "அன்பே சிவம்" என்கிறது திருமந்திரம் சைவசமயம் வலி யுறுத்தும் முக்கிய அறமாகிறது அன்பு. அன் பில்லையேல் சிவமில்லை: சிவமில்லையேல் அன்பு இல்லை: "அன்பும் சிவமும் ஒன்று தான்" என்கிறார் திருமூலர். அன்பை மல ராகவும் ஆர்வத்தை நீராகவும் கொண்டு வழிபாடு செய்யப்படும் போதுதான் கடவுள் நம்பிக்கை பிறக்கிறது. இதைப்போலவே உலகிற்கே திருக்குறளை அளித்த திருவள் ளுவர் தனது **133** அதிகாரங்களில் நான்கினை அன்பு சார்ந்த விடையங்களுக்காக இயற்றி யிருக்கிறார். உலகப் பொதுள் மறையிலேயே இத்தகைய ஒரு தனித்துவம் வேறு ஒரு விடயத் திற்கும் அளிக்கப்படவில்லை. "அன்பின் வழியது உயிர்நிலை..." என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே மனிதர் மட்டு மன்றி உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளும் அன் பினை அடிப்படையாக கொண்டவை பிற உயிர்களுக்கு அன்பு காட்டுதல், அவற்றை பேணுதல், அரவணைத்தல், என்பன அன்பே வடிவமான கடவுளை அடையும் வழி யாகவும், அவருக்கும் செய்யும் தொண்டா கவும் அமையும். அதன் மூலம் சமயம் வலியு றுத்தும் இலட்சிய வாழ்வும் நிறைவுபெறும். அதுவே எமது பிறவிப் பயனாகும்.

"எவ்வுயிர்க்கும் என்னுயிர் போல் எண்ணி
இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்கிறார் தாயுமானவர் இவ்வாறு அவர் இறைவனை இறைஞ்சி வேண்டுகிறார். அன்பிலாத வாழ்வை "என்பு தோல் போர்த்த உடம்பு" என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். முழுமுதற் கடவுளான சிவபெருமானை கருணாமூர்த்தி, ஜீவகாருண்யன், தயாபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திருமுறைகள் போற்றும் "அன்பினில் விளைந்த ஆரமுதே...." என்று மணிவாசகர் பாடுகின்றார். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்...." உயர்ந்த அறமாகும். அந்த மனோநிலை அன்பினால் உண்டாகிறது. அடைக்கலம் நாடி வந்தோர்க்கும், உதவி தேடிவந்தோர்க்கும், பசித்து வந்தோர்க்கும் அவர்களின் தேவையை உணர்ந்து உதவுதல் தார்மீக கடமையாகும். "யாவர்க்கும் உண்ணும் போது ஓர் கைபிடி...." என திருமூலர் குறிப்பிடுவது அன்பினால் விளைந்த ஜீவ காருண்யத்தை காட்டுவதாக அமைந்துள்ளது. ஜீவகாருண்யம் என்பது நாம் காட்டும் கருணையை, நம்மிடமுள்ள உயர்ந்த விழுமியத்தை குறிக்கும்.

உலகத்திலே உள்ள உண்ணதமான பண்பு அன்பு எனின், உலகத்திலேயே உள்ள உன்னதமான உயிர் அம்மா ஆகும். நம் கண் முன்னே நடமாடும் தெய்வம் அம்மா ஆகும். கல்லிலே செதுக்கிய கடவுளுக்காக நாளும் பொழுதும் உழைக்கும் நாங்கள் கருவிலே செதுக்கிய எம் தாய்க்காக வாழ வேண்டும். அன்பு என்றால் அம்மா: தியாகம் என்றால் அது அம்மா: நம் மீது எச்சுயநலமும் இல்லாமல் அன்பு செய்யும் ஜீவன் அம்மா. "உன்னுடைய தாயின் மடியிலேயே சொர்க்கம் இருக்கிறது" என்கிறார் நபிகள் நாயகமடிகள். "என்னுடைய நல்ல குணங்கள் எல்லாவற்றுக்கும் காரணம் என்னை ஈண்றெடுத்த தாயே" என்கிறார் ஆபிரகாம் லிங்கன். "உலகிலே முடிவே இல்லாதது ஒன்று பிரபஞ்சம் மற்றயது மனித முட்டாள் தனம்" என்கிறார்கள் அறிஞர்கள். ஆனால் என்னைக் கேட்டால் தாயின் அன்பும் முடிவில்லாதது என்பேன் உண்மைதான். அன்பும் முடிவில்லாதது தான். பேதையாய் அவளிருந்து மேதையாய் எமை வளர்க்கும் தாய்க்கு உண்மையான அன்பை செலுத்த வேண்டும் அது எமது கடமையாகும்.

நடைபாதையில் நாம் நடந்து செல்கின்றோம் அல்லது கடைப்பக்கமாக செல்கிறோம் எப்போதாவது பளிச் என கண்களில் படுகின்ற பணத்தாளை கண்டிருக்கிறீர்களா? அப்படி ஒரு விடையம் நடந்திருந்தால் என்ன நடந்ததென்பதை நினைவுபடுத்தி பாருங்கள். அந்த நாணயத்தை எடுத்து, அதிஸ்ட மேற்பட்ட மகிழ்ச்சியில் நீங்கள் திழைத்திருப்பீர்கள். நாம் சுயநலமின்றி காட்டும் அன்பும் அப்படித்தான் அதற்காக நான் பணநோட்டுக்களை தொலைக்கச் சொல்லவில்லை. நாம் சுயநலமில்லாத அன்பை பிறரிடம் காட்டும் போது நாம் முகம் காணாத ஒரு உதவி தேவைப்படுகின்ற அன்பிற்காக, ஏங்குகின்ற ஜீவனை சென்றடைகிறது. நமது உதவி, நமது அன்பு கிடைக்கும் போது அந்த உள்ளத்தில் பெருகும் அன்பினால் வழங்கும் ஆசியானது நம்மை மட்டுமல்லாமல் நமது பரம்பரைக்கும் சேருகிறது. நாம் நம்முடைய உயிர், நமது ஆரோக்கியம், வருமானம், சொத்துள்ள விலைமதிக்கத்தக்க பொருட்கள் எல்லாவற்றையும் இன்ஸயூர் செய்கிறோம். நாம் பிறருக்கு காட்டும் அன்பும் ஒரு வகையில் இன்ஸயூர் செய்து கொள்வதே.

வில்லியம் ஜேம்ஸ் கூறுகிறார் "நம்பிககைதான் சம்பவங்களை உருவாக்குகிறது." "இப்போது நீங்கள் ஏதோ ஓர் உயிர் மீது நேசத்தை காட்டும் உணர்வை பெறாவிடில் உங்கள் நம்பிக்கை மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள முடியாது. நாம் எமது அன்பை இன்னொருவரிடம் காட்டுவது நம்மியல்பு. அதனை நாம் கட்டுபடுத்தி வைத்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அதனை மறைக்க முடியாது. கல் பட்ட தயிர்பானை போல அதாவது அன்பு கொள்ளும் போது வெளியேறும். அதனை ஒரு தாழ் போட்டு அடைக்க முடியாது. அதலால் தான் "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்" என்கிறார்கள். ஆதலாலே அன்பின் வழி நின்று அன்பின் நெறி சென்று நம் அன்பும் பிறருக்கே உரியது என்று பிறர் மீது அன்பு செலுத்த வேண்டும்.

பௌதிக ரீதியாக அன்பு பல்வேறு வகையில் வெளிப்படுகிறது. உலகிலுள்ள எல்லா மதங்களினுடைய நோக்கிலும் சமயம் என்பது வாழ்க்கை நெறி அல்லது வாழும் முறையாகும். நாம் நம் வாழ்க்கையை வாழ் வதற்கு அன்பு தேவை. அன்பின்றி செய்யும் காரியங்கள் உவர்க்கும். அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. அன்புவாழ்வுதான் சைவசமய வாழ்வு. அன்பு நெறியே சைவ நெறி. சைவ சமயத்தின் நோக்கம் ஆன் மாக்கள் கடவுளை அடைவதாகும் அதற்கு சைவர்கள் கடவுள் மீது பக்தி செலுத்துதல் வேண்டும்.

கடவுளை காலையிலும் மாலையிலும் நிதமும் பூசித்தல், தியானித்தல், திருக் கோயில் வழிபாடு செய்தல், திருக்கோயிலை சுத்தம் செய்தல், இறைவன்புகழ் பாடுதல், இறைவனடியார்கள் மீது அன்புசெலுத்தல் முதலிய முறைகளால் அன்பு செலுத்தலாம். உலகிலுள்ள அனைத்து உயிர்களிலும் கடவுள் நிறைந்திருப்பதால் எல்லா உயிர் களிடத்தும் அன்பு செலுத்தல் அவசிய மாகும். உயிர்களிடத்தில் நாம் காட்டும் பரிவு இறைவனிடத்தில் கொள்ளும் பற்றுதலாகும். ஏழைகளுள்ளத்தில் கடவுளை காணலாம் ஆகவே "மக்கள் சேவையையே மகேசன் சேவை" என்பதை நாம் உணரவேண்டும். அன்பால் உலகை ஆழ்வோம். அது என்றுமே அழிவில்லாத, அழிக்கமுடியாத அன்பின் சாம்ராஜயமாக இருக்கும்.

- கல்லாது நீண்ட ஒருவன் கற்றிந்தாரிடைப் புகுந்து மெல்ல இருப்பினும் நாயிருந்தற்றே — நாலடியார்
- கேத்திரகணிதம் அறியாதான் இங்கு நுழையாதிருப்பாராக — பிளேட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் இறையும்

**புவாகினி விஜயலிங்கம்**
பொறியியற்பீடம்

இசையால் வசமாகார் இதயமெது. ஆம் இசைக்கு மயங்காதவர் எவரும் இல்லை. இறைவனும் இதற்கு விதிவலக்கல்ல. இறையடியார்கள் இறைவனை பக்தியுடன் பாடி உருகி அருளைப் பெற்றனர் என்றால் மிகையாகாது. அன்று தொட்டு இன்று வரை இறைவனைப் பாடி அவனருள் பெறுகின்றோம். சமய குரவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், இறைதொண்டர்கள் எனப் பலரை உதாரணமாக கூறலாம்.

தேவார முதலிகள் எனப் போற்றப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரப் பதிகங்கள் பல பக்திப் பரவசத்தோடு பாடி இறைவனை மெய்மறக்கச் செய்து பல அதிசயங்கள் நிகழ்த்தியுள்ளமை நாம் அறிந்த ஒன்றே. திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களில் உருகிய இறைவன் பொற்றாளம், முத்துப் பல்லாக்கு, முத்துச் சின்னம், முத்துக்குடை, முத்துபந்தர், உலவாக்கிளியும் வழங்கியருளினார். திருஞானசம்பந்தர் சிறுவயதிலேயே தேவாரம் பாடத்தொடங்கிவிட்டார். அவரது சிறய கைகள் தாளம் போட்டுபாடுவதை கண்டு வருந்திய இறைவன் பொற்றாளம் வழங்கினார் என்றும் வரலாறு உண்டு.

இவை தவிர சமய குரவர்கள் தேவாரம் பாடி நிகழ்த்தப் பெற்ற அற்புதங்களை சிறு வயதிலேயே கற்றுள்ளோம். திருநாவுக்கரசரை பல்லவ மன்னன் நீற்றறையில் அடைத்த போது,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

எனப் பாடுகின்றார். வெப்பத்தைத் தரும் நீற்றறையின் உள்ளே அமர்ந்திருக்கும் எவருக்கும் வெப்பத்தை அளிக்கும் பொருட்களே நினைவுக்கு வரும். ஆனால் சிவபிரானது அருளால் நீற்றறை உடலுக்கும் உள்ளத்திற்கும் மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2ம் புலன்களும் இன்பம் கொடுக்கின்ற பொருட்களைக் குறிப்பிட்டு அதற்கு இறைவனின் திருவடிகளே காரணம் என்கிறார். இவ்வாறு பல அற்புதங்களை உதாரணம் காட்டலாம்.

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகார். பக்தனின் ஆன்மிக அனுபவத்தை சொற்களாகப் பிரிந்தெடுத்து கசிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருகி பாடப்பெற்றவையே திருவாசகம். சிவன் தன்னுடைய சிந்தையில் நின்றதால் அவனுடைய திருவருளாலே அவனுடைய திருத்தாள்களை வணங்கி மணிவாசகர் உரைத்த பாடல்கள் இத் திருவாசகம் இறைவனின் நமசிவாய என்ற ஐந்தெழுத்தை முதன்மையாக வைத்துப் பாடப்பெற்ற பெருமை பொருந்தியது சிவபுராணம். திருவாசகத்தை மணிவாசகர் பாட இறைவன் தன் கைப்பட எழுதியுள்ளார் என்றால் என்னே இறைவனின் மகிமை. இவை எழுதியது அழகிய சிற்றம்பலமுடையான் எழுத்து என இறைவனால் கையெழுத்திட்டு கொடுப்பட்ட பெருமைக் குரியது.

இதேபோல சேக்கிழார், அருணகிரிநாதர் மற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களினதும் இசையின் அற்புதங்களை கூறிக் கொண்டே போகலாம்.

வாரணமாயிரம் சூழ வலஞ் செய்து
நாரண நம்பி நடக்கின்றானென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனா கண்டேன் தோழி நான்

என்று பாடுகின்றார் ஆண்டாள். பக்திச் சுவை நிரம்பிய இந்த பாடல்தொகுதி ஆண்டாள் திருமாலையே மணந்து கொள்ள உறுதி பூண்டு மானிடர்க்கு என்று பேச்சுப்படின் வாழ்கிலேன் என தெய்வீகக் காதல் கொண்டு நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்பவற்றைப்பாடி இறைவனை மெய்மறக்கச் செய்து இறுதியில் திருமாலையே மணவாளனாகக் கொள்கிறார்.

முன்னொரு காலத்தில் இலங்கையை ஆண்ட இராவணன் சாமவேதத்தில் நிபுணத்துவம் பெற்றவன், வீணை வித்துவான், சிறந்த சிவ பக்தன், கைலாயத்தை தன் நாட்டிலேயே வைக்க விரும்பிய இராவணன் வடக்கே சென்று இமயத்தைத் தூக்கி தன் நாடு நோக்கி நகர முற்பட்டான். திடீரென ஆட்டத்தைக் கண்ட பார்வதிதேவி சிவனிடம் சென்று முறையிட, நடந்ததை அறிந்த சிவன் தன் கட்டை விரலால் மலையை சற்று அழுத்த இராவணன் தடுமாறினான். இறைவனை மயக்க ஒரேவழி இசை என அறிந்த இராவணன் தன் தொடை நரம்புகளால் வீணை செய்து வீணாகானம் இசைத்தான். அதில் மகிழ்ச்சியடைந்த இறைவன் இராவணனை மன்னித்து அனுப்பினார்.

அபிராமி பட்டரின் வரலாறு அனைவருக்கும் அறிந்ததே. அமாவாசை நாளில் அபிராமி அன்னையின் மூக்குத்தி பௌர்ணமி நிலவாகக் காட்சியளிக்க அவர் பக்தியோடு பாடிய அபிராமி அந்தாதியே காரணம் என்றால் மிகையாகாது.

அதுமட்டுமல்லாமல் சிவனிடம் உடுக்கை, கிருஷ்ணரிடம் புல்லாங்குழல், சரஸ்வதியிடம் வீணை, நந்தி தேவரிடம் மிருதங்கம் என இசைக்கருவிகளைக் காண்கின்றோம். தமிழ்க்கடவுளாக போற்றப்படும் முருகனுக்கு செந்தமிழில் பக்திரசத்துடன் பாடினாலே உருகிவிடுவார்.

இதற்காகவே நாம் கோயில்களிலும் வீடுகளிலும் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை செய்கிறோம். அன்றாட வாழ்வில் ஒவ்வொரு விசேடங்களின் போதும் இறைவனைப்பாடி வழிபடுவது நமது கலாசாரம் விரத நாட்களிலும் திருவிழாக்காலங்களிலும் பாடல்கள் பாடி வழிபடுகின்றோம். கந்தர்சஷ்டி விரத்தின் போது கந்தசஷ்டி கவசம், சிவராத்திரியின் போது சிவபுராணம், நவராத்திரியின் போது சகலகலாவல்லி மாலை, அபிராமி அந்தாதி போன்றனவும் திருவிழாக்காலங்களில் தேர்ச்சிந்து, ஊஞ்சற் பாட்டு, எச்சரிக்கை, லாலி, பராக்கு, மங்களம் போன்றனவும் நித்திய நைமித்த பூசைகளின் போது பஞ்சபுராணம் பாடியும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஆகவே இசையும் இறையும் பிரிக்க முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இறைவனை அடைய எளிய வழி இசைதான் என்றால் மிகையாகாது.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச தந்திரம்

**தமிழ்ச் செல்வன் பானுஷன்**
இயன் மருத்துவப் பிரிவு
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 1. சுய ஒளி

சமயம் என்றால் என்ன? சமயம் என்பதன் பொருள் வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறி என்பதாகும். எந்தச் சமயமானாலும் சரி, அதன் தொழில் இறைவனை அடைதற் பொருட்டு அதாவது ஆன்மாக்களுக்கு முக்தி கிடைக்கச் செய்யும் பொருட்டு வாழ்வதற்கு ஒழுங்குகளையும் நெறிமுறைகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒரு மார்க்கமாய் அமையதலாகும்.

சுய ஒளி என்பது ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டிய குறித்த விடயங்கள் பற்றிய தனிப்பட்ட புரிந்துணர்வு ஆகும். எந்தச் சமயத்தவராயினும் எந்த நெறியைப் பின்பற்றுபவர்களாக இருந் தாலும் தமக்குள் ஒரு சுயஒளி இல்லாமல் விளக்க மற்று ஆகமங்களையும் வேதங்களையும் கடைப்பிடிப்பார்களாயின் அவர்கள் வாழ்க்கை நரகமாக மாறுவதோடு மட்டுமல்லாமல் இப்படிப்பட்டவர்கள் பிறர் வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கி விடுவார்கள்

### கதை

அது ஒரு துறவிகள் தங்கும் சத்திரம். ஓர் நாள் இரவு வணிகன் ஒருவன் நெடுநாள் பயணத்திடையே அச்சத்திரத்தில் தங்க நேர்ந்தது. அவனும் துறவிகளுடனே மண்டபத்தில் வரிசையில் அடுக்கப்பட் டிருந்த கட்டில் ஒன்றில் அமைதியாக ஓய்வெடுக்கலானான். வணிகன் இராத்திரி சமயத்தில் திடுக்கிட்டு எழுந்தான். காரணம் மூட்டைப் பூச்சிகள் அவனை வரிசையில் கடித்துக் கொண்டிருந்தன. அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். துறவிகள் அனைவரும் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். படுக்கையை விட்டு எழுந்த அவன் தரையில் ஒரு துணியை விரித்து ஜன்னலோரமாக படுத்துக் கொண்டான். மறுநாள் காலை நன்றாக உறங்கிக் கொண்டிருந்த அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவி ஒருவர் தட்டி எழுப்புகிறார். வழித் தவன் விழிகள் பிதுங்கிய படி துறவியிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினான். வணிகன் "உங்கள் படுக்கையில் மூட்டைப் பூச்சிகள் இல்லை போலும், எனது படுக் கையில் சரியான மூட்டைப் பூச்சித் தொல்லை அதுதான்" என்றான்.

"உன்படுக்கை, எமது படுக்கை அல்ல, இங்கு அனைவரின் படுக்கைகளிலுமே அவை நிறைந்து கிடக்கின்றன" என்றார் துறவி.

"அப்படியாயின் அவற்றைக் கொல்ல மருந்துகள் எதுவும் ஏன் பாவிக்கவில்லை?" எனக் கேட்டான் வணிகன்

துறவி புதிர் போடத் தொடங்கினார். "எந்த உயிர்களையும் கொல்லலாகாது, படைத்தலும் அழித்தலும் இறைவனுக்கே உரியது. இது கொல்லாமை நியதி" என்றார். விறைத்துப் போன வணிகன் "அப்படியாயின் இப்படுக்கைகளை வெளியில் போட்டு விட்டு அனைவரும் தரையில் படுத்துக் கொள்ளலாமே" என்றான். துறவியின் பதில் அவனை மலைக்க வைத்தது. அவர் சொன்னார். "அப்படியாயின் மூட்டைப் பூச்சிகளுக்கு உணவளிப்பது யார்? அவை எம் ரத்தம் உறிஞ்சாவிடில் இறந்து போவது சாத்தியமாகலாம்."

வணிகன் பேச்சு மூச்சு எதுவுமின்றி விடைபெற்றவனாய்

ஒரேயடியாய் மண்டபம் விட்டு ஓட்டம் பிடித்தான்.....

இக்கதையில் வரும் துறவிகள் போன்றே சிலர் விழிப்படைந்த பின்னும் வேறு ஒரு கோணத்தில் உறங்கிக் கொண்டிருக்கி றார்கள்.

நாம் கண்களை மூடிவிட்டு உலகம் இருட்டில் இருக்கின்றது என்பது அபத்த மானது.

## 2. கோபம் எனும் போதை

"கோபம் என்பது பிறர் செய்யும் தவறு களுக்கு நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளும் தண்டனை" என்றார் புத்த பெருமான்.

மனிதர்கள் DNA எனப்படும் பராம்பரிய பதார்த்தங்களை உயிர் அலகில் கொண்ட வர்கள்.

மனிதனின் சகல இயல்புகளையும் DNA தீர்மானிக்கின்றது என்பது விஞ்ஞான ரீதியான நம்பிக்கை.

இவ் னுயேக்கள் பரம்பரை பரம்ப ரையாக கடத்தப்பட்டு வரும் பல தலைமுறை களுக்குச் சொந்தமான ஒன்றாகும்.

சொல்லப் போனால் ஒரு மனிதன் ஒரு மனிதனல்ல என்பதைப் போன்றதாகும். இது போலவே மனிதர்களும் கோபம், பயம், காமம், சந்தோஷம், சந்தேகம், குரோதம், அன்பு, பாசம் என பல உணர்வுகளை தம் மனங்களில் சுமந்தவர்கள்.

மனித மனம் என்பது வெங்காயத்திற்கு உருவகமானது. அதாவது மனம் எண்ணங் களை தனது தோலாக போர்த்திக் கொண் டுள்ளது. வெங்காயத்தினை உரிக்க உரிக்க எப்படி ஒன்றுமில்லாது தேய்கிறதோ அது போலவே மனமும் கொண்டுள்ள எண்ணங் களை நீக்கும் போது ஒன்றுமில்லாது போகும்.

ஒன்றுமே இல்லாத மனதை, நாம் எமது எண்ணங்களையும் உணர்வுகளையும் கொண்டு பிறரையும் எம்மையும் தேவை யில்லாது ஆட்டுவித்துக் கொள் கின்றோம். எனவே மனதை ஏக நிலையில் அதாவது ஒருநிலையில் வைத்திருப்பது தான் ஞானம் அடைவதற்கான ஒரே மார்க்க மாகும்.

ஞான நிலை என்பது தெளிவு நிலை என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எமது உடலையும் மனதையும் திடகாத்திரமாகவும் தெளிவுடனும் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

உடல் உள்ளத்தை பாதிக்கும்: உள்ளம் உடலை பாதிக்கும் என்ற உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

**கதை**

சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ள அபிராம் ஒருநாள் பஸ்சில் பயணப்பட்டார். செல்லும் வழியில் குடிகாரன் ஒருவன் பஸ்ஸை மறித்து ஏறிக் கொண்டான். அவனும் அபிராம் இருந்த சீற்றிலேயே போய் அமர்ந்து கொண்டான். குடிகாரன் யன்னலோரமாக இருந்த அபிராமை ஒரே அடியாய் கதையால் நச்சரித்துக் கொண்டு வந்தான். இடை இடையே வாந்தி எடுப்பது போல் தலையை வெளியே தள்ளிக் கொள்வது வேறு. பொறுமையுடன் அபிராம் "நீங்கள் யன்னல் ஓரமாக வந்து அமர்ந்து கொள்ளுங்கள்" என்றார்.

குடிமகன் சொன்னான் "வாந்தி வரும் போது நான் எடுத்துக் கொள்கிறேன். நீர் இரும்" என்றான். ஒவ்வொரு முறையும் அவன் அபிராம் மீது ஏறி ஜன்னல் வழியே தலையை நீட்டும் போதும் அபிராம் பதட்டத்தில் தடுமாறினார்.

அவன் எங்கே வாந்தி எடுக்கப் போறானோ என்று பயந்து கொண்டார்.

சம்பவம் நீடித்தது, சலித்துப்போன அபிராம் சினம் கொண்டு "வாந்தியை என் தலைமேல் எடு" என்றார். இவர்கள் இருவரையும் கவனித்துக் கொண்டிருந்த பின்னால் இருந்தவர்களில் ஒருவர் சொன்னார். "இந்த குடிகார பயல்கள் இருவரும் பஸ்ஸில் ஏறி செய்யிற கலாட்டா இருக்கே" என்றார்.

அடுத்தவர் ஒருபடி மேலே போய் அதிலும் யன்னல் ஓரமாக இருப்பவரை பாரும் பயங்கர குடிகாரன் போலும், தலைக்கு மேலேயே வாந்தி எடுக்கச் சொல்கிறார்.

அபிராமுக்கு வியர்த்துக் கொண்டது. சமூகத்தில் நல்ல பேர் எடுத்து நல்ல அந்தஸ்தில் உள்ள இவருக்கு இது தேவைதானா?

அற்ககோல் போதை என்றால் அகத்தில் இருக்கும் உணர்வுகளும் போதை தான். மனிதர் அவற்றை தம் கட்டுக்குள் வைக்காவிடில் மனிதரை அவை தம் கட்டுக்குள் வைத்துவிடும்.

இதேவேளை இன்னொன்றையும் புரிந்து கொள்ள வேண்டும்.

உணர்ச்சிகளை உணர்ச்சிகளாக வெளிப்படுத்தாவிடில், உணர்வுகள் நோயாக வெளிப்படும்.

உணர்ச்சிகளை வெளியிடுவது மனதத்துவம் என்றால் உணர்ச்சிகள் அற்ற நிலையே புனிதத்துவம் ஆகும்.

"பேச இருக்கும் வார்த்தைகளை மட்டுமே நாம் ஆளலாம்: பேசிய வார்த் தைகள் எம்மை ஆளும்"

## 3. ஒப்பிடாமை

உலகில் மனிதர்கள் பலவிதம் என்றால் அவர்கள் கடைப்பிடிக்கும் கொள்கைகள் ஒவ்வொன்றும் ஒருவிதம்.

எது எப்படி என்றாலும் அதில் அரிதாக சில தவறுகளும் இருக்கத்தான் செய்கிறது.

சிலர் சொல்வார்கள் போட்டி இருக்கணும் பொறாமை இருக்கக் கூடாது என்பார்கள். போட்டி போட்டு செயல்பட்டால்தான் வாழ்க்கையில் முன்னேற்றம் என்பவர்களே இவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகான் புத்தர் சொல்கிறார். என்னை நீ பிறருடன் ஒப்பிடும் போதெல்லாம் உன்னுடைய சக்தியை இழக்கிறாய் என்றார்.

பிறருடன் ஒப்பிடும்போது நம் சக்தியை இழக்கிறோம் என்பது ஒரு புறம் இருக்க நம்மையே நாம் இழக்கிறோம் என்பதாகும்.

அவனுக்கு கணக்கில் 80 எனக்கோ 50, அவன் வீடு வாங்கிவிட்டான், அவன் கார் வாங்கி விட்டான், நான் ஒரு மோர் கூட வாங்கலயே என்றெல்லாம் நம்மிடம் இருப்பவற்றையும் எம்மையும் நாமே குறையிட்டு கொள்கிறோம்.

நாம் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமாயின் உயர்வடைய விரும்பின் எம்மை எம்முடனேயே ஒப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஒரு மாணவன் இவ்வாறு சிந்திக்க வேண்டும்.

"இம்முறை நான் கணக்கில் 50 எடுத்து விட்டேன் எனவே நான் அடுத்த முறை இதைவிட அதிகமான புள்ளிகளை பெற வேண்டும்"

இவ்வகையில் ஒரு மாணவன் சிந்திப்பானாயின் இவ் எண்ணம் அவனை வாழ்க்கையில் பெரிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

இதை மாணவர்கள் மட்டுமல்ல இன்றைய பெற்றோர்களும் சிந்திக்க வேண்டும்.

இன்னும் ஒரு சிலர் இருக்கின்றார்கள், இவர்கள் தங்களையே தாங்கள் குறைபட்டுக் கொள்வார்கள்.

அவன் பணக்காரன் நான் ஏழை எனவே அவன் என்னை விட அதிகமாகவே தெரிந்து வைத்திருக்கிறான்.

அடுத்தவர் அதிகமாக தெரிந்து வைத்திருக்கிறார் என்பது உண்மையல்ல. அடுத்தவர் நாம் அறியாத ஒன்றை தெரிந்து வைத்திருக்கிறார் என்பதே உண்மை. அதே வகையில் நாமும் அடுத்தவர் அறிந்திராத மற்றவருக்கு புரியாத ஒன்றை தெரிந்து வைத்திருப்போம். எனவே இதை நாம் அறிந்து எம்மில் அத்திறமையை வளர்த்துக் கொள்வோமாயின் வாழ்க்கையில் உயலவடையலாம்.

ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட திறமைகள் இருக்கலாம். ஆனால் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் சமமாகவே இருக்கிறது என்றார் டாக்டர் அப்துல்கலாம்.

முள்ளிலே மலர்வதனால் ரோஜா உடன் உதிர்ந்துவிடுவதில்லை, சேற்றிலே மலர்வதனால் தாமரை சேறோடு ஒட்டி விடுவதில்லை.

பாலோடு கலந்தாலும் அன்னமது கலங்கி விடுவதில்லை

வாத்துக் குஞ்சல்ல வாளைக்கும் அன்னப் பறவை நாமென்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## கதை

ஓர் ஊரிலே ஒரு காக்கா இருந்திச்சாம். அது ரொம்ப மகிழ்ச்சியா இருந்திச்சு ஒரு கொக்கை பார்க்கும் வரை. அது கொக்கை பார்த்து சொல்லிச்சாம் "நீ வெள்ளையா எவ்வளவு அழகா இருக்காய், கறுப்பாய் இருக்கும் என்னை எனக்கு பிடிக்கவில்லை" என்றது.

நானும் அப்படித்தான் நினைத்தேன், கிளியை பார்க்கும்வரை.

அது இரண்டு நிறங்களில் எவ்வளவு அழகாய் இருக்கு தெரியுமா? என்றது கொக்கு. காகமும் கிளியிடம் சென்று கேட்டது. அதற்கு கிளி சொன்னது, உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நான் மகிழ்ச்சியாகத்தான் இருந்தேன். ஒரு மயிலை பார்க்கும் வரை. அது பல நிறங் களில் எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா? என்றது. உடனே காகமும் மயிலிருக்கும் ஒரு மிருககாட்சிசாலை சென்று மயிலை பார்க்க எண்ணியது. அங்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் மயிலை பார்க்க காத்திருக்க, காகம் நினைத்தது ம்ம்ம்! இதுதான் மகிழ்ச்சி என்று. அழகு மயிலே உனைக்காண இவ்வளவு பேர் வாறாங்க, என்னைப் பார்த்தாலே இவர்கள் முகத்தை திருப்பிக் கொள்கிறார்கள். என் னைப் பொறுத்தவரை நீ தான் உலகிலேயே அதிக மகிழ்ச்சியானவர் என்றது.

மயில் சொன்னது "அட காகமே நான் மிக அழகாக இருப்பதால் தான் சிறை உள்ளே இருக்கிறேன், உன்னைப்போல் நானும் ஒரு காகமாக இருந்திருந்தால் தினம் தினம் ஜாலியாக உலகை சுற்றி வருவேனே! கோபப் படுத்தாமல் ஓடிவிடு என்றது. காகம் மதிப் பிழந்தாலும் தன்னிலையை எண்ணி மகிழ்ச் சியுடன் பறந்து சென்றது.

நமக்கு எது நடக்கணுமோ அது ஒண்ணும் நடந்திடாம போகாது, எது நடக்கக் கூடாதோ அது ஒண்ணும் நடந் திடாது.

வாழ்க்கையில் ஒரு பிரச்சினைதான் இன் னொரு பிரச்சினைக்கு தீர்வாக இருக் கின்றது போன்ற ஆழ்ந்த உண்மைகளை புரிந்து கொண்டு நாம் ஒவ்வொருவரும் நிகரில்லா தவர்கள் என்பதை விளங்க வேண்டும்.

"உன்னை உன்னோடே ஒப்பிடு: நீயே உனக்கு என்றும் நிகரானவன்"

## 4. தன்னம்பிக்கை

பஞ்ச பூதங்களில் கலந்துள்ள இறை சக்தியின் ஒரு துகளே, மனிதர்கள் நம்மில் உயிர் சக்தியாக இருக்கின்றது.

மனிதன் நம்பிக்கை மயமானவன். நம் பிக்கை என்பது ஒவ்வொரு மனிதரின் இயல் புக்கும் தக்கபடி அவரிடம் காணப் படும் ஒன்றாகும்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகின்றாய் என்கிறது நம் சமயம். எனவே நாம் ஒவ்வொருவரும் எம்மில் நம்பிக்கை பெருகும் வண்ணம் எமது இயல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

யானை அதற்கு அதன் தும்பிக்கை பலம் என்றால் மனிதனவனுக்கு அவன் தன் மீது கொண்ட தன்னம்பிக்கையே அவனது பெரும் பலமாகும். வரலாற்றை, எந்த ஒரு வெற்றிச் சரித்திரத்தை புரட்டிப் பார்த்தாலும் அங்கு ஆணிவேராக இருப்பது என்னவோ நம்பிக்கை தான்.

ஆழ்மனதில் விதைக்கப்பட்ட நம்பிக்கை விதைதான் விருட்சமாகி சாதனைக் கனிகளை தருகின்றது.

ஒவ்வொரு மனிதரும் வெற்றுப் பாறைகள் போன்றவர்கள். ஆனால் அவர்கள் ஒவ்வொருவருள்ளும் நம்பிக்கை எனும் அழகிய சிலை உறங்கிக் கிடக்கும். நம்மை நாமே உளி போல் திடப்படுத்திக் கொண்டு பயம், பதட்டம், வெட்கம், அவமானம், புறக் கணிப்பு போன்ற கற்துகளை நீக்கி விட்டால் நம்பிக்கை எனும் அழகிய சிலையோடு நாமும் அழகாக காட்சி கொடுப்போம்.

ஒரு சில வகையினர் இருக்கிறார்கள், நான் தோற்றுவிட்டேன் எல்லாமே முடிஞ்சு போச்சு வாழ்க்கையே இருண்டு போச்சு என்ற மாதிரியெல்லாம் கதைப்பார்கள். தத்தித்தத்தி நடக்கத் தொடங்கும் குழந்தைகளைப் பாருங்கள். ஒன்றல்ல இரண்டல்ல எத்தனை முறை விழுந்து எழுகிறது. இவற்றிடையே எத்தனை அடிகள் எத்ததனை மோதல்களை அது சந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயானவள் தூக்கி தன்னோடு அணைத்துக் கொண்டாலும் அழுது குளறி மீண்டும் நடக்க முயற்சிக்கும். குழந்தைகளைப் போலவே நாம் ஒவ்வொருவரும் நம் முயற்சியிலும் இலக்கிலும் உறுதியாக நிற்க வேண்டும்.

தோல்விகள் வெற்றியின் இரகசியம் என்பதை புரிந்து கொண்டு தோல்வியில் இருந்து படிப்பினையைப் பெற்று தன்னம்பிக்கையோடு மீண்டும் மீண்டும் முயற்சித்து நம் இலக்குகளை அடைய வேண்டும்.

**கதை**

துணி துவைக்கும் தொழிலாளி ஒருவன் கழுதை ஒன்றை வளர்த்து தனது தேவைகளுக்கு பயன்படுத்தி வந்தான். அவன் கழுதையை நெடுங்காலமாக பயன்படுத்தி வந்தபடியால் கழுதை வலுவிழந்தது மட்டுமல்லாமல் வயதாகியும் இருந்தது. துணிகளை காவிச் செல்வதே அக் கழுதையின் பிரதான வேலையாக இருந்தது. ஒரு நாள் அவன் கழுதை மீது துணி மூட்டைகளை ஏற்றி துணி வைப்பதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றான். செல்லும் வழியில் நில மட்டத்தோடு இருந்த பாழடைந்த கிணற்றில் கழுதை தவறி விழுந்து விட்டது. சலவைக்காரன் துணிகளை எண்ணி கவலைப்பட்டானே தவிர கழுதை பற்றிய நினைப்பு சிறிதுமற்றவனாய் வயதானது தானே இதனால் என்னாகப் போகிறது என்றபடி அலட்சியம் செய்தான்.

அவன் தன் நிலையெண்ணி கிணற்றை மூடிவிட முடிவெடுத்தான்.

ஏனெனில் அவ்வொரு பாதையே அவனுக்கு ஆற்றங்கரைக்குச் செல்வதற்கான இலகு வழியாக இருந்தது.

எனவே அவன் போய் ஊரில் இருந்தவர்களையெல்லாம் கிணற்றின் பக்கமாய் அழைத்து வந்தான். அனைவருமாக சேர்ந்து கிணற்றை மூடத் தொடங்கினார்கள்.

ஒவ்வொருவரும் தன் பங்கிற்கு கிணற்றினுள் மண்ணை வெட்டி வாரி போட்டார்கள். மண்ணும் மணலும் புழுதியும் தூசியும் கழுதை மீது விழுந்தது.

நிகழ்வுகளை சுதாகரித்துக் கொண்ட கழுதை தன் மீது விழுந்த புழுதியையும் மணலையும் உதறிக் கொண்டு ஒவ்வொரு முறையும் போடப்பட்ட மண் மீது ஏறிக் கொண்டது. இவ்வாறே ஒவ்வொரு முறையும் செய்து கொண்டிருந்த கழுதை படிப்படியாக மண் மீது ஏறி மேலே வரத்தொடங்கியது. குறிப்பிட்ட நேரத்தில் கழுதை முற்றாக வெளியே வந்து விட்டது. இச் சம்பவத்தை எதிர்பாராத சலவைக்காரன் தன்னை எண்ணி வெட்கப்பட்டான்.

இக்கழுதை போலவே நாமும் நம்மீது விழும் புழுதிகளான பழி, அவமானம், புறக்கணிப்பு அனைத்தையும் உதறித்தள்ளி மேலே வர வேண்டும்.

நாம் வளரும் போது நம்மை மேய நினைத்த ஆடுகளெல்லாம் நாம் வளர்ந்த பின் நம் நிழலில் ஒதுங்கும் காலம் வரும்.

"தன்னம்பிக்கை இருந்தால் impossible என்ற வார்த்தையும் I'm possible ஆகும். பலவீனமும் பலமாகும்"

## 5. எங்கிருந்தும் கற்றுக்கொள்

வாழ்க்கை கடல் போல, ஆசை அலை போல, மனிதர் படகு போல்.

அலைமோதும் படகு ஆட்டம் கண்டாலும் நிமிர்ந்து நின்றால் கரையில் சேர்ந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய வாழ்வே நேற்றய மனிதரின் ஆசைக் கனவுதான் இல்லையா?

ஆசையே மாயை, மாயையே ஆசை, ஆசையே அழிவென்பதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். நன்றாக யோசித்துப் பாருங்கள். ஆதிகால மனிதர்களை, எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள் எத்தனை பிரச்சினைகளுக்கிடையில் வாழ்ந்திருப்பார்கள். உண்மையில் நாம் ஒரு பிரச்சினையில் இருந்தோ துன்பத்திலிருந்தோ மீள வேண்டுமாயின் அப் பிரச்சினையோ துன்பமோ இல்லாத வாழ்வை வாழ ஆசைப்பட வேண்டும், நினைக்க வேண்டும். இதைத்தான் சமயம் சொல்கிறது.

"நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகின்றாய்" என்று இதைத்தான் ஈர்ப்பு விதி என்பார்கள். ஈர்ப்பு விதி என்பது நாம் எமது எண்ணங்களாலும் நினைப்புக்களாலும் எதை எண்ணுகின்றோமோ அதையே அல்லது அவற்றையே எம்மை நோக்கி ஈர்த்தெடுத்து பெற்றுக் கொள்வோம் என்பதாகும்.

"அளவறிந்து ஆசைகொள்" என்பதெல்லாம் சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் உள்ளவர்கள் தாழ்நிலையில் உள்ளவர்களை அடக்குவதற்கு கையாண்ட யுக்தி போலவே தோன்றுகின்றது. இப்பிரபஞ்ச ஈர்ப்புவிதி எல்லா உயிர்களுக்கும் பொருந்தக் கூடிய ஒன்று. இதில் எவ்வுயிரும் விலக்கானது அல்ல.

"நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிடுவாய்" என்பது மட்டுமே இங்கே சத்தியமான உண்மை.

உதாரணமாக ஒரு மாணவன் நான் இம்முறை போட்டியில் தோல்வி அடையக் கூடாது என வேண்டிக் கொள்வானாயின் அவன் வெற்றியடைவது உறுதியல்ல. ஏனெனில் அவன் தோல்வியை தன்னை நோக்கி ஈர்த்துக் கொள்கிறான்.

தோல்விப் பயம் அவனை சூழ்ந்து கொள்ளும்.

மாறாக அவனது வேண்டுதல் எப்படி இருக்க வேண்டும் என்றால்

"இம்முறை நான் போட்டியில் பங்கு பற்றி சிறப்பான முறையில் வெற்றியடைய வேண்டும்" என்பதாக இருக்க வேண்டும். இம்முறையில் பிரார்த்திக்கும் போதுதான் அவனால் தன்னை நோக்கி வெற்றியை ஈர்க்க முடியும், வெற்றிக்காக போராட முடியும்.

இறைவனிடத்தில் நாம் செய்யும் பிரார்த்தனைகள் ஈர்ப்பு விதிக்கமைய செயற்படும் ஒன்றாகும்.

நாம் ஒரு செயலை செய்யும் போது அச் செயலை ஏன் செய்கின்றோம் என்பதை உணர்ந்து செய்தால் நாம் விழிப்படைந்துள்ளோம் என்பது பொருள். அதேபோல் ஒரு சொல்லைச் சொல்லும்போது கூட அதை ஏன் சொல்கின்றோம் என்பதை விளக்கிச் சொன்னாள் நாம் விழிப்படைந்துள்ளோம் என்பது பொருள்.

நாம் விழிப்படைய உதவுபவை நாம் கற்ற கல்வியாகும்.

மனிதன் கற்ற கல்வியால் அறிவினை வளர்த்துக் கொண்டு பெற்ற அறிவினை சமூகத்தில் ஆற்றலாக வெளிப்படுத்த வேண்டியது அவன் கடமையாகும்.

அதாவது கற்றல் அறிவு ஆற்றல் என்றபடி பாய வேண்டும்.

சமூகத்தில் ஆற்றலாகாத அல்லது ஆக்கத்தினை உண்டு பண்ணாத எந்தக் கல்வியாலும் பயன் எதுவும் இல்லை. அத்தகைய கல்வி ஏட்டுச்சுரக்காய்க்கு ஒப்பானதாகும். "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள் ளும்போது நாம் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு நிமிடமும் வளர்ந்து கொண்டு இருக்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## கதை

அரசன் ஒருவனுக்கு முட்டாள் என்று பெயர் எடுத்த மகன் ஒருவன் இருந்தான். இதை பொறுக்க முடியாத மன்னன், இந்நாட் டிலேயே சிறந்த ஞானி ஒருவரை தேர்ந் தெடுத்து அவரிடம் குருகுலக் கல்விக்காக மகனை அனுப்பி வைத்தார்.

ஞானியும் தனக்கு தெரிந்த வித்தைகளையெல்லாம் அவனுக்கு சொல்லிக் கொடுத்தார்.

பன்னிரண்டு ஆண்டுகள் கல்வி முடித்து மகன் அரண்மனை திரும்பினான். மகனை பார்த்ததும் மன்னனுக்கு பெருமையில் கர்வம் வந்துவிட்டது.

ஒரு நாள் ஊர் மக்கள் முன்னிலையில் தன் மகனை நிறுத்தி அவன ் திறமையால் மக்களின் கேலிப் பேச்சுக்கு சரியான அடி கொடுக்க நினைத்தான்.

குறித்த நாளும் வந்தது. மகன் அரச சபையில் வந்து நின்றான்.

"என் மகன் திறமையை சோதிப்போர்கள் சோதித்துக் கொள்ளலாம்" என்றான் மன்னன்.

கூட்டத்திலிருந்து பெரியவர் ஒருவர் முன்வந்து "உன் கண்களை மூடு" என்றார்.

பெரியவர் தன் கையிலிருந்த மோதிரம் ஒன்றைக் கழற்றி அவன் உள்ளங்கையில் வைத்து கைகளை இறுகப் பொற்றி விட்டார். "உன் கையில் இருக்கும் பொருள் பற்றி கூறு பார்க்கலாம்" என்றார்.

"இதுவட்ட வடிவமானது, இதை நடுவில் துளை ஒன்று உள்ளது. இது உலோகம் ஒன்றால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்" என்றெல்லாம் கூறிய மகன் கடைசியில் சொன்னான், "இது ஒரு வண்டிச் சில்லாகத்தான் இருக்க வேண்டுமென்று" அறிவு எங்கு இருந்தும் கிடைக்கலாம் ஆனால் புத்திசாலித்தனத்தை யாராலும் கற்றுத் தர முடியாது என்பது இக் கதையில் இருந்து விளங்கும்.

புத்திசாலித்தனம் என்பது நமக்குள் இருக்கும் சுய ஒளி கொண்டு நாமாக தேடிக் கொள்ள வேண்டிய ஒன்று என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

" நீ கல்லாக இருந்தாலும் கற்ற கல்வி உன்னை சிறப்பாகச் செதுக்கி விடும்"

எப்பொருள் யார் யார் வாய்க ் கேட் பினும் அப்பொருள் :மெய்ப் பொருள் காண்ப தறிவு

❖ நேற்று என்பது அனுபவம்,
இன்று என்பது நிகழ்வு ,
நாளை என்பது நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்ஹாரம்

**பூ.சிவரூபன்**
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்
பேராதனை பல்கலைக்கழகம்

கந்தசஷ்டி விரதத்தின் முக்கியமான தொரு அம்சம் தான் சூரசம்ஹாரம். திருச் செந்தூரில் முருகன் சூரனை வதம் செய்தார், இது கந்தபுராணத்தில் வரும் செய்தி. இதைக் கூறிக் கொண்டிருக்கும் போது ஒருவர் என்ன செய்தார் என்றால் சூரனை முருகப் பெருமான் தன்னுடைய வேலினால் குத்திக் கொன்றார், கொலை செய்தார் என்று பேசிக் கொண்டிருந்தார். ஆனால் அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் இவர் ஆன்மீகத்தில் மிகுந்த பற்றுடையவர் விளக்கம் கூறு கின்றார். சம்ஹாரம் என்பது கொலை செய்தல் அல்ல என்று ஒரு அருமையான விளக்கம் கொடுக்கிறார் அதைப் பற்றி இங்கு நோக்குவோம்.

சம்ஹாரம் என்பது அழித்தல் அல்லது ஒழித்தல் என்று நாம் புரிந்து கொண்டி ருக்கிறோம். சம்ஹாரம் என்பதன் உண் மையான தத்துவம் சமஸ்கிருதத்தில் மாலை எனவும் தமிழில் ஆரம் எனவும் பொருள் படும். தனித்தனியாகக் கிடைக்கப் பெறுகின்ற பூக்களை ஒன்றாக்கி ஒழுங்கு படுத்தி மாலையாக மாற்றுதல் ஆரம் ஆகும். அதை மிகவும் அழகாகவும் சிறப்பாகவும் செய்வது சம்ஹாரம். அப்படியாயின் இதில் எங்கு அழித்தல் என்ற பொருள் புலப்படு கிறது? ஆக்கம் தானே வருகிறது. உதிரியாகக் கிடந்த பூக்களை ஒன்றாக்கி ஒழுங்குப டுத்துவதுதான் ஹாரம்.

ஆகவே பண்பில்லாமல் ஆணவம் கொண்டிருந்த சூரபன்மனை அடக்கி ஒடுக்கி ஒழுங்குபடுத்தி வாகனமாகவும் கொடி யாகவும் முருகப்பெருமான் மாற்றிக் கொண்ட வரலாறே சூரசம்ஹாரம் என அழைக்கப்படுகிறது. எனவே சூரனை அழிக்க வில்லை சூரனின் ஆணவத்தை அடக்கினார், அவனை பக்குவப்படுத்தி அவனது பகைமை உணர்ச்சியை போக்கினார். இதுவே உண்மையான கருத்து என்றார் பெரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபன்மன் ஆணவத்தின் உச்சியில் இருந்தார். ஆணவத்தின் அடையாளம் தான் சூரபன்மன். கந்தபுராணம் என்பது வேறு எங்கும் இல்லை. நமது ஐந்து விரல்களையும் விரித்துப் பார்த்தால் சிறிய விரல் - கடவுள், ஆட்காட்டி விரல் - மனிதன், நடுவிரல்- ஆணவம், மோதிர விரல் -கன்மம், கடைசி விரல் - மாயை இந்த மூன்று விரல்களிலிருந்து மனிதனாக இருக்கும் ஆட்காட்டி விரல், கட்டை விரலுடன் இணைந்திருக்கும். அதாவது கடவுளுடன் இணைய வேண்டும். இதுவே சின்முத்திரை சிவன் காட்டும் சின்முத்திரை இதுதான். கந்தபுராணம் கடைசி விரல் தான் தாரகாசூரன், மோதி ரவிரல் -சிங்கமுகாசூரன் நடுவிரல் தான் சூரபன்மன்.

ஆணவம் இருந்தால் மனிதனுக்கு அழிவு தான். அதையே ஆங்கிலத்தில் ஈகோ என்கிறோம்.

தீப்பெட்டியும் தீக்குச்சியும் பேசிக் கொண்டன. இதன்போது தீக்குச்சி கேட்டது நாம் இருவரும் உரசிக் கொள்ளும்போது நான் தீப்பிடிக்கிறேன். தீப்பெட்டி நீ தீப்பிடிக் கவில்லையே என்றது. இதற்கு தீப்பெட்டி கூறியது. உனது மண்டைக்கனம் தான் தலையில் சுத்தியிருக்கும் மருந்து காரணமாக எரிந்து போகிறாய். என்னினுள் இருக்கும் போது சிறந்தவனாக இருக்கிறாய் வெளியே வரும்போது என்னையே உரசுகிறாய் அதனால் அழிந்துபோகிறாய் என்று தீப் பெட்டி ஆலோசனை கூறியது. ஆகவே ஆணவம் இல்லாது வாழ்வது தான் சிறந்தது. சைவ சமயத்தவராகிய நாங்கள் வாழ்வியல் ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும். ஆணவம், பொறாமை ஆகிய குணங்களை விடுத்து நன்றியுணர்வோடு ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ வேண்டும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையினும்
தெய்வத்தினுள் வைக்கப்படுவார்"

**சுவாமி விவேகானந்தர் சிந்தனைத் துளிகள்!**

❖ மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.

❖ மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கு வகைகள்

**மாரிமுத்து பிரசாந்**
AHS
பேராதனைப் பல்கலைக்கழகம்

1. வெண்கல விளக்கு-பாவம் போகும்
2. இரும்பு விளக்கு- சனிக்கிழமையில் இரும்பு அகலில் தீபம் ஏற்றுவது சனீஸ்வர பகவானுக்கு பிரதீயாகும்
3. மண் விளக்கு-வீரிய விருத்தி அளிக்கும்
4. வெள்ளி/ பஞ்சலோக விளக்கு - இவை பூஜைக்கு உகந்தவை சிறப்பைத்தரும்.

### விளக்கு ஏற்ற உகந்த எண்ணெய் வகைகள்

1. நெய் - சகல செல்வமும் பெருகும். நலனும் உண்டாகும். முருகன் சந்நிதியில் நெய் விளக்கு ஏற்றுவது மரபு.
2. நல்லெண்ணெய் - நல்லெண்ணெய்யில் விளக்கு ஏற்றினால் எல்லாப் பீடையும் விலகும். யம பயம் இருக்காது.
3. ஆமணக்கு எண்ணெய் - சகல சமபந்தும் உண்டாகும்.
4. ஐந்து வகை எண்ணெய் - நெய், விளக்கு எண்ணெய், இலுப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய் ஆகிய ஐந்தையும் விளக்கில் ஊற்றி ஒளி மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்வதால் தேவியின் அருள் பூரணமாக கிடைக்கும்.
5. கடலை எண்ணெய் - விளக்கு ஏற்றக் கூடாது.

### குத்துவிளக்கு ஏற்றும் முறைகளும் தத்துவங்களும்

பெண் திருமணமாகி புகுந்த வீடு செல்லும் போது அந்த வீட்டிற்கு விளக்கை ஏற்றச் செல்வதாக பேசப்படும். விளக்கின் ஐந்து முகங்களும் பெண்ணுக்கான ஐந்து இலக்கணங்களை குறிப்பதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பெறுமை
2. சகிப்புத்தன்மை
3. விட்டுக்கொடுக்கும் தன்மை
4. சமயோசித புத்தி
5. வைராக்கியம் (நல்ல காரணங் களுக்காக)

## விளக்கை நிறுத்தல்

விளக்கு தானாக அனையாவிட்டால் அதை பூவால் ஒற்றி அனைக்க வேண்டும். வாயால் ஊதியோ, கையால் விசிறியோ அனைக்கக் கூடாது.

விளக்கை அனைச்சிடு என்று சொல்லக் கூடாது. விளக்கை பெரிசுபடுத்து, விளக்கை அமர்த்து, விளக்கை குளிரவை போன்ற மங்கல சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

விளக்கை தூக்கிவை என்று சொல்வதற்கு பதிலாக விளக்கை நகர்த்திவை என்று சொல்ல வேண்டும்.

வீட்டில் ஏற்றப்படும் திருவிளக்கே இலட்சுமி கடாட்சமாகும். மாலை 6 மணிக்கு பின் கதவை சாத்தி விட்டு முன் கதவை திறந்து வாசலில் நீர் தெளித்து கோலமிட்டு வீட்டில் விளக்கு ஏற்றப்படும். இதன் பொருள் முன்வாசல் வரும் இலட்சுமி பின்வாசல் வழியால் சென்று விடக்கூடாது என்பது தான். தீபன் ஏற்றியபின் கதவு திறக்கப் படலாம். அதாவது இலட்சுமி தீ ஒளியாக வீட்டில் திகழ்கின்றாள்.

### நீதி

தாமதப்படுத்தப்படும் நீதி
மறுக்கப்பட்ட நீதிக்கு
ஒப்பானது.

அவசரத்தில் செய்யப்படும் நீதி
சில வேளைகளில் தவறாகச்
சென்று விடுகிறது.

நீதியைச் சரியாகச் செய்வது
மட்டுமல்ல, முக்கியமாகச்
சரியாகச் செய்ததாக அது
தோன்றவும் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோம் - தமிழராய்
# வாழ வைப்போம் - தமிழ் கலாசாரத்தை

**அபிராமி சிவகுமார்**
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்
2016.:.2017

நெற்றியில் திலகம் இன்றி நீண்ட கருங்கூந்தல் பின்னாது குட்டைப் பாவடை, சட்டை அணிந்து குதுகலமாய் பெண்ணியம் பேசும் பெண்ணைப் பார்த்து "எங்கே என் புதுமைப் பெண்கள்? எங்கேயும் தேடிப் பார்க்கிறேன் காணவில்லையே...." என்கிறார் புரட்சிகவி பாரதியார் என்கிறது கவிதை. இவை அழகான கவிதை வரிகளின்றி ஆழமான வரிகளும் கூட. இன்று எம்மில் பல பெண்கள் "பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக நியதி" என சொல்லியவாறே எமது தொன்மையான இந்து தமிழ் கலா சாரத்தை விட்டு எங்கோ சென்று கொண்டு இருக்கிறோம்.

எம்மை ஆண்ட அந்நியர் எம் தற்காப்பு கலைகள், ஆபூர்வ மருத்துவ முறைகள், வழிபாட்டு முறைகள், வாழ்வியல் முறைகள் செல்வங்களைக் கண்டு ஆச்சரியம் அடைந்து அவற்றை எடுத்துச் சென்று ஆய்வுகளைச் செய்து அவற்றின் அறிவியல் விளங்கி, அவற்றை தமதாக்கி, புதிதாக்கி உரிமை கொண்டாட, அவன் விட்டுச் சென்ற அவனது எச்சங்களை நாகரிகம் என்ற பெயரில் தவறாக எண்ணி நம் அன்றாட வாழ்வை அறிவியலோடும் உளவியலோடும் தரும் நம் அழகிய தழிழ் கலாசாரத்தை விட்டுச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதே கவலை தரும் விடயமாகும்.

ஆதியில் தோன்றிய செம்மொழி யான எம் தமிழ் மொழியும் அதன் கலா சாரமும் வெறுமனே அழகியலை மட்டுமன்றி அபூர்வ விஞ்ஞான அறிவியலையும் கொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பெண்ணியம் என்ற வார்த்தை வலுப்பெற்று பேச்சுப் பொரு ளாய் மாற முன்பே "ஆணுக்குப் பெண் நிகர் என அர்த்த நாதீஸ்வரராய் இறைவன் இருந்து உமைக்கு தன்னில் இடப்பாகம் (இதயத்தை) அளித்து பெண்ணிற்கு பெருமை சேர்த்த இந்துமதம். கல்வி, செல்வம், வீரத்திற்கான தெய்வங்களாய் பெண்களைக் குறிப்பிடு வதும் பூமி, கங்கை என உயிரற்ற உன்னத பொருட்களை பெண்ணாய் உருவகித்து பெருமை சேர்க்கிறது எம் இந்து தமிழ் கலாசாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இந்து தமிழ் கலாசாரம் தமிழ்ப் பெண்களாகிய எம்மை அதிகாலையில் துயில் எழுந்து நீராடி இறைவழிபாடு செய்து திருநீறு பூசி, திலகம் இட்டு, தலையில் பூச்சூடி, தங்க நகைகள், மூக்குத்தி, காற் சலங்கை அணியச் சொல்கிறது. இவற்றை அழகியலாகவோ, பழமையாகவோ பார்க் கும் எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அதில் ஒளிந்திருக்கும் விஞ்ஞான விளக்கங்கள்.

அதிகாலையில் துயில் எழுவதால் மன அழுத்தம், இரத்த அழுத்தம் ஏற்படுவதற் கான சந்தர்ப்பம் குறைவடைகிறதுடன் மூளை நரம்பியக்கங்கள் சீராக செயற்படும். மூளை சுறுசுறுப்பாக இயங்கும். இதனால் தன்னம்பிக்கையும் உற்சாகமும் அதிகரிக்கும். இதனாலேயே எமது முன்னோர் சூரிய உதயத்தின் முன்னர் எழுந்திருப்பதும் சூரியன் மறைந்த பின்னர் படுக்கைக்குச் செல்வதும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால் இரவையும் பகலாக்கும் இன்றைய நவீன வாழ்க்கை முறையில் தூக்கம் தொலைந்து அவதிப்படுகிறோம். இதனால் மனஅழுத்தம், இரத்த அழுத்தம் என்பன ஏற்படுகின்றன.

இறைவழிபாடு செய்து நாம் அணியும் திருநீறு தீய அதிர்வுகளிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. நாம் வெளியில் செல்லும் போது அங்கிருக்கும் அதிர்வுகளை பல வழிகளில் எமது உடல் ஏற்றுக் கொள்கிறது. இது ஏழு சக்கரங்கள் வழியாக நிகழ்கிறது. அதனால் தான் திருநீறு இட்டுக் கொள்ளும் வழக்கம் கலாசாரத்தில் இருந்து வருகிறது.

பசுவின் சாணம் மற்றும் சில பிரத்தியேக பொருட்கள் கலந்த கலவையின் சாம்பல் தான் விபூதி. இதற்கு நல்ல அதிர்வுகளை தாங்கும் திறன் உண்டு. விபூதி இட்டுக் கொள்ளும் போது வாழ்வின் உயர்ந்த அம்சங் களை ஈர்த்துக் கொள்ளலாம். நம்மைச் சுற்றிலும் தெய்வீகத் தன்மை உண்டாகும். இதனால் தீயவற்றைத் தவிர்க்க முடியும். விபூதி அணியும் இடத்திற்கேற்ப அதன் பலன்கள் வேறுபடும். புரவ மத்தியில் (அக்ஞா சக்கரம்) திருநீறு அணிவதன் மூலம் வாழ்வின் ஞானத்தை ஈர்த்துக் கொள்ளலாம். தொண்டைக்குழி (விசுத்தி சக்கரம்) யில் அணிவதன் மூலம் தெய்வீக அன்னைப் பெறலாம். நெற்றியில் பொட்டு, அல்லது குங்குமம் வைப்பது மங்கல சின்னமாகக் கருதப்படுகின்றது. இரு புருவங்களுக்கும் மத்தியில் உள்ள இடம் நெற்றிப் பொட்டு என அழைக்கப்படுகிறது. மருத்துவ ஆய்வுகளின் படி நினைவாற்றலுக்கும், சிந்திக்கும் திறனுக்கும் உரிய இடம். இதனை யோகக் கலை அக்ஞா சக்கரம் என்கிறது. இந்த இடம் எமது மனித உடலின் சக்தியை மின்காந்த அலைகளாக மாற்றி வெளிப்படுத் துகிறது. நெற்றியில் இடும் திலகம் அந்தப் பகுதியை குளிர்விப்பதோடு எமது உடலில் இருந்து சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கிறது. தீய சக்திகள், தீய எண்ணங்கள் எம்மை அணுகாமல் தடுக்கும் ஆற்றல் உண்டு.

பூச்சூடிப் பொட்டு வைத்துக் கொள்வது வெறுமனே அழகை அதிகரிக்க மட்டுமின்றி தலையில் பூச்சூடிக் கொண் டால் ஒரு விடயத்தைப் பல கோணங்களில் பார்க்கும் தன்மையைக் கொடுக்கும், மன அழுத்தத்தால் கல இறப்பைத் தடுக்கிறது. பூவின் மண மானது உடல் கலங்களுக்கு புத்துணர்வை அளித்து மன மகிழ்ச்சியைத் தருகிறது. சுமங்கலிப் பெண்கள் அணியும் முக்கிய அணிகளங்கலாவன. தாலியும் மெட்டியும். இவை பெண்களுக்கு பெருமையும் மங்க ளமும் தரக்கூடிய அணிகலன்களாகும். ஆதி காலத்தில் தாலிக்கயிறு என்பது மஞ்சள் கயிறாக மட்டுமே இருந்தது. ஆனால் தற்போது பலர் தங்கத்தில் தாலிக்கயிறு செய்து அணிகின்றனர். ஆனால் தாலிக் கயிற்றை மஞ்சள் கயிறாக அணிவதன் காரணம் ஆச்சரியப்பட கூடிய அதிசய விஞ் ஞான விளக்கத்தை கொண்டது. தினமும் குளிக்கையில் பெண்கள் மஞ்சள் கயிற் றாலான தாலிக்கு மஞ்சள் தடவுவார்கள். திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் ஆன சில மாதங்களிலேயே பெண்கள் கர்ப்பம் தரிக்கையில் அவர்கள் அணிந்துள்ள தாலிக்கயிற்றின் மஞ்சள் தாயை யும் சேயை யும் காப்பதோடு பெண்களின் மார்பகத்தில் எந்தவொரு நோயும் வராமல் தடுக்கக் கூடியது.

திருமணமான பெண்கள் அம்மி மிதித்து அணிந்து கொள்ளும் மெட்டியினை கால் பெருவிரலிற்று அடுத்த விரலில் அணிவர். இதற்கான காரணமுண்டு. கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் தான் கருப் பையின் நரம்பு நுனிகள் வந்து முடிவடை கின்றன. இம் மெட்டி நடக்கும் போது அழுத் தப்படுவதனால் உடலை புத்துணர்ச்சியாய் வைத்திருக்க உதவும்.

பெண்கள் அணியும் நகைகளுள் தோடும் மூக்குத்தியும் துவாரம் ஏற்படுத்தியே அணியப்படுகின்றன. முன நெற்றிப்பகுதியி லிருந்து சில நரம்புகள் சிறிய ஆலம் விழு துகள் போல கீழே வரும். இவை மூக்குப் பகுதியில் துவாரத்தை ஏற்படுத்தி அதில் தங்க மூக்குத்தி அணிவதால் அந்தத் தங்கம் உடலின் வெப்பத்தை கிரகித்து தன்னுள் அகத்துறிஞ்சி கொள்ளும்.

மூக்குத்தி குத்துவதால் பெண்களுக்கு ஏற் படக் கூடிய சளி, ஒற்றைத்தலைவலி, பார்வைக் கோளாறு சரி செய்யப்படுகின்றது. சாஸ்திர ரீதியில் பெண்கள் இடப்பக்கம் தான் மூக்குத்தி அணிய வேண்டும் என்கிறது. இதனால் சிந்தனா சக்தியை நிலைப்படுத்த முடிவதுடன் மனதை அமைதிப்படுத்தி மனத் தடுமாற்றம் ஏற்படாமல் இருக்க உதவும்.

தங்க அணிகலன்களை அணிவதால் உடல் வெப்பத்தை குறைத்து உடலில் ஏற்படும் அதிக வெப்பம் உணர்ச்சியாக பிரவாகம் தடைப்பட்டு உடல் சமநிலை அடைகிறது.

பொதுவாக எல்லா அணிகலன்களையும் தங்கத்தில் அணியும் நாம் காலில் அணியும் கொலுசை வெள்ளியில் தான் அணி கின்றோம். தங்கத்தில் மஹாலட்சுமி இருப் பதாக கருதுவதினாலேயே காலில் தங்கம் அணிவது கிடையாது. காலில் வெள்ளியில் கொலுசை அணிகின்றோம். வெள்ளி நகை கள் நம் உடல் சூட்டை அகற்றி குளிர்ச்சி யாக்கி சருமத்தை ஆரோக்கியமாக்கும். உணர்ச்சி வசப்படுவதலை குறைக்கும் வெள்ளி கொலுசு குதிக்கால் நரம் பினை தொட்டு கொண்டிருப்பதால் குதிக் கால் பின் நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்ச்சிகளை குறைத்து கட்டுப்படுத்து வதோடு இடுப்பு பகுதியை ஸ்திரப்படுத் துகிறது.

இவ்வாறு ஆயிரம் அபூர்வ விஞ்ஞான விளக்கங்களை கொண்டது எம் தமிழ் கலாசாரம். பிறநாட்டு நல்லறிஞர் சாத் திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. திறனான புலமையெனில் வெறிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும் என்கிறார் என் இனிய பாரதியார். இவை வெறுமனே தமிழ் மொழிக்கு மட்டுமே இன்றி அதன் கலாசாரத்திற்கும் பொருந்தும்.

தமிழ் கலாசாரத்தையும் அதன் பெருமை களையும் உலகிற்கு உணர்த்த வேண்டிய தலையான கடமை தமிழர் ஆகிய எம் அனைவருக்கும் உண்டு. அதிலும் குறிப்பாக நாட்டின், வீட்டின், கலாசாரத்தின் செல்வ மாகவும் அடையாளமாகவும் கருதும் பெண் களுக்கு உண்டு என்பதை மறத்தலாகாது.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம்

**பாலசுந்தரம் பிறேமன்**
1ம் வருடம் (2016.:.2017)
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்

இவ்வுலகில் உள்ள சமயங்கள் அனைத்தும் கடவுள் எனப்படும் எம்மை மீறிய சக்தியின் துகள்களே ஆகும். இம் மானிடப் பிறவி எமக்கு வழங்கப்பட்டதன் நோக்கம் யாதெனில் மீண்டும் தம் உண்மை நிலையாகிய கடவுளை அடைவதே ஆகும். அவ் வகையில் மனிதனாக பிறந்த ஒவ்வொரு வரும் இப் பூமியிலே ஏதோ பிறந்தோம். ஏதோ வாழ்ந்தோம் என்று இல்லாமல் தனக்கென ஒரு தனித்துவத்தை விட்டுச் செல்வதே முறையாகும். "வையத்தில் வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படுவான்" என்பது சான்றோர் கூற்று. வாழ்வாங்கு வாழுதல் என்பதனையே ஒவ்வொரு மதமும் பல்வேறு கோணங்களில் மனிதனிற்கு கற்பிக்கின்றது. மதம் என்னும் சொல்லின் பொருள் மார்க்கம் ஆகும். மார்க்கம் என்பது ஒவ்வொருவரும் பயணிக்க வேண்டிய சரியான பாதையாகும். அதாவது இறைவனை அடையும் மார்க்கமாகும். அதுவே மதமாகும். சனாதன தர்மம் என தர்மத்தில் பெயர் பெற்றதே இந்து மதமாகும். இந்து என்ற பெயர் சனாதன தர்மத்திற்கு அந்நியரால் வைக்கப்பட்டதாகும். அதுவே தற்போது எம்மதத்தின் பெயராகி விட்டது.

அந்த வகையில் இச் சிறு கட்டுரையில் என்னால் முடிந்த அளவில் நான் அறிந்து கொண்டவற்றை வைத்து இந்து மதத்தின் பால் பொதிந்துள்ள சிறப்புக்களையும் உண்மைத் தன்மையையும் உள்ளார்ந்தத் தையும் கூறலாம் என விளைகிறேன். இந்து மதம் அல்லது இந்து எனும் சொல் அந்நி யரால் சூட்டப்பட்ட ஒன்றாகும். ஆரம்ப காலங்களில் இந்தியாவின் சரஸ்வதி நதியினை மையமாகக் கொண்டு தோன்றிய நதிக்கரை நாகரிகங்களிலே சனாதன தர்மம் எனும் பெயரில் இந்து மதம் தோன்றியதாக வரலாறும் ஆய்வராச்சிகளும் கூறுகின்றன. பின்னர் இந்து மதம் இந்தியா முதல் உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை விரிவடைந்தது. அன்று வாழ்ந்த மக்கள் வாழ்வின் இரகசியத்தை அறிந்தவர்களாக இருந்தனர். பணம், பற்று என்பவற்றை துறந்து ஆன்மீக நெறியில் ஆண்டவனை அடையும் வழியை அறிந்திருந்தனர். அதனாலேயே அவர்கள் எமக்களித்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் என்பவற்றின் உள்ளார்ந்தம் ஆழமாக அமைந்துள்ளது. இன்று மனிதன் விஞ்ஞானம் மூலம் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகள் அனைத்தும் ஏற்கனவே கண்டறியப்பட்டவை என்பதற்கு இந்துமதம் பல இடங்களில் சான்று பகிர்கிறது. அதனால்தான் என்னவோ இப்போது கண்டுபிடிப்பு என புதிய விஞ்ஞான தயாரிப்புக்களை கூறுகிறோம்.

கண்டு பிடித்தல் என்பது ஏற்கனவே இருந்த ஒன்றை வெளிக் கொணர்தல் ஆகும். உதாரணமாக விமானம் எனும் கண்டுபிடிப்பு ரைட் சகோதரர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தக் கண்டு பிடிப்பிற்கு முன்னோடியாக இந்து இலக்கியமான இராமாயணம், இராவணனின் புஸ்பக விமானம் பற்றி பல நூற்றாண்டிற்கு முன்னரே கூறியிருக்கிறது. இதன் அர்த்தம் தான் என்னவென சிந்தித்துப் பாருங்கள். "வையகம் போற்ற வாழ்பவனே இந்து" ஆம், இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவரும் போற்றுதலுக்கு உரியவர்களே. வேறெந்த மதமும் பெற்றிராத சிறப்பு நம் இந்து மதத்திற்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்துமதம் என்பது ஒரு மகாசமுத்திரமாகும். இதன் ஆழம், அகலப் பரிமாணங்களை எவரும் இதுவரைக்கும் கண்டதில்லை. ஆதியானதும் அநாதியானதுமான மதம் இந்து மதமாகும். அர்த்தமுள்ள நம்பிக்கைகளின் பல அன்பெனும் ஒற்றைப் பேற்றினை நிலை நிறுத்தி வாழ்வியலை கற்பிப்பதில் இந்து மதமே முன்னிற்கின்றது.

சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம் மற்றும் ஸ்மார்த்தம் போன்ற பல பிரிவுக் கட்டுப்பாடுகளுடன் இரும்புக்காலம் தொட்டு கிறிஸ்துவுக்கு முன்னரே தோன்றிய ஒன்றாகும். இதனாலேயே இது உலகின் மிகப் பழமையான மதம் எனப் போற்றப்படுகிறது. இந்து மதத்தின் தோன்றல் வரலாற்றுக் கூற்றுகளின்படி "வேதகாலம்" என்று அழைக்கப்படும் கி.மு 1900- கி.மு. 1400 ஆண்டு வரையான காலமாகும். மனிதன் பூமியில் தோன்றிய காலம் தொட்டு இந்து மதமும் தோன்றியது என்றும் அனைத்தும் சர்வவல்லமை மிக்க கடவுள் எனும் ஒருவரால் படைக்கப்பட்டன எனும் சிறப்பு படைப்ப கொள்கையோடு இந்து மதம் சான்று பகிர்கிறது. என்ன தான் டார்வினின் கூர்ப்புக் கொள்கையும் உயிர் இரசாயன கூர்ப்புக் கொள்கையும் வாதிட்டாலும் சிறப்புப்படைப்புக் கொள்கையே நம்புவரும் உண்டு. அந்த அளவிற்கு சான்றுகளை கொண்டது நம் இந்து மதம். இவ் வரலாற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டுமாயின் வேதம், உபநிடதம், பகவத்கீதை, தேவார புராணங்கள், நாயன்மார் வரலாறு என்பவற்றை கற்பதனாலேயே அறிந்து கொள்ள முடியும். இந்து மதத்தின் புனித நூலாகக் கருதப்படும் கிருஷ்ண பரமாத்மா அருளிய ஹீமத் பகவத் கீதையே உலக சமய நூல்களினுள் மனிதனுக்கு இறைவனை முழுமையாக உணரச் செய்கிறது. எந்தவித மத மாற்றக்கருத்துக்களையும் கொள்கை களையும் கொண்டிராத நூல் இதுவாகும். வேறு நூல்களில் இதனை நாம் காண முடியாது. அத்துடன் எந்தவொரு சமய நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அம்மதத்தை ஸ்தாபித்தவர்களால் எழுதப்படவில்லை என்பது சிந்தனைக்குரிய உண்மையாகும். பிறிதொருவரால் சிறிது காலத்தின் பின்னரே அவை எழுதப்பட்டன. எனவே அவற்றில் பொதிந்துள்ள வரலாற்று நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படாத ஒன்றாகவே இருந்துவரும் நிலையில் இயற்கை மீது கொண்ட பயத்தினாலே கடவுள் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. இவ் இயற்கை முறை வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்துமத வரலாறு ஆரம்பிக்கின்றது. இப் பிரபஞ்ச உள்ளடக்கம் அனைத்துமே பஞ்ச பூதங்களின் கூறுகளிலே என ஆரம்பத்திலிருந்து உணர்த்துகிறது இந்து மதம்.

இறைவனை நண்பனாவோ, தாய், தந்தையாகவோ, காதலனாகவோ, காதலியாகவோ, சகோதரனாகவோ, வழிகாட்டியாகவோ கருதி வழிபடும் முறை இந்து மதத்தில் தான் உண்டு. உதாரணமாக தாயாக அம்மன், தந்தையாக சிவன், வழிகாட்டியாக கிருஷ்ண பரமாத்மா என நீண்டு செல்கிறது. இப்பட்டியல் இதுவே ஒரு பக்தனுக்கும் இறைவனுக்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் மார்க்கமாகும். இறைவனை தன் உறவாகக் காண்பவன் பிற உயிர்களையும் தன் உறவாகவே காண்பான். ஆகவே அன்பு வலுப் பெற உதவுகிறது. அதுமட்டுமன்றி வேறு எந்த மதமும் காணாத ஓர் சிறப்பு என்னவென்றால் ஆணின்றி பெண்ணும் பெண்ணின்றி ஆணும் இவ்வுலகில் வாழ்ந்துவிட முடியாது என்ற நிதர்சனத்தை கற்பிப்பதாகும். இதனை விளக்கும் வகையில் தான் எம் இந்து தெய்வ வழிபாடும் விளங்குகின்றது. சற்றே சிந்தித்துப் பார்ப்போமானால் நாம் வழிபடும் தெய்வங்கள் சோடிகளாகவே வணங்கப்படுகின்றனர். உதாரணமாக சிவன்- உமை, நாராயணர் - லக்ஷ்மி, முருகன் - வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களைக் கூறலாம்.

இவ்வுலக உயிரினங்களிலே ஆண் சிவனாகவும் பெண் சக்தியாகவும் பாவிக்கப்படுகின்றனர். விஞ்ஞானம் கூறுவது என்னவென்றால் மனிதனின் அன்றாட வாழ்வியல் தேவைக்கான சக்தியைப் பிறப்பிப்பது கலமொன்றில் காணப்படும் இழைமணியாகும். இவ் இழைமணியானது அம் மனிதனிற்கு தாயின் முட்டையில் இருந்தே கிடைக்கப் பெற்றது என்பதாகும். இதனையே ஆதிகாலம் முதல் நம் மதம் பெண்ணை சக்தி எனப் போற்றி வந்தது. இல்லற வாழ்வில் இணைந்த கணவன், மனைவி இருவரும் எந்நிலையிலும் ஒருவரையொருவர் தாழ்த்தாது இருவரும் சரிநிகர் என்ற உண்மையை உணர்ந்து வாழ வேண்டும் என்பதை உணர்த்தும் முகமாக அர்த்த நாரீஸ்வரர் வழிபாட்டின் தத்துவம் விளக்குகிறது. இல்லறவாழ்வில் கணவன், மனைவி இடையே ஊடல் ஏற்படுவதையும் எம்மதம் இறைவழிபாட்டிலேயே காட்டியுள்ளது. சிவனுக்கும் சக்திக்குமிடையே யார் பெரியவர் எனும் ஊடல் ஏற்பட்டு இறுதியில் சக்தி இல்லாமல் சிவன் இல்லை, சிவன் இல்லாமல் சக்தி இல்லை என்ற தத்துவம் உணரப்பட்டது. அத்துடன் பெண் தெய்வ வழிபாடு வேறெந்த சமயத்திலும் இந்து மதம் போல் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதாகக் காணப்படவில்லை.

பல தெய்வ வழிபாடு என்பது ஓர் பரமாத்மாவின் வெவ்வேறு வடிவங்களை வழிபடல் என்பதை நாம் உணர வேண்டும். பரமாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவின் அளவற்ற சக்தியே பராசக்தி எனவும் அளவற்ற செல்வமே லக்ஷ்மி, அவரின் ஞானமே சரஸ்வதி என நீண்டு செல்லும் இப்பட்டியல் குறிப்பது ஒன்று மட்டுமே. நாம் எந்தக் கடவுகளை வணங்கினாலும் அது பரமாத்மாவையே வணங்குவதற்கு சமமாகும் என்பதாகும். இந்துவாகிய எம்முடைய தலையாய கடமை யாதெனில் எது நிரந்தரமான இன்பம் என்பதை அறிந்து அதன்படி வாழ்வதாகும். இன்று நாம் காணும் காட்சிகள், சிந்தனைகள், பணம், பகட்டு வாழ்க்கை அனைத்திலுமே கிடைக்கும் இன்பம் நிரந்தரமற்றவையாகும். ஒருநாள் அழியக் கூடியன. அப்போது எது நிரந்தரம்? இந்த வினாவிற்கான விடையை இப்பொழுதே நாம் கண்டு பிடிக்கத் தொடங்க வேண்டும். அதாவது இறைவனிடமிருந்து பிறந்த நாம் மீண்டும் இறைவனை அடைவதே நிரந்தர இன்பமாகும். மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை நிகழும். இறந்த பின்னரும் கூட நடைபெறும் வாழ்வியல் சடங்குகள் ஒவ்வொன்றிலும் நடைபெறும் நிகழ்வுகளை துல்லியமாக உணர்வோமானால் வாழ்க்கை நெறி என்பது யாது என்பதை அறிந்து கொள்ளலாம். உண்மை என்னவெனில் இன்றைய முற்றுப் பெறாத விஞ்ஞானத்தால் இந்து மதத்தின் மெஞ்ஞானத்தை அறிய முடியவில்லை என்பதாகும். இன்றைய விஞ்ஞானம், வானியல், பொறியியல், மருத்துவம், கணிதவியல் என பல்வேறு கோணங்களில் வளர்ந்தாலும் இவற்றால் எட்டமுடியாத இலக்குகளைக் கூட எம் முன்னோர் எப்போதே அடைந்து விட்டனர். உதாரணமாக சிதம்பரம் நடராசர் கோவிலின் சிறப்புக்களை நோக்கினால் இவ்வுண்மை புரியும். மருத்துவத்துறை இன்று அடைய பூரணத்துவத்தை கூட எம் இந்துமதம் அன்று அடைந்திருக்கின்றது. ஏன் இன்று அகில உலகமும் பின் பற்றத் துடிக்கும் யோகாசன நுட்பங்களினை போதித்ததே நம் மதம் என்பதை மறுக்க முடியாது.

வாழ்வியல் சடங்குகளினை நோக்குமிடத்து மணமகனை சிவனாகவும் மணமகளை சக்தியாகவும் பாவனை செய்து ஏனைய கிரியைகள் அனைத்தும் ஆற்றப்படுகின்றன. திருமண நாளுக்கு முன்னதாக பெண் பார்த்தல், மாப்பிள்ளை பார்த்தல், நிச்சயம் செய்தல், முகூர்த்த வேளை நலங்கு வைத்தல் என பல சடங்குகள் நிகழும். திருமணத்தன்று காப்பு கட்டல், கன்னிகாதானம், தாலி கட்டல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் எனப் பல கிரியைகள் நடைபெறும். இச் சடங்குகள் பஞ்சபூதங்களின் சாட்சியாக வைத்தே நடைபெறுவதன் அர்த்தமே இவ் அண்டசராசரம் பஞ்சபூதங்களின் கட்டுப் பாட்டிலே உள்ளது என்பதற்கான சான்றாகும். உதாரணமாக அம்மி மிதித்து மெட்டி அணிவித்தலை சமய ரீதியாக நோக்குமிடத்து கட்டிய மனைவியானவள் அம்மிக்கல் போன்று மன உறுதியோடு கற்புநெறி தவறாது இருக்க வேண்டும் என்பதாகும். அதனையே விஞ்ஞான ரீதியாக நோக்குமிடத்து காலின் விரல் நரம்புகளிலே தான் மூளைக்கு செல்லும் சில முக்கியமான நரம்புகள் காணப்படுகின்றன. அத்தோடு மெட்டி அணிவதால் பெண்களின் உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்றறை வேறு எம்மதமும் கற்பிப்பதில்லை.

ஆதி இறைவனாகிய எம்பரம்பொருள் ஈசன் அண்டம் முழுவதும் வியாபித்துள்ளார். இதனையே திருவருட்பயன் அரை உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்து என்கிறது. எமது ஊனிலும் உயிரிலும் உறைந்த இறையை நாம் இலகுவில் அடைவதற்கான திறவுகோல்களாக அமைப வையே ஆலயங்களாகும். "ஆ" என்பது பசு லயம் என்பது ஒடுக்கத்தை குறிக்கும். அதாவது ஆன்மாவானது மும்மலங்களை நீக்கி இறைவனுடன் ஒடுங்குவதற்குரிய இடமாக அமைவது ஆலயமாகும்.

இது மனித வடிவிலேயே அமைக்கப் பட்டுள்ளது. மூலஸ்தானம் சிரசையும் அர்த்த மண்டபம் கழுத்தையும் மகாமண்டபம் மார்பையும் தரிசன மண்டபம் வயிற்றையும் அடுத்து காணப்படும் மண்டபங்கள் கால் களையும் இராஜ கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றது. அதாவது ஒரு மனிதன் படுத் திருப்பது போன்ற தோற்றத்தில் அமைந் துள்ளது. நம் வீட்டிலோ, வெளியிடங் களிலோ இல்லாத ஒரு மன அமைதி காணப் படும் இடம் ஆலயத்திலாகும். இதற்குக் காரணம் கோவிலினுள் காணப்படும் சாதகமான நேர் அதிர்வலைகளே ஆகும். ஓம் எனும் சொல்லில் ஏற்படும் அதிர்வலை யானது சூழலிலுள்ள எதிர்மறை அதிர்வலை களை நடுநிலையாக்கும் என்பது விஞ்ஞானம் அறிந்த உண்மையாகும். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று ஆன் றோர் வாக்கு கூறுகின்றது. அக்காலத்தில் ஆலய கோபுரங்களில் ஐம்பொன் உலோகத் தாலான கவசம் காணப்படும். இதுவெ அக் காலத்தில் இடிதாங்கியாகப் பயன்படுத்தப் பட்டது என்பது அறிவியல்.

இலங்கைத் தமிழர் எனும் நிலையி லிருந்து நாம் பெருமைப்படும் விடயம் என்னவெனில் இன்று வரைக்கும் நாம் சம்மதத்தை ஓம் எனும் வார்த்தை மூலமே தெரிவிக்கின்றோம். என்னதான் இந்துமதம் இந்தியாவில் தோன்றினாலும் இலங்கையில் வியாபித்தமை மறுக்க முடியாததாகும். அன்று தொட்டு இன்றுவரை நம் மத பழக்க வழக்கங்களையும் கலாசாரத்தையும் விட்டுக் கொடுக்காது காக்கும் நம்மவர்கள் ஏராள மானோர். உலகம் முடியும் வரை இந்து மதம் நம்மை ஆழ வேண்டுவதுடன் வளரவும் வேண்டுகிறேன்.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

இவ்வுலகில் உள்ள சமயங்கள் அனைத்தும் கடவுள் எனப்படும் எம்மை மீறிய சக்தியின் துகள்களே ஆகும். இம் மானிடப் பிறவி எமக்கு வழங்கப்பட்டதன் நோக்கம் யாதெனில் மீண்டும் தம் உண்மை நிலையாகிய கடவுளை அடைவதே ஆகும். அவ் வகையில் மனிதனாக பிறந்த ஒவ்வொரு வரும் இப்பூமியிலே ஏதோ பிறந்தோம். ஏதோ வாழ்ந்தோம் என்று இல்லாமல் தனக் கென ஒரு தனித்துவத்தை விட்டுச் செல்வதே முறையாகும். "வையத்தில் வாழ்வாங்கு வாழ் பவன் வானுறையும் தெய்வத்தில் வைக்கப்ப டுவான்" என்பது சான்றோர் கூற்று. வாழ் வாங்கு வாழுதல் என்பதனையே ஒவ்வொரு மதமும் பல்வேறு கோணங்களில் மனித னிற்கு கற்பிக்கின்றது. மதம் என்னும் சொல்லின் பொருள் மார்க்கம் ஆகும். மார்க்கம் என்பது ஒவ்வொருவரும் பயணிக்க வேண்டிய சரியான பாதையாகும். அதாவது இறைவனை அடையும் மார்க்கமாகும். அதுவே மதமாகும். சனாதன தர்மம் என தர்மத்தில் பெயர் பெற்றதே இந்து மதமாகும். இந்து என்ற பெயர் சனாதன தர்மத்திற்கு அந்நியரால் வைக்கப்பட்டதாகும். அதுவே தற்போது எம்மதத்தின் பெயராகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் இச் சிறு கட்டுரையில் என்னால் முடிந்த அளவில் நான் அறிந்து கொண்டவற்றை வைத்து இந்து மதத்தின் பால் பொதிந்துள்ள சிறப்புக்களையம் உண்மைத் தன்மையையும் உள்ளார்ந் தத்தையும் கூறலாம் என விளைகிறேன். இந்து மதம் அல்லது இந்து எனும் சொல் அந் நியரால் சூட்டப்பட்ட ஒன்றாகும். ஆரம்ப காலங்களில் இந்தியாவின் சரஸ்வதி நதியினை மையமாகக் கொண்டு தோன்றிய நதிக்கரை நாகரிகங்களிலே சனாதன தர்மம் எனும் பெயரில் இந்து மதம் தோன்றியதாக வரலாறும் ஆய்வராச்சிகளும் கூறுகின்றன. பின்னர் இந்து மதம் இந்தியா முதல் உலகம் வரை விரிவடைந்தது. அன்று வாழ்ந்த மக்கள் வாழ்வின் இரகசியத்தை அறிந்தவர்களாக இருந்தனர். பணம், பற்று என்பவற்றை துறந்து ஆன்மீக நெறியில் ஆண்டவனை அடையும் வழியை அறிந்திருந்தனர். அதனாலேயே அவர்கள் எமக்களித்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் என்பவற்றின் உள்ளார்ந்தம் ஆழமாக அமைந்துள்ளது. இன்று மனிதன் விஞ்ஞானம் மூலம் மேற் கொள்ளும் ஆராய்ச்சிகள் அனைத்தும் ஏற்கனவே கண்டறியப்பட்டவை என்பதற்கு இந்துமதம் பல இடங்களில் சான்று பகிர் கிறது. அதனால்தான் என்னவோ இப்போது கண்டுபிடிப்பு என புதிய விஞ்ஞான தயாரிப் புக்களை கூறுகிறோம்.

கண்டு பிடித்தல் என்பது ஏற்கனவே இருந்த ஒன்றை வெளிக் கொணர்தல் ஆகும். உதாரணமாக விமானம் எனும் கண்டுபிடிப்பு ரைட் சகோதரர்களால் மேற்கொள்ளப் பட்டது. ஆனால் இந்தக் கண்டுபிடிப்பிற்கு முன்னோடியாக இந்து இலக்கியமான இராமாயணம், இராவணனின் புஸ்பக விமானம் பற்றி பல நூற்றாண்டிற்கு முன்னரே கூறியிருக்கிறது. இதன் அர்த்தம் தான் என்னவென சிந்தித்துப் பாருங்கள். "வையகம் போற்ற வாழ்பவனே இந்து" ஆம், இந்து வாகப் பிறந்த ஒவ்வொருவரும் போற்று தலுக்கு உரியவர்களே. வேறெந்த மதமும் பெற்றிராத சிறப்பு நம் இந்து மதத்திற்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்துமதம் என்பது ஒரு மகாசமுத்திரமாகும். இதன் ஆழம், அகலப் பரிமாணங்களை எவரும் இதுவரைக்கும் கண்டதில்லை. ஆதியானதும் அநாதியானதுமான மதம் இந்து மதமாகும். அர்த்தமுள்ள நம்பிக்கை களின் பல அன்பெனும் ஒற்றைப் பேற்றினை நிலை நிறுத்தி வாழ்வியலை கற்பிப்பதில் இந்துமதமே முன்னிற்கின்றது.

சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம் மற்றும் ஸ்மார்த்தம் போன்ற பல பிரிவுக் கட்டுப் பாடுகளுடன் இரும்புக்காலம் தொட்டு கிறிஸ்துவுக்கு முன்னரே தோன்றிய ஒன்றாகும். இதனாலேயே இது உலகின் மிகப் பழமையான மதம் எனப் போற்றப்படுகிறது. இந்து மதத்தின் தோன்றல் வரலாற்றுக் கூற்று களின்படி "வேதகாலம்" என்று அழைக்கப் படும் கி.மு 1900- கி.மு. 1400 ஆண்டு வரை யான காலமாகும். மனிதன் பூமியில் தோன்றிய காலம் தொட்டு இந்து மதமும் தோன்றியது என்றும் அனைத்தும் சர்வ வல்லமை மிக்க கடவுள் எனும் ஒருவரால் படைக்கப்பட்டன எனும் சிறப்பு படைப்ப கொள்கையோடு இந்து மதம் சான்று பகிர்கிறது. என்ன தான் டார்வினின் கூர்ப்புக் கொள்கையும் உயிர் இரசாயன கூர்ப்புக் கொள்கையும் வாதிட்டாலும் சிறப்புப் படைப்புக் கொள்கையே நம்புவரும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அளவிற்கு சான்றுகளை கொண்டது நம் இந்து மதம். இவ்வரலாற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டுமாயின் வேதம், உபநிடதம், பகவத்கீதை, தேவார புராணங்கள், நாயன்மார் வரலாறு என்பவற்றை கற்பதனாலேயே அறிந்து கொள்ள முடியும். இந்து மதத்தின் புனித நூலாகக் கருதப்படும் கிருஷ்ண பரமாத்மா அருளிய ஹீமத் பகவத் கீதையே உலக சமய நூல்களினுள் மனிதனுக்கு இறைவனை முழுமையாக உணரச் செய்கிறது. எந்தவித மத மாற்றக் கருத்துக் களையும் கொள்கைகளையும் கொண்டிராத நூல் இதுவாகும். வேறு நூல்களில் இதனை நாம் காண முடியாது. அத்துடன் எந்தவொரு சமய நூல்களும் அம்மதத்தை ஸ்தாபித்தவர்களால் எழுதப்படவில்லை என்பது சிந்தனைக்குரிய உண்மையாகும். பிறிதொருவரால் சிறிது காலத்தின் பின்னரே அவை எழுதப்பட்டன. எனவே அவற்றில் பொதிந்துள்ள வரலாற்று நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படாத ஒன்றாகவே இருந்துவரும் நிலையில் இயற்கை மீது கொண்ட பயத்தினாலே கடவுள் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. இவ் இயற்கை முறை வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்துமத வரலாறு ஆரம்பிக்கின்றது. இப் பிரபஞ்ச உள்ளடக்கம் அனைத்துமே பஞ்சபூதங்களின் கூறுகளிலே என ஆரம்பத்திலிருந்து உணர்த்துகிறது இந்து மதம்.

இறைவனை நண்பனாவோ, தாய், தந்தையாகவோ, காதலனாகவோ, காதலியாகவோ, சகோதரனாகவோ, வழிகாட்டியாகவோ கருதி வழிபடும் முறை இந்து மதத்தில் தான் உண்டு. உதாரணமாக தாயாக அம்மன், தந்தையாக சிவன், வழிகாட்டியாக கிருஷ்ண பரமாத்மா என நீண்டு செல்கிறது. இப்பட்டியல் இதுவே ஒரு பக்தனுக்கும் இறைவனுக்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் மார்க்கமாகும். இறைவனை தன் உறவாகக் காண்பவன் பிற உயிர்களையும் தன் உறவாகவே காண்பான். ஆகவே அன்பு வலுப்பெற உதவுகிறது. அதுமட்டுமன்றி வேறு எந்த மதமும் காணாத ஓர் சிறப்பு என்னவென்றால் ஆணின்றி பெண்ணும் பெண்ணின்றி ஆணம் இவ்வுலகில் வாழ்ந்துவிட முடியாது என்ற நிதர்சனத்தை கற்பிப்பதாகும். இதனை விளக்கும் வகையில் தான் எம் இந்து தெய்வ வழிபாடும் விளங்குகின்றது. சற்றே சிந்தித்துப் பார்ப்போமானால் நாம் வழிபடும் தெய்வங்கள் சோடிகளாகவே வணங்கப்படுகின்றனர். உதாரணமாக சிவன்- உமை, நாராயணர் - லக்ஷ்மி, முருகன் - வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களைக் கூறலாம்.

இவ்வுலக உயிரினங்களிலே ஆண் சிவனாகவும் பெண் சக்தியாகவும் பாவிக்கப்படுகின்றனர். விஞ்ஞானம் கூறுவது என்னவென்றால் மனிதனின் அன்றாட வாழ்வியல் தேவைக்கான சக்தியைப் பிறப்பிப்பது கலமொன்றில் காணப்படும் இழைமணியாகும். இவ் இழைமணியானது அம் மனிதனிற்கு தாயின் முட்டையில் இருந்தே கிடைக்கப் பெற்றது என்பதாகும். இதனையே ஆதிகாலம் முதல் நம் மதம் பெண்ணை சக்தி எனப் போற்றி வந்தது. இல்லற வாழ்வில் இணைந்த கணவன், மனைவி இருவரும் எந்நிலையிலும் ஒருவரையொருவர் தாழ்த்தாது இருவரும் சரிநிகர் என்ற உண்மையை உணர்ந்து வாழ வேண்டும் என்பதை உணர்த்தும் முகமாக அர்த்த நாரீஸ்வரர் வழிபாட்டின் தத்துவம் விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இல்லறவாழ்வில் கணவன், மனைவி இடையே ஊடல் ஏற்படுவதையும் எம்மதம் இறைவழிபாட்டிலேயே காட்டியுள்ளது. சிவனுக்கும் சக்திக்குமிடையே யார் பெரியவர் எனும் ஊடல் ஏற்பட்டு இறுதியில் சக்தி இல்லாமல் சிவன் இல்லை, சிவன் இல்லாமல் சக்தி இல்லை என்ற தத்துவம் உணரப்பட்டது. அத்துடன் பெண் தெய்வ வழிபாடு வேறெந்த சமயத்திலும் இந்து மதம் போல் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகக் காணப்படவில்லை.

பல தெய்வ வழிபாடு என்பது ஓர் பரமாத்மாவின் வெவ்வேறு வடிவங்களை வழிபடல் என்பதை நாம் உணர வேண்டும். பரமாத்மாவின் அளவற்ற சக்தியே பராசக்தி எனவும் அளவற்ற செல்வமே லக்ஷ்மி, அவரின் ஞானமே சரஸ்வதி என நீண்டு செல்லும் இப்பட்டியல் குறிப்பது ஒன்று மட்டுமே. நாம் எந்தக் கடவுகளை வணங்கினாலும் அது பரமாத்மாவையே வணங்குவதற்கு சமமாகும் என்பதாகும். இந்துவாகிய எம்முடைய தலையாய கடமை யாதெனில் எது நிரந்தரமான இன்பம் என்பதை அறிந்து அதன்படி வாழ்வதாகும். இன்று நாம் காணும் காட்சிகள், சிந்தனைகள், பணம், பகட்டு வாழ்க்கை அனைத்திலுமே கிடைக்கும் இன்பம் நிரந்தரமற்றவையாகும். ஒருநாள் அழியக் கூடியன. அப்போது எது நிரந்தரம்? இந்த வினாவிற்கான விடையை இப்பொழுதே நாம் கண்டுபிடிக்கத் தொடங்க வேண்டும். அதாவது இறைவனிடமிருந்து பிறந்த நாம் மீண்டும் இறைவனை அடைவதே நிரந்தர இன்பமாகும். மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை நிகழும். இறந்த பின்னரும் கூட நடைபெறும் வாழ்வியல் சடங்குகள் ஒவ்வொன்றிலும் நடைபெறும் நிகழ்வுகளை துல்லியமாக உணர்வோமானால் வாழ்க்கை நெறி என்பது யாது என்பதை அறிந்து கொள்ளலாம். உண்மை என்னவெனில் இன்றைய முற்றுப் பெறாத விஞ்ஞானத்தால் இந்து மதத்தின் மெஞ்ஞானத்தை அறிய முடியவில்லை என்பதாகம். இன்றைய விஞ்ஞானம், வானியல், பொறியியல், மருத்துவம், கணிதவியல் என பல்வேறு கோணங்களில் வளர்ந்தாலும் இவற்றால் எட்டமுடியாத இலக்குகளைக் கூட எம் முன்னோர் எப்போதே அடைந்து விட்டனர். உதாரணமாக சிதம்பரம் நடராசர் கோவிலின் சிறப்புக்களை நோக்கினால் இவ்வுண்மை புரியும். மருத்துவத்துறை இன்று அடைய பூரணத்துவத்தை கூட எம் இந்துமதம் அன்று அடைந்திருக்கின்றது. ஏன் இன்று அகில உலகமும் பின்பற்றத் துடிக்கும் யோகாசன நுட்பங்களினை போதித்ததே நம் மதம் என்பதை மறுக்க முடியாது.

வாழ்வியல் சடங்குகளினை நோக்குமிடத்து மணமகனை சிவனாகவும் மணமகளை சக்தியாகவும் பாவனை செய்து ஏனைய கிரியைகள் அனைத்தும் ஆற்றப்படுகின்றன. திருமண நாளுக்கு முன்னதாக பெண் பார்த்தல், மாப்பிள்ளை பார்த்தல், நிச்சயம் செய்தல், முகூர்த்த வேளை நலங்கு வைத்தல் என பல சடங்குகள் நிகழும். திருமணத்தன்று காப்பு கட்டல், கன்னிகாதானம், தாலிகட்டல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் எனப் பல கிரியைகள் நடைபெறும். இச் சடங்குகள் பஞ்சபூதங்களின் சாட்சியாக வைத்தே நடைபெறுவதன் அர்த்தமே இவ் அண்டசராசரம் பஞ்சபூதங்களின் கட்டுப்பாட்டிலே உள்ளது என்பதற்கான சான்றாகும். உதாரணமாக அம்மி மிதித்து மெட்டி அணிவித்தலை சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக நோக்குமிடத்து கட்டிய மனைவியானவள் அம்மிக்கல் போன்று மன உறுதியோடு கற்புநெறி தவறாது இருக்க வேண்டும் என்பதாகும். அதனையே விஞ்ஞான ரீதியாக நோக்குமிடத்து காலின் விரல் நரம்புகளிலே தான் மூளைக்கு செல்லும் சில முக்கியமான நரம்புகள் காணப்படுகின்றன. அத்தோடு மெட்டி அணிவதால் பெண்களின் உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்ற்றை வேறு எம்மதமும் கற்பிப்பதில்லை.

ஆதி இறைவனாகிய எம்பரம்பொருள் ஈசன் அண்டம் முழுவதும் வியாபித்துள்ளார். இதனையே திருவருட்பயன் அரை உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து என்கிறது. எமது ஊனிலும் உயிரிலும் உறைந்த இறையை நாம் இலகுவில் அடைவதற்கான திறவுகோல்களாக அமை பவையே ஆலயங்களாகும். "ஆ" என்பது பசு லயம் என்பது ஒடுக்கத்தை குறிக்கும். அதாவது ஆன்மாவானது மும்மலங்களை நீக்கி இறைவனுடன் ஒடுங்குவதற்குரிய இடமாக அமைவது ஆலயமாகும்.

இது மனித வடிவிலேயே அமைக்கப் பட்டுள்ளது. மூலஸ்தானம் சிரசையும் அர்த்த மண்டபம் கழுத்தையும் மகாமண்டபம் மார்பையும் தரிசன மண்டபம் வயிற்றையும் அடுத்து காணப்படும் மண்டபங்கள் கால் களையும் இராஜ கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றது. அதாவது ஒரு மனிதன் படுத்திருப்பது போன்ற தோற்றத்தில் அமைந் துள்ளது. நம் வீட்டிலோ, வெளியிடங் களிலோ இல்லாத ஒரு மன அமைதி காணப் படும் இடம் ஆலயத்திலாகும். இதற்குக் காரணம் கோவிலினுள் காணப்படும் சாதகமான நேர் அதிர்வலைகளே ஆகும். ஓம் எனும் சொல்லில் ஏற்படும் அதிர்வலை யானது சூழலிலுள்ள எதிர்மறை அதிர்வலை களை நடுநிலையாக்கும் என்பது விஞ்ஞானம் அறிந்த உண்மையாகும். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று ஆன்றோர் வாக்கு கூறுகின்றது. அக் காலத்தில் ஆலய கோபுரங்களில் ஐம்பொன் உலோகத்தாலான கவசம் காணப்படும். இதுவெ அக்காலத்தில் இடிதாங்கியாகப் பயன்படுத்தப்பட்டது என்பது அறிவியல்.

இலங்கைத் தமிழர் எனும் நிலையி லிருந்து நாம் பெருமைப்படும் விடயம் என்னவெனில் இன்று வரைக்கும் நாம் சம்மதத்தை ஓம் எனும் வார்த்தை மூலமே தெரிவிக்கின்றோம். என்னதான் இந்துமதம் இந்தியாவில் தோன்றினாலும் இலங்கையில் வியாபித்தமை மறுக்க முடியாததாகும். அன்று தொட்டு இன்றுவரை நம் மத பழக்க வழக்கங்களையும் கலாசாரத்தையும் விட்டுக் கொடுக்காது காக்கும் நம்மவர்கள் ஏராள மானோர். உலகம் முடியும் வரை இந்து மதம் நம்மை ஆழ வேண்டுவதுடன் வளரவும் வேண்டுகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நடராஜ தாண்டவ தத்துவம்

**தீபா அலாவுதீன்**
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

*யதோ ஹஸ்தஸ் ததோ கிருஷ்டி
யதோ திருஷ்டிஸ் ததோ மனஹ
யதோ மனஸ் ததோ பாவாஹ
யதோ பாவாஹஸ் ததோ ரஸஹ*

கைகள் எங்கு செல்கின்றதோ அங்கு கண்கள் செல்ல வேண்டும். கண்கள் செல்லும் இடமெல்லாம் மனம் செல்ல வேண்டும். மனம் செல்லும் இடமெல்லாம் பாவம் செல்ல வேண்டும். பாவம் உண்டாகும் இடத்தில் ரஸம் பிறக்க வேண்டும்.

இவ்வாறு ரஸத்தை பிறப்பிக்கச் செய்து காண்போர் உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி பூலோகத்தில் இருந்துகொண்டே சொர்க்கலோகத்தின் பூரிப்பை அனுபவிக்கச் செய்யும் உன்னதமான தெய்வீகக் கலையே பரம் ஆகம்.

பரதத்தின் பெருமையானது பிரம்ம தேவரால் எழுதப்பட்ட நாட்டிய வேதத்திலே பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

இப்பூலகத்தில் ஜனன மனன பாசத்தில் இருந்து விடுபடுவதற்கும் கடவுளை மிக எளிதாக காண்பதற்கும் ஐம்புலன்களை அடக்கி ஆளுகின்ற முனிவரைக் காட்டிலும் மிக அதிகமான பலம் பெறக்கூடியதுமான கலை பரதக் கலை ஒன்றே.

இந்நாட்டியக் கலையின் தோற்றத்திற்கு ஆதாரம் நடராஜர். அவர் நடனமாடத் தொடங்கும் முன் 14 முறை தன் கையிலுள்ள உடுக்கையை ஒலிக்கிறார். அதிலிருந்து வெவ்வேறு விதமான சப்தங்கள் பிறக்கின்றன. அச்சப்தங்களாவன சிவனின் நடனத்தை காண குழுமியிருந்த ரிஷிகளான பரத முனி, நாரதமுனி, பதஞ்சலி முனி, பாணினி முனி போன்றோருக்கு வெவ்வேறு விதமாக ஒலிக்கின்றது.

பரத முனிக்கு நாட்டிய சாஸ்திரங்களாகவும் நாரத முனிக்கு சங்கீத சாஸ்திரங்களாவும் பாணினி முனிக்கு வியாகரன சாஸ்திர சூத்திரங்களாகவும் பதஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிக்கு யோக சாஸ்திர சூத்திரங்களாகவும் ஒலிக்கின்றன. இவ் ஒலிகளே அவரவர் துறையில் சிறந்த நூல்களை உலகத்திற்கு அளிக்க காரணமாயின.

பிரபஞ்ச இயக்கமே சிவதாண்டவ மாகும். அவரின் நடனத்தாலே பிரபஞ்சம் இயங்குகின்றது. அவரை சுற்றியுள்ள அனைத்தும் இயங்குகின்றன. பரத முனிக்கு உடுக்கை ஒலியினாலும் நடன முத்திரை களாலும் கரணங்களாலும் அவற்றின் சேர்க் கையான அங்க காரங்களாலும் நடனக் கலையின் சூட்சுமங்களை நடராஜர் விளக்கு கின்றார். இதனை அடிப்படையாக கொண்டே தன் நூலில் 108 கரணங்களை பரதர் விளக்குகிறார்.

தஞ்சை பிரஹதீஸ்வரர் ஆலயப் பிர காரத்திற்கு மேல் உள்ள கோபுர உள்சுவற்றில் இந்த நூற்றியெட்டு கரணங்களையும் செதுக்கியுள்ள சிற்பி இறுதியில் ஒரு பிறை யினை அதிகப்படியாக ஏதம் செதுக்காது விட்டுச் சென்றிருக்கிறார். இது வருங்கால தலைமுறைக்கு அந்த சிற்பி விடுத்துள்ள சவால்.

பரதமுனி கூறிய நூற்றியெட்டு கரணங் களையும் இங்கு நான் செதுக்கியுள்ளேன. இது தவிர வேறு ஏதாவது கரணம் உனக்குத் தெரிந்தால் இங்கு செதுக்கிவிடு என.

இது நாள் வரை அந்தப்பிறை ஏதம் செதுக்காதது தான் நடனக் கலையின் முழுமைக்கொரு வெற்றிச் சான்றாக இருந்து வருகின்றது.

தாருகா வனத்தில் வேதங்களில் சிறந்து விளங்கியமையால் செருக்கடைந்த முனிவர் களை செருக்கடக்கி அருள்புரிய சிவன், சுந்தரனாயும் விஷ்ணு மோகினியாகவும் எழுந்தருளுகின்றார்.

சுந்தரரின் சுந்தர அழிகிய முனிபத்தினியரும் மோகினியின் மோகனத்தில் முனிவர்களும் தம்மை மறந்து மதிமயங்கினர். தம்மை மறந்திருந்தவர்கள் மீண்டும் சுயநினைவை அடைந்த போது தம்மை மதிமயக்கிய சுந்தரரையும் மோகினியையும் அழிக்க முற்பட்டனர்.

அவர்களின் மாயையினை அழிக்கும் பொருட்டு அவர்களார் ஏவப்பட்ட கோபத்தின் உருவான புலியையும் மதத்தின் உருவான யானையையும் தோலுரித்து சுந்தரர் ஆடையாக தரித்தார். தீய சக்திகளாகிய பாம்புகளை தன் அணிகளாக்கிக் கொண் டார். இறுதியில் முனிவர்களிடையே எஞ்சி யிருந்த வேதங்களை ஏவ, அவற்றையும் தனது காற்சிலம்புகளாக்கி பிட்சாடனராக, கஜ சம்ஹார மூர்த்தியாக நடனமாடினார். முனிவர்களின் அஞ்ஞானமாகிய முயல்களை காலின் கீழிருத்தி அந் நடனத்தை ஆடினார்.

பிரபஞ்ச சூழற்சிக்கு மைய இயக்கமாகத் திகழும் இந்த நடனம் சிவசக்தி ஐக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சிவனது தாண்டவத்தையும் சக்தியின் லாஸ்யத்தையும் கொண்டுள்ளது.

தாண்டவம் என்பது தாளத்தோடும் ஆண்மைக்குரிய கம்பீரத்தோடும் அங்க சுத்தமோ ஸௌஷ்டவமோ சிறிதும் குறையாமல் கலைமெருகோடு ஆடும் நடன மாகும். கம்பீரம், அதிக கால் வீச்சு, வலுவான தட்டுக்கள் இந் நடனத்தை சித்தரிக்கும். தாண்டவம், லாஸ்யம் இவற்றுக்கு தனித்தனி அடவுகளோ அசைவுகளோ இல்லை. இவை கையாளப்படும் முறையில் அதன் வேறுபாடு உண்டு. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இயல்பான குண வேறுபாடு அசைவுகளில் பிரதிபலிப்பதால் இருவேறான பெயர்கள் தரப்பட்டுள்ளன. தேவையான போது ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாஸ்யத்தையும் பெண் தாண்டவத்தையும் ஆடலாம்.

சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் 108. அவற்றுள் சிறந்தன ஏழு. அவை "ஸ்ப்த தாண்டவம்" எனப்படும். அவை ஐந்தொழிலையும் ஒருசேர இயற்றும் தாண்டவம் என்றும் தனித்தனியே இயற்றும் தாண்டவம் என்றும் கூறலாம். அவற்றுள் ஐந்தொழிலையும் ஒருசேர செய்யும் தாண்டவம் ஆனந்த தாண்டவம் எனப்படும். ஸ்ப்த தாண்டவங்கள் ஏழு ஸ்வரங்களில் இருந்து தோன்றியது என்றும் ஏழு இடங்களில் நிகழ்ந்தது என்றும் திருப்புத்தூர் புராணம் கூறுகிறது.

**ஸ்ப்த தாண்டவங்களின் விபரம்**

| தாண்டவம் | ஸ்வரம் | தொழில் | இடம் |
|---|---|---|---|
| காளிகர் / முனிதாண்டவம் | ஸ | படைத்தல் | திருநெல்வேலி தாம்பிர சபை |
| கௌரி தாண்டவம் | ரி | காத்தல் (துன்பம்) | திருப்புத்தூர் சிற்சபை |
| சந்தியா தாண்டவம் | க | காத்தல் (இன்பம்) | மதுரை வெள்ளியம்பலம் |
| சங்கார தாண்டவம் | ம | அழித்தல் | இருண்ட நள்ளிரவு |
| திரிபுர தாண்டவம் | ப | மறைத்தல் | திருக்குற்றாலம் இரத்தினசபை |
| ஊர்த்துவ தாண்டவம் | த | அருளல் | திருவாலங்காடு இரத்திசன சபை |
| ஆனந்த தாண்டவம் | நி | ஐந்தொழில் | தில்லை கனகசபை |

108 தாண்டவங்களுள் சிவபெருமான் தாமாகவே ஆடியது 48, பார்வதியுடன் இணைந்து ஆடியது 36, திருமாலுடன் 9, முருகனுக்காக 3, பிற தேவர்களுக்காக 12.

லாஸ்யம் என குறிப்பிடப்படும் நடனத்தை பற்றி நோக்குவோமாயின் அது லலிதமாயும், மிருதுவாயும் பெண்கள் ஆடும் நடனத்திற்கு லாஸ்யம் என்று பெயர். இது பெண்மையின் மென்மையைப் புலப்படுத்துவதாகும். இதை பார்வதி தேவி உருவாக்கினார் எனப் புராணங்கள் கூறுகின்றன. அழகு, அருள், நளினம், அங்கு சுத்தம், ஸௌஷ்டம் முதலியவை இந்த நடனத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது.

சிவனால் ஆடப்பட்ட தாண்டவங்கள் ஒவ்வொன்றும் குறித்த சம்பவத்திற்கு பிறகே ஆடப்பட்டன. உதாரணமாக ஊர்த்துவ தாண்டவமானது சும்பன், நிசும்பன் என்னும் அரக்கர்களை அழிக்கும் போது உக்கிர நடனம் புரிந்த காளியை அடக்க இறைவனும் சேர்ந்தாடிய தாண்டவமாகும். சிவ பெருமான் சமுத்திர மந்தனம் எனும் பாற் கடலை கடைந்த போது முதலில் வெளிவந்த ஆலகால விஷத்தினை புவனங்களை காக்கும் பொருட்டு தன் கண்டத்தே நிறுத்தி நீலகண்டர் எனும் பெயர் பெற்று தேவர்களால் அர்ச்சிக்கப்பட்டார். இதை அடுத்து திரயோதசி என்று மாலை சந்தியா காலத்தில் கையில் சூலமேந்தி உமையவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண நந்தியின் இரு கொம்புகளுக்கிடையே நின்று தாண்ட நடனம் புரிந்தார். இதை பிரதோச நடனம் என்றும் அழைப்பர்.

ஐந்தொழிலையும் ஒருசேர கொண்டிருக்கும் தாண்டவமான ஆனந்த தாண்டவமானது ஈசனின் நடனத்துடன்ன ஈசன், அவரது ஆபரணங்களும் கையில் ஏந்திய ஆயுதங்களும் அவருடைய ஆட்டத்தினால் ஈர்க்கப்பட்டு அவருடன் சேர்ந்து அடியவர்களையும் வர்ணிக்கின்றது. இந்த ஆனந்த தாண்டவத்தில் ஈசனின் கையில் இருக்கும் அக்னியை சம்ஹார சக்தியாகவும் உடுக்கையை ஸ்ருஷ்டி சக்தியாகவும் அறிஞர்கள் விவரித்த போதிலும் இலங்கையை சேர்ந்த பேரறிஞர் திரு ஆனந்த குமாரசுவாமியும் இந்திய கலை மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணரும் பேரறிஞருமான திரு க.சிவராமமூர்த்தி அவர்களும் வேறுபட்ட கருத்தை உடையவர்களாக உள்ளனர். அவர்கள் தகுந்த ஆதாரத்துடன் அறுதியிட்டுக் கூறுவது ஈசன் கையிலிருக்கும் அக்னிதான் பரமாத்மாவின் ஸ்ருஷ்டி சக்தியான பேரொளியென்றும் அதனின்றும் தோன்றிய ஒளிச் சுடர்களாக ஜீவாத்மாக்கள் தான் ஈசனின் பிரபாவலியிலுள்ள சிறுசிறு தீச்சுடல்களென்றும் அவை யாவும் லயமடைவது ஈசனின் வலது கரத்திலிருக்கும் உடுக்கையின் நாதப் பிரஹ்மத்தில் என்பதும் தான். நாதமென்றாலே லயம் என்பது உடன் பிறந்ததொரு தத்துவமல்லவா! மேலும் அம்பாளின் பாகமான இடக்கரத்தில் தாயான அவளது செயலான ஸ்ருஷ்டியும் ஈசனின் பாகமாகிய வலக்கரத்தில் அவரது செயலான சம்ஹாரமும் இருப்பது தானே முறை?

சிவதாண்டவத்தில் ஐம்பெரும் பாகமென ஐந்தெழுத்து மந்திரம், ஐந்து முகங்கள் (ஐந்து பிரஹ்மங்கள்), ஐந்து திசைகள், ஐந்து பூதங்கள், ஐந்தொழில்கள், ஐந்து சக்திபேதங்கள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

துடி எனும் உடுக்கையில் "ந" எனும் எழுத்தும் ஸத்யோஜாதமெனும் பிரஹ்ம நிலையும் மேற்கு திசையும் பிருத்வி எனும் பூதமும் படைத்தலை செய்யும் பிரம்மனும் கிரியா சக்தியும் அடங்கக் காண்கிறோம். அமைந்த கரத்தில் "ம" எனும் எழுத்தும் தத்புருஷமும் கிழக்குத் திசையும் வாயுவும் காத்தல் எனும் தொழில் புரியும் விஷ்ணுவும் ஞான சக்தியும் அடங்கக் காண்கிறோம். அக்னியில் "சி" எனும் எழுத்தும் அகோரமும் தெற்கு திசையும் தேஜஸம் அழித்தலெனும் பணி புரியும் ருத்ரனும் இச்சா சக்தியும் அடங்கக் காண்கிறோம். ஊன்றிய பாதத்தில் "வா" எனும் எழுத்தும் வாம தேவமும், வடக்கு திசையும் நீரெனும் பூதமும் திரோ தனமெனும் மறைத்தலைப் புரியும் சதா சிவனும் ஆதிசக்தியும் அடங்கக் காண் கிறோம். குஞ்சித பாதத்தில் "ய" எனும் மஹேஸ்வரரும், பராசக்தியும் அடங்கக் காண்கிறோம்.

அவரது ஆனந்த நடனம் மூலம் அவரே உணர்த்தும் தத்துவத்தை உணர்ந்து தூக்கிய திருவடியாம் அம்பிகையின் பாதத்தை சிக்கெனப் பற்றி அவரருளால் அபஸ்மாரம் நீங்கப் பெற்று ஸ்திர வாழ்வை நாம் அடைவோமாக. அவரது இடக்கரம் அமைந்த தேஜஸினின்று ஒரு பொறியாகப் பிறந்த நாம் அவரருளால் அவரது நினைவில் வாழ்ந்து அவரது வலக்கரமமர்ந்த துடியில் லயத்தை அடைய அவரது திருவடி போற்றி வேண்டுவோமாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறு செல்வங்கள்

கிட்ணதாஸ் தனுசுந்தர்
AHS 16/17
பேராதனைப் பல்கலைக்கழகம்

பதினாறு செல்வமும் பெற்று நலத்தோடு வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் வாழ்த்துவார்கள். ஆனால் அந்தப் பதினாறு செல்வங்களும் எவை என்பது எம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கின்றது. அந்தப் பதினாறு செல்வங்களும் முறையே.

1. கலையாத கல்வி
2. நீங்காத அறிவு
3. நீண்ட ஆயுள்
4. பெரும் ஆற்றல்
5. குன்றாத இளமை
6. நோயற்ற உடல்
7. தாழாத புகழ்
8. அன்பான மனைவி
9. தவறாத சந்தானம்
10. சலியாத மனம்
11. கபடு இல்லாத நட்பு
12. மாறாத வாய்மை
13. குறையாத செல்வம்
14. நிலையான பொறுமை
15. மறுக்காத உதவி
16. நீங்காத அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித தர்மம்

குமரேசன் அனுசன்
பொறியியற்பீடம்
அறிமுகமாணவி

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| கோபத்திலும் | - | பொறுமை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பணிவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனமும் யோகமும்

**நிவேதா உதயராஜன்**
1ம் வருடம் (MLS)
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்றைகள் பீடம்

யோகக் கலை அல்லது யோகா என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும் சமன்பாட்டிற்கும் உதவிடும் கலை ஆகும். அதாவது யோகம் என்றால் இணைதல் அல்லது இணக்கமாக இருத்தல் என்று பொருள். இக்கலை பதஞ்சலி முனிவரால் இந்தியாவில் தோன்றி வளர்ந்து வழிவழியாய் வரும் ஓர் ஒழுக்க நெறியாகும். இது உடலையும் உள்ளத்தையும் நலத்துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறி.

யோகாவின் பல்வேறு மரபுகள் இந்து மதத்தில் மட்டுமல்லாது புத்த, சமண, கிறிஸ்தவ ஏன் இஸ்லாம் மதத்தில் கூட காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக புத்தரின் பண்டைய சொற்பொழிவுகளில் தியான நெறிகள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் கடவுளை தேடும் ஒரு வழியாக யோகாவை மன்றாட்டுக்களிலும் தியானங்களிலும் பயன்படுத்துகின்றனர். ஆயினும் கத்தோலிக்க திருச்சபையும் மற்ற கிறிஸ்தவ சபைகளும் யோகாவை ஏற்க மறுத்துள்ளன. காரணம் இதனால் மக்கள் கிறிஸ்தவ நெறியினையும் பிற நெறிகளையும் குழப்பிக் கொள்ள நேரிடும் என்பதேயாகும். எது எவ்வாறாயினும் யோகா எல்லா மதங்களுக்கும் பொதுவானது என்பதே வெளிப்படை உண்மையாகும்.

எமது இந்து மதத்தை நோக்குவோமாயின், எமக்குத் தெரியாமலேயே நாம் இயற்கையுடன் ஒன்றிய பல யோகாசனங்களைச் செய்கின்றோம். துலாவில் தண்ணீர் அள்ளுதல், இறைத்தல், உளண்டியில் நீர் எடுத்து குளித்தல், நீர்க்குடத்தை இடுப்பில் கொண்டு செல்லுதல், இரண்டு கைகளாலும் வாளியை நீருடன் தூக்கிச் செல்லுதல், ஆட்டுக் கல்லில் அரைத்தல், உரல் உலக்கை கொண்டு மா இடித்தல், திருகையில் பயறு அரைதல் போன்ற வேலைகளை எல்லாம் கையினால் செய்யும்போது நோய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுமின்றி உடல் நலத்துடன் வாழ்ந்தனர். அக் கால மக்கள் இவற்றையே இயற்கையான யோகாசனம் என்பர். அத்துடன் அப் பொருட்களினால் தயார் செய்யப்பட்ட உண வுகள் சத்துள்ளதாகவும் சுவையான தாகவும் ஆரோக்கிய வாழ்விற்கு ஏற்றதாகவும் இருந்தன. இன்றைய நிலை அவ்வாறில்லை. இப்பொழுது யாருக்கும் நேரமில்லை. கிணற் றில் மின்சார மோட்டர்; நீர்த்தாங்கிக்கு தண்ணீர் செல்வதால் எல்லா வேலைகளும் நடைபெறுகின்றன. மனிதர்கள் அனைவரும் நித்திய நோயாளியாக மாறிவிட்டனர். கவனக்குறைவு, காலை உணவு உண்ணாமல் இருத்தல், நேரம் தவறி உண்ணுதல், இனிப்பு நிறைந்த குளிர் பானங்களை அதிகமாக அருந்துதல், தேநீர் கோப்பி போன்றவற்றை அதிக தடவைகள் பருகுதல் போன்ற காரணங்களால் நாற்பது வயதுக்குப்பின் நோயாளியாவதாக ஒரு காலத்தில் கூறப் பட்டது. ஆனால் இன்றைய நவீன உலகில் இருபது வயதிலேயே நோயாளி ஆகிவிடுகி றார்கள். இதற்கு காரணம் உணவுப் பழக் கத்தை மாற்றி உடல் உழைப்பற்ற வேலை களை செய்ய ஆரம்பித்ததேயாகும். இவற்றுற் குரிய பக்கவிளைவற்ற ஒரே மருத்துவம் யோகாசனம் என்றால் அது பொய்யாகாது.

யோகா பயிற்சி நமக்கு தன்னம்பிக் கையுடன் முன்னோக்கிச் செல்வும் ஆற்றலை கொடுக்கிறது. தினமும் தவறாமல் பயிற்சி செய்தால் கோபம், எதிர்மறை எண்ணங்கள் கட்டுப்படும். யோகாசனப் பயிற்சியால் உடல் எடை குறைகிறது. மேலும் செயற் றையைத் தவிர்த்து எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இயற்கையாக உடல் எடை குறைய யோகா மட்டுமே சிறந்த வழி. யோகா செய்வதால் இரத்த ஓட்டம் சீராகிறது. உடல் எடை குறைந்து தொடை, கால், தண்டு வடம் மற்றும் இடுப்புத் தசைகள் வலுவடைகிறது. இடுப்பு மெலிந்து உடல் அழகிய வடிவம் பெறுகிறது. வயிற்று உறுப்புக்கள் நன்றாக வேலை செய்கிறது. கழிவுகள் இலகுவாக வெளியேறுகிறது. ஜீரண சக்தி அதிகரிக் கிறது. எனவே நாம் அனைவரும் இன்றைய உலகில் யோகாசனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து முறையான யோகாவினால் முறை யானதொரு வாழ்க்கை முறையை பின்பற்றி ஆரோக்கியத்துடனும் மனநிறைவுடனும் வாழ்வோமாக!

மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.

புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜாகால தேவாதி பத்ர அர்ச்சனை

டிலானி வேலுப்பிள்ளை
1 ம் வருடம்
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்
பேராதனை பல்கலைக்கழகம்

பொதுவாக இறை வழிபாடுகளின் போது பூக்களைக் கொண்டு இறைவனை அர்ச்சிப்பது போலவே இலைகளைக் கொண்டு அர்ச்சிப்பதும் அவற்றை இறை திருவுருவப் படங்களுக்கும் விக்கிரகங் களுக்கும் சாத்தி வழிபாடு செய்வதுடன் பக்த அடியார்களுக்கு பிரசாதமாக வழங்கப்ப டுவதும் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறு சாத்தப்படும் இலைகள் யாவும் பிணிபோக்கும் அரும்பெரும் மருத் துவ குணங்கள் உடையவை என்பது எம்மில் பலர் அறியாத உண்மையாகும். இவற்றை இறைவனுக்கு படைப்பதும் பின்னர் பிரசாத மாகவோ, தீர்த்தமாகவோ வழங்கப்படும் போது அவற்றை உண்பதும் பருகுவதோடும் விட்டு விடுகிறோமே தவிர இவை தொன்று தொட்டு எம்முன்னோர்களால் பயன்படுத் தப்பட்டு வந்தமைக்கான காரணங்கள் யாதென நாம் ஆராயாமல் உள்ளோம்.

சிவனுக்கு சாத்தப்படும் வில்வம், மகா விஷ்ணுவிற்கு சாத்தப்படும் துளசி, விநாய கருக்கு சாத்தப்படும் அறுகம்புல், அம்பிகை, அம்பாள் வழிபாட்டில் முதன்மையான வேப் பிலை உட்பட தவளம், மாசிபத்தரி, மருக் கொழுந்து என்பனவும் இறைவழிபாட்டிற்கு பயன்டும் மருத்துவ குணங்கள் நிறைந்த மூலி கைகளாகும். மேலும் பண்டிகைகள், விழாக் களில் மற்றும் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூஜைகள் மற்றும் திருவிழாக் காலங்களில் அலங்கரிப்பதற்காக பயன்படுத் தப்படும் மாவிலையும் பல மருத்துவ குணங்கள் நிறைந்த சிறந்த மூலிகையாகும்.

சிவ வழிபாட்டுக்காக பயன்படுத்தப் படும் வில்வம் (Angle Marmelos) இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி அதன் பூ, பழம், பிஞ்சு, பட்டை மற்றும் வேர் என்பன பல மருத்துவ குணங் களை கொண்டவை ஆகும். பொதுவாக வில்வம் இலை நோயெதிர்ப்பு சக்தியை அதி கரிக்கும். கண் தொடர்பான நோய்களுக்கும் காசநோய் போன்ற தொற்றும் வியாதி களுக்கும் உடற் புண்களை ஆற்றுதல் பித்தம் வாந்தியை கட்டுப்படுத்துதல் உடல் சூட்டை போக்குதல் போன்றவற்றிற்கு வில்வம் இலை அருமருந்தாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் குருதிக் கசிவை நிறுத்தி உடலைத் தேற்ற வேரும், மலமிளக்குதல், விஷம் முறித்த லுக்கு பழமும், காய்ச்சலை போக்க பழ ஓடும், மந்தத்தை போக்குதலுக்கும் வாய்த்துர் நாற்றத்தை போக்குவதற்கு பூவும் நெஞ்சு வலியைக் குறைத்தல் வாத சுரத்தை தணிக்க பட்டையும் பயன்படுத்தலாம்.

அவ்வாறே மகாவிஷ்ணு வழிபாட்டில் பயன்படுத்தப்படும் துளசியும் (ocium tenuifoorum) பல மருத்துவ குணங்கள் உடை யது. துளசியில் வெண்துளசி, கருந்துளசி இரண்டும் மிகப்பிரபலமானது. பெரும் பாலும் பெருமாள் கோயில்களில் பெரு மாளுக்கு அர்ச்சனை செய்யப்பட்ட இலை யானது சாறு பிழியப்பட்டு தீர்த்தமாக வழங் கப்படுகிறது. பொதுவாக சளி, இருமல், சயரோகம் போன்ற நோய் நிலைமைகளுக்கு சிறந்த மருந்தாக துளசி பயன்படுத்தப் படுகிறது. காய்ச்சலை குறைத்தல், தொண் டைப் புண்ணை குணப்படுத்தல், உடல் சூட்டை தணித்தல், கண்களில் ஏற்படும் அரிப்பு, எரிச்சலை குறைத்தல், வாய்த்துர் நாற்றம், ஈறுகள் பலவீனம் அடைதலுக்கும் துளசி பயன்படுத்தப்படுகிறது. இதயநோய், சிறுநீரக நோய் மற்றும் நீரிழிவு நோயின் பாதிப்புக்களை குறைக்கும் வல்லமை துளசிக்கு உள்ளது. பொதுவாக நறுமணம் மன அழுத்தத்தை குறைக்கும். இதனால் தான் வீட்டு முற்றத்தில் துளசிமாடம் வைக்கப் பட்டு மூன்று முறை சுற்றி வரும் ஐதீகம் நிலவுகிறது. இவ்வாறு சுற்றி வருவதால் மன அழுத்தம் குறைந்து புத்துணர்ச்சி கிடைக்கும். மேலும் துளசி கிருமிநாசினியாகவும் செயற் படுவதால் வீட்டிற்குள் பூச்சி, புழுக்கள் வரு வதை தடுக்கிறது.

அதேபோல் விநாயகர் வழிபாடு என்றவுடன் ஞாபகத்திற்கு வரும் அறுகம்புல்லும் ( cynodon dactylon) பல மருத்துவ குணங்கள் நிறைந்தது.

"ஆல் போல தழைத்து அருகு போல வேரூன்றி வாழ்"

என்பது பழமொழி. அதாவது அறுகின் வேரானது ஏனைய புல்லினங்களோடு ஒப்பிடுகையில் மிகமிக உறுதியானதும் மண்ணில் மிக உறுதியாக வேரூன்ற கூடியது மாகும். கண்ணுக்கு குளிர்ச்சியாக பச்சைப்ப சேலென காட்சி தரும் அறுகானது மங்கள நிகழ்வுகளில் ஓரங்கமாகவும் காணப் படுகிறது. ஈரலிப்பான மண்ணில் இலகுவாக வளரும் அறுகானது நாட்பட்ட தோல் நோய்கள், உடல் உஷ்ணம், தேகத் தளர்ச்சி, நீரிழிவு, கண் தொடர்பான நோய்கள் , மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அசாதாரண இரத்தப்போக்கு போன்ற நிலைமைகளுக்கு அறுகைப்போல சிறந்த ஒரு மூலிகை மருந்து வேறு இல்லை எனலாம். அறுகம்புல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுதாக அரைத்து நல்லெண்ணெய், பசும் பால், தயிர் போன்ற ஏதாவது ஒன்றில் கரைத்து குடிப்பதால் பலன் இன்னும் அதிக மாகும். வெறுங்காலில் அறுபம்புற்றரையில் நடப்பது பாதவெடிப்பு கால்களில் உள்ள புண்கள் மற்றும் பங்கசுத் தொற்றுக்களுக்கு நல்ல தீர்வாகும். நவ நாகரீகம் எனக் கருதி விலைகொடுத்து அலங்கார புற்களை வாங்கி வீட்டுத் தோட்டத்தை அலங்கரிக்கும் நாம் அவற்றுக்கு பதிலாக வயல் வரப்புகளில் பச்சைப்பசேலென வளர்ந்து கண்ணுக்கும் மனதிற்கும் இனிமை தரும் அறுகம்புல்லை வீட்டுத் தோட்டத்தில் வளர்த்தால் எண் ணற்ற நன்மைகள் கிடைக்கும்.

அதுமட்டுமன்றி அம்பிகை வழிபாடு என்றால் நம் மனக்கண் முன் தோன்றுவது வேப்பிலை (Azadirachta indica) ஆகும். வீட்டுக்கொரு வேப்பமரமென நம் முன் னோர் வளர்த்து வந்த அந்த மூலிகை விருட்சம் இன்றை வீடுகளில் காண்பதற்கரிய ஒன்றாக மாறிவிட்டது. ஒப்பீட்டளவில் ஏனைய விருட்சங்களைப் காட்டிலும் வேம்பி லிருந்து வெளிப்படும் பிராணவாயுவின் அளவு அதிகமாகும். வேப்பமர நிழலில் கண்ணயர்வது ஆயுளை அதிகரிக்கும் என எமது முன்னோர்கள் காரணத்தோடு தான் கூறியுள்ளனர். உடற்சூடு தணித்தல், ஜீரண கோளாருகளை நீக்குவதற்கு பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. வேம்பின் ஒவ் வொரு பாகமும் எண்ணற்ற மருத்துவ குண நலன்களை கொண்டது. வேம்பானது மிகச் சிறந்ததொரு கிருமிநாசினியாகவும் வைரசுக் கொல்லியாகவும் இருப்பதால்தான் அம்மை நோய்த்தொற்றின் தாக்கத்தை குறைத்து நோய் நிவாரணம் பெற வேம்பு முதன்மை யாக பயன்படுத்தப்படுகிறது.

மேலும் சாதாரணமாக அலங்காரத் திற்காக பயன்படுத்தப்படும் மாவிலைக்கே (Mangifera indica) பெரும் மருத்துவ குணங்கள் காணப்படுகின்றன. பொதுவாக மக்கள் கூடும் விழாக்களில், உற்சவங்களில் சுவாச நோய்கள் பரவும் வாய்ப்பும் அதிகமாகும். தோரணங்களில் தொங்கவிடப்படும் மாவிலைகளும் இடையிடையே தொங்க விடப்படும் வேப்பிலையும் சுவாசிக்கும் வாயுவை தூய்மைப்படுத்துவதோடு கிருமி நாசினியாகவும் செயற்படுகிறது. மேலும் தை மாதத்தில் பனிக்காலம் நிறைவடைந்து வரும் தட்ப வெப்ப மாற்றம் காரணமாக வரும் உடற்சூடு சார்ந்த நோய்களை தடுக்கும் வகையில் தைப் பொங்கலன்று உயரிய மூலி கைகளை வீட்டு வாசலில் கொத்தாக கட்டி வைத்தார்கள். இது மூலிகைக் காப்பு என அழைக்கப்படும். இதில் பிரதானமாக மாவிலையும் மேலும் துளசி, பிரண்டை, வேப்பிலை போன்ற பல மூலிகைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஆனால் இன்றோ பல வீடுகளில் மாவிலைக்கு பதிலாக பிலாத் திக்கு உலோகங்களால் செய்யப்பட்ட மாவிலை தோரணங்கள் தொங்கவிடப்பட்டு இருப்பதை காணும் போது அவர்களின் அறி யாமை கண்டு மன வேதனை ஏற்படுகிறது.

எமது முன்னோர்கள் கடைப்பிடித்த ஒவ்வொரு ஆன்மிகம் சார்ந்த பழக்க வழக்கங் களும் ஏதோ ஒரு ஆரோக்கிய மேம்பாட்டை உட்பொருளாகக் கொண்டே இருந்தது. உதாரணமாக மேற்குறிப்பிட்ட சகல மூலிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அந்த நாட்களில் ஒவ்வொரு சைவக் குடிமகன் வீட்டிலும் வளர்க்கப்பட்டு வந்தது. இதனால் சாதாரணமாக அவர்கள் சுவாசிக்கும் வாயுவே மிகச் சுத்தமானதாகவும் புத்துணர்ச்சி அளிப்பதுமாக இருந்தது. ஆனால் இன்று நாமோ நாகரீகம் என்ற பெயரில் பல ஆயிரங்களை செலவழித்து அழகுப் பூஞ்செடிகளை வாங்கி வீட்டை அலங்கரிப்பதிலே மும்முரமாக ஈடுபட்டுள்ளோமே தவிர எமது ஆரோக்கியத்திற்கு ஏற்ற வகையில் சுற்றுச் சூழலை வடிவமைப்பதில் துளியளவு அக்கறை இன்றி உள்ளோம்.

பொதுவாக சுதேச மருத்துவ முறைகளாக கருதப்படும் ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி ஹோமியோபதி போன்றன மூலிகை மருத்துவத்தை அடிப்படையாக கொண்டதுடன் நோய்களை முற்றாக குணப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. எனினும் மேலைத்தேய மருத்துவ முறையானது நோய் அறிகுறிகளை மட்டுப்படுத்தி உடனடி நிவாரணம் (acutecure) அளிக்குமே தவிர நோயை முற்றாக நீக்காது.

எனவே எமது முன்னோர்களை போல ஆன்மீக வழியில் ஆரோக்கியத்தை பெற இத்தகைய அரும்பெரும் மூலிகைகளை வீட்டில் இயன்றவரை வளர்ப்பதுடன் அவற்றை நோய்நிலைமைகளின் போது உரிய முறையில் எடுத்துக் கொள்வதன் மூலம் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ்வது எங்கள் பொறுப்பாகும். அதைவிட வருங் கால சந்ததியினருக்கு எமது ஆன்மீக செயற்பாடுகளில் பொதிந்துள்ள உட்பொருளை விளக்கி இவை மூடநம்பிக்கைகளல்ல, ஆழ்ந்த அர்த்தம் பொதிந்த செயற்பாடுகள் என்பதை விளக்குவது இன்றைய இளம் சமுதாயத்தின் தலையான கடமையாகும்.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே

(திருக்குறள் – 1080)

உழவின் வருந்தத்தைக் கண்டு, பிற தொழில்களைச் செய்து திரிந்தாலும் முடிவில் ஏருடையவரையே உலகம் உணவுக்கு எதிர்பார்த்தலால். உழவே மிகவும் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் உண்மையான மகிழ்ச்சிக்கான வழி

**குமரேசன் அனுசன்**
பொறியியற்பீடம்
அறிமுகமாணவி

பௌதீக உலகின் எல்லாப் பொருட்களும் தற்காலிகமானவை. அனைத்துப் பொருட்களும் உருவாகி சிறிது காலம் இருந்து சில உப பொருட்களை உருவாக்கி அழிந்து விடுகின்றன. இது இயற்கையின் சட்டம். ஆனால் இந்த நிரந்தரமற்ற உலகிற்கு அப்பால் நிலையான ஒருலகம் உண்டு. இது பகவத்கீதையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடக்கமும் முடிவும் இல்லாத சனாதன மான பகவான் உள்ளார். சனாதனமான ஒருலகம் உண்டு. சனாதனமான ஜீவனும் உண்டு. எனவே ஆத்மாவின் நித்திய கடமை யான சனாதன தர்மத்தை மீண்டும் நிலை நிறுத்துவதே பகவத்கீதையின் முழு நோக்க முமாகும். மனிதன் தற்காலிகமான செயலி லிருந்து விடுபட்டு பகவத்கீதையில் பகவா னால் உபதேசிக்கப்பட்ட செயல்களை மேற் கொண்டால் நமது செயல்கள் அனைத்தும் தூய்மைப்படுத்தப்படும். இதுவே இறைவன் மீதான தூய வாழ்வாகும்.

சனாதன தர்மம் என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் மதவழிமுறையல்ல. இவ்வழி நித்தியமான ஜீவன் நித்தியமான முழுமுதற் கடவுளுடன் உறவு கொள்ளக் கூடிய நித்திய மான செயலாகும். பகவத்கீதையின் இறுதி அத்தியாயத்தில் (18:66) பகவான் பகிரங்க மாக அறிவிக்கிறார்.

எல்லா தர்மங்களையும் கைவிட்டு என்னிடம் மட்டுமே சரணடைவாயாக. உன்னை எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் விடுவிக் கிறேன் பயப்படாதே என்று பகவான் பக்த னுக்கு விடுதலை அளிக்கிறார்.

தினமும் குளிப்பதனால் தன் உடலை ஒருவன் தூய்மைப்படுத்துகிறான். ஆனால் கீதை எனும் கங்கையில் ஒருமுறை குளிப் பதன் மூலம் ஜட வாழ்வின் களங்கங்கள் எல் லாவற்றையும் கழுவி விடுகிறான் என கீதை மகாத்மியம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் அனைவரும் ஆத்மாக்கள்:

நாம் அனைவரும் பூரணமான ஆத்ம திருப்திக்காக ஏங்கிக் கொண்டுள்ளோம். முதலில் ஆத்மா என்றால் என்ன என்று அறிய வேண்டும். “ஆத்மா” அல்லது நான் எனும் வார்த்தை உடல், மனம், ஆத்மா ஆகிய வற்றைக் குறிக்கின்றது. ஆத்மாவாகிய நான் ஜடப்புலன்களாலான ஸ்தூல உடலாலும் மனம் புத்தி அகங்காரம் எனும் சூட்சும உட லாலும் மூடப்பட்டுள்ளேன். அகங்காரத் தினால் ஒருவன் தன்னை தன் உடலுடன் தொடர்புபடுத்திக் கொள்கிறான். உடல் சம்பந்தப்பட்ட இந்த அடையாளங்கள் உண் மையானவை அல்ல.

வேத இலக்கியங்கள் ஆத்மாவைப் பற்றிய ஞானத்தை நமக்குத் தருகின்றன. இதுவே உண்மையான ஆனந்தத்தின் தொடக்கம். நாம் இந்த உடல் அல்ல என்ப தைப் புரிந்து கொண்டவுடன் புலனின்பம் தேவையற்றது என்பதையும் புரிந்து கொள் வோம். ஸ்ரீமத்பாகவதம் (5.5.1) “இந்த மனிதப் பிறவியானது மலம் தின்னும் பன்றி யைப்போல் கஷ்ரப்பட்டு உழைத்து புலன் களைத் திருப்தி செய்வதற்காக அல்ல” எனக் கூறுகின்றது.

பூரண ஆளுமையுடைய இறைவனை மறந்து அவனுக்கு அன்புத் தொண்டு செய் வதை மறந்துவிட்டதே மகிழச்சியின் மைக்குக் காரணம். நமது அன்பை சரியான இலக்கின் மீது செலுத்த வேண்டும். அந்த இலக்கே இறைவன். கடவுகளின் காதலரா வதற்கு கற்றுக் கொடுக்கும் மதமே மிகச் சிறந்த மதம். எந்தவித உள்நோக்கமும் தடை களுமில்லாத தூய அன்பை நாம் பகவானின் மீது செலுத்த வேண்டும். அதுவே உண்மை யான மகிழ்ச்சிக்கான வழி.

பன்றி வாழ்க்கை :- இந்த உலகம் முழுவதும் புலனின்பத்தின் அடிப்படையில் இயங்கிக் கொண்டுள்ளது. உண்ணுதல், உறங்குதல், உடலுறவு கொள்ளுதல், தற்காத்துக் கொள் ளுதல் என மனிதனும் அதைத்தான் செய் கிறான். நாய், பன்றி என எல்லா உயிர் வாழி களும் அதைத்தான் செய்கின்றன. பன்றி ஒன்றுக்கு தான் பன்றி என்பது தெரியாது. நாமே அதற்கு பன்றி என பெயர் சூட்டி யுள்ளோம். தனது உடல் தேவையை பூர்த்தி செய்வது மட்டுமே அதன் நோக்கம். அதற்காகவே அந்த மிருகம் இரவு பகலாக மலத்தைத்தேடி உழைக்கின்றது. மனிதன் நாகரிக வாழ்க்கை எனக் கூறிக்கொண்டு இரவு பகலாக ஓய்வின்றி உழைக்கின்றான். ஆனால் மனிதவாழ்க்கை பன்றி வாழ்வைப் போலல்லாமல் இறைவன் மீதான பாதையை தேடுவதே உயர்ந்த ஞானம்.

## ஆத்மாவின் தர்மம் எது?

ஒவ்வொரு மனிதனும் இன்று தனது புலன்களைத் திருப்தி செய்வதால் மட்டுமே மகிழ்ச்சியாக இருக்க முடியும் என நினைக் கிறான். தன்னை அழகுபடுத்துதல், செல்லப் பிராணி வளர்த்து அதற்கு சேவை செய்தல் என்று இதர பொழுது போக்குகளில் ஈடுபடு கிறான். இதன் மூலம் மகிழ்ச்சியாய் இருக்க முயற்சிக்கிறான். ஆனால் மகிழ்ச்சியான அடிப்படைக் கொள்கை அங்கு இல்லை. அடைபட்டுக்கிடக்கும் ஆத்மாவாகிய கிளியை திருப்திப்படுத்தாமல் வெறும் உடலாகிய கூண்டை மட்டும் அலங்கரிப்ப தால் உண்மையான மகிழ்ச்சி கிடைக்காது. அழியும் உடலான தற்காலிகமான ஒன்றுக்கு மனிதன் முக்கியத்துவம் கொடுப்பதை கீதை கண்டிக்கின்றது. பகவத்கீதை கூறும் ஆத் மாவைத் திருப்திப்படுத்தும் வழியைப் பின் பற்றுவதே உண்மையான மகிழ்ச்சிக்கான வழி. மிளகாயின் தர்மம் காரமாயிருப்பது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்க்கரையின் தர்மம் இனிப்பாய் இருப்பது. இதுபோல் ஆத்மாவின் தர்மம் இறைவனுக்கு பக்தித்தொண்டு செய்வது. இதுவே ஆத்மா வின் தர்மம்.

பகவத்கீதையில் (10:26) "அன்புடனும் பக்தியுடனும் ஒருவன் எனக்கு ஒரு இலையோ, ஒரு பூவோ, ஒரு பழமோ, நீரோ அளித்தால் அதை அன்புடன் ஏற்கிறேன்" பக வான் கூறுகின்றார்.

ஒவ்வொரு மனிதனும் யாரிடமாவது அன்பு செலுத்திக் கொண்டே இருப்பான். தாய் மகனிடம், கணவன் மனைவியிடம், யாரும் இல்லாத நிலையில் நாயை வளர்த்து அதனிடம் அன்பு காட்டி அதற்குச் சேவை செய்வது மனித இயல்பு. இந்த அழியும் நிரந்தரமற்ற உறவுகளிடம் அன்பு செய்து பின் துன்பப்படும் நாம் பரம புருஷபகவானிடம் அன்பு செய்ய கற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் பகவான் பகவத்கீதையில் (10:10) மிகுந்த அன்புடனும் பக்தியுடனும் எனக்கு தொண்டு செய்வதில் எப்போதும் ஈடுபட்டிருப்பவர்களுக்கு என்னிடம் வந்தடைவதற்கான அறிவை நானே வழங்கு கின்றேன் என தன்னை அடையும் வழியைக் காட்டுகின்றார். எனவே நித்தியம், ஆனந்தம் மற்றும் அறிவு நிரம்பிய மிக உயர்ந்த பக்கு வமான வாழ்வை அடைவதற்கு விரும்பாத முட்டாள் யாரும் உண்டா? பகவான் அன் பான சேவையை மட்டுமே விரும்புகின்றார். கீதை 4ம் அத்தியாயம் பதம் 9ல் "எனது தோற்றமும் செயல்களும் திவ்வியமானவை என்பதை எவனொருவன் அறிகின்றானோ அவன் இந்த உடலை விட்டபின் மீண்டும் பௌதீக உலகில் பிறவி எடுப்பதில்லை. அர்ஜீனா அவன் எனது நித்திய உலகை அடை கிறான்" என ஒவ்வொரு ஆத்மாவின் சார்பாக பகவான் அர்ஜீனுக்கு கூறுகின்றார். அவரது நித்தியமான திருநாட்டைச் சென்றடைய பகவான் கீதை மூலம் நமக்கு வழிகாட் டுகிறார். மரணத்தின் பின்னரான வாழ்வை வளப்படுத்த வேண்டுமெனில் ஒருவன் பகவத் கீதை மூலம் பகவானுடன் நாம் உறவாட வேண்டும். அதில் கூறப்பட்ட ஆத்ம தர்மத் தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

யார் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப் பினும் கடவுகளின் மீதான அன்பை வளர்க் காவிடில் அவர்களின் மத வழிமுறைகள் அனைத்தும் பயனற்றவையே. நித்திய ஆனந் தமும் பூரண அறிவும் கொண்ட வாழ்வை நோக்கி அழைத்துச் செல்லும் பரமபுருஷ ருக்கான பக்தித் தொண்டே ஆத்மாவின் தர்மம். அதுவே உண்மையான மகிழ்ச்சிக் கான வழி. காலம் கடந்த ஞானமான பகவத் கீதை அந்த வழியை நமக்குச் சொல்லித் தருகின்றது.

- ❖ ஆயிரம் வீண் வார்த்தைகளைவிட பயனுள்ள இதமான ஒரு நல்ல வார்த்தை சிறந்தது.
- ❖ பண்புடனும் மரியாதையுடனும் இருப்பவன் உலகில் எதையும் சாதித்து விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டாரியல் வழிபாடு

**விக்கினேஸ்வரநாதன் சாரங்கன்**
2ம் வருடம்
கலைப்பீடம்

ஈழதேசம் பரந்து விரிந்த பண்பாடு களைத் தன்னகத்தே கொண்ட வளம்மிகு தேசம் பண்டைய அரசாட்சியுடன் பின்னிப் பிணைந்து இன்றளவும் வளர்ச்சி அடைந்து வரும் ஓர் மத நெறியாக இந்துமதம் காணப் படுகின்றது. மனிதனின் வாழ்வியலினை நிர்ணயிக்கும் ஓர் கூறாக மதம் காணப்ப டுகிறது. எல்லா மதங்களிலும் இரு நிலைப் பட்ட வழிபாட்டு முறை காணப்படுகிறது. அதில் ஒன்று நன்கு வளர்ச்சியடைந்ததாகவும் வர்ணாச்சிரம கோட்பாட்டில் மேன்நிலை வகுப்பினர்க்கு உரியதாகவும் ஒழுங்கமைக்கப் பட்டதாகும். காணப்படும் இவ் வழிபாட்டு முறை ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறை எனப்படும். மற்றைய வழிபாட்டு முறை சடங்குகள், பாரம்பரிய வழிபாடு என்ப வற்றை அடிப்படையாக கொண்டு காணப் படும். இவ் வழிபாடு பெரும்பாலும் வர் ணாச்சிரம கோட்பாடு இழிசனர் என குறிப் பிடும் மக்களுக்கு உரியதாக காணப்படும். இவ்வழிபாடு ஆகமம் சாரா வழிபாட்டு முறை எனப்படுகிறது. மனிதன் கானகத் திடையே அலைந்து திரிந்த காலங்களில் அவனுக்கு அச்சத்தையும் அனுகூலத்தையும் தருபனவற்றை கடவுளர் ஆக்குகிறார். அவற்றை மகிழ்விக்க சடங்குகளை ஆற்றுப் படுத்துகின்றான். இவை கால்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்டு மதமாகின்றது.

ஆரம்பத்தில் ஐம்பூத வழிபாடு மனிதனால் தொடங்கி வைக்கப்படுகிறது. பின்னாளில்

மரங்களை மனிதன் இறைவனாக மேனி லையாக்கம் செய்கிறான். தமிழர்களின் பழந் தமிழ் இலக்கியங்களில் மர வழிபாடு காணப் பட்டது என்பதற்கான சான்றுகள் விரவிக் காணப்படுகின்றது. நற்றினை பாடலில் “நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து என ஆல மரத்து வழிபாடு காட்சிப்படுத்தப்படுகிறது என மேலும் அகநானூற்றில்

“தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்”

என வேம்பு மரமுறை கடவுள் பற்றி கூறுகின்றது. இவ்வாறு மரங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைநிலை அளிக்கத் தொடங்கிய வழிபாடு இன்று தல விருட்சம் என ஆகமம் சார்ந்த வழிபாடு மேன்னிலையாய் காட்ட ஆகமம் சாரா வழிபாடு இன்றளவும் தனியே மரங்களை வழிபடும் நிலையிலே காணப்ப டுகின்றது.

காலப் பெருநதியின் பொக்கிஷங்களை அரவணைத்து எழும் இந்த மதத்தின் ஆகமம் சாரா / நாட்டாரியல் வாழிபாடு இலங்கைத் தீவின் அத்தனை பகுதிகளிலும் விரவிக் காணப்படுகின்றது. இச்சிறுதெய்வ / நாட் டாரியல் வழிபாட்டுமுறை பற்றி இக்கட் டுரை பின்வரும் தலைப்புக்களை ஆராய்ந்து நகர்கிறது.

1. ஆகமம் சாரா தெய்வங்கள்
2. வழிபாட்டு முறைகள்
3. சிறுதெய்வ வழிபாட்டு முறையோடு இணைந்த கலைகள்
4. ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளின் இன்றைய நிலைமை

ஏலவே குறிப்பிட்டது போல நிலையாய் வாழ தலைப்பட்ட மனிதன் தனக்கு அச்சத்தையும் அனுகூலத்தையும் தருபவற்றை தெய்வநிலைப்படுத்த தொடங்கினான். இவை காலகதியில் நாட்டாரியல் தெய்வங் களாக பரிணமித்தன. ரெவவேண்ட் எனும் சமூக ஆய்வாளர் நாட்டார் தெய்வங்களை வகைப்படுத்தும்போது ஆண்நாட்டார் தெய் வங்கள், பெண்நாட்டார் தெய்வங்கள், கல் நாட்டாரியல் வழிபாட்டினை ஊர்த் தெய் வங்கள், குலதெய்வங்கள், இதைத் தெய் வங்கள், சமாதி தெய்வங்கள் எனவும் வகைப்ப டுத்தப்படுகிறது.

சிறுதெய்வ வழிபாடு பெரும்பாலும் சாதிய அடிப்படையிலே ஈழ தேசத்தில் காணப்படுகிறது.

"உழவருக்கு சிவனாமுடுக்கு மாரியம்மன்
நளவருக்கு மீதுராம் தொண்டருக்கு வேலவனாம்
மழவருக்கு வீரபத்திரன் மறையோர்க்கு நான்முகனே
வேந்தர்க்கு மாலாம் வேடருக்கு கன்னிகளாம்
ஏத்துபணி செய்வோர்க்கு காளியாம் நேர்ந்து பைக்கின்
முட்டன் முடவன் முனிவரெவரார்வரினும்
பட்டமது கட்டிவைத்தான் பாண்டி மன்னன் நிச்சயித்தான்"

என சாதியத்துக் கடவுளரை வகுக்கிறது மட்டக்களப்பு மான்மியம் வரையறுக்கிறது. ஆயினும் இன்று சிவன், வேலன், நான்முகன் போன்றோர் இன்று சகல சாதிய மக்களாலும் வழிபடப்படும் நிலை காணப்படுகிறது. இத் தெய்வங்கள் இன்று பெருந்தெய்வங்காக ஆக்கப்பட்டுள்ளன.

நாட்டார் தெய்வங்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டுமோ இல்லை இலங்கையி னுடைய அத்தனை பகுதிகளிலும் பரவிக் காணப்படுகிறது. நாட்டார் தெய்வங்கள் எனும் போது வைரவர், முனியப்பர், நாகதம் பிரான், பெரியதம்பிரான், சுடலைமாடன், வல் லிக்கண், கொத்தி, நாச்சி, பூசையம்மன், வராகி என்பவற்றை குறிப்பிடலாம்.

ஐயனார் சிறு தெய்வழிபாட்டில் முக் கியம் பெறும் தெய்வமாக இலங்கையின் ஊர்கள், மலை உச்சிகள், வயல் நிலங்கள் என்பவற்றில் ஐயனார்க்கான ஆலயங்கள் விரவிக் காணப்படுகின்றன. ஐயனார் பற்றி கச்சியப்பரின் கந்தபுராணம் குறிப்பிடும் போது

"காருரழ் வெய்ய களிலுளிடையாகிப்
பாரிட எண்ணிலர் பாங்குர நண்ணர்
புரரணை புட்கலை பூம்புறமேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வர்தான்"

என குறிப்பிடுகின்றது.

இந்த ஐயனார் காவல் தெய்வம், பிழை களை பொறுக்காத தெய்வம் எனும் நம்பிக் கையோடு பக்தி சிரத்தையோடு சடங்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளுவார். அண்ணாமார், வீரபத்திரர் போன்றோர் ஐயநாரின் பரிகலங்களாக விளங்குகின்றார். ஐயநாரின் தோற்றம் பற்றி குறிப்பிடும்போது குள்ளமான உருவமுடையவராகவும் கழுத்தில் உருத்திராட்சமும் மார்பின் பூநூலும் பருத்த தொத்தியும் இடுப்பில் அரைஞாணும் கைகளில் வெள்ளிப்பிரம்பும் உடையவராக காணப்படுகிறார். இந்த ஐயனாருக்கான நாட்டாரியல் வழிபாடு யாழ்ப்பாணம், அனலைதீவு, மண்டைதீவு, தாவடி, வன்னிப்பகுதியில் விரவிக் காணப்படுகிறது. விவசாயிகள், குயவர்கள் போன்றோரிடையே செல்வாக்கு மிக்க தெய்வமான விளங்குகிறார். பலியிடல் சடங்கு மூலம் வழிபடப்பட்ட ஐயனார் வழிபாடு இன்று சட்டங்களின் இறுக்கப்பாடு காரணமாக பொங்கல், மடை என்பவற்றோடு வரையறுக்கப்பட்டு காணப்படுகிறது.

## வல்லிக்கண்

வட பகுதி வள்ளுவர் சாதியினரால் வழிபடும் தெய்வமாக வல்லிக்கண் தெய்வம் காணப்படுகிறது. சாந்துக்கல், சூலம் இத்தெய்வத்தின் அடையாளமாக கொள்ளப்படுகிறது. இன்று இத்தெய்வ வழிபாடு அருகி வரும் நிலை காணப்படுகிறது. வள்ளுவர் சமூகத்தில் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவ மதமார்க்கத்தை தழுவிக் கொண்டதாலும் சமூக உயர்நிலையை விரும்பியதாலும் வள்ளுவர் சமூகத்தினர் இவ்வழிபாடு கைவிடப்படும் நிலை ஏற்படுகிறது. இவ் வல்லிக்கண்ணுக்கான ஆலயங்கள் சங்கானை, உடுவில் போன்ற கிராமங்களில் காணப்படுகிறது. இன்று வல்லிக்கண் வல்லிபுர நாதராக மாற்றப்பட்டு திருமால் அவதாரமாக பிராமணிய செல்வாக்கிற்கு ஆட்பட்டு விட்டார்.

## கொற்றித் தெய்வம்

வட பகுதி நாட்டார் தெய்வங்களுள் கொற்றி தெய்வமும் ஒன்றாகும். கொற்றி எனும் பெயர் மருஊ கொத்தி ஒன்றாகி அதுவே நிலைத்து விட்டது. பிரசவ நிலைகளில் இவ்வழிபாடு ஆற்றப்படும் தெய்வமாக கொத்தி தெய்வம் காணப்படுகிறது. அமங்கலம் தருகின்ற போது கொத்தி ஒரு துர்தேவதையாகவும் நோக்கப்படுகிறது. இத் தெய்வம் பெரும்பாலும் பால்நிறைந்த மரங்களிலே உறைவதாக ஐதீகம் காணப்படுகிறது. இதனாலேயே கொத்தியாள் எனும் சொல் காணப்படுகிறது. கொத்திக்குரிய வழிபாட்டு இடங்களாக ஆனைக்கோட்டை, நெடுந்தீவு போன்றவை காணப்படுகின்றன.

## பூஜை அம்மன்

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கினுடைய ஓர் முக்கிய கிராமிய தெய்வமாக பூஜை அம்மன் காணப்படுகிறது. மாமுனை குடாரப்பு, ஆழியாவளை போன்ற இடங்களில் இத் தெய்வங்களிற்கான வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. அந்நியர் ஆட்சிக் காலத்தில் நெற்பனைக்குள் வைத்து வீடுகளில் இத் தெய்வம் வழிபடப்பட்டதாக செவிவழிக் கதைகள் குறிப்பிடப்படுகின்றது. மதத் தடைகள் நீங்கியதன் பின் நாட்டார் வழிபாடுகள் பூஜை அம்மனுக்கு இடம்பெறலாயிற்று.

## வதனமார்

வடபகுதியின் வன்னிமை பகுதிகளின் வழிபடப்படும் தெய்வம் வதனமார் ஆகும். மருதுநிலக் கடவுளாக போற்றப்படுகிறார். இந்த வதனமார் வழிபாடு ஆனது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றது. மாடுகள் நோய் பிணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்றி வாழவும் பட்டிபெருக்கமடையவும் இத் தெய்வம் வழிபடப்படுகின்றது.

இத்தெய்வத்திற்கென தனித்துவமான படிமங்கள் காணப்படுவதில்லை. இத் தெய்வத்தின் அருகில் அம்பும் வில்லும், கோடாரி, கருங்கரலி பொல்லு என்பன வைக்கப்பட்டிருக்கும். இத்தெய்வ வழிபாடு இன்றளவும் மேனிலையாக்கம் பெறாத நிலையிலே காணப்படுகின்றது.

## பெரிய தம்பிரான்

சிவனின் அவதாரமாக கருதி வழிபாடாற்றப்படும் நாட்டார் தெய்வமே பெரிய தம்பிரான் ஆகும். தக்கன் செய்த யாகத்தின் சிவனை அழிக்க தம்பிரான் தோன்றினார் என்றும் தம்பிரானை அழிக்க சிவன் வீரபத்திரரை தோற்றுவித்தார் எனலாம். வீரபத்திரரிடம் இருந்து தம்பிரானை சலவைத் தொழிலாளி ஒருவர் பாதுகாத்ததாகவும் அதனால் சலவைத் தொழில் செய்பவர்களின் முக்கிய தெய்வமாக தம்பிரான் மாறியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. இந்த பெரிய தம்பிரானுக்குரிய ஆலயங்கள் பெரும்பாலும் வயல்வெளிகள், ஆற்றோரங்கள், குளிக்கரைகள் அண்டி காணப்பட்டது. இன்று தம்பிரான் மேனிலையாக்கம் அடைந்து கொண்டு இருப்பதை காணலாம்.

ஆகமம் சாராத வழிபாடு முறைகள் எனும் போதும் அவை மரபு வழியாக சடங்குகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. சடங்குகள் மனத வாழ்வின் மிக முக்கியமுடையதாக விளங்குகின்றது. சடங்குகள் இயற்கை சமயத்தின் தோற்றத்துடன் தொடர்புபட்டு விளங்குகின்றது. இயற்கையில் தங்கி வாழும் மனிதன் தம்மை வாழ வைத்த தெய்வங்களுக்கு சடங்காற்றி வழிபடும் முறையே சிறு தெய்வ வழிபாட்டில் முக்கியம் பெறுகின்றது. சடங்கு எனும் பதம் பற்றி பிரிட்டானிக்காக கலைக் களஞ்சியம் குறிப்பிடும் போது (Encyclopedio Britanniva) "பாரம்பரிய நடத்தைகளை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களில் குறிப்பாக அவதானிக்கக் கூடிய நடத்தை சடங்குகளாகும். இச்சடங்குகள் மனிதனின் நடத்தையை விளக்கும் ஒரு வழியாகவும் விளங்குகின்றன" என்கிறது.

நாட்டார் தெய்வங்களுக்கு பூஜைகள் மேற்கொள்வோர் பூசாரிகள் என அழைக்கப்படுகின்றது. சில தெய்வங்களுக்கு உரிய சடங்கு முறைகள் கலை சுவடிகளில் எழுதி பாரம்பரியமாக பாதுகாத்து வரும் வழக்கமும் காணப்படுகின்றது. இது பத்ததிகள் எனப்படுகின்றது. பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக பூசாரிகள் பதவி கைமாற்றப்படுகின்றது. சில சமூகங்களில் பூசாரி என்பது தனித்துவமான அடையாளமாகவும் கருதப்படுகின்றது. இந் நாட்டுப்புற தெய்வங்கள் வழிபாட்டு முறையினுள் கதவு திறத்தல், மடையெழுத்தல், கொடியேற்றச் சடங்கு என்பன காணப்படுகின்றன. இவ் வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் வருடத்தின் ஒரு முறையே மேற்கொள்ளப்படுகின்றது. பெரும் ஆலயங்கள் வருடத்திற்கு ஒருமுறையே திறக்கப்பட்டு சடங்குகள் நிகழ்த்தப்படும் முறை ஆரம்பத்தில் காணப்பட்டது. இன்று பெரும்பாலும் நாள் பூசையோ, வாரப் பூசைக்கோ ஆலயங்கள் மாறிவிட்ட தன்மையை காணலாம்.

## சமயம்

வழிபாட்டு முறையில் கும்பம், மடை லைத்தல் முக்கிய ஓர் சடங்காக சிறுதெய்வ வழிபாட்டில் கருதப்படும் தெய்வசக்தி அக் கும்பத்திலே உறைவதாக நம்பிக்கை காணப்படுகிறது. கும்பம் வைத்தல் பெரும்பாலம் உருக் கொண்ட நிலையில் பூசாரியாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படும். நாட்டார் தெய்வங்களை பூசிப்பதற்கு பெரும்பாலும் செந்தமிழ் மந்திரங்களே பயன்படுத்தப்படுகிறது. வழி பாட்டு முறைகளுள் ஊர்க்காவல் பண்ணுதல், மருந்து கொடுத்தல், தீ மிதிப்பு போன்ற வையும் இடம்பெறும்.

இந்நாட்டார் வழிபாடுகள் ஊடாக கலைமரபுகள் வளர்க்கப்படுகின்றது. பெரும்பாலும் சிறு தெய்வங்களுக்கான வழிபாடுகள் ஆண்டுக்கு ஒரு முறையே எடுக்கப்படுகிறது. இவ்வழிபாடு ஆடல், பாடல், அபிநயம் என்பவற்றின் மூலம் மேற் கொள்ளப்பட்டது. சடங்குகளுக்காக அமைக்கப்படுகின்ற பந்தல், விளக்குகள், ஆயுதங்கள் என்பன மூலம் அழகியல் கலை மரபு காட்டப்படுகிறது. இவை தவிர தனித்து வமான கூத்துக்கலை மரபு சிறுதெய்வ வழிபாட்டோடு தொடர்புபட்டு காணப்படு கின்றது. வசந்தன் கூத்து, காமன் கூத்து, ஏழு பிள்ளை நல்லதங்காள் போன்ற கூத்துகள் வழி பாட்டு முறையோடு இணைந்து காணப் படுகிறது. இவை தவிர கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம், பறை மேளக்கூத்து, புலி யாட்டம், காவடியாட்டம் போன்ற கலை களும் அரங்கேற்றப்படும்.

தற்காலத்தில் நாட்டார் வழிபாட்டின் நிலை என்பது கால மாற்றத்தாலும் அரசியல் நெருக்கடிகளாலும் கல்வி நிலைகளாலும் மாற்றத்துக்குள்ளாகியது. நாட்டார் தெய்வ வழிபாட்டில் இருவகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. கட்டிடங்கள் நிலையாக அமைக்கப்பட்டு நாட்டார் வழிபாட்டு முறை பின்பற்றபடுபவை ஒரு வகையாகவும் ஆகத நெறிக்கு உட்பட்டு விட்டவை இன்னொரு வகையான மாற்றமுமாகும். சிறு தெய்வ வழிபாடு ஆகம நெறிக்கு உட்படும்போதும் பிராமணமயப்படுத்தப்படுகின்றது. இங்கு சில நாட்டார் தெய்வங்கள்ஆரிய மயப்படுத் தப்படுகின்றது. சான்றாக வல்லிக்கண் வல்புர நாதராகவும் ஐயனார் ஐயப்பனாகவும் கண்ணகி புவனேஸ்வரி அம்மனாகவோ மற் றப்படுகின்றனர். இவ்வாறு பிராமணமயப் படுத்தல் இடம்பெற பிரதான காரணங்களாக சிற்ப வேலை பாடுகளுடன் ஆலயங்களை அமைக்க முயல்தல். சாதிய அடையாளங் களை இல்லாதொழிக்க முயலுதல் என்பன காணப்படுகின்றன. ஓர் சமுதாயம் பொரு ளாதார நிலையில் உயர்வடையும் போது பண்பாடுகளும் மாற்றமடைவது இயல்பே. ஆயினும் அத்தகைய நிலை முழுமையாக நாட்டாரியல் வழிபாட்டிலும் ஏற்படுமாயின் தெய்வங்கள் பல காணாமல் போக செய்யப் படுவதுடன் அருந்தவ கலைகள் பலவும் நலி வடையும் என்பது திண்ணம்.

## உசாத்துணைகள்


1. அனந்தராஜ்,ந (2008) வடபுலநாட்டார் வழக்கு, நந்தி பதிப்பகம், வல்வெட்டித் துறை
2. இன்பமோகன்,வ (2012) கிழக்கிலங் கைச் சடங்குகள்: சமயம் கலை அழ கியல் குமரன் புத்தக இல்லம், கொழும்பு
3. கனகரத்தினம்,பை, இரா(2016) ஈழத்து நாட்டார் வழிபாடு குமரன் அச்சகம், கொழும்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரனின் சிறப்புக்கள்

**சீவரத்தினம் அபிநயா**
கலைப்பீடம்
முதலாம் வருடம் (2016 Batch)

பேராதனையில் குடி கொண்ட
குமரன் - அவன்
குறிஞ்சி நில குறவனாய் - இரு
துணைவியருடன்
கருணையின் ஊற்றே - அவன்
கடைக்கண் பார்வை நம்மீதே

தத்துவம் பல்லாயிரம் தன்னிடம் கொண்டு
ஞாலம் தனை ஆளும் திருவடியே
ஆடுமயில் ஏறிவரும் - அழகு
காணுவோர் கண் திகட்டாதே
பேராதனை செல்வங்கள் பேர்பதிக்க - இவன்
கருணை செய்திடவே

தன் பாதம் பணிவோர் மகிழ
வளி வழங்குபவன் - எம் குமரன்
பெரும் வீரன் சூரனுடன் - இவன்
போர்கொண்டு வெற்றி கண்ட
மைந்தன் அவன்
கலைகளின் திருவடியாய் - இவன்
எங்கும் எதிலும் வேல்கொண்டு - நாம்
நினைத்து வாழ துணை நிற்பாயே.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் நல்வழிக் கோட்பாடுகள்

**பி.தர்சிகா**
பொறியியற்பீடம்

உண்மையான சுதந்திரம் எது? நாம் சுதந்திரமாக இருக்கிறோமா இல்லையா என்பதை எப்படி அறிந்து கொள்வது? நாம் சுதந்திரர்கள் என்றால் நம்மிடம் சுயநலம் இருக்காது என்பது விவேகானந்தரின்ன கருத்து. நாம் விரும்பியதை எல்லாம் செய்துவிட்டால் சுதந்திரமாக இருக்கிறோம் என்று பொருள் அல்ல. நாம் நமது தனிநபர் எல்லைகளைக் கடந்திருக்கிறோமா இல்லையா என்பது தான் கேள்வி.

தனிநபர் (ஜீவாத்மா) என்ற ஒன்றே கிடையாது என்கிறது அத்வைத வேதாந்தம். ஆனால் இதன் பொருள் என்ன, நல்லொழுக்க வாழ்க்கைக்கு இது எப்படி அடிப்படையாக முடியும் என்பது பற்றியெல்லாம் சிந்திக்கப் படவில்லை. இதனை உணர்ந்து இந்தக் கோட்பாட்டின் பலனைச் செயல்முறை வாழ்க்கையில் கொண்டு வந்தவர் விவேகானந்தர். சுயநலம் தீயொழுக்கம், சுயநல மின்மை நல்லொழுக்கம் என்று கூறினார் அவர்.

உண்மையான சுதந்திரம், ஆணவ மின்மை - இரண்டிற்குமான தொடர்பை அவர் கீழ்வருமாறு கூறுகிறார்.

சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தின் வெளிப்பாட்டை ஒவ்வொரு மதத்திலும் காண முடியும். எல்லா நன்னெறிகளுக்கும் சுயநலமின்மைக்கும் அதாவது சிறிய உடம்பே தாங்கள் என்று மனிதர்கள் எண்ணுவதிலிருந்து விடுபடுவதற்கும் அது தான் அடிப்படையாக உள்ளது. நல்லது செய்கிறான் என்றால், பிறருக்கு உதவுகிறான் என்றால் “நான்”, “எனது” என்னும் குறுகிய வட்டத்திற்குள் அவனால் அடங்கிக் கிடக்க முடியவில்லை என்பதே பொருள். இந்தச் சுய நலத்தை எவ்வளவு விடலாம் என்பதற்கான எல்லைகள் எதுவும் இல்லை. முழுமையான சுயநலமின்மையே லட்சியம் என்றுதான் மிகச்சிறந்த நன்னெறிக் கோட்பாடுகள் எல்லாமே போதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமின்மை அல்லது "நான்" என்ற எண்ணத்தை விடுவது என்பது உண்மையின் எதிர்மறைப் பண்பு. இது உபநிஷதங்களிலும் காணப்படுகின்ற ஒரு முக்கியமான கருத்தாகும். கீதையின் முதல் ஆறு அத்தியாயங்கள் இந்தக் கருத்தைச் சிறப்பாக விளக்குகின்றன. இது சொந்த முக்தியை நாடுபவனிடம் இருக்க வேண்டிய ஒரு பண்பாக கருதப்படுகிறதே தவிர சமூக சேவைகளில் ஈடுபடுபவர்களிடம் இருக்க வேண்டிய ஒரு நல்லொழுக்க பண்பு என்று போதிக்கப்படுவதில்லை.

உண்மையின் உடன்பாட்டுப் பண்பு அன்பு. ஆணவம் அல்லது தவறான "நான்" போகும் போது உண்மையான "நான்" அல்லது ஆன்மா தன்னைத்தானே வெளிப்படுத்துகிறது. இந்த ஆன்மா எல்லா உயிரினங்களிலும் உள்ளது. இந்த ஆன்மாவின் பிரபஞ்சப் பரிமாணமே கடவுள். எல்லா அன்பின் அடிப்படையும் இந்த ஆன்ம ஒருமையே.

மனிதன் ஏன் மனிதனை நேசிக்க வேண்டும்? ஏனெனில் அனைவருள்ளும் ஒரே ஆன்மா இருக்கிறது. இந்தக் கருத்தை அவர் ஒரு புதிய சமுதாயத் தத்துவமாகவே மாற்றினார். ஆன்மீக மனிதநேயம் அல்லது புதிய மனிதநேயம் என்று இதனை நாம் கூறலாம். இதனை விளக்கும் போது அவர் இதனைக் கூறுகிறார்.

நீதி நெறி என்றால் ஒருமை; அதன் அடிப்படை பண்பு. இந்த முயற்சியின் வெளிப்பாட்டையே நாம் அன்பு, கருணை என்று சொல்கிறோம். இதுவே நீதிநெறி, நன்னெறி எல்லாவற்றிற்கும்அடிப்படை. இதுவே வேதாந்த தத்துவத்தின் "தத்துவம் அஸி - நீயே அது" என்ற பிரபல சூத்திரத்தில் அடங்கியுள்ளது.

அன்பு என்பது வெறும் தத்துவம் அல்ல. சேவை என்பதன் மூலம் அது பரிசோதிக்கப்பட வேண்டும், புனிதப்படுத்த வேண்டும். அதனால்தான் சமுதாய சேவை என்பதைத் தமது இநதியப் பணித்திட்டத்தின் ஓர் அம்சமாக ஆக்கினார் விவேகானந்தர்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. சேவை என்பதற்கு ஓர் ஆன்மீக கண்ணோட்டத்தையும் அவர் அளித்தார். வெறுமனே சேவை செய்வது அல்ல; சிவன் வடிவாகக் கண்டு சேவை செய்வது; (சில ஸ்ஞானே ஜீவ ஸேவா) என்று குறிப்பிடுகிறார் அவர்.

இயல்பாக வருகின்ற அடுத்த கருத்து சமத்துவம். எல்லோரிலும் ஒரே ஆன்மா இருக்கிறது என்றால் எல்லோரும் சமம் என்று தானே பொருள். இங்கே ஆண் - பெண், உயர்ந்தவர்- தாழ்ந்தவர் என்ற எந்தப் பாகுபாடும் இல்லை. சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வேண்டும் என்ற கருத்திற்க ஆன்மக் கோட்பாடு சிறந்த அடிப்படையாகத் திகழும்.

**சிந்தனைத் துளிகள்!**

❖ வெளிச்சத்தை நோக்கிச் செல்! ஆனால் விட்டில் பூச்சி போல் ஆகி விடாதே.

❖ முயற்சிகள் தவறாகலாம். ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராக்கம்

**குமரேசன் அனுசன்**
பொறியியற்பீடம்
அறிமுகமாணவி

உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தகரர் களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபெருமானிடம் முறை யிட்ட போது சிவபிரானது மூன்று கண்களி னின்றும் சிந்திய மணியே உருத்திராக்கம் என்பர்.

எனவே, ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகின்றது. இதனை அணிதல் அவரது திருவருட் பேற்றிற்கு அறிகுறி. பத்தினிப் பெண்களுக்குத் திருமாங்கலியம் எங்ஙனம் புனிதமான ஆபரணமாக விளங்குகின்றதோ அங்ஙனமே சிவனடியார்களுக்கு உருத்தி ராக்கம் போற்றி அணிய வேண்டிய புனிதச் சின்னமாகத் திகழ்கின்றது. உண்மையடியார் களைச் சைவ நெறியினின்னும் பிறழாமற் காக்கும் இரட்சையாகவும் இது விளங்கு கின்றது.

**உருத்திராக்க வகைகள்:** ஒரு முகம் தொடக்கம் பதினாறு முகம் வரை கொண்ட மணிகள் உண்டு. ஒவ்வொரு வகை மணிக்கும் ஒவ் வொரு அதிதேவதை கூறப்படுகின்றது. பொன்னிறம், கருநிறம், கபில நிறம் ஆகிய நிறங்களில் உருத்திராக்க மணிகள் உள்ளன. ஒரே இன மணிகளாலான மாலைகளே அணி யத்தக்கன.

உருத்திராக்கத்தின் மறுபெயர்கள் கண்டி, அக்கு, கண்மணி, சிவமணி, தாழ் வடம், திருஅடையாளம் போன்றவையாகும்.

உருத்திராக்கம் அணிந்தார் பெறும் பேற்றைச் சம்பபந்தப் பெருமான் கீழ்க்காண் பாடலில் விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைர்
தக்கு மாலைகொ டங்கையி லேண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே

முறையாக உருத்திராக்கம் அணிந்து இறைவனிடம் அன்பு பூண்டார்க்கு உடல் நலமும் செல்வ வளமும் நெடுவாழ்வும் இன்ப வாழ்வும் இப்பிறப்பில் பெருகும். மறு உலகில் ஆண்டவன் அடியினை எய்தி மாறா இன்பம் துய்த்து மகிழ்வர்.

**உருத்திராக்க தாரணம்:** சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராண படனம், சிவாலய தரிசனம் போன்ற சாதனைகள் செய்யும் காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் அவசியம். உறங்கும் போதும் மலசலங்கழிக்கும் போதும் ஆசௌசு காலத்திலும் தரித்தலாகாது. ஆசார மற்றோரும் தரித்தலாகாது. சிகை, சிரம், காது, மார்பு, தோள்கள், கைகள் ஆகியவை உருத்திராக்கம் தரித்தற்குரிய இடங்கள். எத்தனை முகங்கொண்ட மணிகளை எவ்வெவ் இடங்களில் அணியலாம் என்றும் ஒவ்வொரு அங்கத்திலும் எத்தனை மணிகள் கொண்ட மாலைகள் அணியலாம் என்றும் ஒவ்வோர் இடத்திலும் தரிக்கும் மாலை எந்த அளவினதாய் இருக்க வேண்டுமென்றும் விதிகள் உண்டு. செபம் செய்ய உபயோகிக்கும் மாலை 108 அல்லது 54 மணிகளைக் கொண்டதாயிருக்கும். செபமாலை மனத்தை இறைவனிடம் செலுத்தும் சிறந்த சாதனமாகும். "சிலம் செய்தல்" என்னுஞ் சொல்லே மருவி செபஞ் செய்தல் என வழங்குவதாகவும் கூறுவர்.

❖நற்குணம் உள்ள இடத்தில் வணக்கமும் இன்சொல்லும் இருக்கும

❖அடியைப் போல் உழைப்பவன் அரசனைப் போல உண்பான்.

❖உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர் வெற்றி எதையும் சாதிக்கமுடியாது

❖கடினமான உழைப்பு தெய்வ வழிபாட்டிற்குச் சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடு

குமரேசன் அனுசன்
பொறியியற்பீடம்
அறிமுகமாணவி

விநாயகர் வழிபாடு என்ற சொல் சிறப்பான தலைவன் அல்லது தலைவர்களுக்கெல்லாம் தலைவன் எனப் பொருள்படும். எந்தக் கடவுளை வழிபட்டாலும் முதலிலே வழிபடும் தெய்வம் விநாயகக் கடவுள் ஆகும். நாம் எழுதத் தொடங்கும் முன்னர் "உ" எனும் பிள்ளையார் சுழி போட்டே எழுதத் தொடங்குவது வழமை. விநாயகர் ஓங்கார வடிவினர். அ + உ+ ம் எனும் மூன்றெழுத்துக்களின் கூட்டொலியே ஓம். அதன் நடு எழுத்தான உகர வடிவமே பிள்ளையார் சுழி. விநாயகருக்குரிய மலர்களாக அறுகு, எருக்கம்பூ, வெள்ளெருக்கம்பூ, சூரிய காந்தி, அலரி, மருது, மாதுளை, செண்பகம், பாதிரி என்பன கூறப்படும்.

வெள்ளிக்கிழமை விநாயகருக்குரிய விரத நாளாகும். கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடுவோர் காணாபத்யர் என்றழைக்கப்படுவர். விநாயகரின் ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களைக் குறிக்கின்றன. அங்குசம் அழித்தலையும் பாசம் படைத்தலையும் மோதகம் அருளலையும் எழுத்தாணி காத்தாலையும் தும்பிக்கை மறைத்தலையும் குறிக்கின்றன. விநாயகருக்காக ஆவணி மாதம் வளர்பிறை நான்காம் நாளில் (சுக்ல சதுர்த்தி) விரதம் அனுட்டக்கப்படுகிறது. மேலும் கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை வரை சஷ்டி வரை விநாயகர் சஷ்டி விரதம் அனுட்டிக்கப் படுகிறது. விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைப்பது வழமை. இது நம்மிடம் உள்ள தீயவினைக்ள சிதறி அனைத்துத் துன்பங்களும் சிதறி நொறுங்கி இறுதியில் தூய பக்தி எனும் அமுத நீர் வெளிவருவது போல் விநாயகரின் அருள் எமக்குக் கிடைக்கும் என்பதைக் குறிக்கும். இவ்வாறு விநாயகருக்கு விருப்பமான பொருட்கள் சில தத்துவங்களை குறித்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளாம்பழத்தின் புற ஓடம் உள்ளீ டான பழமும் தொடர்பில்லாமல் வெவ் வேறாக இருக்கின்றன. இரண்டிற்கும் தொடர்பற்ற இந்நிலை பழம் பழுத்த பிறகு அமைகின்றது. இவ்வாறு உடலும் உள்ளமும் பக்தியில் ஈடுபடும் போது அவற்றிற்கு எந்த பந்த பாசமும் தொடர்பும் கட்டும், பற்றும் இருக்கக்கூடாது என்ற பற்றற்ற நிலையை உணர்த்துகிறது.

விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது மோதகம். முதம் என்றால் ஆனந்தம். சுவைத்து உண்ணும் போது ஆனந்தத்தைத் தருவது மோதகம். இது கொழுக்கட்டை மாவுக்குள் பூரணம் மடித்துச் செய்யப்ப டுகிறது. மா - உடல், பூரணம் - உயிர். இது அவித்த பயற்றம் பருப்பு, சர்க்கரை, தேங் காய்த்துருவல் என்பவற்றின் கலவையால் செய்யப்படுவதனால் பூரணமான நிறைவான உயிர்முக்தி பெறக்கூடிய முழுத் தகுதியைப் பெறுதல் எனும் உட்கருத்தை உணர்த் துகிறது.

வழிபாட்டில் உடைக்கப்படுகின்ற தேங்காய் சில கருத்துக்களைத் தெரிவிக் கிறது. மட்டை, நார், ஓட்டுப் பகுதிகள் மும் மலங்களைக் குறிக்கும். இவை நீக்கப்பட்ட வுடன் நீர் - உயிர் - இறைவனது திருமுன் அர்ப்பணிக்கப்படும். தேங்காயின் வெண்மை சத்துவக் குணத்தையும் மூன்றாம் கண் ஞானக் கண்ணையும் குறிக்கிறது. சத்துவக் குணத் துடன் பக்தியுடன் சஞ்சலமின்றி ஞானக் கண்ணால் இறைவனை வழிபட வேண்டும் எனக் குறிக்கிறது. சிதறுதேங்காய் அடிப்பது அகங்காரத்தின் முடிவைக் குறிக்கிறது. எனவே விநாயகருக்கு முன் அகங்கார மண் டையோடு சிதறி, அமுதமயமான அறிவு நீரை அர்ப்பணிக்க வேண்டும் என்பதே இதன் உட்கருத்து.

வெள்ளரிப்பழம் நன்றாகப் பழுத்த வுடன் காம்பிலிருந்து கழன்று தரையில் விழு வதைப் போல் பற்றற்ற ஆன்மா உலகப் பிடியிலிருந்து விடுபட்டு முத்தியடைகிறது. ஆறு இடங்களில் வேர்களை ஊன்றி ஒரு கொடி போல் வளர்வது அறுகு ஆகும். இது கோடை காலத்திலும் வாடாது. அரிய மூலி கையாகவும் பயன்படுத்தப்படுகிறது. "ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேர் ஓடி" என்பது போல் உலகம் செழித்து வாழ வேண்டும் என்பதனைக் குறிக்க அறுகம்புல் வழிபாட்டுப் பொருளாக விளங்குகிறது.

**சிந்தனைத் துளிகள்!**

- பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகின்றது பகிர்ந்த துன்பம் பாதியாகின்றது.
- அறியாமை என்பது இழிவல்ல ஆனால் அறிய மனமில்லாமை என்பதே மிக மிக இழிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சிற்பங்கள் ஓர் ஆய்வு

குமாரசுவாமி தயாளினி
கலைப்பீடம்

யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள தொண்டைமானாற்றில் அமைந்துள்ள முருகன் ஆலயமே தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் ஆகும். வேலினை மூலமூர்த்தியாகக் கொண்டு ஆகமம் சாராத முறையில் அமைந்த ஆலயமே தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் ஆகும். செல்வச்சந்நிதி ஆலயத்தினுடைய சிற்பங்கள் பற்றி ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமையவுள்ளது. செல்வச் சந்நிதி ஆலயம் மூலஸ்தானம், கருப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், வெளிமண்டபம், பிள்ளையார் மண்டபம், வைரவர் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளது.

ஆலயத்தினுடைய முகப்பு "ஓம் முருகா" என்று குறுக்காக வேல் பாய்ந்து மிடுக்குடன் அமைந்துள்ளது. அதற்குக் கீழே மயில், சேவல், மருதமரம் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. அதற்கருகில் கடற்கன்னிகள் இருபுறமும் ஓவியமாக வரையப்பட்டுள்ளன. இதன் இரு புறமும் மயில் சிற்பமாக உண்டு. முகப்பு வாயிலினுடைய வலது பக்க வாயிலின் முதலாவது தளத்தில் வேலும் சேவற் கொடியும் ஏந்திய முருகன் காணப் படுகின்றார். அதற்கு இருபுறமும் மயில் காணப்படுகின்றது. இரண்டாவது தளத்தில் மயில் காணப்படுகின்றது. மூன்றாவது தளத்தில் யானை சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளது. அடித்தளத்தில் யானை தும்பிக்கையை உயர்த்திய வண்ணம் உள்ளது. இதற்கருகில் திருப்பணிக்காரியாலயம் அமைந்துள்ளது. அதன் முகப்பில் பாலமுருகன் வேல் கொண்டு மயிலோடு வீற்றிருக்கின்றார். அருகே, இடது வலது புறமாகச் சேவல் காணப்படுகின்றது. முகப்பு மண்டபத்தின் இடது பக்க உள்வீதி நுழைவாயிலில் பிள்ளையார் சிற்பம் எலி, மோதகத்துடன் காணப்படுகின்றது. இதன் கீழ்ப்புறம் யாழியாக யானை உள்ளது. அதற்கருகிலுள்ள வைரவர் முகப்பில் இருபுறமும் அவரது வாகனமான நாய் காணப்படுகின்றது. நடுப்பகுதியில் நாயின் மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் நிர்வாணக் கோலத்துடன் உடுக்கு, அங்குசம் ஏந்தியுள்ளார்.

செல்வச்சந்நிதி ஆலய மூலஸ் தானத்தில் முப்பத்தைந்து வேல் காணப்படுகின்றது. மூலஸ்தான வாசலின் வலதுபக்கத்தில் சேவலும், வேலும் இடது பக்கத்தில் பாம்பேந்திய மயிலும் காணப்படுகின்றது. மகா மண்டபத்தில் மூலஸ்தானத்திற்கு இடது புறமாக தெற்கு நோக்கிய படி சபையோர் சந்நிதானம் உண்டு. இதில் தெற்கு நோக்கிய படி பன்னிருகரங்கள், பன்னிருகண்கள் கொண்டு மயில் மீதேறிய முருகன் வள்ளி தெய்வயானையோடு உள்ள காட்சி சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. சபையோர் சந்நிதானத்திற்குக் கிழக்குப் புறமாக வேலேந்திய பாலமுருகன் மயில் சூழ காணப்படுகின்றார். வடக்குப் புறமாக மயிலின் மீதேறிய பால முருகன் இருபுறமும் மயில் கொண்டு காணப்படுகின்றார். மேற்குப் புறமாக பழனியாண்டவர் மலை மீது நிற்பது போன்ற கோலம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலய அர்த்தமண்டபத்திற்குத் தெற்குப் புறமாக மார்க்கண்டேயர் கதை சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. சிவன், சூலாயுதம், உடுக்கு, அங்குசம் கொண்டு காலில் சதங்கை, கையில் வளையல், காதில் குண்டலம், கழுத்தில் பாம்பு கொண்டு இடதுகாலைத் தூக்கி நெற்றிக்கண் திறந்து காணப்படுகின்றார்.சிவலிங்கத்தை இறுகப் பற்றிப் பிடித்த படி மார்க்கண்டேயர் காணப்படுகின்றார். இதற்கு வலது புறமாக ஆட்டுக்கடா மீது யமன் வரும் காட்சியும், யமன் சிவனை வணங்கும் காட்சியும் வடிக்கப்பட்டுள்ளது. இதைப் பார்க்கும் போது மார்க்கண்டேயர் கதையைக் கண் முன் கொண்டு வருவதாக உள்ளது.

ஆறுமுகசாமி வாயில் தெற்குப்பக்கம் பார்த்தபடியுள்ளது. அதன் வாயிலில் ஆறுமுகசாமி வள்ளி, தெய்வயானையோடு மயில் மீதுள்ள காட்சி உள்ளது. ஆறுமுகசாமி பன்னிருகரங்கள், பன்னிரு கண்கள் கொண்டு கோடரி, அம்பு, சங்கு, வாள், தாளம், வேல், வில், அங்குசம், சூலம் போன்ற ஆயுதங்கள் கொண்டு விற்றிருக்கின்றார். இதன் மூலம் முருகன் ஆயதங்கள் தாங்கி உலகைக் காக்கும் நிலையைக் காணமுடியும். ஆறுமுகசாமி வாயிலின் வலது புறமாக அகத்தியர் யோக நிலையில் இருக்கும் காட்சி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. குறுமுனி தமிழைப் பரப்பிய தன்மையைக் கூறுவதாக இச்சிற்பம் அமைந்துள்ளது. இவருக்கு அருகில் சேவல் சிற்பம் உண்டு. ஆறுமுகசாமி வாயிலினுடைய இடதுபுறமாக அருணகிரிநாதர் யோக நிலையில் இருக்க அருகில் மயில் உண்டு.

கருப்பக்கிருகத்தின் மேலும் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதன் தெற்குப்புறமாகவுள்ள தெற்கு வாயிலில் குருந்த மரநிழலில் தட்சணாமூர்த்தியின் சிற்பம் காணப்படுகின்றது. தட்சணாமூர்த்தி தன் சீடர்களுக்கு சிம்ம முத்திரையோடு இருந்து உபதேசம் செய்வதையும் உடுக்கு, பாம்பு, அங்குசம், ஏடு கொண்டு காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. தட்சணாமூர்த்தி தலையில் மூன்றாம் பிறைச் சந்திரனையும், கங்காதேவியையும், கொண்டு கழுத்தில் பாம்பணிந்து யோகநிலையில் முயலகனைப் பாதத்தில் வைதுள்ளார். நான்கு சீடர்களும் உருத்திராக்கமாலை அணிந்து யோக நிலையில் காணப்படுகின்றனர். கருப்பக்கிருகத்தின் தெற்குவாசலின் முதலாவதுதளத்தில் பால முருகன் வேல் கொண்டுள்ளான். இதன் வலது புறமும், இடது புறமும் சோடிமயில் காணப்படுகின்றது. தெற்கு வாயிலின் இரண்டாவது தளத்தின் நடுப்பகுதியில் முருகன் கதிர் காமருக்கு அருள் செய்து பூசை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளைக் காட்டிக் கொடுத்தல் செதுக்கப் பட்டுள்ளது. அதாவது, வேல் வைக்கப்பட்டு, உடைத்த வாழைப்பழம், தேங்காய், ஊது பத்தி என்பன வைத்துப் பூசை செய்ய வேண்டும் என்ற முறை காட்டப்பட்டுள்ளது. முருகன் வாய்கட்டி, கற்பூரதீபத்தை வலது கையில் ஏந்தி, இடது கையில் மணி வைத்து பூசை செய்யும் முறை சிற்பமாக வடிக்கப்பட் டுள்ளது. இடது புறத்தில் கதிர்காமர் நிற்கின்ற தன்மை காட்சியாக வடிக்கப்பட் டுள்ளது. இதன் இடது புறத்தில் நாதஸ்வரம் ஊதும் காட்சியும், வலது புறம் மேளம் அடிக்கும் காட்சியும் காணப்படுகின்றது. இன்றும் இவ்வாறே செல்வச்சந்நிதியில் பூசை இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

கற்பக்கிருகத்தின் மேற்குப் பகுதியி லுள்ள முதலாவது தளத்தில் முருகன் வள்ளி தெய்வயானை சமேதராக மயில் இருபுறமும் வீற்றிருக்க அமர்ந்துள்ளார். இதில் முருகன் கையில் வேலேந்தி சூலம், அங்குசம் கொண்டு காணப்படுகின்றார். தேவியர் இருவரும் தாமரை வைத்து அமர்ந்துள்ளனர். கருப்பக்கிருகத்தின் மேற்குப்பகுதியின் இரண்டாவது தளத்தில் சிவனுக்கு முருகன் வேலுடன் இருந்து பிரணவப்பொருளை உபதேசம் செய்யும் காட்சி காணப்படு கின்றது. இதில் இடது புறம் சிவன் வீற்றிருக்க வலது புறத்தில் வேலேந்திய முருகன் காணப் படுகின்றார். இதற்கு வலது புறமாக பிள்ளை யார் தூக்கிய திருவடியோடு நிற்கும் கோலம், இதில் விநாயகர் அபயகரம் கொண்டு அங்குசம் தந்தம் ஏற்தியுள்ளார். கருப்பக்கிரு கத்தின் வடக்குப் பக்கத்தின் முதலாவது தளத்தில் பழனியாண்டவர் இருபுறமும் மயில் சூழ கோவண ஆண்டியாக நிற்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தளத்தில் மருதமரத்தின்கீழ் வேலிருக்க மருதர் கதிர்காமர் மலர் எடுத்துப் பூச்சொரிந்து பூசை செய்யும் காட்சி காணப்படுகின்றது. இதில் பூணூலுடன்,உருத்திராக்கம்அணிந்த மருதரும், முருகனும் இருக்கும் காட்சி உள்ளது. கருப்பக் கிருகத்தின் கிழக்குப் பகுதியில் பாலமுருகன் வேலேந்தி நிற்க மயில் இருபுறமும் நிற்கச் சிற்பம் செதுக்கப் பட்டுள்ளது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியிலுள்ள பிள்ளையார் சந்நிதானத் திலும் சிற்பங்களுண்டு. இங்குள்ள பிள்ளை யார் இடஞ்சுழிப் பிள்ளையாராக இல்லாது வலஞ்சுழிப்பிள்ளையாராக இருப்பது இந்த ஆலயத்திற்குரிய சிறப்பாகும். விநாயகர் சந்நிதானத்திற்கு முகப்பில் அங்குசம், மோதகம், தந்தம் கொண்டு பிள்ளையார் அமர்ந்திருக்கிறார். இதற்கு இடது புறமாக எலியும், வலது புறமாக மாலையைத் தூக்கியபடி யானையும் காணப்படுகின்றது. இதன் மேற்புறமாக ஆறுமயில்கள் சிற்ப மாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மயிலினுடைய பார்வையும் ஒவ்வொருதிசை நோக்கியதாக அமைந்துள்ளது. பிள்ளையார் சந்நிதானத்தில் கிழக்குப் பக்கத்தில் சிற்பங்கள் எதுவுமில்லை. வடக்கப் புறத்தில் சித்தி புத்தியோடு அபயகரம் கொண்டுஅருள் கொடுக்கும் பாங்கில் அமைக்கப்பட்ட சிற்பம் உண்டு. இதில் அங்குசம், கோடரியை ஆயுதமாகக் கொண்டு பிள்ளையார் வீற்றிருக்கிறார். சித்திபுத்தி அங்குசத்தோடு அபயம் அளிக்கும் பாங்கில் அமைக்கப்பட் டுள்ளனர். மேற்குப்புறத்திலுள்ள பிள்ளை யார் ஒற்றைக்காலைத் தூக்கியபடி வேட்டி அணிந்து எலி மீது அமர்ந்துள்ளார்.

ஆலயத்தினுடைய மேற்குப்புற வாசலாக வள்ளியம்மன் வாசல் காணப்படு கின்றது. வள்ளியம்மன் சந்நிதானத்தில் வள்ளி காணப்படுகின்றார். இச் சந்நிதானத்தின் வடக்குப்புறமாக வள்ளியை யானை துரத்தும் காட்சி சிற்பமாக அமைக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. வள்ளியம்மன் சந்நிதானக் கிழக்குப் பகுதியில்முருகன் மானை வேட்டையாடச் செல்லுதல், அப்போது தினைப்புனம் காக்கும் வள்ளியைக் கண்டு காதல் கொள்ளுதல் இக்கதை இதில் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதில் முருகன் பூணூலும் உருத்திராக்கமும் அணிந்து வலது கையில் அம்பு இடது கையில் வில் கொண்டு காணப்படுகின்றார்.

வள்ளியம்மன் சந்நிதானத்திற்கு நேர் முன்னே நாகதம்பிரான் சந்நிதியுண்டு. இதில் நாகதம்பிரான், இராகு, கேது சிலைகள் உண்டு. இதற்கு அருகில் நேர்த்திக்குக் கொடுக்கப்பட்ட தொண்ணூற்றொரு சிற்பங்கள் உணடு. செல்வச்சந்நிதி ஆலய வைரவர் சந்நிதானத்தில் வைரவர் மூல மூர்த்தியாக உள்ளார். மூலஸ்தானத்திற்கு மேலே கிழக்கு வாசலில்வைரவர் கபாலத்தை மாலையாக அணிந்து சூலம், அங்குசம் கொண்டு பாம்பை இடையில் அணிந்து நாய் மீது அமர்ந்து உள்ளார். இதன் புறமும்நாயும் பூத கணங்களும் உண்டு. வைரவர் சந்நிதான மேற்குப் பக்கத்திலும் முற்குறிப்பட்டது போன்றே மாலையை அணிந்து சூலம், அங்குசம் கொண்டு பாம்பை இடையில் அணிந்து நாய் மீது அமர்ந்துள்ளார். இருபுறமும் நாயும். பூத கணங்களும் உண்டு. வடக்குப் புறமாக பூவரசு மரம் உள்ளது. இருமருங்கிலும் நாயின் சிற்பம் காணப்படு கின்றது. செல்வச்சந்நிதியின் தென்மேற்கு மூலையில் பார்வதி முருகன் சிற்பம் காணப்ப டுகின்றது.

மேற்குறிப்பிட்ட வகையில் தொண் டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பல்வேறுபட்ட சிற்பங்கள் காணப்படு கின்றன. ஆலயம் சார்ந்த மரபுக்கதைகளைக் கூறும் சிற்பங்கள், முருகன் சார்ந்த புராணக் கதைகளைப் பதிவு செய்யும் சிற்பங்கள், பிற புராணக்கதைகளைப் பறை சாற்றும் சிற்பங்கள், இதனூடாக இனங்காணப் பட்டுள்ளன. இதன் மூலம் இறைவனின் அங்கலட்சணங்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. கருப்பக்கிருகத்தின் மேலேயே அதிகளவான சிற்பங்கள் காணப்பட்டுள்ளன.

ஆலயம் சார்ந்த மரபுக் கதைகள் எனும் போது மருதர் கதிர்காமருக்கப் பூசை செய்யும் முறையைக் காட்டிக் கொடுத்தமை, பூசை செய்யும் காட்சி சிற்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முருகன் தந்தைக்கு பிரணவப்பொருளை உபதேசம் செய்தமை, பழனி மலைக் கதை, வள்ளி, முருகன் காதல், முருகக் வள்ளியோடும், தெய்வயானை யோடும் திருமணக்காட்சியில் நிற்றல் போன்ற கதைகள் முருகன் சார்ந்த புராணக் கதைகள் ஆகும். பிற புராணக் கதைகளாக, மார்க்கண்டேயர் கதை, அகத்தியர் கதை, அருணகிரிநாதர் கதை, தட்சணாமூர்த்தி கதை என்பன குறிப்பிடத்தக்கனவாகும். தொகுத்து நோக்கின், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம் ஆகமம் சாராது காணப்பட் டாலும் சிற்ப நுட்பங்களுடன் அதிகளவான சிற்பங்களைக் கொண்டுள்ளது. இச் சிற் பங்கள் செல்வச்சந்நிதிக்கேற்ற தனித்துவத் தையும், சிறப்பையும் வெளிக்காட்டுவனவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீழ்பதிப்பியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால வோட்டமும் இந்து தருமமும்

**சிவசோதி கேசவன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்

காலமாற்றமானது சமுதாயத்தின் கூறுகள் யாவற்றையும் மாற்றமுறச் செய்வ தனைக் காண்கிறோம். காலந் தோறும் ஏற் பட்டு வந்த மாறுதல்கள் யாவும் சமுதா யத்தில் ஏதாவதொரு மாற்றத்தினை நிகழ்த்தி யிருக்கிறது. அம் மாற்றம் எத்தகையதோ அதைச் சார்ந்தே இலக்கியங்களும் கருக் கொண்டதனைக் காணலாம். காலத்தின் பிரதிபலிப்பினை இலக்கியங்களில் தெளிவாக அவதானிக்கலாம் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமானது "இந்து தருமம்" என்ற இதழினை 1954ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிட்டு வருகின் றது. இவ்விதழானது ஒவ்வொரு வருடமும் வருகின்ற மகா சிவராத்திரி அன்று வெளி யிடப்படுவது சிறப்பம்சமாகும். காலந் தோறும் இலங்கையில் ஏற்பட்ட சமுதாய மாற்றத்தினை இந்து தருமம் (இதழ்) பிரதி பலிப்பதனை அவதானிக்க முடிகிறது. துடிப் புள்ள மாணவர்களே இந்து மாணவர் சங்கத் தினை ஆரம்ப காலந்தொட்டு இயங்கு நிலையில் பேணுவதால், அவர்தம் சிந்த னையும், துடிப்பும் இந்து தருமத்திலும் பிரதி பலிப்பதனை அவதானிக்க முடிகிறது. வடக்கு, கிழக்கு போன்ற பகுதிகலிருந்து மத்திய மலை நாட்டில் கற்கவந்த மாண வர்கள் தமக்கெதிராக செய்யப்பட்ட அடக்கு முறைகளைக் கண்டு தமது உரிமைப் போராட்டத்தைக் கைவிடாது, உத்வேகத் துடன் தம் உரிமைசார் கொள்கைகளை வெளிப்படுத்த முயன்றமையையும் இந்து தருமம் ஊடாக அறியமுடிகிறது. ஆரம்ப காலத்தில் இந்து மதத்தினை மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற பெருவேட்கை இந்து மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் காணப்பட்டமையை இந்து தர்மம் புலப்ப டுத்தி நிற்கின்றது. காலவோட்டத்தில் இந்து தருமம் மீதும் தமிழ் மொழி மீதும் பற்றற்ற மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேரா தனைப் பல்கலைக் கழகத்தில் உருவாகினர் என்பதையும் இந்துதருமமே சுட்டி நிற் கின்றது. ஆரம்பகாலத்தில் மாணவர்களது ஆக்கங்களுடன் ஒப்பிடுகையில் விரிவுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்களது ஆக்கங்கள் அதிகமாகக் காணப் பட்டமையை அவதானிக்க முடிகிறது. ஆனால் அண்மைக் காலங்களில் ஒரு சில விரிவுரையாளர்களது ஆக்கங்களே இந்து தருமத்தில் காணப்படுகின்றமை கவனத்திற் குரியது.

இந்து தர்மத்தில் வெளியாகிய ஆக்கங் களை அவதானிக்கையில் அண்மைக் காலங்களில் வெளிவந்த ஆக்கங்களுள் பல படைப்புக்கள் காத்திரமற்ற படைபபுக் களாகவே காணப்படுகின்றன. இந்து மாணவர் சங்கமானது தனது செயற்பாடு களைக் காலவோட்டத்தில் விரிவுபடுத்து வதற்குப் பதிலாக தனது செயற்பாடுகளைச் சுருக்கிக் கொள்வதனைக் காண்கின்றோம். இவ்வாறு குறிப்பிடச் சான்று பகிர்வதாய் இதுவரை வெளிவந்த இந்து தரும் இதழ் களது செயலாளர் தம் அறிக்கைகள், இதழாசி ரியர்கள் உரைகள்போன்றவை அமை கின்றன. காலவோட்டத்தில் இந்து தரும் இதழும் கரைந்து தன் காத்திரமிழப்பது வேதனைக்குரியது. அவ் வகையில் பேரா தனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால் வெளியிடப்படும் "இந்து தருமம்" இதழினூடாகப் பிரதிபலிக்கப்படும் காலமாற்றத்தினால் உருவாகிய பதிவுகள் குறித்தே இக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

ஏக்கத்தில் தொடக்கம் இந்து தருமம் இதழ் ஆரம்ப முயற்சியாக வெளிவந்த சில ஆண்டுகளிற்குப் பின் வெளிவந்த மலர்கள், அக் காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சமூகமும் இலங்கை இந்து சமூகமும் எத்தகைய தன்மை யுடையனவாய் இருந்தன என்பதை ஓரளவு பிரதிபலிப்பதாய் அமைவதனைக் காண்கின் றோம். இந்து மாணவர்கள் யாவரும் வெள்ளிக்கிழமைகளில் குறிஞ்சிக் குமரன் ஆலயத்திற்குப் பிரசன்னமாகவில்லை என்ற ஏக்கம் இந்து அபிமானிகளிடத்தே நிலவிய தனைக் காணமுடிகிறது. **1960ஃ1961** ஆம் ஆண்டு இந்து தருமத்தின் இதழாசிரியர் இதனைத் தனதுரையில் இவ்வாறு பதிவு செய்கிறார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை யிலும் பிரார்த்தனைக் கூட்டம் நடந்து வந்த பொழுதும் இக்கூட்டங்களுக்கு எல்லா இந்து மாணவ மாணவிகளும் வருவதில்லை. இதற்கு முக்கிய காரணம் வெள்ளிக் கிழமை களில் ஏனைய சங்கங்கள் சொற்பொழிவு களையோ அன்றி உபகாரப் படக்காட்சி களையோ ஒழுங்கு செய்வதாகும். இதன் பயனாகக் கடவுளைத் தியானிக்க வருகின்ற வர்களின் தொகை குறைந்து படக் காட்சிக ளுக்குச் செல்பவர்களது தொகை அதிகரித்து வருகிறது. கூட்டுப் பிரார்த்தனைகளில் சேர்ந்து பாடுவதற்கு போதுமான மாண வர்கள் இல்லாக்குறை எத்தனையோ முறை களில் ஏற்பட்டுள்ளது. எல்லா இந்து மாண வர்களும் ஒரு வெள்ளியாவது ஒருமித்துக் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வரமாட் டார்களா என்று ஏங்கும் நிலை உண்டாகி விட்ட தென்று சொல்ல வேண்டும். இந் நிலைமை மாற வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம்.

இவ்வாறு **1960**களில் ஏங்கிய ஏக்கம் இற்றைவரைத் தணியவில்லை எனலாம். இன்றைய சூழ் நிலையிலும் அனைத்து மாணவர்களும் கூட்டுப்பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதில்லை என்பதுடன் சில பீடங்களில் மாணவர்களது பொதுக் கூட்டங்கள் வெள்ளிக் கிழமைகளிலேயே இடம் பெறுவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கை இந்து சமுதாயத்தினை இந்து நெறிசார் சமுதாயமாக கட்டயமைக்க வேண்டும் என்ற பேரவா ஆரம்ப கால பேராதனை இந்து மாணவர்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டமையையும் அவதானிக்க முடிகிறது. ஒட்டு மொத்த இலங்கையின் இந்து சமூகத்திற்கான குரல் இந்து தர்மத்தின் மூலம் ஒலிப்பதனைக் காண்கிறோம். இதனை 1958ஃ1959 ஆம் ஆண்டு இந்து தர்மத்தின் இதழாசிரியர் பதிவு செய்வதனைக் காண்கிறோம்.

"இன்றைய தேவைகளில் மற்றொன்று, எளிய இனிய தமிழில் பொது மக்களுக்கு விளங்கக் கூடிய வகையில் சமய சம்பந்தமான நூல்கள் பல எழுதி மக்களிடையே பரப்புதலாகும். சென்ற அரை நூற்றாண்டு காலத்தில் ஈழத்தில் சிறந்த மத நூல்கள் பல தோன்றவில்லை என்பது உண்மை. தோன்றிய சில நூல்களும் தக்க பிரசாரமின்மையாலும் எளியநடையில் எழுதப்படாமையினாலும் பொது மக்களிடையே பரந்து இந்து சமய உயர்வுக்கு வழிகாட்டாது மறைந்தன, சமய உண்மைகளை விளக்க இக்கால இலக்கியத்துறைகளாகிய சிறுகதை, நாவல், நாடகம் என்பவற்றையும் பயன் படுத்துதல் வேண்டும்."

1958 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்து நாகரிகம், இந்துப் பண்பாடு முதலிய கற்கை நெறிகள் பல்கலைக் கழகமட்டத்தில் போதிக்கப்பட வேண்டுமென்ற ஏக்கம் இந்து அபிமானிகளிடத்தே காணப்பட்டமையை அவதானிக்க முடிகிறது. இதனை 1958ஆம் ஆண்டின் இதழாசிரியர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"பல்கலைக்கழகத்தில் இந்து மத தத்துவம், இந்து மத பண்பாடு முதலிய வற்றை ஒரு பாடமாக அமைத்தல் வேண்டும். அவை பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் இதுவரை இடம்பெறாதிருப்பது மிகவும் வருந்தத்தக்க தொன்று. இக்குறை விரைவில் நீக்கப்படுமென்றே எதிர்ப்பார்க்கிறோம். ஈழத்தில் உயர்தரக்கல்வி கற்ற இந்துக்கள் சமயத் துறையில் மகத்தான பணிகள் பல அன்றும் ஆற்றியுள்ளனர் இன்றும் ஆற்றி வருகின்றார்கள். இவ்வழியைப் பல்கலைக் கழக மாணவர்களாகிய நாமும் எமது வாழ்வின் குறிக்கோள்களில் ஒன்றாகப் பின் பற்றித் தொண்டாற்றுதல் வேண்டும். கல்விச் சாலைகளை நடாத்துதல், சமயப்போதனை செய்தல், சங்கங்கங்களைப் பரிபாலித்தல், கோயில்களை நிர்வகித்தல், நூல்களை வெளியிடுதல் மற்றும் சமயசீர்திருத்த துறைகளில் ஈடுபடுதல் முதலியபணிகளைச் செய்வதற்கு வேண்டியதொண்டர்கள் நம்மிடையே தோன்றினாலன்றி எமது சமுதாயம் விரைவில் முன்னேறமாட்டாது."

## கலவரமும் கலக்கமும்

இனங்களிற்கிடையேயான முரண் பாடுகள் பெரும் கலவரமாக உருமாறிய போது, அதன் தாக்கம் பேராதனைப் பல் கலைக்கழகத்தையும் விட்டுவைக்கவில்லை எனலாம். இரு தடவைகள் கோரமான தாக்குதலிற்குப் பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயம் இலக்கானமை குறிப்பிடத் தக்கது. 1977.08, 19 அன்று வெறி கொண்ட காடையரின் தாக்குதலிற்கு குறிஞ்சிக்குமரன் ஆலயம் முதன் முதலாக இலக்கானது. இதன் போது ஆலயத்தில் வளர்க்கப்பட்ட பெண் மயில் இரு துண்டுகளாக வெட்டப்பட்டுப பற்றைக்குள் வீசப்பட்டிருந்தது. ஆண்- மயில் காடையர்களால் கவர்ந்து செல்லப்பட்டது. இக் கசப்பான சம்பவத்தையடுத்து 1977.11.14 அன்று முதலாவது புனராவர்த்தன கும்பாபிசேகம் இடம், பெற்றது. புனரா வர்த்தன கும்பாபிசேகத்தை தொடர்ந்து பேராதனை இந்து- சமூகம் புது மலர்ச்சியுடன் இந்து சமயவளர்ச்சிக்குச் செயலாற்றத் தொடங்கியது. இருப்பினும் அது ஒரு தசாப்தத்தைகடக்க முன்பே மற்றுமொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரத்தாக்குதலினை எதிர்கொள்ள வேண்டிய சுழல் உருவானது. நாடெங்கும் பெருங்கலவரமாக வெடித்த 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களை பாரி யளவில் பாதித்தது எனலாம். இக் கலவரச் சுழலில் பேராதனைத் தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறி யிருந்தனர். 1977களில் எதிர்கொண்ட வன் செயல்கள் தந்த பாடங்களினால், இம்முறை பசுக்களும் மயில்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டிருந்தன. இக்கலவரச் சுழ்நிலையில்ஆலயக் குருக்கள் வீட்டோடு சேர்த்து எரியூட்டப்பட்டார். எனினும் காவல்துறையினரது தலையீட்டினால் அவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டார். இந்துக்கள் மாத்திரமன்றி பௌத்தத்தைச் சார்ந்தோரும் முருகன், பிள்ளையார், விஸ்ணு, அம்மன் போன்ற கடவுளரை வழிபட்டு வருவதனால், ஆலய விக்கிரகங்களிற்கும் அவர் ஊறு விளைவிக்கமாட்டார் என்ற காரணத்தினால் விக்கிரகங்கள் எவற்றையும் பாதுகாக்கும் எண்ணம் பேராதனை இந்து சமூகத்தினரிடையே காணப்பட்டிருக்க வில்லை. ஆனால் இனவெறியர்கள் முன்னர், கடவுளரும் கற்களாகவே தென்பட்டனர் போலும். இதனால் விக்கிரகங்கள் உடைக் கப்பட்டு அதன் கீழேயிந்த இயந்திரங்கள் சூறையாடப்பட்டனர். ஆலய நலன் விரும் பிகளது முயற்சியால் எஞ்சிய விக்கிரகங் களும், பூசைப்பொருட்களும் கட்டுக்கலை ஆலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன. புலமைச் சொத்துக்களின் ஆவணப் பதிவு களாக இருப்பவை நூல்களே.இதனை நன் கறிந்திருந்த இனவாதிகள் பேராதனை இந்து சமூகம் பேணிவந்த நூலகத்தினை இலக்கு வைத்தது. பேராதனை இந்து சமூகம் அரிய வகை நூல்களை சேமித்து வைத்திருந்த அறையினை உடைத்து அங்கே பேணப் பட்ட நூல்கள் யாவும் மண்டபத்தில் குவிக்கப்பட்டுப் பின்னர் எரிக்கப்பட்டன. இது 1984 ஆம் ஆண்டு கால கட்டத்தில் நடைபெற்றதாக அறிய முடிகிறது. காலந் தரும் வலிகளைத் தாங்கி உரிமைகளிற்காக உணர்வுடன் போராட வேண்டிய தேவை யினை தமிழ்ச் சமூகம் நன்குணர கலவரம் வழி சமைத்தது எனலாம். கல்வியே தமது நிலை யான சொத்து என்பதனை நன்குணர்ந்திருந்த பேராதனை இந்து சமூகம் மீண்டும் பேராதனை பல்கலைக் கழகத்தில் தனது செயற்பாடுகள்ளைத் திறம்பட ஆற்றத் தலைப்பட்டது. இதன் விளைவாக 1987 ஆம் ஆண்டு இரண்டாவது புனராவர்த்தன மகா கும்பாயிசேகம் செய்யப்பட்டு குறிஞ்சிக் குமரன் ஆலயம் புதுப்பொலிவுடன் அருள் பாலிக்க தொடங்கிற்று எனலாம் தொடர்ந்த காலங்கள் தமிழ்ச் சூழலில் பாரிய தாக்கங் களை ஏற்படுத்தியிருந்த போதிலும், குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்குப் பாரிய பாதிப்பெதனையும் ஏற்படுத்தியிருக்க வில்லை எனலாம்.

## உரிமைப் போராட்டத்தில் இந்து தர்மம்

தமிழ்ச் சமுதாயம் தனது உரிமைகளை வென்றெடுக்க முன்னெடுத்த போராட்ட மானது வெறுமனே வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்குள் மாத்திரம் முடக்கப்பட்டி ருக்கவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங் களிலிருந்து மத்திய மலை நாட்டிலுள்ள பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு கற்க வந்த இந்து மாணவர்கள், தமது சமூகம் சார்ந்து சிந்திக்காது இருக்கவில்லை. இந்து தருமம் இதழ்களை ஆழமாக நோக்குகையில், அது இந்து மாணவர்களைத் தாம் சார்ந்த சமூகம் சார்ந்து சிந்திக்கவும் செயலாற்றவும் தூண்டுவதாய் அமைந்திருப்பதனைக் காண்கிறோம். போராட்டத்திற்கு உந்து சக்தி யளிக்கும் வகையில் சில இந்துதருமம் இதழ் களில் அடங்கிய கருத்துக்கள் அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1996/1997** ஆம் ஆண்டு இந்து தருமம் இதழில் பெருந்தலைவர் தனது உரையின் மூலம் இந்து மாணவர் சமுதாயத்தை நெறிப் படுத்த முனைவதனைக் காண்கிறோம்.

"எம் பல்கலைக்கழக இந்து மாணவர் களின் வெளியீடான இந்து தருமம் தற் பொழுது ஒரு வழமையான நிகழ்வாகி விட்டது. இதற்கு எல்லாம் வல்ல இறை வனின் திருவருள் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும். இந்து மாணவர்சங்கத்தினரின் தொழிற்பாடுகள் விரிவடைந்து போகும் இவ் வேளையிலே, அவர்கள் தம் சமூகத்தி னருக்கும் தம்மைச் சார்ந்து நிற்கும் மக் களுக்கும் எந்தவிதத்தில், துணை போகலாம் எனச் சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை உணரவேண்டும். பல்வேறு காரணங்களி னால் எம் சமூகம் பின்னடைந்து இருக்கும் இவ் வேளையிலே பல்கலைக்கழக மாணவர் களின் புதிய சிந்தனையினால் ஆக்கபூர் வமான நிகழ்வுகள் ஏற்பட வேண்டும். பல்கலைக்கழக வட்டத்தினுள் செயற் பாடுகள் முடங்கி விடாமல் நாட்டின் நாற்றி சைகளுக்கும் எம் மாணவர்களின் நற்பணிகள் முன்னெடுத்துச்செல்லப்பட வேண்டும். இதனை அவர்களின் எதிர்காலக் கடமை களில் ஒன்றாகக் கருதி அதன் வழி நடப்பது சாலச்சிறந்ததாகும்.

இதே இந்து தருமம் இதழில் **(1996/1997)** செயலாளர்களது உரையிலே,

"இன்றைய கால கட்டத்திலே இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் பல்வேறு வகையான தொல்லைகள், துன்பங்களிற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவ் துன்பங்களுக் கூடாக இடையுறாத பக்தி வைராக்கியத்தோடு ஓரளவேனும் எமது சங்கம் இத்தொண்டை சலிப்பும், களைப்பும் இன்றி ஆற்ற முனைந்துவருகின்றது."

இவ்வாறு அக்காலகட்டத்தில் நெருக் கடிகளிற்கு மத்தியிலும் இந்து மதத்தினை மேலோங்க செய்ய பேராதனைஇந்து சமூகம் முயன்றமையை அவதானிக்க முடிகிறது. **1996/1996** ஆம் ஆண்டு இந்து தர்மத்தின் இதழாசிரியர் தனதுரையில் இதனைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் சிதறிப் போயிருக்கும் எமது சமுதாயமும், எமது சமயமும் ஒரு விடியலைநாடி நிற்பது கண்கூடு... பல்வேறு அகக் காரணிகள் இந்து மதத்திற்கும், இந்து சமுதாயத்திற்கும் இடையூறாக அமையலாம். இவற்றில் நின்று விடுபட வேண்டியது இன்றைய எமது தேவையாகும். இவற்றினைக் கருத்திற் கொண்டே "இந்து மத வளர்ச்சியும் மறு மலர்ச்சியும் விழிப்புணர்வும்" என்று இவ்வித ழின் பிரதான கரு அமையலாயிற்று."

மேற்குறிப்பிட்ட இதழாசிரியர் தம்கூற் றானது பாதிக்கப்பட்ட சமுதாயமானது தனது பண்பாட்டுக் கூறுகளைக் கட்டி யமைக்க முனைவதைச் சுட்டிநிற்கின்றது எனலாம். இந்து தர்மத்தினைவளர்க்க வேண்டும் என்ற பெரு வேட்கையினால், இந்து தருமத்தினை பிரச்சாரம் செய்யும் ஊட கமாக இந்து தருமம்இதழானது தொழிற் பட்டமையையும்அவதானிக்க முடிகிறது.

## வரப்பிரகாசின் மறைவு

"வரப்பிரகாஷ்" என்ற பொறியியற் பீட மாணவன் பகிடிவதை காரணமாகஇறந்தமை பேராதனைப் பல்கலைக் கழகத்தையும், பேராதனை இந்து சமுதாயத்தினையும் பாரிய அளவில் பாதித்திருந்தது, பகிடி வதைக் கலாசாரம் தமிழ் மாணவர்களிற் கிடையே மிகக் கீழ்த்தரமாய் இருப்பதனை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் வரப்பிரகாஷின் மரணம் அமைந்தது, பேராதனைப் பல்கலைக் கழக இந்து சமுதாயம் வரப்பிரகாஷின் மரணத்தால் பாரியளவில் கலக்கமுற்றது என்பதை 1907 ஆம் ஆண்டு இந்து தருமம் புலப்படுத்தி நிற்கிறது. 1997ஆம் ஆண்டு இந்து தரும் இதழின் செயலாளர்களது அறிக்கையில் வரப்பிரகாஷ் குறித்து அதிகம் பேசப்படுவதைக் காண்கிறோம், அவை வருமாறு,

"31.10.1997. வரப்பிரகாஷ் மறைவை முன்னிட்டு ஆலயத்தில் அஞ்சலிக் கூட்டம் இடம் பெற்றது அறிந்தோ அறியாமலோ பல்கலைக்கழகத்தில் பாரம்பரியமாககப் பேணப்பட்டு வந்த ஒருமரபு யாரும் எதிர் பாராத வகையில் உற்றார், பெற்றோர் உடன் மாணவர்கள் பேராசிரியர்கள் எல்லோரையும் துன்ப சாகரத்தில் ஆழ்த்தக் கூடிய வகையில் ஒருபரிதாபகரமான விளைவை ஏற்படுத்தி விட்டது. இது ஈடுசெய்யமுடியாத இழப்பு, எங்களுடைய கண்ணீரை மட்டுமே அஞ்சலிக் கூட்டம் மூலம் வெளிப்படுத்த முடிந்து.

"11:11 1917 வரப்பிரகாஷ் வார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. "அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாள் ஆர்வலர் புன் கணீர் பூசல்தரும்" என்ற வள்ளுவர் வாய் மொழிக்கிணங்க எமது கண்ணீர் துளிகளையே சொரிய முடிந்தது. 'ஊழிப் பெருக வலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்"

இவ்வாறு வரப்பிரகாஸ் குறித்த தகவல்கள் பதிவாகியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

### செயலொடுக்கமும் இந்து மாணவர்சங்கமும்

இந்து மாணவர் சங்கமானது இந்து தருமத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பல செயற்பாடுகளை ஆரம்ப காலத்தில் மேற்கொண்டமையை இந்து தருமம் இதழ்கள் சுட்டி நிற்கின்றன. யுத்தத்தின் கோரக் கரங்கள் தமிழ்ச் சமுதாயத்தை நசுக்க முற்பட்ட போதெல்லாம் வீறு கொண்டெழுந்த இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளை இரட்டிப்பாக்கிக் கொண்டதெனலாம். ஆனால் அண்மைக் காலங்களில் இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளைச் சுருக்கிக் கொண்டுள்ளது எனலாம். இந்து தருமத்தின் மீது பற்றற்ற மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உற்பத்தியாகியுள்ளனரோ என ஐயமேற்படுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமானது தனது செயறபாடுகளை ஒடுக்கிக் கொண்டமைக்கும் இந்து தர்ம இதழ்களிலுள்ள செயலாளர்களது அறிக்கைகள் சான்று பகிர்வதாய் அமைகின்றன.

தியானம், சொற்பொழிவு போன்ற பல்வேறு நிகழ்வுகளை வெளியேயுள்ள இந்து அமைப்புக்களுடன் இணைந்து இந்து மாணவர் சங்கம் நடாத்தியமையை 1995 / 1996 ஆம் ஆண்டு இந்து தரும் இதழில் (பக்-94) செயலாளர் பின்வருமாறு பதிவு செய்வதனைக் காண்கிறோம்.

"20.10.1996- பிரம்மகுமாரிகள் ராஜ யோகா நிலையத்தால் தியானமும் ஆன்மீகக் கண்காட்சியும் இடம் பெற்றது.

"வெளி மாவட்டங்களில் குறிஞ்சித் தென்றல்" என்ற கலை நிகழ்வு தொடர்ந்து இடம் பெற்றமையையும் அறிய முடிகிறது. 1995/1996ஆம் ஆண்டின் செயலாளர் தம் அறிக்கையில், 21.12.1996 இல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் குறிஞ்சித் தென்றல் நிகழ்வு சிறப்புற இடம்பெற்றமை குறித்துப் பதியப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தருமத்தினைப் பேணுதற் பொருட்டு இந்து மாணவர் சங்கம் இரவு பகல்பாராது உழைத்தமையை அவதானிக்க முடிகிறது. 1994ஆம் ஆண்டு இந்து தருமம் இதழில் தலைவர்தம் உரையில் பின் வருமாறு குறித்துள்ளதனைக் காண்கிறோம்.

"இன்றைய நிலையில் இந்து சமயத்திலோ அல்லது வேறு எந்த ஒரு சமயத்திலோ சமயக் கிரியைகளுக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதே அன்றி சமயத்திலுள்ள கருத்துக்களை அவற்றில் பொதிந்துள்ள உண்மைகளை வெளிக்கொண ர்வதற்கோ இடமளிக்கப்படுவது இல்லை என்ற பொது வான குறைபாடு கூறப்படுகிறது. அவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு சிறு முயற்சியாகவே நாம் ஆன்மீகச் சொற்பொழிவுகள் சிலவற்றையும் இந்து சமயக் கருத்தரங் கொன்றினையும் ஒழுங்கு செய்திருந்தோம். அது மட்டு மன்றி இந் நிலையும் இந்து தருமம் காட்டும் ஆன்மீக வழி என்ற கருப் பொருளை மையமாகவைத்தே அமைத்துள்ளோம்."

இவ்வாறு துடிப்புடன் செயலாற்றிய இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடு களை மட்டுப்படுத்திக் கொண்டமை வேதனைக்குரியது. அண்மைக்காலங்களில் வெளிவந்த இந்து தருமங்களிலுள்ள செயலாளர்தம் அறிக்கைகள் யாவும் பஞ்சாங்கத்தினைப் போல் அமைந்துள்ளன. விசேட தினங்களில் இடம் பெற்ற பூசைகள் குறித்து மாத்திரமே அவை பேசுகின்றன. இதற்குக் காரணம் ஆலயப்பூசைகளை மாத்திரம் திறம்பட ஆற்றினால் போது மென்று புற நடையாக இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளைச் சுருக்கிக் கொண்டமையேயாகும்.

## நிறைவாக

பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்தினால் வெளியிடப்படும் இந்து தருமம் ஆனது கால மாற்றங்களைப் பிரதிபலிப்பதாய் அமைவதனைக் காண்கிறோம். காலந் தோறும் இலங்கைத் தமிழ்ச் சமூகமும், இந்து சமூகமும் எதிர் கொண்ட பண்பாடுசார் சிக்கல்களில்கும், உரிமைசார் கோரிக்கைகளிற்கும் தீர்வினைப் பெறுவதற்கு இந்து தருமமும் தனது பங்களிப்பினை வழங்கத் தலைப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. இந்து தருமத்தினை வளர்ப்பதற்காகப் பல்வேறுபட்ட வகையில் இந்து மாணவர் சங்கம் முயன்றமையையும் இந்து தருமம் சுட்டி நிற்கின்றது. ஆரம்ப காலங்களில் வெறுமனே பல்கலைக்கழகத் திற்குள் மாத்திரம் தனது செயற்பாடுகளை முடக்கி விடாமல், பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும் இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாடுகளை விரிவுப டுத் தி யி ரு ந் த து . இருப்பினும் அண்மைக் காலங்களில் அது தனது செயற்பாடுகளை ஆலயத்தினுள் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொண்டமை கவனத்திற்குரியது. அண்மைக் காலங்களில் இந்து தருமம் இதழ்களில் பிரசுரமாகும் படைப்புக்களில் பல காத்திரமற்றவையாகவே காணப்படு வதனையும் அவதானிக்கலாம். விரிவுரையாளர்தம் ஆக்கங்களும் குறைவாகவே இந்து தருமம் இதழில் பிரசுரமாவதும் கவனத்திற்குரியது. இந்து தருமத்தைப் பேணவும், இந்துதரும் இதழில் வரும் ஆக்கங்களைச் செம்மைப்படுத்தவும் பேராதனை இந்து சமூகம் தலைப்பட வேண்டும். காலவோட்டத்தில் இந்து தருமம் (இதழ்) கரைவடைவது இந்து சமூகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமையக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வியியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி. ஆறு.திருமுருகனுடனான நேர்காணல்.

செவ்விகண்டவர் சந்தோசன்
பொறியியற் பீடம்

**கேள்வி : வணக்கம் ஐயா யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் தழைத் தோங்குகின்ற இணுவில் பதியிலேயே பிறந்து மெல்ல மெல்ல யாழ்ப்பாணத்தின் அடையாளமாகி பிறகு இலங்கையின் அடையாளமாகி, பின்பு உலகத் தமிழர்களின் அடையாளமாக இருக்கின்ற செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஐயாவை நேர்முகம் காண்பதில் பெருமை அடைகிறோம். உங்கள் ஆரம்ப கால வாழ்க்கை பற்றி சிறிது கூறுங்கள்.**

பதில : வணக்கம், இராமநாதன் கல்லூரியில் கற்றேன். இராமநாதன் கல்லூரி மிகப்பெரும் சான்றோர்களை உருவாக்கிய பெண்கள் பாடசாலை. இராமநாதன் கல்லூரியில் அப்போது ஐந்தாம் வகுப்பு வரை ஆண்களை படிக்கவிட்டார்கள். 1966 ஆம் ஆண்டு அந்தப் பாடசாலை மாணவனாக சேர்ந்தேன். 2ஆம் வகுப்பு நிறைவுறுகின்ற காலத்திலேயே எனது வகுப்பு ஆசிரியை திருமதி அமிர்தவள்ளி அவர்கள் அங்கே நடைபெற்ற குருபூசையிலே என்னை பேசுவதற்கு பழக்கினார்கள். திருமதி கனகசபை எனும் பிரபலமான அதிபர் அந்தக் காலத்திலே அதிபராக இருந்தார். எனக்கு அதிபரை கண்டால் பயம். மேடையிலேயே என்னை ஏற்றிவிட்டார்கள், முன்வரிசையிலே அதிபரை கண்டதும் பேச்சு வேர மறந்துவிட்டது. நான் அந்தப் பக்கமாக இறங்கி ஓடத் தொடங்கினேன். என்னுடைய ஆசிரியை அமிர்தவல்லி என்னை பிடித்து மன்றாடி, எப்படியென்றாலும் இன்று பேசியே ஆகவேண்டும் என்று மேடையிலே திருப்பிக் கொண்டுவந்து விட்டார். நான் எனது ஆசிரியையை பார்த்து எனது முதலாவது மேடைப்பேச்சை நிறைவேற்றினேன். அவர்கள் தான் எனக்கு பாராட்டுக்களை தெரிவித்து அன்று தொடக்கம் மேடைகளில் எறக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புகளைத் தந்தார்கள். பின்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருக்கின்ற ஆரம்பப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பிலே அங்கும் நான் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றினேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே பேச்சிலே முதன் முதலில் அறிமுகம் செய்தவர் ஆசிரியர் இ.மகாதேவா. தேவன் மாஸ்ரர் என்றால் அவரை அறியாதவர்கள் இல்லை. எழுத்தாளர், பேச்சாளர் மற்றும் நாடக விமர்சகர் நாடக நடிகர், பட்டிமன்றம், வழக்காடுமன்றம், போன்றவற்றை தலைமை தாங்கி என்னை போன்றவர்களை உருவாக்கிய ஓர் பெருந்தகை. அவர்கள்தான் பேச்சு உலகத்திலேயே காலடி எடுத்து வைப்பதற்கு உதவி செய்தார்கள். முதன் முதலில் யாழ் இந்துக் கல்லூரியிலே நாவலர் பேச்சுப் போட்டியிலே நான் முதலிடம் பெற்றேன். அந்த நினைவாகத்தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்திற்கு முன்னுக்கு எனது சொந்த செலவிலேயே நாவலர் பெருமானுக்கு உருவச் சிலை அமைக்கப்பட்டது. அதிலிருந்து தொடங்கிய இந்த பேச்சு வாழ்வு பாடசாலையை விட்டு, பட்டப்படிப்பு முடிந்து தற்செயலாக ஒருநாள் கோயிலிலே பேசவேண்டியவர் வரவில்லை. நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் பேசுவதற்கு ஆள் வரவில்லை என்று என்னிடம் கேட்டார்கள். நான் போய் பேசினேன். எல்லோரும் என்னை பாராட்டினார்கள். அதன் பின்பு சுன்னாகம் திருஞானசம்பந்தர் பாடசாலையில் ஆசிரியராக இருந்த காலம் பாடசாலை நிகழ்ச்சிகளில் பேசுவதைக் கேள்விப்பட்டு என்னை பேசுவதற்கு அழைத்தார்கள். அப்பொழுது இணுவில் காரைக்கால் சிவன் கோவிலில் அங்கே தொடர் சொற்பொழிவு ஆற்றினேன். சொற்பொழிவின் போது ஏராளமான பக்தர்கள் வந்தார்கள். நிறைவு நாளிலே ஆசிரியர் மணி பஞ்சாட்சரம், முன்னாள் பாராளுமன்ற கன்சாட் அறிக்கையாளர். செல்லப்பா நடராஜா போன்ற பெரியவர்கள் ஒன்று கூடி "செஞ்சொற் செல்வன்" என்ற பட்டத்தை எனது தொடர் சொற்பொழிவுகளுக்காக 1991ஆம் ஆண்டு வழங்கினார்கள்.

அதன்பின்பு யாழ்ப்பாணத்தில் பல கோவில்களிலும் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு போன்ற இடங்களிலே சொற்பொழிவுகளை ஆற்றி இருக்கிறேன். அதே நேரத்தில் கம்பன் கழகம், யாழ் இந்துக் கல்லூரியிலேயே நான் கீழ்பிரிவிலே பேசியபோது மத்திய பிரிவிலே பேசியவர் கம்பவாரிதி. பின்பு அவர் மேற்பிரிவிலே பேசிய போது நான் மத்திய பிரிவிலே பரிசு பெற்றறேன். இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பேச்சுப் போட்டியில் நாங்கள் இருவரும் பங்குபற்றினோம். அதற்கு முன் நான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போது பட்டிமன்றம், விவாதங்களிலே உயர்தர வகுப்பு மாணவர்களுடன் இணைந்து நான் பங்குபற்றினேன். பின்பு கம்பவாரிதி அவர்கள் கம்பன் கழகத்திலே இணைந்து 90களிலே, பேச்சு மேடைகளில் பேசுமாறு வேண்டினார்கள். அவரோடு சேர்ந்து பல நூறு மேடைகளிலே வழக்காடு மன்றம், சுழலும் சொற்போர் இப்படியான நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, கம்பன் விழாவில் பேசி கம்பன் கழகத்திலும் என்னை பிரபல்யப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின்னர் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்தாயாருடைய நட்புக்குரியவர். என்னைச் சிறுவயது முதல் அறிந்தவர். அவர் என்னுடைய பேச்சாற்றலை கண்டு துர்க்கை அம்மன் கோயிலுக்கு அழைத்து நூல்களை எல்லாம் தந்து பேசுமாறு வேண்டினர். அவர்கள் பின்பு ஆலயத்தின் நிர்வாகத்திலே இணையுமாறு வேண்டினார்கள். 1995 ஆலயத்தினுடைய சபையிலே இணைந்து பின்பு நான் அவருடைய காலத்திலே இணைச் செயலாளராக இருந்தேன். அதனாலேயே துர்க்கை அம்மன் ஆலயத்திலே அவர் வாழ்கின்ற காலத்திலேயே ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அவருடைய தலைமையிலே செவ்வாய்க்கிழமை மாலையிலே நற்சிந்தனை சொல்லுகின்ற பழக்கத்தை ஏற்படுத்தினார்கள். இன்றைக்கு வரையிலே ஒவ்வொரு செவ்வாயும் காலையிலும் மாலையிலும் நற்சிந்தனை சொல்லுகின்ற பழக்கம் உள்ளது. இந்தப் பேச்சுலகவாழ்வு இப்படித்தான் அமைந்தது. இதற்கு பின்பு எங்களுடைய ஆற்றலை அறிந்து சிலர் 1999ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு அழைத்தார்கள். இங்கிலாந்துக்கு மட்டும் தான் சுமார் 11 தடவை உரையாற்ற சென்றிருக்கிறேன். அவுஸ்திரேலியாவுக்கு 12 தடவையும் கனடாவுக்கு ஆறு ஏழு தடவையும் அமெரிக்காவுக்கு ஐந்து தடவையும், மலேசியாவுக்கு சிங்கப்பூருக்கு பலதடவை இந்தியாவுக்கு பலதடவை சென்றுள்ளேன். இந்தியாவில் திருச்செந்தூர் முருகப்பெருமனுடைய சன்னிதானத்திலே கந்தசஷ்டி காலத்தில் பலதடவை தொடர்ந்து விரிவுரையாற்றுகின்ற வாய்ப்பு கிடைத்தது. அது ஆகக்கூடிய மக்கள் கூட்டம் முன்னிலையில் பேசுகின்ற வாய்ப்பு. அதேபோல தாய்லாந்திலே ஒரு மாநாட்டுக்குச் சென்று பேசினேன். இந்தியாவிலேயே சேலத்திலே மார்கழி திருவிழா, மதுரை கம்பன் விழா, புதுவைக் கம்பன் விழா, சென்னையிலே திருவிழா, திருவண்ணாமலையில் ஓதுவார்களுடைய மாநாடு காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சமய நிறுவனமும் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய மகாநாடு இப்படி இந்தியாவிலேயே தொடர்ந்து பல தடவைகள் உரையாற்றியிருக்கிறேன்.

சிதம்பரத்திலே இருக்கிற தில்லை நகர் பாடசாலையில் 150வது ஆண்டு நிறைவு விழாவில் 3 நாட்களும் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் உரையாற்றியிருக்கிறேன். சிங்கப்பூரிலே, சிங்கப்பூர் பிரதமர், முதல்வர் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டேன். சிங்கப்பூர் முதல்வர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளிலேயே பேசியிருக்கிறேன். சிங்கப்பூர் முருகன் கும்பாபிஷேகத்தில் சிங்கப்பூர் முதல்வர் கூட வந்திருந்தார்கள். அப்பொழுது நான் தமிழிலேயே நேர்முக வர்ணனை செய்தபோது இன்னொரு பேராசிரியர் ஆங்கிலத்தில் நேர்முக வர்ணனை செய்தார். இது மாதிரியாகவே என் பேச்சு வாழ்வு நீடித்தது. அமெரிக்க ஹவாய் ஆதீனத்திலும், நியூசிலாந்து நாட்டிலேயும் ஆன்மீக உரையாற்றியிருக்கிறேன். சுவிட்சர்லாந்து நாட்டில் தொடர்ந்து 10 நாட்கள் உரையாற்றியிருக்கிறேன். புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்ற நாடுகள் எல்லாவற்றுக்கும் சென்று காலத்துக்கு காலம் உரையாற்றியிருக்கிறேன். இலங்கையில் இருக்கின்ற களனி பல்கலைக்கழகம், மொறட்டுவைப் பல்கலைக் கழகம், மற்றும் கொழும்பு கிழக்கு பல்கலைக் கழகம், கல்வியியற் கல்லூரிகளிலும் உரையாற்றியிருக்கிறேன். பல பெரியோர்களின் நினைவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருரையை ஆற்றியிருக்கிறேன். சேர்.பொன் இராமநாதன் உள்ளிட்ட பல பெரியோர்களின் நினைவுப் பேருரை ஆற்றியிருக்கிறேன். அதேவேளை இலங்கையின் முன்னய பாராளுமன்றத்திலே சேர்.பொன் அருணாசலம் அவர்களின் நினைவாக நடத்திய நிகழ்வில் ஓராண்டு நான் பேசியிருக்கிறேன்.

**கேள்வி : கேட்கும் போதே வியப்பாக இருக்கிறது ஆரம்பத்திலேயே எவர் பேசுவதற்கு பயந்து ஓடினாரோ இன்று அவர் பேச்சைக் கேட்பதற்கு ஓடி ஓடி வருகிறார்கள் என்கின்ற போது அவருடைய ஆளுமை அங்கே வெளிப்படுகிறது. சிறுவயதில் எல்லோருக்கும் ஒரு கனவு இலட்சியம் இருக்கும். நான் இன்ஜினியராக வேண்டும் டாக்டர் ஆக வேண்டும், வழக்கறிஞராக வேண்டும் என்று ஒரு ஆசை இருக்கும் உங்களுடைய ஆசை என்னவாக இருந்தது?**

பதில் : என்னுடைய சிறுவயதில், நான் படிக்கின்ற காலத்திலேயே ஒரு ஆசிரியராக அதிபராக வர விரும்பினேன். என்னுடைய நண்பர்களோடு மண்ணுக்குள்ளே விளையாடுகின்ற போது சிலர் தான் டாக்டராக வரவேண்டும் என்றார்கள், சிலபேர் பொறியியலாளராக வரவேண்டும் என்றார்கள், ஆனால் நானோ எனக்கு பிடித்த ஆசிரியர் போல ஆக ஆசைப்பட்டேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே உயிரியல் துறை மாணவராக கற்றேன். அப்ப என்னுடைய குடும்பத்தினர் எதிர்பார்த்திருக்கலாம் நான் ஒரு மருத்துவத்துறை மாணவன் ஆகவேண்டும் என்று. ஆனால் ஒரு விஞ்ஞானத் துறை மாணவனாக இருந்தாலும் கலைத்துறையிலே இருந்து பாடசாலை வாழ்விலே பத்திரிகைக்கு கட்டுரை எழுதுவது, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 7ஆம் ஆண்டிலேயே கட்டுரைகள் எழுதியிருக்கிறேன். என்னுடைய 16 வயதில் ஒரு கையெழுத்து சஞ்சிகை யாழ் இந்துக் கல்லூரியில் நடத்தினேன். "யாழ்மதியன்" ஆசிரியர்கள் தேவன் அவர்கள், சிவராமலிங்கம் அவர்கள் என்னை ஊக்குவித்தார்கள். பின்பு, இந்த நூல் நிலையத்தில் இதனை அரங்கேற்ற பலரும் கருத்து தெரிவித்தார்கள். அப்போது மிகக் குறைந்த வயதிலேயே அச்சேற்ற முனைந்தேன். அப்போது அச்சேற்றுவது என்றால் ஆயிரம் புத்தகங்களுக்கு செலவு 400. எங்களிடம் அவ்வளவு வசதியில்லை. எங்களுக்கு மருதனார்மடம் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு பத்து சதம் தான். எப்படி இந்த புத்தகங்களை அச்சடிப்பது என்ற போது அப்போது எங்களுக்கு விலங்கியல் கற்பித்தவர் "பிரான்சிஸ்" என்ற ஒரு சிறந்த ஆசிரியர். விஞ்ஞானப் புத்தகங்களை அடித்து வெளிவிடுவார். அவர் தனது வீட்டிலே ஒரு சிறிய அச்சு எந்திரம் வைத்து புத்தகங்களை அடிப்பார். நான் அவரிடம் கேட்டேன் எனக்கு இந்த புத்தகத்தை அச்சடிக்க வேண்டும் என்று. அதற்கு அவர் சொன்னார். "நீர் பேப்பர் காசை தாரும்" அப்போது நாங்கள் ஒரு மூன்று விளம்பரம் சேர்த்தோம். ஒரு பக்கம் 25 ரூபாய், அரைப்பக்கம் 10ரூபாய் யாழ்ப்பாணத்திலே மூன்று நிறுவனங்கள் விளம்பரம் தந்தார்கள். அப்பொழுது எங்களுக்கு கஷ்டமாக இருந்தது. காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களுடைய வீட்டுக்கு நாங்கள் மாணவராக போனோம். நாங்கள் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை விளக்கினோம். ஆவர் சிரித்துவிட்டு 100 ரூபா தந்தார். அந்தக் காலத்தில் நூறு ரூபாய் என்பது பெரிய தொகை. அப்போது என்னுடன் புத்தகம் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் நோர்வையில் வைத்தியராக இருக்கிறார். "திருமயில் மனோகரன்" அவர் விசுவமடுவில் இருக்கின்ற தனது உறவினர் ஊடாக அவர் 100 ரூபாய் தந்தார். இன்னும் சில நண்பர்கள் பத்து இருபது எனத் தந்து நாங்கள் கடதாசி செலவை ஆசிரியர் பிரான்சிஸ் அவர்களுக்கு தந்து திருப்தி அடைந்தோம். அந்த முயற்சி பாடசாலையிலே பிரபலமாக பேசப்பட்டது.

ஏனைய பாடசாலைகளில் பிரபல்யமானது. இந்த நூலை நாங்கள் அப்போது யாழ்ப்பாணத்தில் Bond tutory என்ற பிரபல்யமான tutory காட்சிப்படுத்தினோம். அந்த நூல் வெளியீட்டுக்கு தலைமை தாங்கியவர் காலஞ்சென்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர், ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் என்.சபாரத்தினம். பிரபலமான வைத்திய நிபுணர் சிவகுமாரின் தந்தை காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவர்கள் அந்த விழாவில் பேசினார். யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் விஸ்வநாதன் பேசினார். எங்களுடைய ஆசிரியர் தேவன் பேசினார். மயிலங்கூர் நடராஜன் நூல் மதிப்புரை செய்தார். அந்த காலத்திலேயே பத்திரிகைகளில் இந்த செய்தி வந்தது. யாழ்ப்பாணத்தி லிருந்து ஒரே ஒரு பத்திரிகை ஈழநாடு, கொழும்பிலிருந்து வீரகேசரி, தினகரன் ஆகியன இதற்கு முக்கியத்துவம் கொடுத்தன. அப்போது பதினாறு வயதிலேயே என் பெயர் பத்திரிகையில் வந்தது. இப்போது 5 ஆம் ஆண்டிலேயே புலமைப்பரிசில் சித்தியடைந்தால் பெயர் வரும். அந்த காலத்தில் அப்படி இல்லை. அதே காலப்பகுதியில் சேக்கிழார் விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. சேக்கிழார் மன்றம் நடத்தினார்கள். இந்தியாவிலிருந்து பல பெரியவர்கள் வந்து பேசினார்கள். ஆசிரியர் சொக்கன் அவர்கள், சிவராமலிங்கம் அவர்கள் தேவன் ஆசிரியர் என்னையும் பேசக் கேட்டார். நான் ஒரு மாணவன். அப்போது தான் பேராசிரியர் ஆறு அழகப்பன் பேச வந்தார். அவரின் பேச்சுக்கிடையால் எங்கள் ஆசிரியர் தேவன் அவர்கள் எங்களிடம் ஒரு ஆறு இருக்கிறது. என்று ஆறு திருமுகன் என அறிமுகம் செய்தார். எல்லோரும் ஆச்சரியமாக பார்த்தார்கள். பேராசிரியர் ஆறு அழகப்பன் ஒரு பேராசிரியர் பேசப்போகிறார் என்று நினைத்த போது நான் தான் பேசினேன். இது என்னுடைய ஆசிரியர்கள் எனக்கு போட்ட பிச்சை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எங்களை மிக வளர்த்தது. மிகவும் பிரபலம் ஆக்கியது.

மகிழ்ச்சி என்னவென்றால் ஆசிரியர் தேவன் நோய்வாய் பட்டிருந்தபோது 38 நாட்கள் அவர் பக்கத்திலேயே இருந்து அவருக்கு பணிவிடை செய்து அவர் உயிர் பிரிகின்றபோது இருந்தேன். ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது அவரின் வைத்தியசாலையில் வைத்தியருக்கே சொல்லியிருந்தார் எனக்கு ஏதும் நடந்தால் எனது மாணவருக்கு அறிவியுங்கள். அப்போது தொலைப்பேசி வசதியில்லை. நான் ஸ்கந்தவரோயாக் கல்லூரி அதிபராக இருந்தேன். நான் இப்படி சகல கடமைகளையும் செய்து இறுதி வைபவத்துக்கு தலைமைதாங்கி எல்லாவற்றையும் செய்தேன். இப்படி எங்கள் ஆசிரியர்கள் தமிழைத்தந்தார்கள், வளர்த்தார்கள் என்பது தெய்வீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: குருத்துவம் இல்லாத ஒரு சரித்திரம் எழுந்தது இல்லை என்பது போல உங்களுக்கும் உங்கள் ஆசிரியர்களுக்குமிடையிலான குரு சீட பந்தம் மெய்சிலிர்க்க வைக்கிறது. இவ்வாறு ஆசிரியர் பணியை நோக்கியதாக நகர்ந்த உங்கள் வாழ்க்கை எவ்வாறு மக்களுக்கானதாக, இறைவனுக்கானதாக மாறியது.**

பதில் : 1987இல் போர் யாழ்ப்பாணத்தில் உக்கிரமடைந்த போது, நள்ளிரவு ஒரு மணியளவில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டேன். என்னைப்பல இளைஞர்களோடு சேர்த்து சித்திரவதை செய்தார்கள். என்னையும் கொல்வதாக இருந்தது. போராளிகளை காட்டித்தராவிட்டால் உயிரோடு கொழுத்துவோம் என்று எனக்கருகில் ஓலைகளை குவித்தார்கள். இந்திய இராணுவத்திற்கு தமிழ் தெரியாது அருகில் ஒரு இளைஞன் பல நேரமாக தண்ணீர் கேட்டுக்கொண்டேயிருந்தான். நான் ஆங்கிலத்தில் மொழிபெயரத்து அவனுக்காக அவர்களிடம் நீர் கேட்டேன். அதற்காக மேலும் சித்திரவதைக்கு குள்ளாக்கப்பட்டேன். என்னிலையிலும் என்னுயிர் பறிக்கப்படலாம் எனும் நிலையி லிருந்தேன். அப்போது அவ்விடத்துக்கு அருகில் இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையில் திடீரென சண்டை ஏற்பட்டது. துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. எங்களுக்கு காவல் நின்றவர்களும் சண்டை நடந்த இடத்திற்கு ஓடியதால், உயிரோடு இருந்த சிலர் மட்டும் உள்ளாடையோடுதப்பித்தோடினோம். ஓடம் வழியில் வேறு இராணுவத்தினரிடம் மாட்டுப்பட்டோம். எமது தேகம் எல்லாம் இரத்தக் காயங்கள். தெய்வாதீனமாக அவ்இராணுவ பிரிவின் தளபதி மலையாளி என்பதால் தமிழ் கதைத்தார். நான் நிலைமையை விளக்கினேன். அவர் அருகிலிருந்த வைரவர் கோவிலில் இருக்கச்சொல்லி முதலுதவி தந்தார்கள். இரவு முழுவதும் அங்கேயே இருந்தோம். விடிந்ததும் தப்பித்து செல்லுமாறு அவரே சொன்னர். சுண்ணாகத்திலே ஓர் தேவாலயத்தில் தங்கியிருந்தோம். யாழ் போதனாவைத்தியசாலையும் சண்டை நடந்ததால் அதுவும் மூடப்பட்டிருந்து. எனது ஆசிரியர் பொன்னம்பலம் அவர்களின் துணைவியார் ஓர் வைத்தியர். நான் காயப்பட் டிருந்ததை அறிந்த அவர் இரவோடிரவாக இரகசியமாக எனக்கு வைத்தியம் செய்தார்கள் மேலதிக சிகிச்சைக்காக இளையண்ணை என்கிற மாட்டுவண்டில் சவாரி செய்பவர் மற்றும் டொக்கடர் ரவிராஜ் அவர்களின் சகோதரியின் கணவர் டொக்டர் செல்வவிநாயகமும் சேர்ந்து என்னை தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்தத்தார்கள். என்முதுகுப்பகுதி முழுமையாக பழுதடைந்திருந்ததால் காலில் இருந்து தோலை வெட்டியெடுத்து டொக்டர் யோகராயா என்பவர் சிகிச்சை அளித்தார். மயக்கமருந்து எதுவும் இன்றி கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் சுய நினைவோடுதான் அந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. அன்றைய என் உயிர் தப்பினால் என் வாழ்க்கையை மக்களுக்கு அர்ப்பணிப்பதாக நினைத்தேன். பல வழிகளிலே இறைவன் என்னுயிரைக்காப்பாற்றினான். பின்னர் கொழும்பிலும் இந்தியாவிலும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. அப்போது இந்தியாவிலே பெங்களூரில் கைலாச ஆச்சிரமத்தில் திருச்சி சுவாமிகள் என்கின்ற மகானிடம் என் சகோதரியும் அவரின் கணவரும் அழைத்துச்சென்றார்கள். அந்த சுவாமிகள் என்னிடம் "முற்பிறப்பு கர்ம வினைகள் எல்லாம் முடிந்தது, நீ பெரயவனாக வருவாய்" எனக்கூறி காவிசால்வையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தார். அவரது ஆலோசனைப்படி காசி சென்று வந்தேன். அவரது ஆச்சிரமத்தில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லத்தை சிறப்பாக நடாத்தினார். அந்தச் சூழல் என் மனதில் ஆழப்பதிந்தது. இன்று அதுவே எனது வாழ்க்கையாக இருக்கிறது.

**கேள்வி: கேட்கும் போதே வியப்பாக இருக்கிறது. எவ்வளவு துன்பங்களை கடந்து வந்திருக் கிறீர்கள். அந்த சுவாமியின் சந்திப்பின் பின்னர் உருவாக்கப்பட்டதா இந்த சிவபூமி அறக்கட்டளை?**

பதில் : ஆரம்பக்காலங்களில் என் சொற்பொழிவுக்கு பணம் தந்தால் பெறுவதில்லை. கம்பவாரிதி அவர்களின் அறிவுரைப்படி, சொற்பொழிவின் மூலம் கிடைத்த அரிசியை துவிச்சக்கர வண்டியில் கட்டிக்கொண்டு வந்து திருநெல்வேலி சைவவித்தியா அபிவிருத்திச் சங்கத்திலுள்ள பிள்ளைகளுக்கு கொடுத்தேன். இவ்வாறு எனக்குகிடைத்த அன்பளிப் புக்கள் மூலம் சில தருமங்களை செய்யத்தொடங்கினேன். சிவத்தமிழ் செல்வி அம்மா ஊடாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய அறப்பணிகளிலும் பங்கெடுத்தேன். கனடாவில் சொற்பொழிவால் கிடைத்த நிதி மூலம் சிவத்தமிழ் செல்வி ஆய்வு நூலககட்டுமானப்பணிகளை ஆரம்பித்தேன் அதே போல யாத்திரிகள் விடுதி கட்டுமானப்பணிகளையும் தொடங்கினேன். யாழ் போதனா ழவைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை செய்ய இடமின்றி இருந்து. லண்டனில் சொற்பொழிவு மூலம் கிடைத்த பணத்தால் டொக்'டர் குகதாசனின் ஆலோசனைப்படி கண் சத்திர சிகிச்சை நிலையம் அமைத்தோம்.டொக்டர் பேரானந்தராசாவின் வழிகாட்டலில் சிறுநீரக சிகிச்சைக்கான இயந்திரத்தை சுவீடன் நாட்டு சொற்பொழிவில் கிடைத்த பணத்தின் மூலம் வாங்கி கொடுத்தேன். என் பாடசாலை மாணவனின் தாயார் ஒருவர் இருக்க வீடில்லை என என்னிடம் வந்து கவலைப்பட்டார். அப்போது ஐந்து விதவைப் பெண்களுக்கு வீடு கட்டுவது என முடிவு பண்ணினான். அதில பேச்சால் கிடைச்ச உதவிகள் எல்லாத்தையும் கொண்டு வந்து கந்தரோடையில் பரப்பு 25000 இற்கு இப்ப எண்டா 25 இலட்சம் போகும். காணி வாங்கி வீடு இல்லாதவைக்கு ஒவ்வொரு பரப்பு வீதம் ஐந்து இளம் விதவைப் பெண்கள், 40 வயதிற்கு கீழ் கணவனை இழந்தவர்கள். அவர்களுக்கு ஒரு வீட்டுத்திட்டத்தை உருவாக்கி அந்த வீட்டை யாருக்கு கொடுக்கிற எண்டதை ஐந்து பெண்களையே வைத்து தெரிவு செய்து தாங்கோ எண்டு கேட்டன். கோகிலா மகேந்திரன், டொக்டர் பவானி, மகப்பேற்று வைத்தியர், திருமதி. சிவாஜினி, கலைவாணி இராமநாதன் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளராக இருந்த பெண்மணி திருமதி. தியாகராஜா இவர்களை தேர்ந்தெடுத்து தாங்க என்று கேட்டன். அவர்கள் நேர்முகப்பரீட்சை வைத்து 50 பேர் எழுதி 5 பேரை எடுத்து தந்தார்கள். இண்டைக்கு அந்த 5 வீட்டு பிள்ளைகளும் பல்கலைக்கழகம் சென்று உத்தியோகம் பார்த்து அந்த ஐந்து வீடுகளும் நிறைவாக இருக்கிறது. பேச்சுத் துறையால் இப்படியான காரியங்கள் செய்ய வைக்கிறார் கடவுள். அந்த நேரத்தில சிவத்தமிழ் செல்வி அம்மா சொன்னார். நீர் உம்மட பெயரால் அறக்கட்டளைகளை செய்யும் என்று. அவரின் பிறந்தநாள் கல்வி நிதியமும் நான்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து போட்டனான். அவுஸ்திரேலியாவில் போய் பேசி 16 இலட்சம் கொண்டு வந்து கல்வி நிதியமும் போட்டனான். பின்னர் அவர்கள் சொன்னார்கள் நீங்கள் ஓர் அறக் கட்டளை தொடங்கும் என்று. இற்றைக்கு 17 வருசத்துக்கு முதல் சிவபூமி அறக்கட்டளை எண்டத தாபித்தேன். அதற்கு பொருளாளராக கண்வைத்தியர் குகதாசன் ஐ போட்டு 9 பேர் கொண்ட வசரளவல அமைத்தேன். அத்துடன் மனவளர்சி குறைந்தவர்களுக்கு பாடசாலையை தாபித்து சிவபூமி முதியோர் இல்லத்தை 2007ம் ஆண்டு ஆரம்பித்து அந்த முதியோர் இல்லத்தை சுழிபுரம் தொல்புரத்தில் ஆரம்பித்து பிறகு 2010இல் கீரிமலையில் சிவபூமிமடம், 2014 இல் சிவபூமி யாத்திரிகர் மடம், அதற்கு பிறகு விவசாய முயற்சி ஒன்று சுழிபுரத்தில் நெல்லியான் என்ற இடத்தில் 300 பரப்பு காணி ஒன்றை ரிஷி தொண்டுநாத சுவாமிகள் வாங்கி தந்தார்கள். அதற்கு பிறகு குப்பிளான் புற்றுநோயாளர் சிவபூமி ஞான ஆச்சிரமம், சிவபூமி புற்றுநோயாளர் நிதியம், நோயாளர்களுக்கு செவ்விளநீர் கொடுத்தல், Sustain எல்லாம் தட்டுப்பாடு. கொழும்பில இருந்து எடுத்து இலவசமாக உதவி செய்கிறோம். இலவசமா ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுகிறோம். கந்தையா நீலகண்டன் இந்துமாமன்றத்திலே என்னை இணைத்தார்கள்.

இந்து மாமன்றமும் நிறைய உதவி எனக்கு செய்தார்கள். மனிதநேயம் எண்டுற கொழும்பில இருக்கிற அறக்கட்டளை நிலையம் ஆலும் எங்கட பணி விரிவடைந்தது. சிவபூமி மாணவர் தொகை அதிகரித்தது. அவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டது. பிறகு வெளிநாடுகளிகளிலும் எங்களுக்கு அங்கீகாரம் கிடைத்தது. அதாவது கிளிநொச்சியில் ஒரு சிவபூமி பாடசாலையை இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. ஓர் அன்பரே மொத்தச் செலவில் பாடசாலையைக் கட்டினார். அதுக்குப் பிறகு இயக்கச்சியில் ஒரு 15 ஏக்கர் தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. ஏழை மாணவர்கள் படிப்பதற்கு தென்னந்தோப்பு வைக்கப்பட்டது. பின்னர் யாழ்ப்பாணத்திலே பழவகை தட்டுப்பாடு. தென்னிலங்கை பழங்கள்தான் இப்பவும் விலைப்படுது. சங்கத்தார் வயல், கோயில் வயல் என்று இயக்கச்சியில் 25 ஏக்கர் வயல் வாங்கி சிவபூமி பஞ்சாமிர்த தோட்டம் அதாவது எல்லா விதமான பழங்களும் எங்களுடைய பாரம்பரிய பழங்கள் தோட்டம் உருவாக்கி அங்கே ஒரு வீடு கட்டி, ஒரு குடும்பத்தையங்கு இருத்தி அவர்களே அதை பராமரித்து இப்படி 3 தோட்டத்திலே 3 குடும்பங்களை இருத்தினோம். அவர்களுடைய பிள்ளைகளின் படிப்புச்செலவு நாங்களே எடுத்துக்கொண்டோம். இந்த இடைவிடாத முயற்சியின் விளைவுதான் நாவற்குழியில் அவுஸ்திரேலியாவில் உள்ளவர்கள் 60 பரப்பை தந்தார்கள். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நாவற்குழியில் சிவபூமி செவ்விளநீர் தோட்டம் தவிர செவ்விளநீர் மரம் மட்டும் நட்டிருக்கிறேன். எதிர்காலத்தில் இலவசமாக இவ்வாறு செவ்விளநீர் வழங்கப்பட வேண்டும் என்பதே எனது இலட்சியம். திருவண்ணாமலைக்கு பேச்சுக்கு போனபோது ஒரு சித்தர் எனது பேச்ச கேட்டுட்டு பக்கத்தில வந்து கூப்பிட்டு கதைச்சிட்டு திருவாசகம் முழுவதையும் யாழ்ப்பாணத்தில் கருங்கல்லில் அழியாமல் பதிக்குமாறு கூறினார். நான் முதலில் மறுத்தேன். நீ முயற்சி செய்தால் கைகூடும். முயற்சி செய்யாவிடின் ஒன்றும் பயன் இல்லை. அந்த முயற்சிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப 2018ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற மருத்துவ நிபுனர் வைரமுத்து மனமோகன் தந்த காணி நிலம் அவரால கிடைச்ச பேருதவி. திருவாசகம் முழுவதும் கருங்கல்லில் எழுதி 108 சிவலிங்கம் வைத்து கருங்கல்லால் இரதம் வைத்து உருவாக்கினார் என்பது வரலாறு. இப்போது சிவபூமியின் அடுத்த கட்டமாக என்னுடைய நீண்டகால கனவு யாழ்ப்பாணத்தில் சரியான மியூசியம் வைக்க வேண்டும். அதற்காக சிவபூமி அரும்பொருட் காட்சியகத்தை நாவற்குழியில் அதிருவாசக அரண்மனைக்கு முன்னாலே ஒரு நிலம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. கஸ்டப்பட்டு இப்பொழுது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த Architect மாணவன் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற குணசிங்கம் மூலம் 3 மாடிக்கட்டடத்துக்கு வரைபடம் கீறப்பட்டு சென்ற மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது. கீழ்மாடி கொழும்பில் வாழ்கின்ற அபிராமி கைலாசபிள்ளை என்ற அன்பர் கட்டித் தருகிறார். மேலுள்ள இவற்றுக்கு பலகோடி செலவு. பத்துச் சதமும் கையில இல்ல. கடவுள் நம்பிக்கைதான் இருக்கு. சில வருடத்திற்கு முதல் போடப்பட்ட விதை விருட்சமாகி நிற்கின்றது.

**கேள்வி : இன்று பல்வேறு அறக்கட்டளைகளுக்கும் பல்வேறு தாபனங்களுக்கும் தலைவராக இருக்கின்றீர்கள். சும்மா ஒரு விழாவை நடாத்துவது தலை சுற்றிவிடும். இத்தனை அமைப்புக்குரிய முதல்வராக இருந்து அவற்றை வெற்றிகரமாக நடத்துவது எவ்வாறு சாத்தியமாகின்றது?**

பதில் : அது முக்கியமாக சில ஆளமை உள்ளவர்களை அகததிலே இருத்தி வைத்திருகிறேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல்வராக இருந்த சபாலிங்கம் அவருடைய நடை, செயல் திட்டம் என்பவற்றை மனதிலே இருத்தி வைத்திருக்கிறேன். நான் அதிபராக ஆசிரியராக இருந்து 50 வயதில் இளைப்பாறினேன். அந்த அதிபர் National Vetti உடன்தான் வருவார். அவர் என் ஆளுமையில் தங்கியிருக்கிறார். இன்னொரு அதிபர் குமாரசுவாமி. அவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவன். அவர் யாருமற்ற அநாதையாக இறந்து போனார். Principal என்னைக் கூப்பிட்டு சொன்னார். மரணகிரியை நாங்கள்தான் செய்யனும். ஒரு கடதாசி எடுத்து, தான் 10 ரூபா போட்டிட்டு ரீச்சர் ஒவ்வொருத்தரிட்டயும் காட்டி காசு கேட்கச் சொன்னார். ரீச்சர் ஒவ்வொருத்தரும் 5/-ரூபா போட்டினம். நான் அப்ப A/L படித்தேன். என்னுடைய ஆசிரியர்தான் முத்துக்குமாரசுவாமி. அவருடைய காரில போய் சவப்பெட்டி வாங்கிட்டு வந்தார். நாங்கள் கோம்பயன் என்ற இடத்தில் தேவாரம் பாடி மரண கிரியையை செய்தோம். ஓர் ஏழையின் மரணவீட்டை எப்படிச் செய்யிறதெண்டு அறிந்துகொண்டேன். இந்த ஆளுமையும் எனக்கு கைகொடுக்கிறது. தங்கம்மா அப்பாக்குட்டியிடம் கோயிலை எவ்வாறு நடத்துவது நிர்வாகத்தை எவ்வாறு நடத்துவது என்று கேட்டோம். கட்டுப்பாடாக வைத்திருக்கும் ஆளுமையை பெற்றுக்கொண்டேன். கம்பவாரிதி ஜெயராஜாவிடம் எப்படி விழாக்களை நடத்துவது என்று கேட்டேன். தெய்வம் தந்த ஞாபகசக்தி அது ஒரு வரப்பிரசாதம். அந்த நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நாங்கள் ஒரு நிகழ்ச்சியை ஒப்பேற்ற வேண்டுமெனின் நித்திரையைப் பார்ப்பதில்லை. சாப்பாட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதில்லை. விடிய விடிய இருந்து திட்டமிட்டு காலை 4, 5 மணிக்கு கூட அவற்றுக்கு பின்னர் நான்கூட தூங்கியிருக்கிறேன். எத்தனை நாள் விழித்திருந்தது இன்று உலகம் விழிக்க காரணமாயிற்று. நாங்கள் எல்லோரும் எங்களுக்கு அலுப்பாயிருக்கு நாளைக்கு பாப்பம் நாளைக்கு பாப்பம் எண்டால் முடியாது. நேரம் தவப்பொழுது திரும்பிவராது. நான் நூல்களை வாசிக்கும் வாய்ப்பு சின்ன வயதில் கிடைத்தது. இண்டைக்கும் நான் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன். இன்றைய அறிஞர்களையும் படிக்கிறேன். முன்னைய அறிஞர்களையும் படிக்கிறேன். அதே நேரத்தில வயது முதிர்ந்தவர்களுடன் உரையாடுவேன். அவையும் எங்களுடைய ஆளுமையில தங்கியிருக்கும் நூல்களை பார்த்து வெறுமனே ஆளுமை வராது. நல்ல அனுபவம் உடையவர்கள் அதற்கு படித்த வர்கள் தான் என்று தேவையில்லை. கிராமத்தில் இருக்கிறவர்கள் வயது முதிர்ந்தவர்கள். நான் பல விசயங்கள் அறிந்திருக்கிறேன். நான் மேடையில் சொன்னதில பல விடயங்கள் பாடப்புத்தகத்தில எடுத்ததில்லை. முதியோரிடம் இருந்து பெற்றுக்கொண்டது. கேள்வி ஞானமாகப் பெற்றவையே என்னிடம் நிறைய இருக்கிறது. அன்பாகப் பேசுங்கள். கோபத்தை வளர்ப்பவன் நரகத்தை சிருஸ்டி செய்கின்றான் என்பது பகவத்கீதை வாக்கியம். நான் கோபத்தை நிரந்தரமாக வளர்ப்பதில்லை. கோபம் வரும்போது மாத்திரம் பேசுவேன். யாரும் பேசினாலும் கோவித்து சண்டையிடுவதில்லை. உடனே கோபம் வந்தாலும் மறுநாள் அரவணைத்துக் கொள்வது அதுக்குள்ள எங்களுக்குள்ள அகப்படாமல் போனா அது எங்கட கையில இல்லை. நிறைய அன்பர்களை சம்பாதிக்கலாம். பணம் இல்லை என்றாலும் நிறைய அன்பர்களை சம்பாதிக்கலாம் என்று விளங்கியது. என்னுடைய அன்பர்கள் உலகத்தின் பல பாகத்திலும் உள்ளார்கள். அவர்கள் உனக்கு என்ன வேண்டும் என்று என்னைக் கேட்பார்கள். நான் குழந்தை போல அதைத்தா இதைத்தா என்று கேட்பதில்லை. சந்தர்ப்பம் வரும்போது கேட்பேன். அவர்களும் செய்வார்கள்.

**கேள்வி: இதைக் கேட்கின்றபோது இராமயணத்திலே வருகின்ற வாலிதான் ஞாபகம் வருகிறார். காண்பவர்களுடைய பாதி பலத்தை மட்டுமல்ல நீங்கள் முழுப்பலத்தையம் எடுத்துவிடுவீர் போல் உள்ளது. அவ்வாறு ஒவ்வொருவரிடமும் இருந்து பெறுகின்ற, கற்கின்ற விடயங்களை வைத்து இளம் சந்ததியினருக்கு முக்கியமான விடயத்தைக் கூறி இருக்கிறீர்கள். திட்டமிட்டு செய்யவேண்டும். திட்டமிடுவதற்காக இரவு தூக்கத்தையே செலவிட்டு இருக்கிறீர்கள் என்கிறீர்கள். இது குறிப்பிடத்தக்க விடயமாகும். சிவபூமி அறக்கட்டளை பற்றி பேசுவோம். அதிலே குறிப்பாக சிறுவர், முதியோர் இருவரையும் பராமரிக்கிறீர்கள். உண்மையில் பராமரிக்க கஷ்டமானவர்கள் இவர்கள் இரண்டு பேரும்தான். இந்த இருவரையும் சமாளிப்பது எப்படி இருக்கின்றது.**

பதில் : குழந்தைகளைப் பொறுத்தவரை படபடவென்று வளருவார்கள். சின்னக் குறும்பு செய்வார்கள். அவர்கள் வளர்ந்து வந்து எங்களை வழிநடத்தத் தொடங்கிவிடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த பிள்ளைகள் மருந்து போட்டீர்களா, சாப்பிட்டீர்களா என்று கேட்பார்கள். நல்லா இருந்த முதியவர்கள் குழந்தைகளாக மாறிவிட்டார்கள். முதியோருக்கு ஞாபகசக்தி குறைந்துவிடும். காலையில சாப்பாட்ட குடுத்துவிட்டு 10 மணிபோல போய் சாப்பிட்டீர்களோ எண்டா நேற்று தொடக்கம் சாப்பிடவில்லை ஒருவரும் தரவில்லை என்பார்கள். நானே முன்னால நின்று என் கண்முன்னாடி குடுப்பன். ஆனால் அவர்கள் இல்லை என்றே சொல்வார்கள். அதசமாளிக்க கருணையும் இரக்கமும் சாந்தமும் இல்லாவிட்டால் இத்தகைய இல்லங்களை நடாத்த முடியாது. மன்னிக்கிற சக்தி வேண்டும். இரண்டாவது நான் நடத்துவது மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் பாடசாலைகள். அவர்களம் அப்படித்தான். ஆரம்பத்தில் அவர்களும் அப்படித்தான். கடிப்பார்கள், ஓடுவார்கள், கதிரையில் இருக்க மாட்டார்கள். பிறகு சிவபூமி பாடசாலையில் பயிற்சி பெற்றவர்கள் என்னிடமே வந்து சொல்லுவார்கள். என்னை வந்து மாமா என்றுதான் கூப்பிடுவார்கள். சிலர் ஐயா என்று கூப்பிடுவார்கள். என்னிடம் எது தங்கட உடுப்பு என்று எண்டெல்லாம் காட்டுவார்கள். அதைவிட என்ன அதிசயம் என்றால் என்னுடைய வாகனத்தை தொட்டுக்காட்டிச் சொல்லுவார்கள் என்னையே கழுவச்சொல்லி. மனவளர்ச்சி குறைந்த பிள்ளை என்று ஒதுக்கப்பட்ட பிள்ளை என்னுடைய வாகனத்தில் உள்ள தூசைக் காட்டி கழுவுங்க மாமா என்று சொல்லுவார்கள். அப்ப அவ்வளவு மாற்றம். மனித வாழ்வில் எல்லாம் பயிற்சியால் பெறலாம். எங்கட வாழ்வில் 35 ஆண்டு வரை சிறுவர் இல்லங்களோடு உள்ளேன். துர்க்கை அம்மன் அம்மன் ஆலயததில் 24 வருடமாக சின்ன சின்ன பிள்ளைகளாக வளர்ந்தவர்கள் இப்ப திருமணமாகி அவர்கள் தங்களுடைய குழந்தைகளை கொண்டுவந்து ஏடு தொடக்குகிறார்கள். அவை எப்படி சின்ன வயதில் வந்து நாங்கள் எப்படி அவர்களை பார்த்தோமோ இப்ப அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குவது ஒரு அனுபவம். குடும்பம் மாறிவிட்டது. இவற்றுக்கு சில தியாகம், பொறுமை வேண்டும். தியாகத்தன்மை இல்லாதவர்களால் இப்படியானவற்றை நடத்த இயலாது. இப்படியான வாழ்க்கையில நேரும் முக்கியம். அப்ப நாங்க இப்படியான வேலைகளை செய்யக் கூடியதாக இருக்கும். நான் பெரும்பாலும் உறவினர் வீட்டுக்கு செல்வதில்லை. பெரும்பாலும் உறவினரின் மரண வீட்டுக்குச் செல்வேன். அந்தியேட்டிக்குப் போவதில்லை. திருமண வீட்டுக்குப் போவதே மிக அரிது. என்னை எல்லாரும் மன்னித்துக் கொள்கிறார்கள். உங்களுக்கு நேரம் இல்லை என்று ஒரு உறவினர் வீட்டுக்குப் போய் கனநேரம் அந்தக் காரியத்தில நின்றால் இந்தக் காரியங்களைச் செய்யமுடியாது. ஆரம்பத்தில உறவினர்கள் கொஞ்சம் கோபித்துக் கொண்டார்கள். இவர் என்ன சொன்னாலும் வருகிறார் இல்லை என்று. ஒரு வீட்டை திருப்திபடுத்திற நேரம் இங்கு பலபேரைத் திருப்திப்படுத்தலாம். இப்ப சமூகம் என்னை மன்னிக்குது. எப்படியும் தெரிந்தவர், உறவினர், நண்பரின் மரணவீட்டுக்குப் போவன். அது கடைசி நிகழ்வு. அந்த வைபவத்துக்கு என்னால் உரிய நேரத்துக்கு போக இயலாது. ஏனெனில் சதா வேலை இருக்கும். இப்ப வெளிநாடுகளுக்குப் போனா கூட வெளிநாட்டில் நிறைய சொற்பொழிவுக்கு கூப்பிடுவார்கள். ஒரு சொற்பொழிவு முடிந்து இன்னொரு சொற்பொழிவுக்கு போவதென்றால் 7/8 மணித்தியாலம் காருக்குள்ளயே இருக்கணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய வாழ்க்கையின் அனுபவம் இது. ஓர் ஆரம்பத்தில பேச்சுக்கு சைக்கிள்ள போனான். இணுவில் இல் இருந்து எழுதுமட்டுவாளுக்கு சைக்கிள்ளதான் போனான். ஒரு சந்தர்ப்பத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து இன்னொரு இடத்துக்கு பேச்சுக்கு போக வேண்டியிருந்தது. போச்சற்றர் சிறியரக விமானம். அதில் தனிய book பண்ண வேண்டியிருந்தது. அது இலங்கை காசுக்கு பல லட்சம். அப்போது அதிசயப்பட்டோம். உண்மையிலேயே இன்று வாழ்வில் சைக்கிள்ள எழுதுமட்டுவாள் வரைக்கும் போய் பேசினான். போச்சற்றர் விமானத்தில் தனிய போயும் பேசினான்.

ஒரு வீட்டில போய் பேசினான். வீட்டில ஒரு சொற்பொழிவு. அப்ப 10 பேருக்கு பேசிறதுக்கு இவ்ளோ தூரம் போறனே எண்டு பேச்ச நிப்பாட்டி இருந்தா இந்த மாதிரியான வாய்ப்புக்கள எல்லாம் நாங்கள் பெற்றுக்கொள்ளேலா.

**கேள்வி: மரணச்சடங்குகள் பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். இன்று எம்மவர் மத்தியிலே உறவினருடைய மரணச்சடங்கிற்கு சென்றால் அந்த பால் வைப்பதற்கு கூட பயப்படுகிறார்கள், அஞ்சுகிறார்கள், தயங்குகிறார்கள். ஆனால நீங்கள் உங்களுடைய முதியோர் இல்லத்திலே எத்தனையோ பேரிற்கு இறுதிக் கிரியைகளை தலைமை தாங்கி நடத்தி கொள்ளி கூட வைத்திருக்கிறீர்கள் என்று அறிய முடிகிறது. இதற்கு எல்லாம் எவ்வாறு மனம் வைத்தீர்கள்?**

பொதுவாக சின்ன வயதிலேயே சுடலை என்றாலே எனக்கு பயம். ஆனால், வாழ்விலே எப்பவும் யாழ்ப்பாணத்திலே போர்ச்சூழலிலே வாழ்ந்ததனாலே இவற்றை எல்லாம் கண்டு கழித்து மனத்தில ஒரு தைரியம் வந்திட்டு. இறந்தால் அநாதரவா இறந்தால் அவற்ற கடமைய செய்யச் சொல்லி இன்னொராளிட்ட பணிக்கேலாது. கடவுளிட்ட சொன்னனான். நான் கொள்ளி வைக்கப்போறன். நீ எனக்கு துடக்கு எண்டு சொல்லி என்ன வெளில விடேலாது. ஒருதரும் இல்லாதவருக்கு தொண்டு செய்யோணும் எண்டு நானே எனக்கொரு ஆகமத்த விதிச்சுக்கொண்டு போய் கொள்ளிக்கடன செஞ்சன். அது இப்ப 35 பேருக்கு மேல நான் கொள்ளி வைச்சிருக்கிறன். காலைல கொள்ளி வைச்சிட்டு தோஞ்சிட்டு பின்னேரம் கோவிலுக்கு போவன். பிரசங்கத்துக்கு போவன். நான் நினைக்கிறன் அது ஒரு மருத்துவற்ற கடமை மாதிரி. ஒரு மனிதன்தான் சுடலைல நிண்டு இடுகாட்டுப் பணி செய்றான். கடவுள் அரிச்சந்திரனயே அயோத்தி வேந்தன் அரிச்சந்திரனயே கொண்டுவந்து இந்தப் பணில விட்டுக் காட்டினது. இதுக்குள்ள ஒரு தர்மம் இருக்கு. எப்ப அயோத்தியினுடைய பெரிய சக்கரவர்த்தியா இருந்த அரிச்சந்திரன் கானகத்தில சுடல காப்போனாக கூட கடவுள் விடுவார் எண்டா நாங்களாவே அப்ப உதவி செஞ்சிட்டா பறவால்ல. விளங்கிக்கொள்ள வேணும். ரெண்டாவது நான் வித்தியாசமா சிந்திக்கிறனான். இப்பவும் நான் பல பேருக்கு சொல்றனான். எல்லாக் கலைஞர்களுக்கும் பாராட்டு விழா செய்கிறார்கள். நாதஸ்வர வித்துவான், மிருதங்க வித்துவான், சங்கீத வித்துவான், கலா பூசணம் நான் என்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சிவராமலிங்கம்பிள்ளை இறந்தபோது White house இல அந்த இறுதிமா informe பண்ணிற hall க்கு பக்கத்தில உடல சுத்தம் செஞ்சு வச்சு அண்டைக்கு பாத்தன் எவ்ளோ கடுமையான வேலை. அத இரவு 10 மணி 11 மணிக்கு ஒருவர் செய்தார். 2 மணித்தியாலம் 3 மணத்தியாலமா தனியச் செய்தார். செய்துபோட்டு அந்த உடம்புக்கு ஓடிக்கொலோன் போட்டு powder போட்டு தல சீவி இறந்த பிரேதத்துக்கு எல்லாம் செய்து போட்டு அவர் போய் அடுக்கியிருந்த சவப்பெட்டியை மற்றப் பக்கமா கவுட்டுப்போட்டு அதுக்கு மேல படுத்திருக்கார் களைச்சு. அப்பதான் நான் பாத்தன் இவரும் ஒரு கலைஞன். இவரும் ஒரு மாபெரும் கலைஞன். ஏனெண்டால் இறந்து போய் எத்தனயோ விதமா நாங்கள் உடம்ப கொண்டு பொய் குடுக்க அவன் அடுத்தநாள் இவ்வளோ பேர் பாத்து இறுதி வைபவத்தில கலந்து கொள்ளக்கூடியதா அந்த உடம்பை என்ன எல்லாம் செய்து..., வாய்க்கரிசி போட்டா துடக்கு எண்டு சொல்றத நான் ஏற்கமாட்டன். ஏனெண்டா கோயில் உண்டியலுக்க காசு போடிறமாதிரி இறந்தவர் எந்த ஜென்மத்திலயும் பசி இல்லாமல் இருக்கோணும் எண்டு சொல்லிக்கொண்டுதான் போடோணும். அதான் விதி. சோறுக்கு குறையில்லாமல் இருக்கோணும். அதுக்கு நாங்கள் போட்டால் அது போடாட்டில் இது எண்டு பயப்பிடத் தேயையில்ல. சாபங்கள் நாங்கள் அந்தந்த நேரம் நாங்களும் கையாளுவம். எங்களுக்கெண்டு சில சமய ஆகமங்கள் இருந்தாலும் மனிதாபிமான ரீதியான ஆகமங்கள் எண்டு நாங்கள் காலத்துக்குக் காலம் நாங்கள் சிருஷ்டி செய்ய வேண்டிய ஒரு தேவை இருக்கு. இத சித்தர்கள் பெரியோர்கள் ஏற்றிருக்கிறார்கள்.

**கேள்வி : நிச்சயமாக சித்தர்கள் ஏற்றுக்கொண்டதயே இன்றும் அவர்கள் ஏற்றுக்கொள் வதில்லை என்பது எந்தக் காலத்திலும் நடக்கின்ற ஒரு நிகழ்வுதான் அந்த நிலைகள் மாற வேண்டும். அடுத்ததாக இப்பொழுது உங்களுடைய பரந்துபட்ட இந்தப் பணிகளிலே பொழுதுபோக்கு நேரமென்று ஏதாவது கிடைக்கிறதா? அந்த நேரத்தில் என்ன செய்வீர்கள்?**

பதில் : பொழுது போக்குவதற்கென்று மேலதிகமோ மிச்சமோ நேரம் கிடையாது. அதுக்கு அது எனக்கு வாய்ப்பே இல்ல. ஆனால் நான் பழையன கழைதலும் புதியன புகுதலும் என்ற சங்க மரபு உண்மை. பதியு புதிய விடயங்கள் வருகிறபோது கற்றுக்கொள்ள வேண்டும். இல்லயெண்டா நாங்க இந்த நூற்றாண்டில இருந்து பல விடயங்கள் அறியமாட்டம். அப்ப இவர் பழைய பாரம்பரியமிக்கவர் எண்டு நான் கணனிய பற்றி முகநூல பற்றி இலத்திரனியல் கருவிகள பற்றி அறியாமல் இருந்தால் நாங்கள் சமூகத்தோட ஒன்றுபட்டு போகேலாது. அதனாலதான் புது விடயங்கள கற்றுக்கொள்கிறது. உண்மைல நான் கணனிய கற்றுக்கொண்டது Australia இல. என்னவிட காவாசி வயதுடைய சிறுவன் அவன் எனக்கு அதில குரு. அதே நேரத்தில இந்த மண்ணுக்கு சேவை செய்த பெரியார்களை நினைவு படுத்திக் கொள்வன். இன்னார் இன்ன செய்தவர். இண்டைக்கு அவற்ற நினைவு தினம். இவர் பேராசிரியர் கைலாசபதி. இவர்தான் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தலைவர். தமிழுக்கு தொண்டு செய்தார். அப்ப இப்பிடி ஆக்கள் வரேக்க நான் அங்க அவர்களை ஞாபகப்படுத்துவன். அதில எனக்கொரு ஆத்மதிருப்தி. இது பொழுதுபோக்கு எண்டு இறங்கினாலும் அந்தப் பொழுது ஒரு பிறருக்கு பயனான பொழுதாய் கழிக்கோணும். இப்ப ஒரு நல்ல விசயம் எனக்கு நல்லா பொழுது போறது எண்டு சொல்றதவிட நல்லா கற்றுக்கொண்டது. நூலகம். com என்ற இணையத்தளம் அருமையான சேவையை செஞ்சிருக்கு. பழைய பத்திரிகை, பழைய நூல்களை இதில ஏத்தி இருக்கினம் நவீன இலத்திரனியல் ஊடாக. நான் இப்ப சமீப காலமாக 1800 இல் இருந்து வெளிவந்த இந்து சாசனங்களை வாசித்துக் கொண்டிருக்கிறேன். பல சுவையான விசயங்களை அறியிறேன். ஈழகேசரி பத்தரிகை கிட்டத்தட்ட ஓர் அரைவாசிப் பகுதியை வாசித்தன். ஈழகேசரிப் பத்திரிகை முழுக்க ஒரு காலத்தில இடம்பெயர்ந்து எங்கட வீட்டிலதான் இருந்தது. அப்ப ஒரு 10 பத்திரிகை வாசிக்க எனக்கு தூசு ஒத்துக்கொள்ளாது கஸ்ரப்பட்டு தான் வாசிச்சனான். இப்ப எந்தத் தூசும் இல்லாம வாசிக்க வாய்ப்புத் தந்திருக்கேக்க, அடக் கடவுளே இது இந்த ஜென்மத்தில கிடைச்சது ஒரு பெரிய பாக்கியம் எண்டு வாசிச்சது. ஈழகேசரி, இந்து சாசனம், Morning Star பல பத்திரிகை வாசிக்கிறன். அதே நேரத்தில இந்தியாவில இருந்து சான்றோர்கள் வெளியிட்டிருக்கிற நூல்கள வாசிக்கிறன். திருக்குறள் உரைகளை வாசிக்கிறன். அப்ப சில நேரங்கள்ல சில விடயங்கள் இந்த இலத்திரனியல் சாதனங்கள் ஊடாக வாசிக்கிறன். இணையத் தளங்களயும் நல்ல விசயத்துக்குப் பயன்படுத்துறன். அதே நேரத்தில எனக்கு சிறு வயதில இருந்தே பத்திரிகை வாசிக்கிறதுல நாட்டம் இருந்ததால நான் துர்க்கை அம்மன் கோவில் அரள் ஒளி ஒரு பத்திரிகை ஆசிரியராக இருக்கிறன்.சிவபூமி பத்திரிகையினுடைய ஆசிரியராக இருக்கிறன். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்து ஒளி ஆசிரியராக இருக்கிறன். இந்த மூன்றிண்ட ............. (ஆசிரிய தலையங்கம்) உம் நான்தான் எழுதோணும். மூன்றையும் பூரணமாக இறுதிச் செவ்வை பார்க்கோணும். அதுகளும் இடக்கிட வரும். எனக்கு அதுக்கு குறிப்பிட்ட நேரம் காணும். ஒரு அனுபவத்தால நான் அத கெதிய முடிச்சிடுவன். இப்ப ஒரு நவீன கருவி வாய்ப்பு வந்திருக்கு. நான் சொல்ல சொல்ல Hand phone V type பண்ணுது. சில நேரம் சொல் வித்தியாசமா பிழைகள் வரும். ஆனா அதுவும் ஒரு பெரிய வாய்ப்பு. இப்படியான சில விடயங்கள் புதிய புதிய விடயங்கள் வரும்பொழுது அத தெரிஞ்சவங்கள்ட கேட்டுப் படிக்கிறது எனக்கு ஒரு பொழுது போக்கு.

**கேள்வி:** **அது ஒரு நல்ல பொழுதுபோக்கு. பல முதியவர்கள் வயது வந்தவர்கள் தெரிந்திருக்க வேண்டிய பொழுதுபோக்கு. இளைஞர்கள் தொலைபேசியோடு தங்கள் நேரங்களை செலவழிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டியவர்களிற்கு அந்தத் தொலைபேசியில் இருந்துகூட நீங்களும் கற்றுக்கொள்ளலாம் என்று ஒரு வயது வந்தவரே சொல்கின்றபோது இது இரு தரப்பிற்குமே ஒரு பாடமாக இருக்கின்றது என்பது எமது கருத்து. அடுத்ததாக நீண்ட நேரமாக நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இறுதியாக எங்களுடைய நேர்காணல் இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளோம். இதற்கு முதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"திருவாசக அரண்மனை" என்ற மிகப்பெரும் ஒரு வரலாற்று நிகழ்வை சாதித்துக்காட்டி அதற்குப் பிறகு இப்பொழுது அரும்பொருட் காட்சியகம் என்கின்ற ஒன்றை யாழ்ப்பாணத்திலே நிறுவுவதற்கு உரிய ஆயத்தப்பணிகளிலே உள்ளீர்கள். இதற்கு அடுத்த கட்டம் என்ன?**

பதில் : அடுத்த கட்டம் குறிப்பாக யாழ்ப்பாணத்திலே எங்கள் இனத்தின் மீது பலரும் சொல்கிற குற்றச்சாட்டில் ஒன்று நாய்களை தெருவில் அலைய விடுகிறோம் என்பது மேலை நாடுகளில் நாய்கள் மீது பற்று பாசமாக வளர்க்கிறார்கள். எங்களுடைய நாட்டிலே ஆண்குட்டி போட்டால் அத வீட்டில வைச்சுக்கொண்டு பெண்குட்டிகளை கொண்டுவந்து துர்க்கை அம்மன் கோவிலிலே, சந்திகளிலே, முதியோர் இல்லத்திலே, மடத்திலே கொட்டிவிடுகிறார்கள். இந்த நாய்கள் ஒவ்வொரு நாளும் வாகனங்களிலே நசியும், சாப்பாட்டிற்கு வழியில்லாமல் அலைந்து கொண்டு திரியும். யோகசுவாமிகள் ஒரு முறை சொல்லி இருக்கிறார். இந்த நாயக்குட்டியள எப்பிடி கொண்டு போய் தெருவில விட்டியளோ அப்பிடித்தான் விமானத்தில ஒரு காலத்தில பொம்பிள பிள்ளையள எல்லாம் எங்கயோ ஏற்றிக்கொண்டு போய் விடப்போறியள். அது உண்மையாப் போச்சு. பிள்ளயள ஏத்தி ஏத்தி வெளிநாட்டுக்கு அனுப்பினம். இப்பவும் எங்களுக்கு இருக்கிற ஒரு பெரிய கருமம் உயிர்களிடத்திலே அன்பு வேண்டும் என நாம் படித்திருந்தாலும் காண்ணால காணுறம் 100 கணக்கான நாய்கள் றோட்டில அலையுது. இலங்கைல மகிந்தோதய சட்டத்தின் கீழ் நாய்கள கொல்லக் கூடாது. தென்னிலங்கைல நாய்கள் காப்பகம் எல்லாம் இருக்கு. வடக்கில காப்பகம் இல்ல. நான் இது தொடர்பா முதன்முதல் குரல் குடுத்தன். சுமார் 1 வருசத்துக்கு முதலே நான் குரல் குடுத்தன் யாழ்ப்பாண செயலகத்தில. ஆனா அங்க நிண்டாக்கள் இதப் பற்றி அக்கறை காட்டேல்ல. ஆனபடியா நான் இப்பொழுது பளைல, இயக்கச்சில புளியடிச்சந்தில இருந்து உள்ளுக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர், பேராயர் அவர்களுடைய புத்திரி செல்வி. ரோகினி பேராயர் அவர்கள் 10 ஏக்கர் நிலம் சிவபூமிக்கு அன்பளிப்பு செய்தார். அந்த நிலத்தை அப்பிடியே நான் சுத்தம் செய்து வச்சிருக்கன் நாய்கள் காப்பகத்துக்காக. இப்பொழுதே ஆரம்பிக்க வேணும். கைல நிதி வசதி இல்ல. நாங்கள்தான் நாய்கள வைரவர்ட வாகனமாக கும்பிட்ட சமயம். நாங்களே எங்கட சமயத்துக்கு துரோகம் செய்றம். எதிர்காலத்தில அநாதரவாக நாய்கள்கூட இருக்கக்கூடாது என்றது என்ர தாழ்மையான அபிப்பிராயம். அதனால கடவுளுடைய அருளினால் விரைவாக நாய்களின் காப்பகம் ஒன்று அமைக்கபடும். நாய்களுக்கு சோறும் சாம்பாறும் குடுத்து பெரிய நிலப்பரப்பில சுதந்திரமாக விட்டு நோய்கள் தொற்றாம வைத்திய வசதியும் செய்து ஆரம்பத்தில விடுவம் என்று முடிவெடுத்தோம். காட்டுக்கு பக்கத்த ஒரு குளம் இருக்கு. எந்த ஒரு குடி சனமும் இல்ல. எனவே அதில காடு வெட்டி நிலம் துப்பரவு செய்து அதே இப்ப 15, 20 லட்சம் செலவாகிட்டு. இனி காப்பகம் எடுக்கோணும். அதுக்கு உதவி செய்ய நாய்கள் மீது இரக்கம் உள்ள ஒரு செல்வி. இராமலிங்கம் என்று ஒரு பெண்மணி. அவா இதில ஒரு அக்கறையா இருக்கிறா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கு வெளில நிக்கிற நாய்களுக்கு எல்லாம் ஒவ்வொருநாளும் சாப்பாடு கொண்டு வந்து வைக்கிறா. அந்தப் பிள்ளை இந்த நாயள்ள கரிசன காட்டி தான் செய்யக்கூடிய உதவிகள செய்றா. அவாக்கு இந்த நாய்கள் காப்பகம் வைத்திருக்கிற இலங்கைல உள்ள வேற பகுதிகளோட கூட தொடர்பிருக்கு. அதே நேரத்தில இந்த கால்நடை மருத்துவ நிபுணர்கள் நாய்களிற்கு தடுப்பூசி போடுறது குறித்து அந்தப்பிள்ளய இந்தப் பணில தொண்டு செய்யக் கூப்பிட்டு இருக்காம். அவாவும் செய்ய சம்மதிச்சிருக்கா. அவரது வீடு ஆனைக்கோட்டைலயும் ஒரு வைத்திய நிபுணர் பொன்னம்பலம் என்று Australiay இருக்கிறார், வீடு ஆனைக்கோட்டைல. இராணுவ முகாமாக இருந்து இப்பதான் அந்த வீட்ட நாங்கள் மீட்டிருக்கிறம். அந்த வீடு எங்களுக்கு எழுதப்பட்டிருக்கு. அந்த வீட்டிலயும் இங்கிலாந்தில இருக்கிற மருத'துவர்கள் சுழற்சி முறையில் இலவச மருத்துவம் செய்ய சம்மதிச்சு இருக்கினம். நாங்கள் செய்த சேவைகளுக்காக எமக்கு வரும் அன்பளிப்புகளை ஏதொ ஒரு வகையில் தரும காரியங்களுக்கு பயன்படுத்துகிறோம். புற்றுநோய்க்காப்பகம் ஒன்று உடுவில் ஸ்ரீ இராகவன் என்ற ஆசிரியர் தந்த வீட்டில் கடந்த பத்து வருடங்களாக நடக்கிறது. இவ்வாறான பணிகள் தொடர்ந்து இறையருளால் நடக்கும்.

*இவ்வளவு காலமும் மனிதர்களிற்கு என்று சிந்தித்தவர் அதையும் தாண்டி விலங்குகளிற்கு எண்டு சிந்தித்து உள்ளீர்கள். இவற்றை வாழ்த்த எங்களிற்கு வயதில்லை வணங்குகிறோம். யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை என்றுதான் சொல்வார்கள். பசுவிற்கு மட்டுமல்ல நாய்களிற்கும்தான். அவ்வாறு உங்கள் பல்வேறு பணிகளிற்கு மத்தியிலே அடுத்ததாக என்னென்ன செய்ய வேண்டும் என்று மக்களிற்காகவும் இறைபணிகளிற்காகவும் உங்களை அர்ப்பணித்திருக்கின்ற நீங்கள் உங்களிற்கான இந்த நேரங்கள் நேர்காணல் நிச்சயமாக என் வாழ்வில் மிக பெறுமதியான நேரங்களாக இருக்கும். இதைக் கேட்பவர்களிற்கு கூட பெறுமதியான நிமிடங்களாக இருக்கும். எமக்காக உங்களது பொண்ணான நேரத்தை ஒதுக்கியமைக்கு மனமார்ந்த நன்றிகள் ஐயா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









ஆலய நிகழ்வுகளின் சில பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018/2019 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்கம்
# 62 வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

**12.01.2018** - வெள்ளிக்கிழமை அன்று எமது செயற்குழு பொறுப்பேற்றுக்கொண்டது.

**14.01.2018** - தைப்பொங்கல் அனைத்துப்பீட மாணவர்களாலும் சிறப்பாக கொண்டாடப்பட்டதோடு தைப்பொங்கல் தின விஷேட பூசையும் இனிதே இடம் பெற்றது.

**20.01.2018** - அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பொறியியல் பீட தமிழ்மாணவர்களால் சிரமதானம் செய்யப்பட்டது.

**22.01.2018** - 31.01.2018 அலங்கார உற்சவம் தினமும் அபிஷேக விஷேட பூசைமற்றும் வசந்தமண்டப பூசையுடன் திருவீதியுலா வருதலும் இடம்பெற்றது.

**02.02.2018** - வைரவர் விஷேட அபிஷேக பூஜை இடம்பெற்றது.

**10.02.2018** - பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் காலை 8.00-4.00 மணி வரை புனரமைப்பு செய்யப்பட்டது.

**11.02.2018** - மகாசிவராத்திரியை முன்னிட்டு ஆலய அடியார்களினால் சிரமதானம் செய்யப்பட்டது.

**13.02.2018** - சிவராத்திரி தினத்தன்று வழமை போல இம்முறையும் நான்கு ஜாமப் பூசைகளோடு இடையிடையே சமய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அத்துடன் "இந்துதரும்" இதழ்வெளியீடும் சிறப்பாகவே நடைபெற்றது.

**28.02.2018** - நடேசர் அபிஷேகம் மற்றும் நடேசர் தரிசனம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

**14.04.2018** - விளம்பி வருட பிறப்பானது திருவிழா அபிஷேக் பூசைகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது

**25.08.2018** - காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை சகல பீடங்களையும் அந்த தமிழ் மாணவர்களால் ஆலய சுற்றுபுற சூழலில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் ஆலய பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதியவர்கள் அனைவரும் மதிய போசனமும் வழங்கி வரவேற்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.08.2018 - மணவாளக் கோல நிகழ்வினை முன்னிட்டு பல்கலைக்கழகமாணவர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

29.08.2018 - மணவாளக் கோலத்தின் சங்காபிஷேகம் குறிஞ்சிக்குமரன் கும்பாபிஷேக தினமான இத் தினத்தில் காலை 1009 சங்குகளுடன் நவோத்திரபூசையும் மதியம் மகேஸ்வர பூசையும் இடம்பெற்றன. மாலை திருஊஞ்சலும் தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் திரு வீதியுலாஇடம்பெற்றது.
அதே வேளை தவில் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெற்றது.

09.10.2018-
19.10.2018 - பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் கொலுவைக்கப்பட்டு விஷேட பூசைகள் இடம்பெற்றது. இறுதி நாள் விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் வைபவம், மானம்பூ உற்சவம், இராப்போசனம் முதலியன நடைபெற்றன.

06.11.2018 - தீபாவளி விஷேட அபிஷேகம் மற்றும் விஷேட பூஜை இனிதே இடம்பெற்றது.

08.11.2018-
13.11.2018 - கந்தசஷ்டி தினமும் எம்பெருமானுக்கு விஷேட பூசை இடம் பெற்று கந்த சஷ்டி கவசம், பஞ்ச புராணம், பாராயணம் செய்யப்பட்டது. இறுதி நாளன்று சூரசம்ஹாரமும் சிறப்பாக இடம்பெற்று அடியார்களுக்கு இராப் போசனம் நடைபெற்றது.

14.11.2018 - முருகப்பெருமானது திருக்கல்யாணமானது கோலாகலமாக நடைபெற்றது.

14.12.2018-
23.12.2018 - திருவெம்பாவைதினமும் அதிகாலையில் சிலம் அதிகாலையில் சிவகாமசுந்தரி சமேத நடராஜ பெருமானுக்கு விஷேட ஆராதனைகளுடன் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பனவும் ஓதப்பட்டன. இறுதி நாள் ஆருத்ரா அபிஷேக தரிசனத்துடன் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் ஹேவிளம்பிவருட மற்றும் விளம்பிவருட விஞ்ஞாபனத்தில் உள்ளவாறாக கார்த்திகை உற்சவங்கள், நடேசர் தரிசனங்கள், மாசிமகம், குமாராலய தீபம், விஸ்ணுவாலய தீபம், கிருஷ்ண ஜெயந்தி, சுவர்க்கவாயில் ஏகாதசி போன்றனவும் பிரத்தியேக அபிஷேகங்கள், பூசைகள் என்பனவும் இனிதே நடைபெற்றன. மேலும் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோறும் நித்திய பூஜைகள் காலம் தவறாது காலை 7.00 மணிக்கு திருவனந்தல், காலை 10.30 மணிக்கு பகல் பூஜை, 5.30 மணிக்கு மாலை பூஜை, இரவு 7.00 மணிக்கு அர்த்தஜாம பூஜை ஆகியவை இடம்பெற்றன. வெள்ளிக்கிழமைகளில் மாலை பூஜையானது 5.45 மணிக்கும் அதனை தொடர்ந்து முருகனடியார்களால் புராணபடனமும் இடம்பெற்றது.

சில பல தடங்கல்கள் காரணமாக எமது மாணவர் சங்க மாதாந்த கூட்டம்கத்தின் சில மாதங்களே கூட்டப்பட்டதோடு சில தடங்கல்கள் காரணமாக வருடாந்த தலயாத்திரையானது செல்லமுடியாமல் போனதற்கு மனம் வருந்துகின்றோம். அத்துடன் இக்குறைகளை அடுத்த செயற்குழுவினர் இனிதே செயற்படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

*11.01.2019* - ஆம் ஆண்டு வருடந்த செய்குழு கூட்டமானது அனைத்து பீடமாணவர், பொறுப்பாண்மைக்குழு மற்றும் பேராசிரியர்கள் முன்னிலையில் கோவில் மண்டபத்திலே கூட்டப்பட்டு 63 ஆவது செயற்குழு ஆனது ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டது.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**இணைச் செயலாளர்கள்**
செல்வன் சு.அனோயன்
செல்வன் வி.கஜகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள் மற்றும் தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1952-57 | பேராசிரியர் ரி. ஆர்.வீ. மூர்த்தி | |
| 1957-58 | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| 1959-62 | பேராசிரியர் த. நடராஜா | திரு. க.சிவஜோதி |
| 1962-63 | பேராசிரியர் த. நடராஜா | |
| 1963-64 | பேராசிரியர் த.நடராஜா | திரு. எஸ். நவரட்ணராஜா |
| 1964-65 | பேராசிரியர் த.நடராஜா | திரு. மு.கனகரட்ணம் |
| 1965-66 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. து.அப்புலிங்கம் |
| 1966-67 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. கு.சண்முகநாதன் |
| 1967-68 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. க,கிருஷ்ணானந்தசிவம் |
| 1968-69 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. ந.சுகுமாரன் |
| 1969-70 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. க. ஜெயபாலன் |
| 1970-71 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1971-72 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1972-73 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. பா.பத்மநாதன் |
| 1974-75 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு. க.குமரேசன் |
| 1975-76 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1976-77 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1977-78 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. இ.கைலாசநாதன் |
| 1978-79 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. எஸ்.சிவனந்தன் |
| 1979-80 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. கு.சிவகணேசன் |
| 1980-81 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. போ.யுசீலாந்தன் |
| 1981-82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | |
| 1982-83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1983-84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1985-85 | பேராசிரியர் த, யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1985-86 | பேராசிரியர் த. யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1986-87 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| 1987-88 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| 1988-89 | பேராசிரியர் சி. சிவயோகநாதன் | திரு. எஸ். குகநேசன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1989-90 | பேராசிரியர் து. விநாயகலிங்கம் | திரு. இ.சந்திரகுமார் |
| 1990-91 | பேராசிரியர் து. விநாயகலிங்கம் | திரு. செ. இரவீந்திரநாதன் |
| 1991-92 | பேராசிரியர் து. விநாயகலிங்கம் | திரு. க. வல்லபவானாந்தன் |
| 1992-93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு. தி.நவநீதன் |
| 1993-94 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கணேசநாதன் |
| 1994-95 | கலாநிதி செ திருச்செல்வம் | திரு. க. நந்தகுமார் |
| 1995-96 | கலாநிதி செ திருச்செல்வம் | திரு. பா.சஞ்சயன் |
| 1996-97 | கலாநிதி செ.திருச்செல்வம் | |
| 1997-98 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. உதயசீலன் |
| 1998-99 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க. இராகவன் |
| 1999-00 | கலாநிதி செ. திருச்செல்வம் | திரு. நே.ராஜரூபன் |
| 2000-01 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கருணாநிதி |
| 2001-02 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. இ.மயூரன் |
| 2002-03 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ச. சிவஜோதி |
| 2003-04 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. து.அரவிந்தன் |
| 2004-05 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ப.தயாபரன் |
| 2005-06 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நெ.நந்தகுமார் |
| 2006-07 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. சா.மோகனஜீவ் |
| 2007-08 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. சி.திவாகரன் |
| 2008-09 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. செ.ஜெயசுதன் |
| 2009-10 | திரு. வ.தர்மதாசன் | திரு. ந.சிந்துஜன் |
| 2010-11 | திரு. வ.தர்மதாசன் | திரு. த.கோபிராம் |
| 2011-12 | திரு. சிவயோகலிங்கம் | திரு. ச.சசிக்குமார் |
| 2012-13 | திரு. சிவயோகலிங்கம் | திரு. கு.ஜெயமோகன் |
| 2013-14 | திரு. சிவயோகலிங்கம் | திரு. சி.வினோஜ் |
| 2014-15 | திரு. வ.தர்மதாசன் | திரு. கு.அபிராம் |
| 2015-16 | திரு. வ.தர்மதாசன் | திரு. தி.தர்ஷன் |
| 2016-17 | திரு. வ.தர்மதாசன் | திரு.த.வெங்கடேஸ்வரன் |
| 2017-18 | திரு. வ.தர்மதாசன் | திரு. சி.சுஜேந்திரன் |
| 2018-19 | திரு. வ.தர்மதாசன் | திரு. வீ.ராஜ்குமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

ஆண்டு தோறும் இந்து மாணவர் சங்கத்தினால் வெளியிடப்படும் இந்துதருமம் நூல் இம்முறையும் சிறப்பான முறையிலே வெளிவர எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனின் திருவருள் கூடியுள்ளது.

இவ்வகையில் எமது இந்துதருமம் இதழுக்கு ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கு முதற்கண் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் நூலுக்கு அழகு சேர்த்த பேராசிரியர்கள், போதனாசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் மனம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆலய நித்திய, நைமித்திய கிரியைகளை சிறப்பாக ஆற்றிவரும் ஆலய பிரதம குரு க.வரதராஜாசர்மா அவர்களுக்கும் ஆலய உற்சவங்கள் மற்றும் விஷேட பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடந்தேற உதவிய அனைவருக்கும் மற்றும் ஆலய சிரமதானங்களை முன்னின்று நடாத்த உதவிய அனைத்து பீட மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக போதனாசிரியர்களுக்கு இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அத்துடன் நூல்வடிவமைப்பிற்கு ஆலோசனை வழங்கி உதவிய நல்லுள்ளங்களுக்கும், விளம்பரங்களை தந்து இதழை சிறப்பித்த அனைத்து வரத்தக பெருமக்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக. மேலும் இந்நூலை சிறப்புறு அச்சிட்டு வெளியிட உதவிய யாழ்ப்பாணம் குரு அச்சகத்தினருக்கும் உள்ளங்கனிந்த நன்றிகள்.

ஏனைய நன்றி கூற தவறிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

**சு.அனோஜன்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் காலணியகம்

YARL BATA



Bata

17, Modern Market
Hospital Raad,
Jaffna.
Tp: 021 222 3152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SELLAMUTHTHUS TEXTILS**

செல்லமுத்து புடவையகம்

WWW.SELLAMUTHUS.COM



S.Premkumar
Owner/Manager

021 226 3238
077 779 5726

AB20-57,
Main Street, Nelliady,
Karaveddy.
Jaffna, Sri Langa.



**Chithamparapillai Book Deport**


**Proprietor**
Mr.S.Sivam





Tel: 021 226 3223
Fax: 021 226 4145
No: 60,64
Mainstreet,
Nelliady.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருகா

எந்தனை சிந்தித் துணை செய்து கண்முன்
நிந்தனை செய்தவர்- கந்தனை
கைவிடா தெண்ணத் தந்தடைந் தணிகலன்- அருளி
சிந்தனை சீர் செய் பணியிடை
எந்துணை செய்தவன் கந்தன்- எம்
கயல் நீர் களைந்திட கனிந்தனன் அழகன்
எம் குறைதனை குறைத்தவன் குமரன்
குறைவிலா தருளிடும் குறிஞ்சிக்குமரன்.

பாரினில் பணிந்தவர்க்கெல்லாம் - பஞ்சமா
பாதகம் மறந்தவர்க்கெல்லாம்
செந்தமிழ் செவ்விய நாவால்- நாமம்
சொல்லிடும் அடியவர்க்கெல்லாம்
எந்துணை செய்திடும் செயலோன்
உன்னிடை வந்தருள்ந்திடுவான்
இணை இன்றிய அறிவுருவாளன்
என் இனியவன் குறிஞ்சிக்குமரன்.

கடந்திட்ட காலமெல்லாம் அவன் காலடி
கனிந்து நின்றேன். இன்னல் மறந்திட வேண்டி நின்றேன்
மனந்தனை வென்று நின்றான்.
சினந்தனை கொன்று செவ்வேள்
பிணிதனை புறந்தள்ளி வைப்பான்
புதுமைகள் செய்பவன் அவனே
இனியும் புதிர்களை அவிழ்ப்பான் எம்முன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org